# சிறுகதை

# சிறுகதை

# பொருளடக்கம்


- சிறுகதை
- பாட ஆசிரியரைப் பற்றி

- பாடம் - 1 P20331 படைப்பிலக்கியமும் சிறுகதையும்
- பாட அமைப்பு
- 1.0 பாட முன்னுரை
- 1.1 படைப்பிலக்கியமும் சிறுகதையும்
- 1.2 சிறுகதை இலக்கணம்
- 1.3 சிறுகதையில் உத்திகள்
- 1.4 கதைக்கரு
- 1.5 கதைமாந்தர்
- 1.6 தொகுப்புரை

- பாடம் - 2 P20332 தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்
- பாட அமைப்பு
- 2.0 பாட முன்னுரை
- 2.1 தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்
- 2.2 தொடக்க காலச் சிறுகதையின் போக்கு
- 2.3 எழுபதுகளில் தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்
- 2.4 இன்றைய தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்
- 2.5 தமிழ்ச் சிறுகதையின் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள்
- 2.6 தொகுப்புரை

- பாடம் - 3 P20333 சிறுகதையின் கருப்பொருள்
- பாட அமைப்பு
- 3.0 பாட முன்னுரை
- 3.1 சிறுகதையின் கருப்பொருள்
- 3.2 கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள்
- 3.3 அகிலனின் சிறுகதைகளில் கருப்பொருள்
- 3.4 ஜெயமோகனின் சிறுகதைகளில் கருப்பொருள்
- 3.5 காலத்திற்கேற்பச் சிறுகதைகளில் கருப்பொருள்
- 3.6 தொகுப்புரை

- பாடம் - 4 P20334 சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்
- 4.0 பாட முன்னுரை
- 4.1 சிறுகதைகள் காட்டும் சமூகச் சிக்கல்கள்
- 4.2 சிறுகதைகளில் தனிமனிதச் சிக்கல்கள்
- 4.3 சிறுகதைகளில் பெண்களின் சிக்கல்கள்
- 4.4 சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்
- 4.5 சிறுகதைகளில் சமூகச் சீர்திருத்தங்கள்
- 4.6 தொகுப்புரை

- பாடம் - 5 P20335 சிறுகதைகளில் தத்துவ நெறிகள்
- பாட அமைப்பு
- 5.0 பாட முன்னுரை
- 5.1 சிறுகதைகளில் தத்துவக் கருத்துகள்
- 5.2 இறையன்புவின் சிறுகதைகளில் உலக நெறிகள்
- 5.3 இறையன்புவின் சிறுகதைகளில் சான்றோர் நெறிகள்
- 5.4 இறையன்புவின் சிறுகதைகளில் வாழ்க்கை நெறிகள்
- 5.5 உலக வாழ்வில் தத்துவ நெறிகள் பெறும் இடம்
- 5.6 தொகுப்புரை

- பாடம் - 6 P20336 சிறுகதைகளும் பெண் படைப்பாளர்களும்
- பாட அமைப்பு
- 6.0 பாட முன்னுரை
- 6.1 ராஜம் கிருஷ்ணனின் படைப்புகள்
- 6.2 சிவசங்கரியின் படைப்புகள்
- 6.3 இந்துமதியின் படைப்புகள்
- 6.4 பெண் படைப்பாளர்களின் நோக்கும் போக்கும்
- 6.5 தொகுப்புரை

- P20331 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P20331 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P20332 தன் மதிப்பீடு : விடைகள் - I

- P20332 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P20333 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P20333 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P20334 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P20334 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P20335 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P20335 தன் மதிப்பீடு : விடைகள் - II
- P20336 தன் மதிப்பீடு : விடைகள் - I
- P20336 தன் மதிப்பீடு : விடைகள் - II

# சிறுகதை

P20331 - படைப்பிலக்கியமும் சிறுகதையும்
P20332 - தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்
P20333 - சிறுகதையின் கருப்பொருள்
P20334 - சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்
P20335 - சிறுகதைகளில் தத்துவ நெறிகள்
P20336 - சிறுகதைகளும் பெண் படைப்பாளர்களும்

# பாட ஆசிரியரைப் பற்றி



பெயர் : முனைவர் அ. தேவகி

கல்வித் தகுதி : எம்.ஏ, எம்.பி.ல், பிஎச்.டி பணியிட

முகவரி : கல்வியியல் விரிவுரையாளர் (மு.நி)
அரசு கல்வியியல் கல்லூரி,
குமாரபாளையம் – 638 183.

பணிக்களம் : பல்கலைக்கழகக் கருத்தரங்குகள்,
தேசியக் கருத்தரங்குகள், பன்னாட்டுக்
கருத்தரங்குகள் ஆகியவற்றில்
பங்கேற்பு

9 ஆம் வகுப்பு அறிவியல் தமிழ்ப்
பாடநூல் குழுத்தலைவர்

படைப்பு : நூல்கள் – 2 ஆய்வுக் கட்டுரைகள் – 30

கல்வியியலில்
உருவாக்கிய
ஆய்வியல்
நிறைஞர்கள் : 55 இன்றைய இலக்கியத்தில் புலமை.

பாடம் - 1

# P20331 படைப்பிலக்கியமும் சிறுகதையும்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

படைப்பிலக்கியம் என்பது எது என்று விளக்குகிறது. படைப்பிலக்கியத்தின் ஒரு கூறான சிறுகதையின் அமைப்பைச் சொல்கிறது. அதன் இலக்கணங்களை விரித்துரைக்கிறது. சிறுகதை எழுத்தாளருக்குத் தேவையான தகுதிகளை வரையறுக்கிறது. சிறந்த சிறுகதை எழுத்தாளர்கள் சிலரை அறிமுகப்படுத்துகிறது. சில சிறந்த சிறுகதைகளின் வடிவத்தையும் வெளிப்பாட்டையும் அடையாளம் காட்டுகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- படைப்பிலக்கியம் இன்னது என்பதை அறியலாம்.
- சிறுகதையின் வடிவத்தை, அதன் இலக்கணங்களைத் தெரிந்து கொள்ளலாம். சிக்கல், கதைமாந்தர், மொழிநடை, உத்தி முதலியவை பற்றி அறியலாம்.
- சிறந்த சிறுகதைகளை அடையாளம் காணலாம்.
- சிறந்த சிறுகதை எழுத்தாளர்களை இனம் காணலாம்.
- சிறுகதை பற்றிய கருத்துகளையும் கோட்பாடுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

1.0 பாட முன்னுரை

1.1 படைப்பிலக்கியமும் சிறுகதையும்

1.2 சிறுகதை இலக்கணம்

1.3 சிறுகதையில் உத்திகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

1.4 கதைக்கரு

1.5 கதைமாந்தர்

1.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 1.0 பாட முன்னுரை

தொடக்க காலத்தில் உரைநடையானது பெரும்பாலும் செய்யுளுக்கு விளக்கம் சொல்வதற்காகவும், கல்வெட்டுச் செய்திகளுக்காகவும் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்தது. கி.பி.18ஆம் நூற்றாண்டில் உரைநடை புத்துயிர் பெற்றது. அதன் பின்னர்தான் நாவல், சிறுகதை போன்ற படைப்பிலக்கியங்கள் தோன்றின.

மேலை நாடுகளின் போக்கை ஒட்டி உரைநடையை முதன்முதலாகப் படைப்பிலக்கியத்திற்குப் பயன்படுத்தியவர் வீரமாமுனிவர் ஆவார். இவருடைய பரமார்த்த குரு கதையே தமிழ் உரைநடையில் உருவான முதல் கதையாகும். இதனைத் தொடர்ந்தே சிறுகதைப் படைப்பிலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன. இன்று, சிறுகதையைப் படைக்கும் படைப்பாளர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. சிறுகதையைப் படிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையும் பெருகி உள்ளது. இது, சிறுகதைப் படைப்பிலக்கியத்தின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இப்பாடத்தில் படைப்பிலக்கியமும் சிறுகதையும் எனும் தலைப்பில், அவை பற்றிய செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

## 1.1 படைப்பிலக்கியமும் சிறுகதையும்

செய்யுளும், சிறுகதையும் படைப்பிலக்கியங்களாக விளங்கிய போதிலும், இவற்றை ஒன்றெனக் கூறிவிட முடியாது. இரண்டிற்குமிடையே வேறுபாடுகள் உண்டு. இவ் இரண்டும் வெவ்வேறு காலத்தின் இலக்கிய வடிவங்கள். ஒன்று செய்யுளால் ஆக்கப்பட்டது. மற்றொன்று உரைநடையால் ஆக்கப்படுவது. செய்யுளிலக்கியம் நாம் உலகத்தோடு தொடர்பு கொள்ளாத காலத்தில் உருவானது. சிறுகதை இலக்கியம் உலகத்தின் பிறமொழித் தொடர்பால் கிடைக்கப் பெற்றது. மன்னராட்சிக் காலத்தின் இலக்கியம் செய்யுள், மக்கள் ஆட்சிக் காலம் தந்த இலக்கியம் சிறுகதை. நாம் இன்று கூறும் சிறுகதை அமைப்பு, சங்கச் செய்யுள்களில் இல்லை. எனினும் சிறுகதைக்கான அடிப்படை, உத்தி ஆகிய இரண்டும் சங்க இலக்கியத்தில் காணப்படுவது உண்மை.

- எடுத்துக்காட்டு

அகநானூறு, புறநானூறு, கலித்தொகை போன்ற செய்யுள்களில் காணப்படும் நிகழ்வுகள் அழகிய சிறுகதைகளை நினைவூட்டுகின்றன. இப்பாடல்களில் நேரடியான நீதி போதனைகள் இடம்பெறவில்லை. எனினும் வாழ்க்கையின் அடிப்படை உணர்வுகளை வெளிப்படுத்தும் அற்புதமான கதைக் காட்சிகள் உண்டு.

- சிறுகதை

இன்றைய படைப்பிலக்கியங்களின் கதைக்கரு மனித வாழ்விலிருந்தே உருவாகிறது. இவ்வகையில் மனிதர்களின் அனுபவங்களும், எண்ணங்களும் சிறப்பாக – சுதந்திரமாக – வெளிப்படும் பொழுது படைப்பிலக்கியங்கள் தோன்றுகின்றன. இவ்விலக்கியங்கள் நாவல், சிறுகதை, நாடகம், கவிதை என்று பல்வேறு வடிவங்களைக் கொண்டு விரிவு பெறுகின்றன. இவற்றுள் சிறுகதை மனித வாழ்க்கையோடு மிக நெருங்கி இருக்கும் இலக்கிய வகையாகிறது.

- சிறுகதைப் படைப்பிலக்கியம்

எந்த வகைப் படைப்பிலக்கியத்திற்கும், ஆர்வத்திற்கும் மேலாக மூன்று அடிப்படைகள் தேவைப்படுகின்றன.

1) வாழ்க்கை அனுபவம்
2) வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் ஆர்வம்
3) கற்பனைத் திறன்

ஆகியனவாம். இத்தன்மையிலேயே சிறுகதைப் படைப்பிலக்கியங்கள் தோன்றியுள்ளன.

சிறுகதை, உரைநடைப் படைப்பிலக்கியத்திற்கு உரியது. 20ஆம் நூற்றாண்டின் புதுமைகளாக இவை உருவாகியுள்ளன. நாட்டு மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகள், கற்பனைகள் சிறுகதைகளாக மலர்கின்றன. இக்காலப் படைப்பிலக்கியங்களுள் சிறந்ததாகச் சிறுகதை இலக்கியம் கருதப்படுகிறது. உயிராக உணர்ச்சியும், உருவமாக மொழியும் அமைந்து சிறுகதை வாழ்வு பெற்றுள்ளது. மக்களை இன்புறுத்தும் வகையிலும், அறிவுறுத்தும் வகையிலும் சிறுகதைகள் தோன்றியுள்ளன.

சிறுகதைப் படைப்பிலக்கியங்களின் மூலம் வாழ்க்கை உயர்ந்திருக்கிறது. மதங்கள் வளர்ந்திருக்கின்றன. மனிதப் பண்புகள் மெருகேறி இருக்கின்றன. இதைப் பற்றி இப்பகுதியில் காண்போம்.

எ.கா :

1. காந்தியடிகள் அரிச்சந்திரன் கதை மீது ஈடுபாடு கொண்டு உண்மை பேசுபவராக விளங்கினார்.

2. வீரக்கதைகளைக் கேட்டு சிவாஜி தீரனாகத் திகழ்ந்தார்.

பொதுவாகச் சிறுகதைகள் ஒரு படிப்பினையை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த குறிக்கோள்களை வலியுறுத்துகின்றன. மேலும் சிறுகதைகள் பிற படைப்பிலக்கியங்களைப் போலவே உயிர்த்துடிப்புடையனவாய் விளங்குகின்றன.

படைப்பு என்பது இயற்கையின் முன் ஒரு கண்ணாடியைத் தூக்கிப் பிடிப்பதுபோல் அமைவதாகும். கண்ணாடியில் தெரிவன உண்மையான பொருள்கள் அல்ல. அவை போலிகளும் அல்ல. உண்மையை ஒத்த பிம்பங்கள். சிறுகதைப் படைப்பிலக்கியம் இத்தகைய வடிவினையே பெற்றுள்ளது. உண்மை நிகழ்வுகள், அனுபவங்களைக் கொண்டமைவதால் சிறுகதை படைப்பிலக்கிய வகைக்குப் பொருத்தமுடையதாகிறது.

### 1.1.1 படைப்பிலக்கியம்

அறிவின் வாயிலாக உலகத்தை அறிவதைவிட, புலன்களின் வாயிலாக உலகத்தைக் காண முயற்சி செய்தல் வேண்டும். இத்தகைய படைப்பாளரின் உணர்ச்சியே படைப்பிலக்கியத் தோற்றத்திற்கு அடிப்படையாகிறது. ஓர் அழகான காட்சியைக் காணும் அனைவரும் அக்காட்சிக்கு உணர்ச்சி வடிவம் தருவதில்லை. பெரும்பாலோர் அதை மறந்து விடுகின்றனர். கலையுள்ளம் படைத்தவர்கள் மட்டுமே அந்த அழகுணர்ச்சியை மனத்தில் பதித்து, அதற்குக் கலை வடிவம் தந்து அழியாமல் காக்கின்றனர். அழகுணர்ச்சியும், நுண்ணுணர்ச்சியும் மிக்க மனிதனின் உணர்ச்சி வெளிப்பாடே படைப்பிலக்கியத்திற்குக் காரணமாகிறது. படைப்பிலக்கியங்கள் எழக் காரணங்களாவன :

1) மனிதன் தன் அனுபவத்தைத் தானே வெளியிட வேண்டும் என்ற விருப்பம்.

2) பிற மக்களுடன் மனிதன் கொண்டிருக்கும் ஈடுபாடு.

3) மனிதன், உண்மை மற்றும் கற்பனை உலகோடு கொண்டிருக்கும் ஈடுபாடு.

4) தன் அனுபவத்திற்குக் கலைவடிவம் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வம்.

இனி, படைப்பிலக்கியத்தின் தன்மைகளைக் காண்போம்.

சொற்களால் திறம்பட அமைவதே படைப்பிலக்கியம். படைப்பிலக்கியம் தனி ஆற்றல் பெற்றவர்களால் உருவாக்கப்படுகிறது. படைப்பாளன் தன் உள்ளத்தில், உணர்வுகளுடன் பதிந்தவற்றை மட்டுமே படைத்துக் காட்டுகிறான். எந்த ஒரு படைப்பும் பொதுமக்களால் ஏற்கப்பட்டு, அறிஞர்களின் ஆதரவு பெற்றால் மட்டுமே நிலைத்து நிற்க முடியும். அவ்வகையில் படைப்பிலக்கியங்கள் உண்மை நிகழ்வுகளைக் கொண்டு விளங்குகின்றன. படைப்பிலக்கியம் மனிதர்களின் உள்ளத்தை ஆள்கிறது. மனித மனம் பண்பட உதவுகிறது. ஒரு சமுதாயத்தின் விருப்பு,

வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றைப் பண்படுத்துவன படைப்பிலக்கியங்களே. இங்ஙனம் படைப்பிலக்கியங்கள் மனித வாழ்விற்குத் துணை நிற்பதை அறியலாம்.

**1.1.2** சிறுகதை இலக்கியம்

இந்தியாவில் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வி, அறிவியல் புரட்சி, தேசிய எழுச்சி ஆகியன உரைநடை இலக்கியத்தை வளர்ப்பதற்கான காரணிகள் ஆயின. இந்திய மொழிகளிலும் மரபுக் கவிதைகள் படிப்படியாய்க் குறைந்து, புதிய கவிதைகள் தோன்றின. அவ்வாறே கதைகளிலும் மரபுநிலை மாறி, புதுமை இடம்பெறத் தொடங்கியது. இதன் விளைவு சிறுகதை இலக்கியம் சிறந்த இலக்கிய வடிவமாய் மலர ஆரம்பித்தது. சிறுகதை ஐரோப்பியர் வரவால் தமிழுக்குக் கிடைத்தது என்பது அறியத்தக்கது.

சிறுகதை, மக்களின் கதைகேட்கும் ஆர்வத்தால் பொழுது போக்கிற்கு இடமளிக்கும் அளவில் தோன்றியதாகும். இன்று, இச்சிறுகதைகள் சமுதாயத்தில் பலரும் விரும்பிப் படித்துப் பயன்கொள்ளத்தக்க அளவில் எளிய இலக்கியங்களாய்த் திகழ்கின்றன. சிறுகதைகள் வாழ்க்கைக்குத் திருப்பங்களாக அமைகின்றன. சிறந்த சிறுகதைகள் போதனை செய்து ஒழுக்கத்தினை உயர்த்துவதாகவும் அமைகின்றன.

- அமைப்பு

கற்பனை ஆற்றல், சொல் நயம், நடை அமைப்பு மிக்க படைப்பாளரின் படைப்பே சிறுகதையின் தோற்றத்திற்கு அடிப்படையாகிறது. அளவிற் சிறியதாய் அமைந்து, ஆற்றல் மிக்கதோர் இலக்கிய வடிவமாய்ச் சிறுகதைகள் திகழ்கின்றன. சிறுகதை இலக்கியத்தினை மிகச் சிரமமான வெளியீடு என்று கூறுவது பொருந்தும். ஏனெனில், சொல்கின்ற கருத்தில் தெளிவும், வெளியீட்டில் சிக்கனமும், தெளிவான ஓட்டமும், தொய்வில்லாத ஈர்ப்பும் இதற்கு அவசியம். ஐந்நூறு பக்கங்களில் எழுதப் பட்டிருக்கும் நாவலை விட ஐந்து பக்கச் சிறுகதையின் வேகம் மிகுதியானதாகும்.

சிறுகதை என்பது தந்தத்தில் பொம்மையைக் கூர்மையாய்ச் செதுக்குவது போன்றது. நல்ல நடையினால் சிறுகதை செதுக்கப்பட வேண்டும். சொல்லுகின்ற செய்தியை, கூர்மையாய்த் தெளிவாய்ச் சொல்ல வேண்டும். இதன் மூலமே சிறுகதையின் கலையம்சத்தைப் பிரகாசிக்கச் செய்ய முடியும்.

இங்ஙனம் சிறுகதைகள் படைப்பிலக்கிய வகையுள் ஒன்றாய் விளங்குவதை அறியலாம். சிறுகதைப் படைப்பாளர்கள் தங்கள் உள்ளத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ப, புறவாழ்க்கையில் தாம் காணும் காட்சிகளை, அனுபவங்களைக் கொண்டு சிறுகதைகளைப் புதியதாகப் படைக்கின்றனர். இப்படைப்புகள் மனித சமூகத்தை நல்வழிப்படுத்தும் நோக்கில் அமைதல் வேண்டும். சிறுகதைகள் மூலம் படைப்பாளரின் கற்பனை, மனநிலை, ஆளுமை ஆகியவை வெளிப்பட வேண்டும். இவ் அளவிலேயே சிறுகதைப் படைப்பிலக்கியங்கள் சிறப்புப் பெற இயலும்.

# 1.2 சிறுகதை இலக்கணம்

வாழ்க்கையின் ஒரு சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, சூறாவளியின் சுழற்சியோ, நீர்க்குமிழியின் வட்டமோ, ஏதாவது ஒரு அணுவின் சலனமோ சிறுகதையாக இடமுண்டு.

சிறுகதைக்கு இலக்கணமோ, வரைமுறையோ, பண்போ கிடையாது என்று கூறுவோரும் உண்டு. ஆனால் சிறுகதைக்கு, பண்போ தனி இலக்கணமோ இல்லை என்று கூறிவிட முடியாது என்போரும் உண்டு. சிறுகதைக்கென இரண்டு நூற்றாண்டு காலப் புதிய மரபு தோன்றிவிட்டது. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறுகதையின் பொதுவான தன்மைகள் குறித்து ஆய்வுக் கருத்துகள் வெளிவந்துள்ளன. இதன் அடிப்படையில் ஆய்வாளர்கள் சிறுகதைக்கெனச் சில வரைமுறைகளைச் சுட்டிக் காண்பித்துள்ளனர்.

- இலக்கணம்

1) சிறுகதை என்றால் அளவில் சிறியதாய் இருக்க வேண்டும்.

2) தனிமனித அல்லது சமுதாய வாழ்க்கையைச் சுவையோடு பிரதிபலிக்க வேண்டும்.

3) சிறுகதையில் ஒரு மனிதர் அல்லது ஓர் உணர்வு, ஒரு நிகழ்ச்சி அல்லது ஒரு சிக்கல் தான் தலைதூக்கியிருக்க வேண்டும்.

4) அளவுக்கு அதிகமான கதைமாந்தர்களுக்கு அங்கு இடமில்லை.

5) விரிவான வருணனைக்கும், சூழ்நிலைக்கும் சிறுகதை இடம்தரல் கூடாது.

6) குறைவான, ஏற்ற சொற்களால் இவை சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

7) பாத்திரங்களின் உரையாடல்களில் சொற்செட்டு அவசியம்.

8) சிறுகதை அளவிற் சிறியதாய், முழுமை பெற்று இருக்க வேண்டும்.

9) சிறுகதை நம்பக் கூடிய உண்மைத் தன்மையினைக் கொண்டு விளங்குதல் வேண்டும்.

10) நல்ல சிறுகதை ஆல விதையைப் போல் விரிவாகக் கூடிய கதைக்கருவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒரு நல்ல சிறுகதை என்பது ஒரு சுவைமிக்க மாம்பழத்தை இறுதிவரை விரும்பிச் சுவைப்பது போன்றதாகும். அவ்வாறு இன்றி, மாம்பழத்தை முதல் கடியிலேயே வீசியெறிந்து விட வேண்டும் என்ற எண்ணத்தை ஒரு சிறுகதை ஏற்படுத்தினால், அச்சிறுகதையினால் பயன் ஒன்றும் இல்லை என்பது தெரியவருகிறது.

ஒரு சிறுகதைக்குப் பின்னே உள்ள படைப்பாளரின் கலை ஆற்றல், கற்பனைத் திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி – இவையனைத்தும் இலக்கண வரம்புகளை விட முக்கியமானவை.

குறிஞ்சிக் கலியில் (51) கபிலர் பாடிய கள்வன் மகன் என்ற செய்யுள் கருத்தை இங்கு எடுத்துக் கொள்வோம். தாகத்திற்கு நீர் பருக வரும் வழிப்போக்கன் போல, தலைவன், தலைவி வீட்டிற்கு வருகிறான். தாகத்தைத் தணிக்க, நீர் ஊற்றும்போது தலைவன் அவள் கையைப் பற்றுகிறான். தலைவி கூச்சலிடுகின்றாள். இதைக் கேட்ட தாய் பதறி ஓடிவருவதைக் கண்டு, தலைவனைக் காட்டிக் கொடுக்காமல் 'அவனுக்கு விக்கிக் கொண்டு விட்டது' என்று தலைவி ஒரு பொய்யைக் கூறுகிறாள். கள்வன் மகன் என்று அவனை அன்பு பொங்க ஏசுகிறாள்.

இவ்வளவும் ஒரே நொடிப் பொழுதில் நிகழ்ந்து விடுகிறது. குறிப்பிட்ட ஒரே இடம். மூன்றே பாத்திரங்கள். ஒரே உணர்ச்சி. சின்னஞ் சிறு நிகழ்வுகள் மூலம் விரியும் கதை. எவ்வளவு சொற்செட்டு!, எவ்வளவு உயிராற்றல்! அந்தச் செய்யுள் எந்த நீதியையும் புகட்டவில்லை. ஆனால் இயற்கையான உணர்ச்சிக்கும், பெண்மையின் பண்புக்கும் இடையேயான போராட்டத்தைச் சித்திரித்து வெற்றி கண்டுள்ளது. படைப்பாளரின் இத்திறன் இலக்கணத்தை விட முக்கியமானதாகவே கருத இடமளிக்கிறது.

## 1.2.1 சிறுகதையின் தொடக்கம்

சிறுகதையின் தொடக்கம் குதிரைப் பந்தயம் போன்று விறுவிறுப்பாய் அமைதல் வேண்டும். சிறந்த சிறுகதைக்குச் சிறப்பான தொடக்கம் இன்றியமையாததாகிறது. அப்பொழுது தான் அதன் தொடர்ச்சி நெகிழ்ச்சியின்றி அமையும். படிப்போரின் கவனத்தை ஒருமுகப்படுத்தவும் உதவும். சிறுகதையின் தொடக்கம் வாசகர்களை ஈர்த்து, படிக்கத் தூண்டுவதாய் இருத்தல் வேண்டும். சிறுகதையில் ஒவ்வொரு வரியும் முக்கியம். அதில் அநாவசியத்திற்கு இடமில்லை என்பதிலிருந்து தொடக்கம் சிறப்பாக அமைய வேண்டியதன் அவசியத்தை உணரலாம்.

சிறுகதையைத் தொடங்கி எழுதுவது என்பது யானை உருவத்தைச் செதுக்குவதற்கு ஒப்பாகும். தேக்கு மரத்துண்டில் யானையைச் செதுக்க விரும்புகின்றவன், முதலில் யானையின் உருவத்தை மனத்தில் பதித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் ஒவ்வொரு செதுக்கலையும் யானையின் உருவத்தை நோக்கிச் செலுத்த வேண்டும். அவ்வாறு இன்றி, சிலையைச் செதுக்குபவன் நடுவில் ஒரு குதிரையை மனத்தில் நினைத்தான் என்றால் சிலையானது யானையின் முகமும், குதிரையின் உடலுமாய் மாறி அமைந்துவிடவும் கூடும். அதாவது யாதிரை அல்லது குனை ஆக உருவாகிவிடக் கூடும். இவ்வளவிலே சிறுகதையின் தொடக்கமும் சிறப்பாக அமையப்பெறவில்லை, எனில் அதன் தொடர்நிகழ்வுகளை ஒருமுகப்படுத்தல் என்பதும் இயலாமல் போய்விடும்.

மேற்கண்ட அளவில் சிறுகதைத் தொடக்கத்தின் முக்கியத்துவம் அறியப்படுகிறது.

## 1.2.2 சிறுகதையின் முடிவு

சிறுகதையின் தொடக்கத்தைப் போன்றே முடிவும் முக்கியத்துவம் பெறல் வேண்டும். சிறுகதையின் முடிவு இறுதிவரை படிப்போரின் கவனத்தைக் கவரக் கூடியதாய் இருக்க வேண்டும். சிறுகதையில் முடிவு கூறப்படவில்லை எனில் அது மனத்தில் நிலைத்து நிற்காது. கதையின் முடிவு உரைக்கப்படல் அல்லது சிந்திக்கச் செய்தல் ஆகியவற்றின் மூலமே படைப்பாளரின் ஆற்றல் உணரப்படும். ஆகவே சிறந்த சிறுகதைக்குச் சிறப்பான முடிவு அவசியம் என்பது உணரப்படுகிறது.

சிறுகதையின் முடிவு நன்மையானதாகவும் அன்றித் தீமையானதாகவும் அமையலாம். சில வேளைகளில் கதையின் முடிவு முரண்பாடானதாகவும் அமைவது உண்டு. முரண்பாடான முடிவுகள் படிப்பவர்களைச் சிந்திக்க வைப்பதும் உண்டு. சிறந்த முடிவினைக் கொண்ட சிறுகதையே மனத்தில் நிலைக்கும். சிறுகதையின் சிறந்த முடிவு சமூகப்பயன் விளைவிக்கக் கூடியது. சிலவேளைகளில் சிறுகதைகளின் முடிவுகள்

தலைப்புகளாய் அமைந்த நிலையில் அவை சிறப்புப் பெறுவதும் உண்டு. இத்தகைய சிறுகதைகளைப் படிக்கத் தொடங்கிய உடனேயே அந்தக் கதையின் போக்கையும், அதன் முடிவையும் அறிந்து கொள்ள இயலும்.

முடிவுகளைத் தலைப்புகளாகக் கொண்ட சிறுகதைகள் சிலவற்றின் பெயர்களை இங்குக் காணலாம். நா.பார்த்தசாரதியின் ஊமைப் பேச்சு, ஜெயகாந்தனின் வேலை கொடுத்தவன், புதுமைப்பித்தனின் திண்ணைப் பேர்வழி, சோமுவின் மங்களம் போன்ற கதைகளை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

**1.2.3** சிறுகதையின் உச்சநிலை

உச்சநிலை என்பது, வாசகர்கள் எதிர்பாராத வகையில் அல்லது உணர்ச்சிக் கொந்தளிப்பின் உச்சியில் கதையை முடித்தலாகும். சிறுகதைகளில் உச்சநிலைக்கு இடமில்லை எனில் அது சாதாரணக் கதையாகவே கருத இடமளிக்கும். படைப்பிலக்கிய நிலைக்குத் தகுதியுடையதாகாது. உச்சநிலையே படைப்பாளரின் தனித்தன்மையை வெளிப்படுத்துவதாயுள்ளது. படைப்பாளரின் மறைமுகக் கருத்துகள் சில வேளைகளில் உச்ச நிலைக்கு இடமளிப்பதும் உண்டு.

சிறுகதைகள், படிப்பவரிடத்தே அடுத்தடுத்து என்ன நிகழுமோ என்ற எதிர்பார்ப்பினை ஏற்படுத்தி, அதன்பின் உச்சநிலைக்கு உரியதாகிப் பயன் விளைவிக்கவேண்டும். உச்சநிலையை எதிர்பார்த்துப் படிக்குமளவில்தான் சிறுகதை அமைப்புத் தொய்வின்றி அமையும். சிறுகதையின் உச்சநிலை முடிவினையும், பயனையும் வழங்க வல்லதாய் அமைகிறது. கதை நிகழ்ச்சி, கதைமாந்தர் மூலமாகவே உச்சநிலை உயிர் பெறுகிறது. படைப்பாளர் உச்சநிலையினை அமைத்துக் கொடுப்பதன் மூலமே சிறுகதையின் வெற்றிக்கு வழிவகுக்க முடியும்.

கல்கி அவர்களின் கேதாரியின் தாயார் சிறுகதையில் உச்சநிலை சிறப்பிடம் பெறுகிறது. இச்சிறுகதையின் கதைத்தலைவன், கணவனை இழந்த பெண்களுக்கு மொட்டையடித்து முக்காடு இடும் பிராமணச் சமூக வழக்கத்தை முற்றிலும் வெறுப்பவனாக, அதை மாற்ற முயல்பவனாகக் காட்டப்படுகிறான். மேலும் அவன் அம்மாவுக்கு நேர்ந்த அந்நிலையை எண்ணி எண்ணி வருந்தி உயிரை விடுபவனாகவும் காட்டப்படுகிறான். கதை முழுவதிலும் இத்தகைய அவனது மனநிலையையே விவரிக்கும் படைப்பாளர், அவன் இறந்த பிறகு அவன் மனைவிக்கும் அதே நிலை ஏற்படுவதை உச்சக்கட்டமாக அமைத்து மனத்தில் பாதிப்பினை ஏற்படுத்தி விடுகிறார்.

**1.2.4** சிறுகதையின் அமைப்பு

சிறுகதை விறுவிறுப்பாய்த் தொடங்கி, அதன் தொடர்ச்சியில் நெகிழ்ச்சி இல்லாமல் இயங்கி, உச்சநிலைக்குச் சென்று முடிவுவரை படிப்பவரின் கவனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். படிப்பவர்களைச் சோர்வடையச் செய்யக் கூடாது. கதை உணர்ச்சியோட்டம் உடையதாய் அமைதல் வேண்டும். கதையமைப்பானது சங்கிலித்தொடர் போன்று கதைமாந்தர்களிடையே பின்னிப் பிணைந்து காணப்பட வேண்டும். கதையின் கருப்பொருள் எளிமையானதாய் இருக்க வேண்டும்.

சிறுகதை மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதாய் அமைதல் வேண்டும். சமுதாயத் தேவையை நிறைவு செய்யும் பாங்கிலும் அமைதல் வேண்டும். நல்ல சிறுகதைக்கு, தொடக்கமும், முடிவும் இன்றியமையாதவையாகின்றன. சிறுகதையைப் படிக்கும் போது அடுத்து என்ன நிகழும் என்ற உணர்ச்சியும், எதிர்பார்ப்பும் ஏற்படுத்தும் வண்ணம் கதையமைப்பு இருத்தல் வேண்டும். படைப்பாளன் கதையில் இன்ன உணர்ச்சிதான் இடம்பெறவேண்டும் என்பதை முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும்.

- உணர்ச்சிகள்

1) காதல்
2) வீரம்
3) சோகம்
4) நகை
5) வியப்பு
6) வெறுப்பு
7) அச்சம்
8) சாந்தம்
9) கருணை

இந்த ஒன்பது வகையான உணர்ச்சிகளுள் ஒன்றோ, பலவோ கலந்து சிறுகதைகளை உருவாக்க வேண்டும். சிறந்த சிறுகதைகள் படைப்பாளரின் மொழி, நடை, கற்பனை, வருணனை ஆகியவற்றைக் கொண்டு அமையும்.

சிறுகதைகள் அரை மணியிலிருந்து இரண்டு மணி நேரத்திற்குள் படித்து முடிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். சிறுகதையின் நீளம் என்பது வரையறுக்கப்படாத ஒன்று. ஒரு பக்கத்தில் முடிந்த சிறுகதைகளும் உண்டு. அறுபது பக்கம் வரை வளர்ந்த சிறுகதைகளும் உண்டு. பொதுவாக, கதையின் கருத்துக்குப் பொருந்துகின்ற நீளம்தான் உண்மையான நீளம். இதைப் படைப்பாளர்தான் தீர்மானிக்க வேண்டும். சிறுகதைகள் எளிய நடையமைப்பில் அமைதல் வேண்டும்.

## 1.3 சிறுகதையில் உத்திகள்

இலக்கியத்தில் உணர்ச்சியைக் கருத்தாக மாற்ற உதவும் வடிவங்கள் அனைத்தும் உத்திகள் எனப்படுகின்றன. சிறுகதை, ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் திறம்பட அமையச் சில உத்திகள் பின்பற்றப்படுகின்றன. சிறந்த உத்திகள் மூலமே சிறுகதைகள் புதுமை படைக்கின்றன. உத்திகள் படைப்பாளரின் தனித்தன்மையைக் காட்டுவதாயுள்ளன. இந்த உத்திகள் அனைத்தும் கதையமைப்பு, கதைமாந்தர்கள் மூலமே வெளிப்படுகின்றன.

சிறுகதையில் உத்திகளைக் கீழ்க்காணும் முறைகளில் வெளிப்படுத்தலாம். அவையாவன :

1) குறிப்புமொழி
2) எதுகை, மோனை பொருந்த அமைந்த சொற்றொடர் அமைப்பு
3) முந்தைய நிகழ்ச்சிகளைச் சான்று காட்டுதல்
4) சுருங்கக் கூறல்
5) கதை கூறல் முறை
6) அறிவு நிலை சார்ந்த சொற்களைப் பயன்படுத்தல்
7) நனவோடை முறை
8) சிறுகதைகளுக்குப் பெயரிடல் (தலைப்பு)
9) சிறந்த கதைமாந்தர்

சிறுகதை இலக்கியப் படைப்பு மனத்தில் நின்று நிலைப்பதற்கு அதில் இடம்பெறும் உத்திகளும் காரணமாகின்றன. உத்திகளின் மூலம் செய்திகளை எளிதாக உணரச் செய்யலாம். உத்திகள் விரிந்த சிந்தனைக்கு வழிவகுக்கின்றன. இப்பகுதியின் மூலம் படைப்பிலக்கியத்தின் ஆக்கத்திற்கு உத்திகள் துணை நிற்பதை அறியலாம்.

### 1.3.1 மொழிநடை

சிறுகதைகளில் மொழிநடை எளிமையாய் இருத்தல் வேண்டும். சமுதாயத்தில் உள்ள பல்வேறு நிலையினரும் படித்து, பயன் கொள்ளும் இலக்கியம் இது. எனவே எளிய மொழிநடையின் மூலம் மட்டுமே படைப்பாளர்கள் வாசகர்களின் மனத்தில் கருத்துகளைப் பதிக்க வேண்டும். தனித்தமிழ் நடை, பண்டித நடை ஆகியவை சிறுகதைக்குக் கை கொடுக்காது. அதற்காக இழிவழக்குடன் கூடிய நடையும் உதவாது. ஒரு பழகிய நடையுடன் கூடிய பேச்சு வழக்கு சிறுகதைகளில் இடம்பெறல் வேண்டும். இதன் மூலமே படைப்பாளனின் படைப்பிலக்கியம் வெற்றி பெற இயலும்.

இன்று சிறுகதைகளை விரும்பிப் படிப்பவர்களின் எண்ணிக்கை பெருகியுள்ளது. இதற்குக் காரணம், வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் மொழிநடையில் சிறுகதைகள் அமைந்துள்ளதே ஆகும். எனவே சிறுகதையின் மொழிநடை, உடன் இருந்து பேசுபவர்களைப் போல் அமைதல் வேண்டும். பொருள் புரியாத, கடினமான மொழிநடை கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும். அனைவரும் விரும்பிப் படிக்கும் ஒரு பொதுவான நடையை உடையதாகச் சிறுகதைகள் அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கு மட்டுமே உரிய மொழிநடை அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிப்பதாக இராது. எனவே அனைவருக்கும் பொதுவான ஒரு எளிய நடையே சிறுகதைப் படைப்பிலக்கியத்திற்குத் தேவையானதாகிறது.

படைப்பாளன் தனக்கென்று ஒரு மொழிநடையைப் பின்பற்றும்போது அது அவனுக்குரிய தனிநடை அழகாகிறது. இந்தத் தனி நடையழகு குறிப்பிட்ட ஆசிரியருக்கே உரியதாகி, அவருடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்துகிறது.

இலக்கிய உரைநடைக்கு ஒரு வழிகாட்டிபோல் அமைந்த திரு.வி.கலியாண சுந்தரனாரின் நடை குறிப்பிடத்தக்கது.

‘கண்டிக்குச் செல்லும் வழி நெடுக இயற்கை அன்னையின் திருவோலக்கமன்றி வேறென்ன இருக்கிறது? எங்ஙனும் மலைகள், மலைத்தொடர்கள், மலைச் சூழல்கள்; எங்ஙனும் சோலைகள், சாலைகள், கொடிகள், பைங்கூழ்கள்; எங்ஙனும் அருவிகள், ஆறுகள், நீர்நிலைகள். இவை யாவும் ஒன்றோடொன்று கலந்து அளிக்கும் காட்சி அன்றோ கடவுள் காட்சி.’

தமிழை மக்களின் மொழியென்று உணர்ந்து கொண்டு, அதைத் தமது நடை வளத்தால் சிறக்கச் செய்தவர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி.

‘ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைப்போல் அந்தச் சாலை எங்கே ஆரம்பமாகிறது. எங்கே முடிவாகிறது என்று தெரிந்து கொள்ள முடியாததாயிருந்தது. தபால் சாவடியின் தூணிலே தொங்கவிடப்பட்டிருந்த தபால்பெட்டி திக்கற்ற அநாதைபோல் பரிதாபத் தோற்றமளித்தது.’

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் மொழியின் தனி நடை அழகினை அறியலாம்.

### 1.3.2 கூற்று

சிறுகதையின் பொருண்மையே சிறந்த கூற்று முறைக்கு அடிப்படையாகிறது. இந்தப் பொருண்மையானது செய்திகளினால் உருவாகிறது. கூற்று என்பது சிறுகதை உரைக்கும் செய்திகளைப் பற்றியதாகும். படைப்பாளர் செய்திகளைத் தாமே கூறுவது போன்றும் அமைக்கலாம் அல்லது பிறர் வாயிலாகக் கூறுவது போன்றும் அமைக்கலாம். பொதுவாக, கூற்று முறை பிறர் கூற்றாக அமையும் போதுதான் அது செய்திமுறைப் பொருத்தமும், இலக்கியச் சிறப்பும் உடையதாகிறது.

சிறுகதையில் கதைமாந்தர்கள் கூற்றுக்கு உரியவர்களாகின்றனர். சிறுகதையில் குறைந்த கதைமாந்தர்கள் இடம்பெறுவதால் அனைவருமே கூற்றுக்கு உரியவராகின்றனர். இத்தகைய கூற்றுகள் எளிய நடையில் அமைதல் வேண்டும். குறைந்த, பொருள் பொதிந்த, சுருக்கமான உரையாடல்களாக இவை அமைதல் வேண்டும்.

- கூற்றுகளின் வகைகள்

1) தன் கூற்று
2) அயல் கூற்று
3) பிறர் நினைப்பதை வாங்கிக் கூறல்
4) தன் அனுபவங்களைச் செய்திகளாகக் கூறல்
5) உரைநடை வடிவிலான கூற்று
6) கடிதங்கள் வாயிலான கூற்று
7) காட்சிகளின் வழியான கூற்று
8) இயல்பான கூற்று
9) கருத்துகளின் வெளிப்பாடான கூற்று

இதன் மூலம் கூற்றுகளின் வகைகளை அறியலாம்.

### 1.3.3 நனவோடை முறை

நனவோடை முறை என்பது வாசகர்களைச் சுண்டியிழுக்கும் ஒரு உத்தியாகவே கருதப்படுகிறது. புதினங்களிலும், சிறுகதைகளிலும், கவிதைகளிலும் காலம், இடம் ஆகியவற்றின் பின்னணியில் நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்திக் கூறாமல், உள்மனத்தின் எண்ணங்களை அலையாகக் கிளப்பிவிட்ட நிலையில் அவற்றிற்குச் சொல்வடிவம் தந்தால் அதனை நனவோடை முறை என்று கூறலாம். 'நனவோடை' உத்தியைப் படைப்பாளன் கையாளும்போது சொல்லாட்சி நுட்பம் உடையதாக அமையும். நனவோடை உத்தியை, 'கவர்ச்சித் திறன் சொல்லாட்சி' என்றும் குறிப்பிடலாம். இந்த நனவோடை முறை என்பதை, பாத்திரத்தின் நினைவுப் பாதையில் மேல் மன எண்ணத்தின் செயல்பாடாகவும், பாத்திரத்தின் அடிமன எண்ணத்தின் செயல்பாடாகவும் கொள்ளலாம். இம்முறையில் கதை மாந்தர்களின் மனம் பற்றிய பல்வேறு உண்மைகளை அறிந்து கொள்ளலாம். கதை மாந்தர்களின் நிறை, குறைகளை இம்முறையில் இனம் காண முடிகிறது. கதைமாந்தர்களின் உண்மைத் தன்மையை ஒப்பீடு செய்து அறிந்து கொள்ளவும் உதவுகிறது. சில சிறுகதைகள் முற்றிலும் நனவோடை முறையிலேயே அமைந்திருப்பதையும் காண முடிகிறது. இங்ஙனம் சிறுகதைகளில் நனவோடை உத்தி என்பது புதுமைக்கு உரியதாகச் சிறப்புப் பெறுகிறது. நனவோடை உத்தியைப் பயன்படுத்தித் தமிழில் சிறுகதை படைத்தோரில் மௌனி, லா.ச.ராமாமிர்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 1.4 கதைக்கரு

சிறுகதையில் மைய அம்சமே கதைக்கருதான். அது வீரியமும், உயிர்த்துடிப்பும் கொண்டதாய் இருக்கவேண்டும். ஒரு கதையின் சிறப்பிற்குக் கதைக்கருவே மூல காரணமாகிறது. கருவில் சிறப்பு இல்லையெனில் கதையிலும் சிறப்பிருக்காது. எனவே கதைக்கரு ஒரு புதிய கருத்து, ஒரு புதிய விளக்கம், ஒரு புதிய பார்வை, ஒரு புதிய அழுத்தம், ஒரு புது அம்சம் கொண்டதாயிருக்க வேண்டும். இவற்றோடு கதைக்கரு இலக்கியத் தரத்தைக் கொண்டிருத்தல் அவசியமாகும்.

- அறம் வலியுறுத்தல்

கதைக்கரு எளிமையாக அமைதல் வேண்டும். மக்களின் நம்பிக்கையை உயர்த்துதல் வேண்டும். சமுதாயத் தேவைகளைச் சுட்டிக் காட்டுதல் வேண்டும். வாழ்க்கையின் நன்மையை, அறத்தினை வலியுறுத்த வேண்டும். சிறுகதைகளின் கதைக்கரு பொழுதுபோக்கு நிலையைத் தாண்டி மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைதல் வேண்டும். கல்கி, அகிலன், புதுமைப் பித்தன் ஆகியோருடைய சிறுகதைகளில் இத்தகைய கதைக்கரு அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

- கதைக்கரு – உருவாக்கம

படைப்பாளனின் ஊடுருவும் திறனால் கதைக்கரு உருவாக்கப்படுகிறது. கதைக்கரு வருங்காலத்தை ஊடுருவுவதாக அமைதல் வேண்டும். உணர்ச்சி, சிந்தனைகளின் அடிப்படையில் உருவாதல் வேண்டும். உண்மை, கற்பனை, நிகழ்வுகள், செய்திகள் இவற்றில் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு, சமூகத்திற்கும் பயன்பட வேண்டும். கதைக்கருவில் இலட்சிய நோக்கு வெளிப்படல் வேண்டும்.

‘சிறுகதை அளவில் சிறியதாய் இருக்க வேண்டும். அந்த அளவுக்குள் ஒரு கதைக்குரிய கரு இருக்க வேண்டும். கதையும் முடிவும் கொண்டதாகக் கதைக்கரு விளங்குதல் வேண்டும்.’ இக்கருத்தையே சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் என்று புகழப்படும் மாபசான், ஆண்டன் செகாவ், ஓ ஹென்றி போன்றோர்களும் ஏற்றுக் கொள்கின்றனர்.

புதுமைப்பித்தனின் சங்குத் தேவனின் தர்மம் என்ற சிறுகதை ஆறு பக்கங்களில் அமைந்து இதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. இறுதியாகக் கூறுமிடத்து, ‘கதைக்கரு, ஒரு கதைக்கு முழுவதுமாய் வரையப்பட்ட ஓவியம் போலமைந்து, கதையில் அதன் அழகு முழுவதுமாய் வெளிப்பட வேண்டும்’ என்பது அறியப்படுகிறது.

### 1.4.1 சமூகச் சிக்கல்கள்

சமூகச் சிக்கல்களைச் சுட்டிக் காட்டுவதே படைப்பிலக்கியங்களின் நோக்கமாகும். இந்நெறி சிறுகதை இலக்கியங்களிலும் பின்பற்றப் படுகின்றது. சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் சீர்கேடுகளை விளக்கும் கதைகள் சமூகச் சிக்கல்களுக்கு உரியதாகின்றன. இத்தகைய சிறுகதைகள் சமூகச் சீர்திருத்தத்திற்கும், சமூக மறுமலர்ச்சிக்கும் வழிகாட்டுவதாய் உள்ளன. நாட்டில் வாழும் மக்கள் பொதுஅறிவு பெறுவதற்கும், பிணக்குகள், பூசல்கள் இல்லாமல் வாழ்வதற்கும் இச்சிறுகதைகள் உதவுகின்றன. சமூகச் சிக்கல்களுக்கு உரிய களங்களாகக் குடும்பம் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகள் சுட்டப்படுகின்றன. இத்தகைய சமூகச் சிக்கல்களுக்குரிய சிறுகதைகள் சிலவற்றைப் பின்வருமாறு காண்போம்.

- குழந்தை மணம்

நம் சமூகத்தில் பரவிக் கிடந்த சீர்கேடுகளுள் இதுவும் ஒன்று. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த வழக்கம் சமூகத்தில் பரவலாகக் காணப்பட்டது. பின்னர், பல எழுத்துப் புரட்சிகளின் மூலம் இக்கொடுமை சமூகத்தை விட்டு அகன்றது. இப்புரட்சிக்கு உறுதுணையாய் நின்ற சிறுகதைகள் பலவாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை :

(1) வ.வே.சு. ஐயரின் குளத்தங்கரை அரசமரம்

(2) புதுமைப்பித்தனின் ஆண்மை

- விதவைக் கொடுமை

அக்காலச் சமுதாயத்தில் கைம்பெண்களின் நிலை மிகவும் பரிதாபமானதாய் இருந்தது. சமுதாயத்தில் கைம்பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த சட்டங்களினாலும், பழக்க வழக்கங்களினாலும் அவர்கள் பெரிதும் அவதியுற்றனர். இந்நிலையை மாற்றியமைக்கும் வகையில் மகளிரின் நிலைமையைப் பல்வேறு கோணங்களில் சிறுகதைகள் விவரித்தன. இதன் விளைவாகச் சமூக மாற்றங்களும் நிகழ்ந்தன. விதவைக் கொடுமைகளை விளக்கும் சிறுகதைகளுக்கு, புதுமைப்பித்தனின் வழி, கி.ராஜநாராயணனின் சாவு ஆகியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

- வரதட்சணைக் கொடுமை

‘திருமணத்தின் போது வரதட்சணையை ஒரு நியதியாகக் கொள்ளும் இளைஞன் அவனது கல்வியையும், நாட்டையும், பெண்மையையும் பழிப்பவனாகின்றான்.’ என்று காந்தியடிகள் கூறியுள்ளார். வரதட்சணை என்ற பெயரில் தமிழ்ச் சமுதாயத்தில் திருமணம் என்பது தன் புனிதத் தன்மையை இழந்து கேவலமான வணிக நிலைக்கு மாறிவிட்டது. இச்சமூகக் கொடுமை படைப்பாளர் நெஞ்சில் பதிந்து சிறுகதைகளாயிற்று. இவ்வகையில் சி.சு.செல்லப்பாவின் மஞ்சள் காணி என்ற சிறுகதை குறிப்பிடத்தக்கது.

- பொருந்தா மணம்

வயது கடந்த முதியவர் இளம் பெண்களை மணந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் நிலவியது. இவ்வழக்கத்தைச் சமூகக் குற்றமாகவே கருதி, படைப்பாளர்கள் தங்கள் கதைகளில் கண்டனம் தெரிவித்துள்ளனர். இத்தகைய சிறுகதைகளுக்கு உதாரணமாக, கல்கியின் சர்மாவின் புனர் விவாகம், ஜெயகாந்தனின் பேதைப்பருவம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் சமூகத்தில் நிலவி வந்த மூடநம்பிக்கை, சாதிக் கொடுமை, வறுமைக் கொடுமை, தீண்டாமை ஆகிய சமூகச் சிக்கல்களும் சிறுகதைகளாக வெளிவந்தன. இங்ஙனம் சிறுகதைகள் சமூக மாற்றத்திற்கு வழியேற்படுத்தித் தரும் அளவில் பணியாற்றி இருப்பதை அறியலாம்.

### 1.4.2 குடும்பச் சிக்கல்கள்

குடும்பப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு தோன்றும் சிறுகதைகளும் உண்டு. இத்தகைய சிறுகதைகள் மூலம் குடும்பச் சிக்கல்களுக்கான காரணங்கள் அறியப்படுகின்றன. சுயநலம், உறவுமுறைப் பிணக்கம், பொருளாதார ஏற்றத்தாழ்வு, விட்டுக் கொடுக்காமை, கூடி வாழாமை, குற்றம் காணல் ஆகியவற்றால் குடும்பச் சிக்கல்கள் உண்டாவது சுட்டப்படுகின்றது.

இவ்வகைப்பட்ட சிறுகதைகள் குடும்ப வாழ்வின் இன்ப, துன்பங்களை அணுகி ஆராய்ந்து சமூகப் பயன் விளைவிக்கின்றன. குடும்ப வாழ்வின் நிறை, குறைகளை மக்களுக்கு எடுத்துரைக்கின்றன. வாழ்வின் நன்மை, தீமைகளைப் போதிக்கின்றன. குடும்பப் பிரச்சனைகளைக் களைவதற்கு மேற்கொள்ள வேண்டிய அறிவுரைகளைக் கூறுகின்றன. இதன் மூலம் தனிமனிதக் குணநலன்களை மேம்படுத்தவும் உதவுகின்றன.

குடும்ப வாழ்வின் சிக்கல்களைச் சிறுகதையில் சித்திரிப்பவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கு.ப.ராஜகோபாலன் அவர்கள். இவரின் விடியுமா என்ற சிறுகதை எளிதில் மறக்க இயலாது. ஒரு சிறுகதையின் தொடக்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திறனாய்வாளர் பலரால் எடுத்துக்காட்டப்படும் சிறப்புப் பெற்றது. லட்சுமி, சிவசங்கரி, இந்துமதி ஆகியோர்களும் குறிப்பிடத் தகுந்தவர்களாகின்றனர்.

**1.4.3** தனிமனிதச் சிக்கல்கள்

தனிமனிதனின் மனப் போராட்டங்களைச் சித்திரிக்கும் சிறுகதைகள் தனிமனிதச் சிக்கலுக்கு உரியனவாகின்றன. இத்தகைய சிறுகதைகளில் நிகழ்ச்சிகளும், பாத்திரங்களும் ஒன்றோடொன்று கலப்பதில்லை. ஒரு பாத்திரம் அல்லது ஒரு சூழ்நிலையை மையமாக வைத்தே மனப் போராட்டங்கள் சித்திரிக்கப்படுகின்றன. சமூகக் கட்டுப்பாடு, சூழ்நிலை காரணமாக மனிதனுக்குள் உணர்ச்சிகள் அடைபட்டுக் கிடக்கின்றன. இவ்வுணர்ச்சிகளின் வெளிப்பாடு தனி மனிதச் சிக்கலுக்கு உரியதாகிறது. மேலும் மனிதனின் உணர்வுகளைத் தத்துவ வகையில் வெளிப்படுத்தும் கதைகளும் இவ்வகைப்பட்டனவாகவே உள்ளன.

அகிலன் – பூச்சாண்டி
க.நா. சுப்பிரமணியன் – மனோதத்துவம்
புதுமைப்பித்தன் – மனநிழல்
சூடாமணி – சுமைகள்

ஆகியவை குறிப்பிடத் தகுந்தவையாகும்.

க.நா.சுப்பிரமணியத்தின் மனோதத்துவம் கதையில் எதிர் வீட்டுக்காரன் நடு இரவில் வானொலி வைக்கிறான். இதை ஒருவன் எச்சரிக்கிறான். எச்சரித்தும் கேளாமல் போகவே அவனைக் கொன்று விடுகிறான். அதன் பிறகும் நடு இரவில் வானொலிச் சத்தம் அவனுக்குக் கேட்கிறது. எனவே மனோதத்துவ மருத்துவரிடம் செல்கிறான். இச்சிறுகதை கொலை செய்தவனின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. இதேபோல் தனி மனிதனின் பலவீனத்தைக் காட்டும் சிறுகதையாக நாரணதுரைக்கண்ணனின் சந்தேகம் என்ற கதை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சிறுகதைகளின் மூலம் தனிமனிதனின் உளச் சிக்கல்கள், உணர்ச்சிகள், பலவீனங்கள் ஆகியவற்றை அறிய முடிகிறது. இதன் மூலம் தனிமனித மேம்பாட்டிற்குச் சிறுகதைகள் துணை செய்வதும் தெளிவாகிறது.

## 1.5 கதைமாந்தர்

ஒரு படைப்பாளனின் கற்பனை, உணர்ச்சி, எண்ணம் ஆகிய அனைத்தும் கதைமாந்தர் மூலமாகவே வடிவம் பெறுகின்றன. கதையில் வரும் மனிதர்கள் உயிர் வாழும் மனிதர்களைக் காட்டிலும் ஆற்றல் பெற்றவர்கள்; ஆயுள் மிக்கவர்கள். இவர்கள் வாழும் மனிதர்களுக்கு வழிகாட்டிகளாய் விளங்கக் கூடியவர்கள். இலக்கியத்திறனை எடைபோடுவதற்காக மட்டுமே கதைமாந்தர்கள் உருவாக்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்துச் சமூகத்தின் வாழ்க்கையை அறிந்துகொள்ளும் பொருட்டும் இவர்கள் உருவாக்கப்படுகின்றனர்.

இராமாயணத்தில், இராமன் இலட்சியவாதியாக விளங்கும் கதைத் தலைவன். சிலப்பதிகாரத்தில் கோவலன் சராசரி மனிதனாக விளங்கும் மற்றொரு கதைத்தலைவன். இராமன் சமுதாயத்திற்கு வழிகாட்டியாக விளங்குகின்றான் என்றால், கோவலன் சமுதாயத்திற்கு எச்சரிக்கையாக விளங்குகின்றான். இவ்வகைப்பட்ட கதைமாந்தர்கள் காலம் கடந்தும், மொழி கடந்தும், நாட்டின் எல்லை கடந்தும் இலக்கியத்தில், சமுதாயத்தில் வாழ்கின்றனர். படைப்பாளரின் எண்ணங்களைப் பூர்த்தி செய்கின்றனர். இவர்களின் சிரஞ்சீவித் தன்மையே கதைமாந்தர்கள் பெறும் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாகிறது.

இதுபோல் தான், சிறுகதைகளில் வாழும் கதைமாந்தர்கள் சமூகத்தைத் தொடர்பு படுத்தி மனத்தில் இடம்பெற வேண்டும். சமுதாயத்திற்குப் பாடமாக அமைய வேண்டும். சமுதாயத்தை நெறிமுறைப்படுத்த வேண்டும். கதைமாந்தர்கள் சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்குமான உறவை வளர்ப்பவர்களாக விளங்க வேண்டும்.

கதைமாந்தர்களின் பண்புகளின் அடிப்படையில் அமையும் சிறுகதைகள் சிறந்த சிறுகதைகளாகின்றன. இப்பகுதியின் மூலம் கதை மாந்தர்களின் முக்கியத்துவத்தை உணரலாம்.

### 1.5.1 தலைமை மாந்தர்

ஒரு சிறுகதை மனத்தில் தங்க வேண்டுமானால் அதில் வரும் பாத்திரம், ஒப்பற்ற பண்பைப் பெற்றிருத்தல் வேண்டும். சிறுகதையில் வரும் கதைமாந்தர்கள் பல்வேறு நாட்டினராக, பல்வேறு மொழியினராக, பல்வேறு கொள்கையுடையவராக இருக்கலாம். ஆனால் சமூகத்தின் பல்வேறு படிகளில் இருப்போருக்கும், கதைநிகழ்ச்சிக்கும் நிறைவைத் தருபவராக விளங்குதல் வேண்டும். இத்தகைய பாத்திரங்களே தலைமை மாந்தருக்கான தகுதியைப் பெறுகின்றனர்.

- பண்புகள்

சிறுகதைகளில் இடம்பெறும் தலைமை மாந்தரே கதை நகர்வதற்குக் காரணமாகின்றனர். தலைமைமாந்தர் பெருமைக்குரியவர்கள். குணக்குறை பெற்றிருப்பினும் இவர்கள் பண்புநலன்களில் சிறந்து விளங்குபவர்கள். எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மையில் சிறுகதைத் தலைமை மாந்தர்கள் விளங்குகின்றனர்.

மேலும் சிறுகதைகளில் இடம்பெறும் தலைமை மாந்தர்கள் தங்களின் தனித்தன்மையினால் மக்கள் மனத்தில் இடம்பெற வேண்டும். இலட்சிய நோக்கு, புதுமைப் போக்குடையவராய்த் திகழ்தல் வேண்டும். வாழ்க்கையின் நன்மையை, அறத்தை, நம்பிக்கையை வலியுறுத்துபவர்களாக விளங்குதல் வேண்டும்.

தலைமை மாந்தர்கள் சமுதாயத்திற்குப் பாடம் கற்பிப்பவர்கள். சில வேளைகளில் தலைமை மாந்தர்களின் பெயரே சிறுகதைக்குத் தலைப்பாக அமைந்து சிறப்புப் பெறுவது உண்டு. எடுத்துக்காட்டாக,

ஆர்.வி – பூக்காரி செங்கம்

லட்சுமி – மேரி செல்வம்

சூடாமணி – வீராயி

ந. பிச்சமூர்த்தி – மோகினி

லா.ச.ரா – சாவித்திரி

ஆகியவற்றைக் கூறலாம். தலைமை மாந்தர்கள் சமுதாயத்தின் மாதிரிகளாக விளங்கி, மனிதப் பண்புகளுக்கு உயிரூட்டக் கூடியவர்கள் என்பதை இப்பகுதியின் மூலம் அறிகிறோம்.

### 1.5.2 துணை மாந்தர்

இவர்கள் தலைமை மாந்தர்களுடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொண்டவர்கள். கதை நகர்விற்கு இன்றியமையாத நிலையில் வேண்டப்படுபவர்கள். துணைமாந்தர்களின் துணை இன்றிக் கதையில் சிறு சிறு நிகழ்வுகள்கூட இடம்பெற இயலாது. ஒரு சிறுகதை நிறைவு பெறுவதற்குத் துணைமாந்தர்கள் அவசியம் என்பது தெரியவருகிறது. துணைமாந்தர்கள் முழுமையாகச் சித்திரிக்கப்படாத கதாபாத்திரங்களாக விளங்கிய போதிலும், கதையின் ஓட்டம் கருதிச் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகின்றனர்.

கல்கியின் கேதாரியின் தாயார் சிறுகதை, நண்பனாக வரும் துணைமாந்தன் கதைகூறிச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் துணைமாந்தர் மூலமே கதையின் உச்சநிலை உரைக்கப்படுகிறது. இக்கதையில் தலைமைமாந்தரைக் காட்டிலும் துணைமாந்தர்களின் பங்கு குறிப்பிடத் தகுந்ததாய் உள்ளது. இக்கதையின் நிகழ்விற்கும், தொடர்பிற்கும், முடிவிற்கும் துணைமாந்தரே துணை நிற்பதைக் காண முடிகிறது.

## 1.6 தொகுப்புரை

நண்பர்களே! இதுவரையிலும் படைப்பிலக்கியமும் சிறுகதையும் பற்றிய செய்திகளைப் படித்தீர்கள். இந்தப் பாடத்தில் நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திப் பாருங்கள்.

- படைப்பிலக்கியமும், சிறுகதையும் பற்றிய பொதுச்செய்திகளை அறிந்து கொள்ள முடிந்தது.
- சிறுகதை இலக்கணம் கூறும் செய்திகளையும், சிறுகதை உத்திகளைப் பற்றிய விளக்கங்களையும் அறிந்துகொள்ள முடிந்தது.
- சிறுகதையின் கதைக்கரு, கதைமாந்தர்கள் மூலம் சமூக, குடும்ப, தனி மனிதச் சிக்கல்கள் எங்ஙனம் வெளிப்படுகின்றன என்பதைப் பற்றித் தெளிவாக அறிய முடிந்தது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

பாடம் - 2

# P20332 தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

இந்தப் பாடம் தொடக்க காலச் சிறுகதைப் போக்கை, வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், தி.ஜானகிராமன் ஆகியோரின் சிறுகதைகளின் வாயிலாக வெளிப்படுத்துகிறது. மேலும், எழுபதுகளிலுள்ள சிறுகதைப் போக்கை ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், அசோகமித்திரன் ஆகியோரின் சிறுகதைகள் வாயிலாக எடுத்துரைக்கிறது.

பின்பகுதியில் இன்றைய சிறுகதையின் போக்கு, போக்கில் நிகழ்ந்த மாற்றங்கள் ஆகியவை பற்றிக் குறிப்பிடப்படுகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- தமிழில் தொடக்க காலச் சிறுகதைகள் சமூக இன்னல்களை எடுத்துக் கூறியிருப்பதை அறிந்து கொள்ளலாம்.
- எழுபதுகளில் தோன்றிய சிறுகதைகள் சமூகத்தின் அடித்தளத்தில் முடங்கிக் கிடக்கும் மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தியதைத் தெரிந்து கொள்ளலாம்.
- இன்றைய சிறுகதைகள் எவ்வாறு சமூகத்துடன் பேசுவதற்கான ஓர் ஊடகமாகச் செயல்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

## பாட அமைப்பு

2.0 பாட முன்னுரை

2.1 தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

2.2 தொடக்க காலச் சிறுகதையின் போக்கு

2.3 எழுபதுகளில் தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

2.4 இன்றைய தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

2.5 தமிழ்ச் சிறுகதையின் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள்

2.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 2.0 பாட முன்னுரை

சிறுகதை குறுகிய காலத்தில் படித்து முடிக்கும் இலக்கியமாகும். இது காலங்காலமாய் மனிதன் அனுபவித்து வரும் நன்மை, தீமைகளை எடுத்தியம்புகிறது. சிறுகதை இலக்கியம் தோன்றி ஒரு நூற்றாண்டு முடியப் போகிறது. இந்நிலையில் சிறுகதைகள் பற்றி நாம் அறியும் செய்திகள் ஏராளம். பொழுதுபோக்கிற்கு இடமளித்த சிறுகதைகள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. அதேபோல் படைப்பாளர்களின் எண்ணிக்கையும் பெருகியுள்ளது. மேலும் சிறுகதைகள் காலந்தோறும் பெற்றுள்ள வளர்ச்சி அதனை நவீன இலக்கியங்களாகவும் உயர்த்தியுள்ளது. இத்தகைய சிறுகதை இலக்கியத்தின் போக்கினை அறிதலே இப்பாடத்தின் நோக்கமாகிறது. தமிழ்ச் சிறுகதையின் போக்கிற்குப் படைப்பாளர்களின் சமூகம் சார்ந்த சிந்தனைகளே காரணமாகின்றன. படைப்பாளர்கள் காலத்தின் தேவைக்கு ஏற்பக் கருத்துகளைக் கையாளுகின்றனர். இவை படைப்பாளர்களின் கருத்து, ரசனை, மொழி, கதை சொல்லும் பாங்கு ஆகியவற்றிற்கு ஏற்ப அமைகின்றன. இத்தகைய மாற்றங்களே சிறுகதையின் போக்கினைத் தீர்மானிக்கின்றன. எனவே சிறுகதையின் போக்குகளை அறியப் பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய சிறுகதைப் படைப்புகளை ஆராய்வது அவசியமாகிறது. இதன் மூலம் சிறுகதை இலக்கியத்தின் இலக்கிய மற்றும் சமூகப் பயன்களையும் அறிய முடிகிறது. இப்பாடத்தில் சிறுகதையின் போக்குகள் பற்றிய செய்திகளைப் பார்ப்போம்.

## 2.1 தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

முதலில் சிறுகதையின் போக்குகள் என்றால் என்ன என்பதை அறிதல் வேண்டும். சிறுகதைகள் தோன்றிய நாளிலிருந்து இன்று வரையிலும் அவை பெற்றுள்ள வளர்ச்சிகளும், மாற்றங்களுமே அதன் போக்குகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை இலக்கியப்பயன், சமூகப்பயன் என்ற அடிப்படையில் அமைகின்றன. சிறுகதையின் போக்குகளுக்குச் சமூக மாற்றங்கள், நாகரிக வளர்ச்சி, பண்பாட்டு மாற்றங்கள், நவீன இலக்கிய வளர்ச்சி ஆகியவைகளும் காரணமாகின்றன.

மேலும் படைப்பாளர்கள் தங்களின் ரசனைக்கு ஏற்பச் சிறுகதை இலக்கணத்தை வரையறுப்பதில் வேறுபடுவதாலும் சிறுகதையின் போக்கில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவ்வகையில் படைப்பாளர்களின் சிந்தனை வேறுபாடுகளைக் கீழ்க்காணும் வகையில் காண்போம்.

- வாழ்வில் விதவிதமான அம்சங்கள், சிக்கல்கள், புதிர்கள், துன்பங்கள், மகிழ்ச்சிகள், பாதிப்புகள், வேடிக்கைகள், ரசனைகள் போன்றவற்றைப் படைப்பாளர்கள் தங்கள் சிந்தனைகளாக வெளிப்படுத்தினர்.
- சிறுகதைகளின் மூலம் மனிதர்களின் விதவிதமான உணர்வுகளையும், உளப்போராட்டங்களையும், வாழ்க்கையின் முரண்பாடுகளையும், விசித்திரத் தன்மைகளையும் வெளிப்படுத்தினர்.
- வாழ்வின் எதார்த்தத்தையும், சமகாலச் சமுதாயத்தையும் எடுத்துரைத்தனர்.
- சமூகப் பொறுப்பு மிக்க படைப்பாளர்கள் சமூகத்துடன் பேசுவதற்கான ஒரு ஊடகமாகச் சிறுகதைகளைப் பயன்படுத்தினர்.
- கல்வி தொழில் நுட்ப ஊடகங்களாகச் சில படைப்பாளர்கள் சிறுகதையை வடிவமைத்தனர்.

இங்ஙனம் படைப்பாளர்களின் சிந்தனை மாறுபாடுகளுக்கு ஏற்ப, சிறுகதையின் போக்குகள் அமைந்தன.

## 2.2 தொடக்க காலச் சிறுகதையின் போக்கு

விநோதரச மஞ்சரி கதைகள், பஞ்சதந்திரக் கதை, பரமார்த்த குரு கதை முதலியன தமிழ்மொழியில் தோன்றிய பழைய சிறுகதைகளாகும். இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த எழுத்தாளர்களான வ.வே.சு.ஐயர், புதுமைப்பித்தன், கு.ப.இராஜகோபாலன், ராஜாஜி, 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி, அழகிரிசாமி, அண்ணா போன்றோர் தொடக்க காலத்திலிருந்தே சிறுகதை வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளனர். இவர்கள் தமக்கென்று ஒரு தனி நடையை வகுத்துக் கொண்டு சிறுகதைகளைப் படைத்தனர். இவர்களுடைய சிறுகதைகள் வாழ்க்கைச் சிக்கல்களைப் பிரதிபலிப்பதாய் அமைந்தன. மனித மனங்கள் மாற்றம் பெறவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டின. ஏற்றத்தாழ்வுகளால் நிகழும் இடர்ப்பாடுகளைச் சுட்டின. வறுமையின் கொடுமையை மனத்தில் பதித்தன. சமூகப் பிரச்சனைகளை அறிந்துகொள்ள உதவின. நீதிக் கதைகள் மூலம் நெறிகளைப் போதித்தன. இங்ஙனம், இக்காலகட்டத்தில் தோன்றிய படைப்பாளர்கள் பல்வேறு சமூகம் மற்றும் ரசனைக்கு ஏற்ப, தம் படைப்புகளை அமைத்தனர். இச்சிறுகதைகளின் வழிப் பெறப்பட்ட சமூகப் பயன் மற்றும் இலக்கியப்பயனைக் காணலாம்.

- சமூகப் பயன்

இக்காலகட்டத்தில் எழுந்த சிறுகதைகள் குழந்தை மணம், விதவைக் கொடுமை, வரதட்சணைக் கொடுமை, பொருந்தா மணம், மூடநம்பிக்கை, சாதிக்கொடுமை, தீண்டாமை, வறுமைக்கொடுமை ஆகிய சமூக இன்னல்களைத் தெளிவுபடுத்தின.

எடுத்துக்காட்டு : வரதட்சணைக் கொடுமையை விளக்கும் இரு சிறுகதைகள்:

1) சி.சு.செல்லப்பா எழுதிய மஞ்சள் காணி

2) தேவன் எழுதிய சுந்தரம்மாவின் ஆவி

இக்கதைகளின்மூலம் இதுபோன்ற கொடுமைகள் நின்றால்தான் உலகம் உருப்படும் என்பது சுட்டப்படுகிறது. இவ்விரு சிறுகதைகளுக்கும் கதைக்கரு ஒன்றாயினும் கதையின்போக்கு படைப்பாளர்களின் சிந்தனைக்கு உரியதாகின்றது.

- இலக்கியப் பயன்

இக்காலகட்டத்தில் தோன்றிய சிறுகதைகள் மக்கள் வாழ்வையும், காலத்தையும் உள்ளடக்கிப் பயனுள்ளதாகின்றன. உரைநடையை வளர்த்து, நவீன இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இதன் மொழிநடை இலக்கியத் தரத்திற்கும், இரசனைக்கும் இடமளிக்கின்றது. இவ்வகையில் காலம்காட்டும் கண்ணாடியாகச் சிறுகதைகள் விளங்கி, இலக்கியப் பயனுடையதாகின்றன. இப்பகுதியில் தொடக்ககாலத் தமிழ்ச் சிறுகதைகளுக்கு மூன்று எடுத்துக்காட்டுச் சிறுகதைகளைக் கூறி, அவற்றின் போக்கு ஆராயப்படுகிறது. இதன் வழிப் படைப்பாளரின் சிந்தனையும், இலக்கியத்தரமும் வெளிப்படுத்தப்படுகின்றன.

### 2.2.1 வ.வே.சு.ஐயரின் சிறுகதை – குளத்தங்கரை அரசமரம்

தேசபக்தரும், பன்மொழி அறிஞருமான வ.வே.சு.ஐயர் அவர்களின் இச்சிறுகதை தமிழ்ச் சிறுகதைகளுக்கான முன்னோடி. இவருடைய இந்தக் கதை விவேகபோதினி என்ற மாத இதழில் 1915 செப்டம்பர், அக்டோபர் இதழ்களில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்தது. சிறுகதைகள் வெளிவந்த காலத்தில் அதன் போக்கு எங்ஙனம் இருந்தது என்பதை அறிய இச்சிறுகதை பெரிதும் உதவுகிறது. இப்பகுதியில் கதைச்சுருக்கம், படைப்பாளர் சிந்தனை, இலக்கியத் தரம் ஆகியவற்றைப் பார்க்கலாம்.

- கதைச் சுருக்கம்

கதையை, குளத்தங்கரையில் இருக்கும் அரச மரம் ஒன்று கண்டும், கேட்டும் கூறுவதுபோல் படைப்பாளர் எழுதியுள்ளார். பிராமணக் குடும்பத்திலிருக்கும் சிக்கல், சமூகச்சிக்கலாய் வெளிப்படுத்தப்படுகிறது. கதைத்தலைவியின் அன்பு, பண்பு, அழகினை அரசமரம் ரசனையுடன் கூறுவதன் மூலம் நம் மனத்தில் பதிய வைக்கிறார் படைப்பாளர். கதைத் தலைவி ருக்மணிக்கு அவளின் 12ஆம் வயதில் நாகராஜனுடன் திருமணம் நிகழ்கிறது. அவளுக்குத் திருமண உறவு நிகழும் முன்னரே அவள் தந்தைக்குத் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு ஏழையாகி விட, நாகராஜன் வீட்டார் அவளைத் தள்ளி வைத்துவிட்டு அவனுக்கு இரண்டாம் திருமணம் செய்துவைக்க ஏற்பாடுகள் செய்து விடுகின்றனர். இதுபற்றி ருக்மணி நாகராஜனிடம் பேசும்போது, 'தாய், தந்தையின் வார்த்தைகளைத் தட்ட முடியாது. ஆனால் நான் உன்னைக் கைவிட மாட்டேன்' என்று ஆறுதல் கூறுகிறான். ஆனால் நாகராஜனின் எண்ணமோ, பெற்றோரின் பேச்சை மதிப்பதுபோல் நடந்துகொண்டு, அந்தத் திருமணத்தை நிறுத்தி அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்பதேயாகும்.

ஆனால் அவன் இந்தத் திட்டத்தைத் தன் நண்பனிடம் மட்டுமே கூறுகிறான். விளையாட்டிற்காக ருக்மணியிடம் கூறாமல் மறைத்து வைக்கிறான். இதையறியாத நிலையில், மென்மை உள்ளம் கொண்ட ருக்மணி அவன் கைவிட்டு விட்டான் என்று கருதிக் குளத்தில் மூழ்கி உயிரை விட்டு விடுகிறாள். இறுதியில் தன் விளையாட்டுத்தனத்தால் மனைவியை இழந்து விட்டோம் என்று வருந்தி நாகராஜன் சன்னியாசம் வாங்கிக் கொள்வதோடு கதை நிறைவடைந்துள்ளது.

படைப்பாளனின் மனத்தை நெருடிய செய்திகளே சிறுகதையாய் வெளிப்பட்டுள்ளன.

படைப்பாளர் கதையின் இறுதியில் மென்மை உள்ளம் கொண்ட பெண்களுக்கு விளையாட்டிற்காகக் கூடத் துன்பம் ஏதும் செய்ய வேண்டாம் என்று அறிவுரை கூறியுள்ளார். இதிலிருந்து படைப்பாளர் இச்சிறுகதையைச் சமூக நோக்கோடு படைத்திருப்பதைக் காணமுடிகிறது. இவ்வாறாக, தமிழ்ச் சிறுகதையின் முதல் கதையின் போக்கு அமைந்திருந்தது.

- இலக்கியத்தரம்

இக்கதையை அரசமரம் கூறுவதுபோல் அமைத்திருப்பது படைப்பாளரின் புதிய உத்தியைக் காட்டுவதாகிறது. இக்கதை காவிய ரஸம் பொருந்தி, கருத்தமைந்த கதையாகி, சமூகச்சிக்கலை வெளிப்படுத்துகிறது. பிராமணக் குடும்பத்திற்குரிய பேச்சு வழக்கு இடம்பெற்றிருப்பதால் எளிமையான தமிழ் வழக்கிற்கு இடமில்லாமல் போகிறது. இச்சிறுகதை இன்புறுத்தல் மற்றும் அறிவுறுத்தலுக்கும் இடமளிப்பதால் இலக்கியத் தரத்திற்கும் உரியதாகிறது.

### 2.2.2 புதுமைப்பித்தனின் சிறுகதை – ஒரு நாள் கழிந்தது

புதுமைப்பித்தன் தமிழ்ச் சிறுகதைகளுக்கென ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியவர். இன்றைய நவீன இலக்கியத்திற்குப் பலமான அடிப்படை அமைத்தவர். உலகச் சிறுகதைகளின் தரத்திற்குத் தமிழ்ச் சிறுகதைகளை உயர்த்தியவர். 'நான் கண்டது, கேட்டது, கனவு கண்டது, காண விரும்புவது, காண விரும்பாதது ஆகிய சம்பவங்களின் கோவைதான் என் சிறுகதைகள்' என்கிறார் புதுமைப்பித்தன். இவருடைய கதைகள் எதார்த்தப்

(Realism) போக்கிற்கு இடமளிக்கின்றன. இவருடைய ஒரு நாள் கழிந்தது சிறுகதை மணிக்கொடி பத்திரிகையில் 1937ஆம் ஆண்டு வெளிவந்தது. இச்சிறுகதையின் போக்கினைக் காணலாம்.

- கதைச்சுருக்கம்

ஓர் எழுத்தாளரின் ஒரு நாள் வாழ்க்கை காட்டப்படுகிறது. அவரது வீட்டின் அமைப்பு மற்றும் பொருளாதாரச் சூழ்நிலையை நேரில் காண்பது போன்றதொரு நிலையில் எழுத்துகளாகியுள்ளன. அவர் குழந்தையின் துறுதுறுப்பும், வாய்த்துடுக்கும் நம் வீட்டு மற்றும் அண்டை வீட்டுக் குழந்தைகளை நினைவூட்டுவதாயுள்ளன. அவர் நண்பர்களிடம் பேசுவது, அவர்களை உபசரிப்பது போன்றவை வெகு இயல்பாய் அமைந்துள்ளன. இறுதியில் அவர், நண்பரிடம் மூன்று ரூபாய் கேட்க, அவர் தன்னிடமிருக்கும் எட்டணாவை மட்டும் கொடுத்துவிட்டுச் செல்கிறார். இதைப் பார்த்துவிட்டு அவர் மனைவி உங்களுக்கு வேலையில்லையா? என்று கேட்டுவிட்டு, திடீரென்று நினைவு வந்தவளாக அதில் காப்பிப்பொடி வாங்கி வரச் சொல்கிறாள். எழுத்தாளர் இதைக் கடைக்காரனுக்குத் தருவதற்காக வைத்திருக்கிறேன் என்று கூற, அது திங்கட்கிழமைக்குத் தானே... இப்பொழுது போய் வாங்கி வாருங்கள் என்று கூறுகிறாள். அப்பொழுது திங்கட்கிழமைக்கு... என்று அவர் இழுக்க, அவள் திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளலாம் என்பதோடு கதை முடிக்கப் பட்டுள்ளது.

படைப்பாளர் இக்கதையை அனுபவித்து, ரசனையோடு எழுதியிருப்பது தெரியவருகிறது. சிறுகதையின் ஒவ்வொரு வரியிலும் உண்மையின் தாக்கம் குடிகொண்டிருக்கிறது. நாமே அனுபவிப்பது போன்றதொரு பிரமிப்பினைச் சிறுகதை ஏற்படுத்தியுள்ளது. இச்சிறுகதையின் மூலம் படைப்பாளரின் சிந்தனை கீழ்க்காணுமாறு வெளிப்படுகிறது.

- எதிர்காலத்திற்கு இடமின்றி அன்றைய பொழுதை எப்படிக் கழிப்பது என்று எண்ணி வாழ்க்கை நடத்தும் பொதுமக்கள் இங்குக் காட்டப் பெறுகின்றனர்.
- கதைச்சூழல், பாத்திரங்களின் இயல்புத்தன்மை ஆகியவற்றைப் படிப்பவரின் மனத்தில் பதியச்செய்து அதன் வழிச் சிந்திக்கத் தூண்டுகிறார் படைப்பாளர்.
- இருப்பதைக் கொண்டு திருப்தி அடையும் நெறியை வாழ்க்கை நெறியாகக் காட்டுகிறார்.
- கதைமாந்தர்களின் வழிநின்று படைப்பாளர் எதார்த்தமாகக் கதையைக் கூறிச் செல்கிறாரேயன்றி எந்த ஒரு சிக்கலையும் அவர் சுட்டிக்காட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வாழ்க்கை வாழ்வதற்கே என்ற நெறி இதனால் உணர்த்தப்படுகிறது.

- இலக்கியத் தரம்

இச்சிறுகதையில் இடம்பெறும் பாத்திரங்களின் பொதுத்தன்மை, பேச்சு வழக்கு, பாவனைகள், சம்பிரதாயம் போன்றவை இலக்கியச் சிந்தனைக்கு உரியனவாகின்றன. இச்சிறுகதை மெய்ப்பாடுகளுக்கு இடமளிக்கிறது. உண்மைத் தன்மைக்கு இடமளித்து, படிப்பவரின் சிந்தனையைத் தூண்டுகிறது.

**2.2.3** தி.ஜானகிராமனின் சிறுகதை – முள்முடி

இவர் அகில இந்திய வானொலி நிலையத்தில் பணிபுரிந்தவர். சங்கீதத்தில் நன்கு பயிற்சி பெற்றவர். ஆசிரியராகப் பணியாற்றியவர். தன்னைத் தாக்கிய விஷயங்களையே எழுத்துகளாய் வடித்ததாகக் கூறுகிறார். இவருடைய கதைகள் உணர்வு வடிவமாக அமைந்துள்ளன. கலை வடிவத்தைக் காட்டிலும் இவர் உணர்வு வடிவத்திற்கே முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறுகின்றார். அத்தகைய உணர்வின் அடிப்படையில் எழுந்த சிறுகதையாக முள்முடி கதை இங்கு இடம்பெறுகிறது. இக்கதையின் மூலம் படைப்பாளரின் சிந்தனையுணர்வையும் இலக்கியத் தரத்தையும் காணலாம்.

- கதைச் சுருக்கம்

ஒரு ஆசிரியரின் மன உணர்வுகள் சிறுகதையாய் வெளிப்பட்டுள்ளன. அவர், தன்னுடைய 36 வருட கால ஆசிரியப் பணியில் ஒரு மாணவனைக் கூட அடிக்கவில்லை. இதற்காக அவரை அவர் வகுப்பு மாணவர்கள், ஆசிரியர்கள், ஊரார்கள், அவர் மனைவி உட்பட அனைவரும் பாராட்டுகின்றனர். ஏன் அவர்கூட மனத்தளவில் தன்னைப் பாராட்டி மகிழ்கிறார். அத்தோடு அவர், தன்னுடன் வேலை செய்த மற்ற ஆசிரியர்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து, பெருமிதம் கொள்கிறார். மற்றவர்களிடம் இருக்கும் குணக்குறைபாடு தன்னிடம் ஏதுமில்லை என்று இறுமாப்புக் கொள்கிறார்.

இதன் காரணமாகவே தான் ஓய்வு பெற்றதை அவர்கள் மேளதாளத்துடன் கொண்டாடுகின்றனர் என்று எண்ணி எண்ணி வியக்கிறார். இதற்கு அடுத்த நிகழ்ச்சியாக வகுப்புத்தலைவன் ஒரு மாணவனை அழைத்துக்கொண்டு அவரிடம் வந்து தயங்கியவாறே, பயந்து கொண்டு கூறுகிறான். ‘இவன் போன வருஷம் இங்கிலீஷ் புக் திருடியதற்காக வகுப்புலே யாரும் இவனிடம் பேச வேண்டாம் என்று கூறிவிட்டீங்க, அதுபடியே நாங்களும் பேசல. இன்னிக்கு பார்ட்டிக்கு வசூல் செய்தப்ப இவனும் பணம் தந்தான். நான் வேண்டாமென்று சொல்லவும் அவன் அம்மாவை அழைத்துக் கொண்டு உங்களைப் பார்க்க வந்தான். அவன் தெரியாம பண்ணிட்டான் சார். அவனை மன்னிச்சிடுங்க. அதற்கப்புறம் அவன்மேல் எந்தப்புகாரும் இல்லை என்று கூறுகிறான். அவன் அம்மாவும், சிறுசுதாங்க. . . கொஞ்சம் பெரிய மனசு பண்ணி ஏத்துக்குங்க. பையன் ஒரு வருஷமா சொரத்தே இல்லாம இருந்தாங்க. அதனால் தான் நான் கூட்டியாந்தேன்’ என்கிறாள். ‘இந்தப் பயலுங்க இப்படி செய்வாங்கன்னு எனக்குத் தெரியாம போச்சே’ என்கிறார். அதற்கு அவர் மனைவி ‘நீங்க சொன்னதைத் தானே செஞ்சாங்க’ என்கிறார். இதைக்கேட்டு ஆசிரியர் வேதனையோடு சிரிக்கிறார். சுவரில் மாட்டியிருந்த படத்திலிருக்கும் முள்முடி அவர் தலையை ஒரு முறை அழுத்தியதுபோல் உணர்கிறார் என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

படைப்பாளர் தான் பார்த்து அனுபவித்த நிகழ்வுகளைக் கதையாகக் கொடுத்திருக்கிறார். ஒரு சிறந்த கருத்தை வெளிப்படுத்தும் நோக்கோடு இக்கதை அமைக்கப்பட்டுள்ளது. சிறிய கதைமாந்தர்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அவர்களது மன உணர்வுகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. இறுதியில் மேலோங்கியிருக்கும் மன உணர்வுகளே கதையின் கருத்தாய் உரைக்கப்படுகிறது. இக்கதையின் மூலம் படைப்பாளரின் முடிவுகளைக் காணலாம்.

- படைப்பாளர் பிறரின் மன உணர்வுகளை மதிக்கும் தன்மைக்கு உரியவராகிக் கதைமாந்தர்களைப் படைத்துள்ளார்.
- தான் அறியாத நிலையிலே, தன்னால் ஒரு மாணவன் ஒரு வருடமாய்த் தண்டனை அனுபவித்திருப்பதை ஆசிரியர் அறிந்த நிலையில் அவருடைய கர்வம் சிதறுவதைக் காணமுடிகிறது.
- ஆசிரியர் தன் தவற்றை அறிந்த நிலையிலேயே முள்முடி அழுத்துவதால் ஏற்படும் வேதனையை உணருகிறார்.
- படைப்பாளர் ஆசிரியரின் பாத்திரப் படைப்பைத் தொடக்கத்திலிருந்து மிகச் சிறப்பாக வெளிப்படுத்தி இறுதியில் அவருடைய கர்வத்தைப் போக்குவது, ‘ஆனைக்கும் அடிசறுக்கும்’ என்ற பழமொழியின் அர்த்தத்தை உணர வைப்பதாயுள்ளது.

- இலக்கியத் தரம்

கதையின் பெரும்பகுதி பேச்சு வழக்கிற்கு இடமளித்து, கதையின் போக்குச் சிறப்பாக்கப்பட்டுள்ளது. கதையின் முதலும் முடிவும் சிறப்பாக உரைக்கப்பட்டுள்ளன. படைப்பாளர் சமூக நோக்கோடு, ஆசிரியர் பணியின் சிறப்பினைத் தெளிவு படுத்தியிருக்கிறார். ஒரு சிறிய கதைமாந்தரின் மூலம் ஒரு பெரிய உண்மையை உணர்த்துவது மற்றும் சிந்திப்பதற்கு இடம் கொடுப்பது ஆகியவற்றின் மூலம் இக்கதை இலக்கியத் தரத்திற்கு உரியதாகிறது.

## 2.3 எழுபதுகளில் தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

எழுபதுகளில் வெளியான சிறுகதைகளுக்குப் பத்திரிகையின் வளர்ச்சியும், ஜனரஞ்சக எழுத்தாளர்களும் உந்து சக்தியாயினர். இதன் தொடர்ச்சியாகப் படைப்பாளர்களின் சிந்தனையில் மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்கள் இலக்கிய வளர்ச்சிக்கும், அதே சமயம் வீழ்ச்சிக்கும் காரணமாயின. எனினும் இந்தக் காலகட்டத்தில் தோன்றிய படைப்பாளர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் முடங்கிக் கிடக்கும் மக்களின் வாழ்க்கையையும் ஆராய முனைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இக்கால கட்டத்தில் தோன்றிய சிறுகதைகள் புரட்சிகரமான கதைகளாகவும், மாறுபட்ட கதைகளாகவும் தோன்றின.

- சமூகப்பயன்

இச்சிறுகதைகள் மன உணர்வுகள், நினைவுகள், சிக்கல்கள், பாலுணர்வுகள், மன எழுச்சிகள், போராட்டங்கள், வெற்றிகள், வீழ்ச்சிகள், உன்னதங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை அடையாளம் காட்டின. பழைய மரபுகளை உடைத்தெறிந்து மாற்றத்தை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் சிறுகதைகளைப் பெண் எழுத்தாளர்கள் படைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வகையில் இடம்பெறும் எழுத்தாளர்களாக அம்பை, ராஜம் கிருஷ்ணன், சூடாமணி, சிவசங்கரி, வாஸந்தி, இந்துமதி, ஜோதிர்லதா, கிரிஜா ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- சிறுகதை மன்னன் என்று பெயரெடுத்த ஜெயகாந்தன் இக்கால கட்டத்தைச் சார்ந்தவர் ஆவார்.
- உள்மனத்தை வெளிப்படுத்தும் பாத்திரங்களைக் கவனமாகச் சிறுகதைகளில் கையாள்பவராக அசோகமித்திரன் குறிப்பிடத்தகுந்தவர் ஆகிறார்.
- எதார்த்தத்தை ஆரோக்கியமான பார்வையில் சித்தரிப்பவராக இந்திரா பார்த்தசாரதி விளங்குகிறார்.

மேற்கண்ட வகையில் எழுபதுகளில் தோன்றிய சிறுகதைகளின் சமூகப் போக்கினை அறிய முடிகிறது.

- இலக்கியப் பயன்

இக்காலகட்டத்தில் எதையும் எழுதலாம் என்ற மனப்பான்மை படைப்பாளர்களிடம் தோன்றியதால் அறுபதில் இலைமறைவு காய்மறைவாகச் சித்திரிக்கப்பட்ட விஷயங்கள் எழுபதுகளில் எதார்த்த நோக்கோடு அப்பட்டமாய் விவரிக்கப்பட்டன. அதனால் அச்சிறுகதைகள் நச்சிலக்கியங்களாகக் கருத இடமேற்பட்டது. எழுபதுகளில் ஆண்டுக்கு இரண்டாயிரம் கதைகள் வெளிவந்தும், தரத்திலும், தகுதியிலும் உயர்ந்த கதைகள் மிகக் குறைவாகவே இருந்தன. கடினச் சொற்கள் தவிர்க்கப்பட்டு எளிய நடையுடைய சிறுகதைகள் படைக்கப்பட்டன. மேலும் பத்திரிகை மற்றும் படைப்பாளர்களின் வியாபார நோக்கு, சிறுகதைகளின் இலக்கியத் தன்மையைப் பாதித்தது.

எழுபதுகளில் சிறுகதையின் தொடக்கம் வளர்ச்சிக்கு அறிகுறியாயினும். முடிவில் அது தேக்கம் மற்றும் வீழ்ச்சியைக் கண்டுவிட்டது. வளர்ச்சியும், வீழ்ச்சியும் கால ஓட்டத்தின் இரு அங்கங்களாகக் கருதும் நிலையில் சிறுகதைகள் மீண்டும் வளர்ச்சியை நோக்கி அடியெடுத்து வைத்துள்ளதையும் மறுக்க இயலாது. எழுபதுகளில் சிறுகதையின் போக்குகளை அறியும் பொருட்டு எடுத்துக்காட்டாக 3 சிறுகதைகளைக் காணலாம்.

### 2.3.1 ஜெயகாந்தனின் சிறுகதை – பொம்மை

சிறுகதை மன்னன் என்றழைக்கப்படும் ஜெயகாந்தன் ஒரு ஜனரஞ்சகப் படைப்பாளர். இவரது கதைகளில் எதார்த்தமும், அசாத்தியக் கற்பனையும் கலந்துள்ளதைக் காணமுடிகிறது. இவரது எழுத்துகள் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்தன. அதிகமான அளவில் இவர் பத்திரிகைகளில் சிறுகதைகள் எழுதியும் தன்னுடைய தனித்தன்மையை இழக்காதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, பொம்மை சிறுகதையின் கதைச்சுருக்கம், படைப்பாளரின் சிந்தனை, இலக்கியத்தரம் ஆகியவற்றைப் பார்ப்போம்.

- கதைச் சுருக்கம்

பணக்கார வீட்டுக் குழந்தை ராணி நிறையப் பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறாள். பிளாட்பாரத்தில் வசிக்கும் கறுப்பு நிறக் குழந்தை அவள் விளையாடுவதையும், பொம்மைகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாள். பணக்கார வீட்டுக் குழந்தை கறுப்புக் குழந்தையைப் பார்த்து அது இருக்கா? இது இருக்கா? என்று பல்வேறு கேள்விகளைக் கேட்டுவிட்டு இறுதியில் பொம்மை இருக்கா? என்று கேட்கிறது. அந்தக் கறுப்புக்குழந்தை அவள் எது கேட்டாலும் இல்லையென்றே தலையாட்டுகிறது. ராணி பேசும் மழலை அவளுக்குப் புரியாவிட்டாலும், அவளுக்குப் புரிந்த வகையில் தனக்கும் ஒரு பொம்மை வேண்டும்; அதற்குச் சட்டை போட்டுப் பார்க்க வேண்டும்; தானும் ஒரு சட்டையைப் போட்டுக்கொள்ள வேண்டும் என்பதுதான்.

அந்தச் சமயம் பார்த்து கறுப்புக்குழந்தையின் அம்மா அவளை அழைக்க, அவள் ஓடுகிறாள். அவள் அம்மா சித்தாள் வேலை பார்க்கிறாள். அவளுக்கு அப்பா இல்லை. ஒரு நோஞ்சான் தம்பிப் பாப்பா மட்டும் இருக்கிறான். அவள் தன் அம்மாவிடம் அடம்பிடித்து இருக்கும் ஒரே ஒரு கிழிசல் சட்டையை வாங்கிப் போட்டுக்கொள்கிறாள். அம்மாவிடம் விளையாடுவதற்கு ஒரு பொம்மை வேண்டும் என்று கேட்கிறாள். அம்மாவும் நாளைக்குப் பொம்மை வாங்கித் தருகிறேன். அது வரையிலும் நீ தம்பிப் பாப்பாவுடன் விளையாடு என்கிறாள்.

மீண்டும் கறுப்புக்குழந்தை ராணி வீட்டிற்குச் செல்கிறாள். அவள் பொம்மைக்குக் குளிப்பாட்டுவதைப் பார்த்துவிட்டு, இவளிடம் பொம்மை இல்லாத காரணத்தால் தன் தம்பியையே பொம்மையாக எண்ணி குளிப்பாட்ட, நோஞ்சான் குழந்தை இறந்துவிடுகிறது. அவள் அம்மா வருவதற்குள் அவனுக்குப் பொட்டிட்டு, அழகு பார்க்கிறாள். அம்மா வந்தவுடன் தம்பியைப் பொம்மையாக்கிவிட்டேன் என்று கூற அவள் ஆசை மகனைப் பார்த்துக் கதறி அழுகிறாள். அம்மா எதற்கு அழுகிறாள் என்று தெரியாமலே கறுப்புக்குழந்தையும் அழத் தொடங்குகிறாள். இத்துடன் கதை முடிகிறது.

இக்கதை தொடர்பான படைப்பாளரின் சிந்தனையைக் காணலாம்.

- படைப்பாளரின் எதார்த்தம் மற்றும் கற்பனை வியக்க வைக்கிறது. ஏழை, பணக்காரன் என்ற இரு வேறு நிலைகளை வறுமை, செல்வம் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்தி அவலச்சுவையுடன் கதையை முடித்திருக்கிறார். சிறுகதை மனத்தை விட்டு அகலாத தன்மைக்குப் படைப்பாளரின் தனித்தன்மையே காரணமாகிறது.
- உயிருடன் இருக்கும் குழந்தையைப் பொம்மையாக எண்ணி விளையாடும் ஏழ்மை நிலை மனத்தை நெருடுகிறது.
- சமுதாய ஏற்றத்தாழ்வுகள் சுட்டப்படுகின்றன.
- பணக்கார வீட்டுப் பொம்மைக்குப் புதுச்சட்டையும், ஏழை வீட்டுக் குழந்தைக்குக் கிழிசல் சட்டையும் போட்டு, சிந்திக்க வைக்கிறார் படைப்பாளர்.

- இலக்கியத் தரம்

கதையின் தலைப்பு, பொருத்தமுடையதாய் அமைந்து இலக்கியத் தன்மைக்கு இடம் கொடுக்கிறது. குழந்தையின் பேச்சு மொழி, உயர் சமூக மொழி, கீழ்மட்டச் சமூக மொழி ஆகியன சிறப்பாய் வெளிப்பட்டுள்ளன. படைப்பாளரால் கதைக்குத் தீர்வு கூறப்படாமல் கதைச்சூழல் மட்டும் விவரிக்கப்பட்டுச் சிந்தனையைத் தூண்டுவதாகிறது. சமூகத்தில் ஏழைகள் எப்பொழுதும் துன்பத்தை அனுபவிப்பவர்களாகவே காட்டப்படுவதற்கு முடிவு காண வேண்டும் என்பது சுட்டப்படுகிறது. இவ்வளவில் இச்சிறுகதை இலக்கியத் தரத்திற்கு உரியதாகிறது.

**2.3.2** கி.ராஜநாராயணனின் சிறுகதை – கதவு

இவருடைய சிறுகதைகள் கிராமத்தைக் கிராமமாகக் காட்டுவதாயுள்ளன. கிராம மக்களின் வாழ்க்கை நெறிகளை அழகாகப் படம்பிடித்துள்ளன. இவருடைய கதவு சிறுகதையில் கிராம மக்களின் வறுமை வாழ்க்கை, கதவு இல்லாமல் அவர்கள் படும் துன்பம், கதவு திரும்பக் கிடைக்கப் பெற்றவுடன் அவர்கள் அடையும் மகிழ்ச்சி ஆகியவை இயல்பானதாய் அமைந்துள்ளன. இனி, கதவு சொல்லும் கதையைக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

அந்தப் பெரிய வீட்டின் கதவின் மீது குழந்தைகள் ஏறி விளையாடுகின்றனர். குழந்தைகள் அந்தக் கதவினை ஒரு பஸ் போல் பாவித்து ஏறி, இறங்குவதுமான விளையாட்டினை மேற்கொண்டனர். அத்துடன் தங்களுக்குப் பிடித்த படங்களையும் ஒட்டி விளையாடினர்.

தாத்தா, பாட்டி இருந்த காலத்திலிருந்தே அந்தக் கதவு விளையாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டது. வறுமையின் காரணமாகத் தீர்வை செலுத்தாததால் தலையாரி சகிதம் நான்கு பேர் வந்து கஷ்டப்பட்டுக் கதவைக் கழற்றிச் செல்கின்றனர். குழந்தைகளும் கதவை ஊர்வலமாக எடுத்துச் செல்வதாகக் கருதி மேளம், நாதசுர ஓசையை எழுப்பியபடி கதவின் பின்னே கும்மாளமிட்டுச் செல்கின்றனர். குழந்தைகள் விரட்டப்படும் பொழுது தான் இனிக் கதவு திரும்பி வராது என்று அவர்களுக்குப் புரிகிறது, அதன்பின் கதவு இல்லாமல் அவ்வீட்டினர் படும் இன்னல்கள் காட்டப்படுகின்றன. குளிரைத் தடுக்கக் கதவு இல்லாத நிலையில் குழந்தை இறந்து விடுவதும், நாய் புகுந்து சோற்றினைச் சாப்பிடுவதும், குழந்தைகள் கதவு விளையாட்டு விளையாட முடியாமல் மனத்தளவில் பாதிக்கப்படுவதும் காட்டப்படுகிறது. இறுதியில் குழந்தைகள் ஒரு சாவடியில் கதவு இருப்பதைக் கண்டுபிடித்து அதைத் தடவிப் பார்த்து முத்தமிட்டு அழுகின்றனர். அதைத் தூக்கும் முயற்சியில் ஈடுபடுவதோடு கதை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

படைப்பாளர் இச்சிறுகதையின் வழிக் கிராமத்துச் சூழலையும், குழந்தைகளின் மன உணர்வுகளையும் இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார். மேலும், வறுமை வாழ்க்கையில் கதவு பெறுமிடம் படைப்பாளரின் சிந்தனையாக வெளிப்படுகிறது. இதன் மூலம் கீழ்க்காணும் சிந்தனைகள் பெறப்படுகின்றன.

- ஒரு வீட்டிற்குக் கதவு எவ்வளவு முக்கியம் என்பது காட்டப்படுகிறது.
- கிராமத்துக் குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாகக் கதவு இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.
- குழந்தைகளின் உயிரோடு கலந்த நிலையில் கதவு காட்டப்படுகிறது.

- இலக்கியத் தரம்

கிராமச் சமூக நடைமுறைகளை அறிய முடிகிறது. அவர்களது பிரச்சனைகளையும் உணரமுடிகிறது. குழந்தைகளின் மனநிலையில் நின்று படைப்பாளர் நம்மையும் சிந்திக்க வைத்திருப்பது அவரின் இலக்கியத் தரத்திற்குக் கிடைத்த வெற்றியாகக் கருத இடமேற்படுகிறது. குழந்தைகளை மையமாக வைத்து எழுதப்பட்ட பொம்மை மற்றும் கதவு இரண்டிற்குமான சிந்தனை மாறுபாடே சிறுகதையின் போக்காகும்.

**2.3.3** அசோகமித்திரனின் சிறுகதை – மழை

அசோகமித்திரன் எழுபதுகளில் சிறந்த கதையைத் தந்த படைப்பாளருள் ஒருவர். வாழ்க்கை நிகழ்வுகளை அதன் போக்கில் ஆராயக் கூடியவர். இவர் கதைகளில் சொற்சிக்கனம் அதிகம். இவருடைய பாத்திரங்கள் மிகவும் எளிமையானவர்கள். இவர் எந்தக் குறிப்பிட்ட போக்கிலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதவர். இவர் எழுதிய மழை எனும் சிறுகதை, வாழ்க்கை நிகழ்வுகளை அதன் போக்கில் வெளிப்படுத்துவதை இங்குக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

கதை, மழையைப் பற்றிய ஒரு குழந்தையின் சிந்தனையாக அமைந்துள்ளது. முதலில் அந்தக் குழந்தை மழை பெய்தால் நீ நனைந்து விடுவாய் என்று அம்மா கூற, உடனே டாக்டர், மருந்து பற்றிச் சிந்திக்கிறான். பின் மைதானத்தில் இருக்கும் சின்னச் செடி, மரங்களைப் பார்க்கிறான். மேகங்களைப் பார்த்து யானையாகவும், எருமையாகவும் கற்பனை செய்கிறான். அவன் கற்பனையில் யானை படிக்கிறது. எருமையின் கருமை நிறமும், அதன் அழுக்கும் வெறுப்பினை ஏற்படுத்துகிறது. மழை பெய்தால் எருமை மீதிருக்கும் அழுக்குப் போய்விடும் என்று எண்ணுகிறான்.

இதே சிந்தனையுடன் இரவு உறங்கி, காலை எழுந்ததும் மைதானத்தில் நீர் தேங்கியிருப்பதையும், மரம் செடிகளில் நீர்த்துளிகள் இருப்பதையும், எருமை மாடு சுத்தமாக இருப்பதையும் பார்க்கிறான். உடனே அம்மாவிடம் நேற்று மழை பெய்ததா? என்று கேட்கிறான். அம்மா உனக்கு எப்படித் தெரியும் என்று ஆச்சரியப்படுகிறாள். குளித்துவிட்டு அவன் சட்டை போட, அது அவனுக்குப் போதவில்லை. அப்பா, அம்மா வளருவதில்லை. அவன் மட்டும் அடிக்கடி வளருவதாகக் கருதுகிறான். மறுநாள் காலையில் மீண்டும் மைதானத்தைப் பார்க்கிறான். பெரிய மரங்கள் அப்படியே இருக்கச் சிறிய செடிகள் வளர்ந்திருப்பதைக் காண்கிறான். சின்னச் செடிகளின் இலைகள் நனைந்திருப்பதையும் பார்க்கிறான். அம்மாவிடம், நான் ஏன் பெரியவன் ஆகிறேன் தெரியுமா? என்று கேட்கிறான். அவள் அம்மா, 'நீ சாப்பிடுவதால்' என்று கூறுகிறாள். இல்லை நான் மழை பெய்வதால் வளருகிறேன் என்று கூறுவதுடன் கதை நிறைவடைகிறது.

படைப்பாளரின் சிந்தனை ஓட்டம் சிறுகதையின் போக்கினைக் காட்டுகிறது. இதன் மூலம் குழந்தைகளின் கற்பனை மற்றும் ஒப்பீட்டுச் சிந்தனையை அறிய முடிகிறது.

- மழை பெய்தால் சிறு செடிகள் வளருவது போல் குழந்தைகளும் மழை பெய்வதால்தான் வளருவதாகக் கருதுவது.
- மழையினால் பெரிய மரங்கள் வளராததுபோல் பெரியவர்களும் மழையினால் வளருவதில்லை என்று எண்ணுதல்.
- எருமைகள் சுத்தமாயிருப்பதை வைத்து மழை பெய்திருப்பதைக் குழந்தை அறிவது.
- குழந்தைகள் சிறந்த கற்பனை ஆற்றலை வெளிப்படுத்துதல்.

மேற்கண்டவற்றின் மூலமாகப் படைப்பாளரின் புதிய போக்கு சிறுகதையின் போக்கினை நிர்ணயிப்பதை அறிய முடிகிறது.

- இலக்கியத் தரம்

குழந்தைகளின் எண்ண ஓட்டத்தை அறியச் செய்யும் படைப்பாக இது விளங்குகிறது. குழந்தையின் எண்ணங்களுக்கு வடிகாலாகப் பெற்றோர்கள் விளங்க வேண்டும் என்பது அறியப்படுகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 2.4 இன்றைய தமிழ்ச் சிறுகதையின் போக்குகள்

இன்றைய சிறுகதைகள் பெரும்பாலும் இளைய தலைமுறையினரைப் பற்றியதாய் அமைந்துள்ளன. சமூக முன்னேற்றம், கலாச்சார மீட்பு, பரிவு, அன்பு, மனித நலம், இந்த உலகம் நிலைத்து நிற்பதற்கான ஆசை இப்படிப் பல கதைக்கருக்களைக் கொண்டு சிறுகதைகள் உருவாகியுள்ளன. இக்கால கட்டத்திற்குரிய படைப்பாளர்கள் வாழ்வின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையும், காதலுமே சிறுகதைகளின் தோற்றத்திற்குக் காரணமாயின. இக்காலச் சிறுகதைகள் ஏறக்குறைய அனைத்துமே சமூகத்துடன் பேசுவதற்கான ஓர் ஊடகமாகவே பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் இச்சிறுகதைகளின் சமூகப்பயன் மற்றும் இலக்கியப்பயனைக் காணலாம்.

- சமூகப்பயன்

இன்றைய சிறுகதைகளின் காலம் வாசகர்களின் காலமாக இருப்பதால் சமூகப் பயனில்லாச் சிறுகதைகள் புறக்கணிக்கப்படுவதைக் காணமுடிகிறது. ஆகவே, படைப்பாளர்கள் சமூகப் பொறுப்பு மிக்கவர்களாகவே செயல்படுகின்றனர். இதன் காரணமாகவே இன்று பெண் சுதந்திரம் பற்றிய சிறுகதைகள் பரவலாகத் தோன்றியுள்ளன. அதேபோல் சமூக விழிப்புணர்வுச் சிறுகதைகள், சுற்றுப்புறச்சூழலை இனம் காட்டும் சிறுகதைகள் என்று சமூகப் பிரச்சனைகள் பேசப்பட்டு, சமூகப் பயனுக்குச் சிறுகதைகள் உரியவையாகின்றன.

- இலக்கியப்பயன்

இன்றைய சிறுகதைகள் அனைத்தும் சமகால வாழ்வைப் பற்றிய உரத்த சிந்தனையாகவே அமைந்துள்ளன. இன்றைய சிறுகதைகளில் மொழியின் அழகு, சமூக நோக்கு இவற்றைவிட, செய்தி நேர்த்தி, தொழில் நுட்பம் ஆகியவை முதன்மை பெற்றுள்ளன. எனவே தான் இன்றைய நாளில் நல்ல கதை என்பதே நுட்பமான கதை என்று கூறுமளவில் உள்ளது. இன்றைய சிறுகதை மரபினையும் பேசுகிறது, நவீனத்துவத்தையும் பேசுகிறது. தலைமுறைகளைக் குறித்த பெருமையும் இதற்கு உண்டு. நேரடியான கேள்விகளுக்கு இடமளித்து, கதையின் மூலம் வாழ்க்கை அறியப்படுகிறது. இங்ஙனம் நிகழ்காலத்தை அறிவுறுத்தியும், இன்புறுத்தியும் செயல்படும் இன்றைய சிறுகதைகள் இலக்கியத் தரத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளமை உணரத்தக்கது.

இப்பகுதியில், இன்றைய சிறுகதைகளின் வரிசையில் சுஜாதாவின் அடிமை எனும் சிறுகதையும், இமையத்தின் அம்மா எனும் சிறுகதையும் இடம் பெற்றுள்ளன. இனி, இச்சிறுகதைகளின் போக்குகளைக் காணலாம்.

### 2.4.1 சுஜாதாவின் சிறுகதை – அடிமை

சுஜாதா என்கின்ற ரங்கராஜன் ஒரு பொறியியல் பட்டதாரி. இவர் நூற்றுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். சுஜாதா என்கின்ற தன் மனைவியின் பெயரிலேயே எழுதி வருகிறார். பெங்களூர் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர். இவருடைய விஞ்ஞானச் சிறுகதைகள் தொழில் நுட்பக் கூறுகளை உள்ளடக்கி, எதிர்காலச் சாத்தியக்கூறுகளைக் கொண்ட தொழில் நுட்பச் சிறுகதைகளாக விளங்குகின்றன. இவ்வகையில் அடிமை சிறுகதையைப் பற்றி இங்குக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

இக்கதை இயந்திர மனிதனைச் சுற்றி எழுதப்பட்ட தொழில் நுட்பச் சிறுகதையாகும். இந்த இயந்திர மனிதன் கதவைத் திறந்து விடுவது, பானம் கலந்து தருவது, அன்றாட நிகழ்வுகளை நினைவூட்டுவது போன்ற எல்லாப் பணிகளையும் செய்கிறது. ஒரு காலகட்டத்தில் நிஜமனிதனுக்கு இயந்திர மனிதன் மீது வெறுப்புணர்ச்சி வருகிறது. தன் மனைவி மீது இயந்திர மனிதன் அதிக அக்கறை காட்டுவதாகவும், தன் மீது வெறுப்புக் காட்டுவதாகவும் கருதுகிறான். குளியலறையில் இயந்திர மனிதன் தன் மனைவியுடன் உரையாடுவது பிடிக்காமல் அவனைக் கொல்ல நினைக்கிறான். முதலில் அவனை எப்படி அழிப்பது என்று தடுமாறும் அவன் இயந்திர மனிதனிடமே அவனை அழிப்பதற்கான வழிவகைகளைக் கேட்டு அவனை அழித்து விடுகிறான்.

தொழில் நுட்பக் கண்டுபிடிப்புகள் மனித வாழ்வில் அதிகளவு குறுக்கிடுவதால் ஏற்படும் உளச்சிக்கல்கள் படைப்பாளரின் சிந்தனையாக வெளிப்பட்டுச் சிறுகதையின் போக்காகிறது. சிறுகதையில் நிகழும் நிகழ்வுகள் எதிர்காலச் சாத்தியக் கூறுகளாகவும் அவருடைய சிந்தனையில் வெளிப்படுகிறது.

- நமது வாழ்வில் உயிரில்லா இயந்திர மனிதன் என்னும் நவீனத்துவம் குறுக்கிடும்பொழுது ஏற்படும் விளைவுகள் உளச்சிக்கலுக்கு இடமளிப்பதாகவே உள்ளது என்கின்றார்.
- இயந்திர மனிதனுடன் பெண்கள் எல்லா விஷயங்களையும் பகிர்ந்து கொள்வதால் இந்நூற்றாண்டில் பெண்களுக்கான சுதந்திரம் அதிகம் என்கிறார் படைப்பாளர்.
- அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சிகளைப் புறக்கணிக்கவும் தேவையில்லை, அதை ஒரு எல்லைக்கு மேல் அனுமதிக்கவும் தேவையில்லை என்பது காலத்தின் தேவையாக உணர்த்தப்படுகிறது.

- இலக்கியத் தரம்

படைப்பாளரால் இயந்திர மனிதனுக்குரிய மொழி நடை பயன்படுத்தப் பட்டுள்ளது. மொழிநடை மிகவும் எளிமையானதாக இருப்பினும் சிந்தனைக்கு இடமளிக்கிறது. படைப்பாளர் கொள்ள வேண்டிய சமூக அக்கறையோடு தொழில் நுட்பச் சிறுகதையாக இதை ஆக்கியிருக்கிறார் சுஜாதா.

### 2.4.2 இமையத்தின் சிறுகதை – அம்மா

இவரின் இயற்பெயர் ஆறுமுகம். இவர் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். வாழ்க்கை நிகழ்வுகளை இவரது சிறுகதை படம் பிடிக்கிறது. இவருடைய கதை சமூகத்துடன் பேசுவதற்கான ஓர் ஊடகமாகவே உள்ளது. மனித உணர்வுகள் மற்றும் செயல்பாடுகள் இவருடைய கதையில் சிறப்பிடம் பெறுகின்றன. இப்பகுதியில் அம்மா சிறுகதை தொடர்பான செய்திகளைக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

ஒரு தாய் தன் மனக்குறைகளை மகனிடம் உரையாடும் வண்ணம் இச்சிறுகதை அமைந்துள்ளது. வயதான காலத்தில் தனியாக, தானே உழைத்து வாழ்வதாக மகனிடம் குறைபட்டுக் கொள்கிறாள். மகன் தன் வீட்டிற்கு வந்து விடு என்று கூறும்பொழுது அந்தச்சூழல் தனக்கு ஒத்துவராது என்கிறாள். மகன் தனக்கு உள்பாவாடை வாங்கித் தராததால் பள்ளிப் பிள்ளைகளின் பாவாடையை வாங்கி அணிந்திருப்பதாகக் கூறுகிறாள். அதே சமயம் மகன் மீது ஊரார் கண்பட்டுவிடக் கூடாது என்பதிலும், அவனைக் குறை கூறுபவர்கள் பேச்சைத் துண்டித்துக் கொள்வதிலும் கவனமாக

இருக்கிறாள். அவன் தன் அக்காவைக் கவனிக்காததையும், அவனை வளர்க்க அவள் சிரமப்பட்டதையும் கூறி நான் செத்தால் தான் நல்லது கெட்டது புரியும் என்கிறாள். இறுதியில் மகனுக்கு வீட்டுக்குத் தேவையான பொருட்கள், பணம், பேத்திக்குக் கொலுசு ஆகியவை கொடுத்தனுப்புகிறாள்.

தாயின் முறையீடு அனைத்திற்கும், மகன், ஏதோ சிக்கலில் மாட்டிக் கொண்டது போல் முகம் வாடி, தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமர்ந்திருக்கிறான். சில வேளைகளில் தாயை முறைத்தும், பல்லைக் கடித்தும், அவள் சொல்வதைக் காதில் வாங்காமலும் அமர்ந்திருக்கிறான். இந்தச் சனியனுக்குதான் இங்கு வருவதில்லை என்கிறான். இவ்வளவில் இக்கதையின் போக்கு அமைந்துள்ளது.

இச்சிறுகதையில் படைப்பாளர் சமூகப் பயனுள்ள வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறியுள்ளார். கணவனாலும், மகனாலும் துன்பப்படும் தாயார் பாத்திரம் மனத்தில் நிலைக்கிறது. இதன் வழி வெளிப்படும் சிந்தனைகளாவன.

- கீழ் மட்டத்தில் வாழும் தாயாரின் ஏக்கம், உணர்வுகள் வெளிப்பட்டு, பெற்றவர்களைப் புறக்கணிக்கும் சமூகக் குறைபாடு சுட்டப்படுகிறது.
- தாயார் பாத்திரத்தின்படி உழைப்புத் தரும் உயர்வினை உணர முடிகிறது.
- மகன் பாத்திரப்படைப்பு தனிமனிதக் குறைபாட்டைச் சுட்டுகிறது.
- காலம் எவ்வளவு மாற்றம் பெற்றாலும் தாயுள்ளம் மாறாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- இலக்கியத் தரம்

படைப்பாளர் சமூக அக்கறையோடு சமூக நிகழ்வினை அமைத்துள்ளார். இதன் வழி மனித உணர்வுகள், தாயுள்ளம், தனிமனிதக் குறைபாடு, சமூகச் சிக்கல் ஆகியவை சிறப்பாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இயல்பான வட்டார வழக்கில் மொழிநடை அமைந்து மேலும் கதைக்குச் சிறப்பூட்டுகிறது. சமுதாயத்தை நெறிப்படுத்தும் அளவில் இச்சிறுகதை இலக்கியத் தரத்தைத் தன்னுடையதாக்கிக் கொள்கிறது.

## 2.5 தமிழ்ச் சிறுகதையின் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள்

தமிழ்ச் சிறுகதையின் போக்கில் நிகழ்ந்துள்ள மாற்றங்களைப் பின்வருமாறு காணலாம்.

தொடக்க காலச் சிறுகதைகள் சமூக நிகழ்வுகளை எடுத்துக் காட்டின. சமூகப் பிரச்சனைகளையும் கோடிட்டுக் காட்டின. இதன் மூலம் சிந்தனைக்கு இடமளித்தன. ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு உரிய பிரச்சனைகள் மட்டும் பேசப்பட்ட நிலையில் அது பொதுப் பிரச்சனைகளுக்கு இடமளிக்காமல் போயிற்று. எடுத்துக்காட்டு: குளத்தங்கரை அரசமரம் எனும் சிறுகதை. அதே சமயம் புதுமைப்பித்தன் அவர்களின் சிறுகதை மொத்த மக்களின் குரலாய் அமைந்தது. எடுத்துக்காட்டு: 'ஒருநாள் கழிந்தது' எனும் சிறுகதை. தனிமனித உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் தி.ஜானகிராமனின் முள்முடி கதை அமைந்தது.

இவ்வளவில் தொடக்க காலச் சிறுகதைகளின் போக்கில், படைப்பாளர்களின் சிந்தனைகளுக்கு ஏற்ப மாற்றங்கள் இடம்பெற்றிருப்பது அறியத் தக்கது.

அடுத்து எழுபதுகளில் இதழ்களின் வளர்ச்சியும், ஜனரஞ்சகப் படைப்பாளர்களின் படைப்புகளும் சிறுகதையின் போக்கினை மாற்றின. அடித்தள மக்களின் சிக்கல்கள் அதிக அளவில் இடம்பெற்றன. புரட்சிகரமான கருத்துகள் சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்தன. எதார்த்தப் படைப்புகள் மக்களைக் கவர்ந்தன. உள்மனத்தை வெளிப்படுத்தும் கதைகளும் இடம்பெற்று, சிறுகதைகளின் போக்கினை மாற்றின.

எடுத்துக்காட்டு :

- ஜெயகாந்தன், கி.ராஜநாராயணன், அசோகமித்திரன் ஆகிய மூவரும் குழந்தைகளை மையமாகக் கொண்டு சிறுகதைகள் எழுதிய போதிலும் மூவரின் சிந்தனையும் மாறுபடுவதைக் காணமுடிகிறது. இதுவே சிறுகதையின் போக்கிற்குக் காரணமாகின்றது.
- இக்காலகட்டத்தில் ஆபாச எழுத்துகள் அதிகமாக இடம்பெற்றதால், இலக்கியத் தரமிக்க எழுத்துகள் குறைவாகவே வெளிவந்தன. மேலும் படைப்பாளர்களின் வணிக நோக்கும் சிறுகதைகளின் இலக்கியத் தன்மையைப் பாதித்தன. எழுபதுகளின் இறுதியில் வீழ்ச்சி கண்ட சிறுகதைகள் அடுத்து வளர்ச்சியைப் பெற்ற காலமாக இன்றைய சிறுகதைகளின் காலம் அமைகின்றது.

இன்றைய சிறுகதைகள் இளைய தலைமுறையினருக்கும், எதிர்காலத்தவர்களுக்கும் உரியனவாகின்றன. சமகாலத்தவர்களின் வாழ்க்கைச் சிந்தனைகளாகின்றன. இச்சிறுகதைகளில் செய்தி நேர்த்தியும், தொழில் நுட்பமும் முக்கிய இடம்பெற்றுள்ளன. இவ்வளவில் இன்றைய சிறுகதைகள் வாசகர்களின் காலமாக அமைந்து அதன் போக்கை மாற்றியுள்ளன.

### 2.5.1 இலக்கிய மாற்றங்கள்

சிறுகதைகளின் போக்குகளில் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் எங்ஙனம் அதன் இலக்கியத் தன்மையைப் பாதிக்கின்றன என்பதைக் காணலாம்.

இலக்கிய மொழியாகப் பண்டித மொழிதான் இருக்க வேண்டும் என்ற நிலை மாறி, மொழி எளிய தன்மைபெற்று அனைவரும் படித்து மகிழ உதவும் போக்கினைக் காணலாம். கற்பனையும், வருணனையும் தேவை என்ற நிலை மாறி, கதையின் உண்மைத் தன்மை முக்கியத்துவம் பெறும் போக்கினைக் காணலாம். வட்டார வழக்குகள் சிறுகதையில் இடம்பெற்று மொழி வளர்ச்சிக்கு உதவுகிறது. தொழில்நுட்பம் சார்ந்த மொழிகளும், குறிப்பு மொழிகளும் இடம்பெற்று, இலக்கிய வகை வளர்ச்சிக்குத் துணை நிற்கின்றன.

- காலத்திற்கேற்ப மொழிநடை கையாளப்பட்டு மொழியின் செம்மைத் தன்மை போற்றப்படுகிறது. பல்துறைக் கருத்துகளும் சிறுகதையில் இடம்பெற்று மொழியின் வளம் காக்கப்படுகிறது.
- தனிமனித உணர்வு, சமுதாய வாழ்வு இவற்றைச் சுவையோடு பிரதிபலிக்கும் இலக்கியப் போக்கினைக் காணமுடிகிறது.
- மரபுகளைப் போற்றும் காலமாற்றம் சிறுகதையின் போக்கில் தென்படுகிறது.

### 2.5.2 சமூக மாற்றங்கள்

சமூக அக்கறை கொண்ட படைப்பாளர்கள் சமூகத்தோடு தம்மை இணைத்துக் கொண்டு செயல்படும் நிலையில் அது சமூகப் பயனுடையதாகிறது. தம் விருப்பு, வெறுப்புகளுக்கு இடமின்றி, சமூக நலத்தில் அக்கறை கொண்ட படைப்பாளர்களும் சமூகப் பயன்களுக்கு இடமளிக்கின்றனர். மேலும் சமூகப் பயனுக்கு இடமளிக்காதவர்களைப் புறக்கணிக்கும் போக்கிற்கும் இடமுண்டு என்பது அறியப்படுகிறது.

இதிலிருந்து சமூகத்தோடு தொடர்பு கொள்வதற்குச் சிறுகதைகள் ஓர் ஊடகமாகவே மாறியுள்ளதை அறிய முடிகிறது. எனவே சிறுகதைகளின் சமூகப் பயன் இந்நாளில் கொள்ளப்படாத ஒன்று என்றறியப்படுகிறது.

## 2.6 தொகுப்புரை

நண்பர்களே ! இது வரையிலும் தமிழ்ச் சிறுகதைகளின் போக்குகள் பற்றிய செய்திகளை அறிந்து கொண்டிருப்பீர்கள். இந்தப் பாடத்தில் நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

- தொடக்க காலச் சிறுகதைகளின் போக்குகளை மூன்று எடுத்துக் காட்டுகள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.
- எழுபதுகளில் சிறுகதைகளின் போக்கினையும் மூன்று எடுத்துக்காட்டுச் சிறுகதைகளின் மூலம் அறிய முடிகிறது.
- இன்றைய சிறுகதைகளின் போக்குகளையும், தமிழ்ச் சிறுகதையின் போக்கில் நிகழ்ந்துள்ள இலக்கிய மற்றும் சமூக மாற்றங்களையும் தெளிவாக அறிந்து கொள்ள முடிந்தது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# பாடம் - 3 P20333 சிறுகதையின் கருப்பொருள்

## இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

சிறுகதை என்னும் படைப்பிலக்கிய வகையைப் பற்றிச் சொல்கிறது. மக்களின் கதைகேட்கும் ஆர்வமே இந்தத் துறை வளர்வதற்குக் காரணம் என்பதையும், அதன் பொருண்மை (கதைப்பொருள்) பற்றியும் கூறுகிறது. கதையின் நோக்கம் எதுவாக இருக்க வேண்டும் என்பதை விளக்குகிறது.

## இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சிறுகதை என்னும் படைப்பிலக்கியக் கருப்பொருள் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.
- சிறுகதைத் துறையில் சிறந்து விளங்கியவர்களைப் பற்றி அறியலாம்.
- சில சிறுகதையாசிரியர்களின் படைப்புகளின் சிறப்பை அறிந்து மகிழலாம்.
- மொழி, நோக்கம், விளைவிக்கும் பயன் முதலியவற்றில் அவை எவ்வாறு சிறந்து விளங்குகின்றன என்பதைக் காணலாம்.

# பாட அமைப்பு

3.0 பாட முன்னுரை

3.1 சிறுகதையின் கருப்பொருள்

3.2 கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள்

3.3 அகிலனின் சிறுகதைகளில் கருப்பொருள்

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

3.4 ஜெயமோகனின் சிறுகதைகளில் கருப்பொருள்

3.5 காலத்திற்கேற்பச் சிறுகதைகளில் கருப்பொருள்

3.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

## 3.0 பாட முன்னுரை

சிறுகதை எனும் படைப்பிலக்கியம் மக்களின் கதை கேட்கும் ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் எழுந்தது. மக்களின் கதைகேட்கும் ஆர்வத்திற்குச் சிறுகதைகளின் கதைப்பொருளே காரணமாகிறது. இக்கதைப் பொருள் மக்களை இன்புறுத்தவும், அறிவுறுத்தவும் துணை நிற்கிறது. சிறுகதைகளின் கதைப்பொருள் என்பது குண்டூசி முதல் குமரிமுனை வரை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் அது குறிப்பிட்ட வரையறைக்குள் அடங்க வேண்டும். அப்படிக் குறிப்பிட்ட வரையறைக்குள் கதைப்பொருள் அடக்கப்படும் நிலையில்தான் அது கருப்பொருளாகிறது. இப்பாடத்தில் சிறுகதையின் கருப்பொருள் மற்றும் அது பெறும் இடத்தைப் பற்றி அறிந்து கொள்வோம்.

## 3.1 சிறுகதையின் கருப்பொருள்

ஒரு கதையின் சிறப்பிற்கு அதன் கருப்பொருளே காரணமாகிறது. இக்கருப்பொருள் எளிமையானதாக அமைதல் வேண்டும். சிறுகதைக்கு அதன் கருப்பொருளே உயிர்நாடியாக உள்ளது. அடுத்து, சிறுகதையின் கருப்பொருள் எங்ஙனம் அமைதல் வேண்டும் என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

சிறுகதையின் கருப்பொருள் ஒரு புதிய கருத்து, ஒரு புதிய விளக்கம், ஒரு புதிய பார்வை, ஒரு புதிய அழுத்தம், ஒரு புதிய அம்சத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். படைப்பாளர் சமூகத்தை ஊடுருவும் திறனே கதைக் கருவிற்கு அடிப்படையாகிறது.

சிறுகதையின் கருப்பொருளே அதன் பொருண்மையாக உணரப்படுகிறது. சிறுகதையின் பொருண்மை வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும். வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள உதவ வேண்டும். சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டும். சமூகச் சீர்கேடுகளை எடுத்துக்காட்டி விழிப்புணர்ச்சியை எடுத்துக்காட்ட வேண்டும். இவ்வளவில் அமையும் சிறுகதைகளே இலக்கியப் பயனை அளிக்க வல்லனவாக விளங்கும்.

கல்கி, அகிலன், புதுமைப்பித்தன் ஆகியோருடைய சிறுகதைகளில் இத்தகைய பொருண்மையைக் காணலாம்.

இப்பாடத்தில் கல்கி, அகிலன், ஜெயமோகன் ஆகிய படைப்பாளர்களின் சிறுகதைகளை எடுத்துக்கொண்டு அவற்றின் கருப்பொருள் எங்ஙனம் வாழ்க்கைப் பயனுக்கும், சமூகப் பயனுக்கும் உரியனவாக, இலக்கியப் பயனுக்கு இடம் கொடுக்கின்றன என்பதைக் காண்போம்.

## 3.2 கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள்

இப்பகுதியில் படைப்பாளர் கல்கியின் சிறுகதைகளில் கருப்பொருள் அமைந்துள்ள விதத்தைப் பற்றிக் காண்போம்.

- படைப்பாளர் வரலாறு

கிருஷ்ணமூர்த்தி என்கின்ற கல்கி 09.09.1899இல் மயிலாடுதுறையை அடுத்த புத்தமங்கலத்தில் பிறந்தார். மயிலாடுதுறைப் பள்ளியிலும், திருச்சியிலும் கல்வி கற்றார். திருச்சியில் பள்ளியில் படிக்கும்போது படிப்பைப் பாதியில் விட்டுவிட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டார். இவர் சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு 1922ஆம் ஆண்டில் முதல்முறையும், 1930ஆம் ஆண்டில் இரண்டாம் முறையும், 1941ஆம் ஆண்டில் மூன்றாம் முறையும் சிறை சென்றார். சிறையிலிருந்து விடுதலையானதும் திரு.வி.க. நடத்தி வந்த நவசக்தி பத்திரிகையில் சேர்ந்தார். திருமணம் 1924இல் நடந்தேறியது. மனைவி பெயர் ருக்மணி. ராஜாஜி திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் இருந்து நடத்திய விமர்சனம் என்ற பத்திரிக்கையில் இவர் உதவியாசிரியராக இருந்தார். எஸ்.எஸ். வாசனின் ஆனந்த விகடனில் துணை ஆசிரியராக 1932இல் பணியாற்றினார். பின் ஆனந்த விகடனிலிருந்து விலகி, நண்பர் சதாசிவத்தோடு சேர்ந்து 1941இல் கல்கி இதழைத் தொடங்கினார். அன்று முதல் இவர் கல்கி கிருஷ்ணமூர்த்தியானார்.

திரு.வி.க.வின் நவசக்தியில் பணியாற்றும்போது எழுத்துத்திறனை வளர்த்துக் கொண்டார்; ஒரு இதழைத் தொடங்கி நடத்துவதற்குரிய பயிற்சியையும் பெற்றார். இதில், திரு.வி.க. உறுதுணையாக நின்றார். அவரை நினைவு கொள்ளும் வகையில் கல்கி எனும் புனைபெயரைச் சூட்டிக் கொண்டார். திரு.வி.க.வின் பெயரில் உள்ள முதல் இரண்டு எழுத்துகளும், கிருஷ்ணமூர்த்தி எனும் பெயரில் உள்ள முதல் எழுத்தும் இணைந்து உருவானதே கல்கி என்ற புனைபெயர். பின்னர் இதுவே நிலைத்து விட்டது.

- இவரது படைப்புகள}

- சாரதையின் தந்திரம் – சிறுகதைத் தொகுப்பு – 1927
- ஆனந்த விகடனில் முதல் தொடர் – கள்வனின் காதலி – 1937
- பார்த்திபன் கனவு – தொடர் – 1941-43
- சிவகாமியின் சபதம் – தொடர் – 1944-46
- அலை ஓசை – தொடர் – 1948-49
- பொன்னியின் செல்வன் – தொடர் – 1950-54
- முதல் திரைக்கதை – தியாகபூமி – 1939
- மீரா – திரைப்படம் – 1945
- கள்வனின் காதலி – திரைப்படம் – 1955

கர்நாடகம், தமிழ்மகன், விவசாயி, தமிழ்த்தேனீ, ராது, அகஸ்தியன் ஆகிய புனைபெயர்களிலும் இவரது படைப்புகள் வெளிவந்தன. இவர் 1954ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதி சென்னையில் காலமானார். 1956ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது இவருடைய மறைவிற்குப் பிறகு இவரது 'அலைஓசை' நாவலுக்கு வழங்கப்பட்டது.

- கதைகளில் கருப்பொருள்

நடந்த சம்பவத்தையோ அல்லது நடக்காத சம்பவத்தையோ பிறர் ஆவலைத் தூண்டும்படி சொன்னால் அது கதையாகிறது என்கிறார் இந்தப் படைப்பாளர். இவ்வகைப்பட்ட கதைகளை நான்கு வகையில் அடக்குகிறார்.

- கட்டுக்கதைகள் அல்லது பொய்க்கதைகள்

நடக்காத கதைகளை நடந்ததாக எண்ணி ஆவலுடன் கேட்பது.

- வேடிக்கைக் கதைகள்

இவை வெறும் கற்பனைக் கதைகள். வேடிக்கைக்காக இக்கதைகள் கேட்டு அனுபவிக்கப்படுகின்றன.

- காவிய ரசமுள்ள கதைகள்

இவை மனித இனத்தின் வீரம், சோகம், காதல், நகைச்சுவை முதலிய நவரசங்களை வெளிப்படுத்தக் கூடிய வகையில் எழுந்தவையாகும்.

- கருத்து அமைந்த கதைகள்

இவை சமூக முன்னேற்றம், தேச முன்னேற்றத்தை நினைவில் கொண்டு, உயர்ந்த நோக்கங்களைப் பரப்புவதற்காக எழுந்த கதைகளாகும்.

கல்கி அவர்களின் சிறுகதைகள் நவரசங்களை வெளிப்படுத்துகின்ற கருப்பொருள்களைக் கொண்டு உருப்பெற்றுள்ளன. இவற்றிற்கு அடிப்படையாக, குடும்ப முன்னேற்றம், சமூக முன்னேற்றம், தேசிய முன்னேற்றம் ஆகியவை அமைந்துள்ளன. வாழ்க்கைப்பயன், சமூகப்பயன் விளைவிக்கும் இவரது சிறுகதையின் கருப்பொருள் குறிப்பிடத்தக்கதாகிறது. நம் பாடப் பகுதிக்கு உரியதாகக் 'கேதாரியின் தாயார்' சிறுகதை இடம் பெறுகிறது. இதன் கருப்பொருள், வாழ்க்கைப்பயன், சமூகப்பயன் ஆகியவை விளக்கப்படுகின்றன.

### 3.2.1 'கேதாரியின் தாயார்' சிறுகதையின் கதைப்பொருள்

கேதாரியின் நண்பன் இக்கதையைக் கூறுவதுபோல் படைப்பாளர் அமைத்துள்ளார். இக்கதை சோகத்திற்கு இடம் கொடுப்பதாயுள்ளது. சமூகத்தைப் பிடித்திருக்கும் பல நோய்களில் ஒன்றாக இச்சிறுகதையின் கருப்பொருள் அமைந்துள்ளது. இக்கதை சற்று நீண்ட சிறுகதையாய் அமைந்துள்ளது.

"கேதாரியின் தந்தை அவன் மூன்று வயதாக இருக்கும்போதே ஒரு நாடகக்காரியின் மையலில் சிக்கி வீட்டை விட்டுப் போய்விட்டார். அதனால் கேதாரிக்கு அவன் தந்தையைப் பற்றிய ஞாபகமே கிடையாது. கேதாரிக்குத் திருமணப் பேச்சு நடந்தபொழுது தான் இது எல்லோருக்கும் தெரிய வந்தது. பெண்ணைப் போய்ப் பார்க்கச்சொல்லிப் பாகீரதி அம்மாமி எவ்வளவு வற்புறுத்திய போதிலும், 'நீ பார்த்து நிச்சயம் செய்தால் சரிதான் அம்மா. ஒரு மூளிப்பெண்ணைக் கலியாணம் பண்ணிக் கொள்ளச் சொன்னாலும் பண்ணிக் கொள்கிறேன்' என்றான் கேதாரி (மூளிப்பெண் – குறையுடைய அல்லது அழகற்ற பெண்). ஆனால் அம்மாமி, 'கேதாரி பெண்ணைப் பார்த்துப் பிடித்திருக்கிறது என்று சொன்னால்தான் நிச்சயம் பண்ணுவேன்' என்று கூறிவிட்டாள். அப்பொழுதுதான் கேதாரியின் தகப்பனாரைப் பற்றிக் கூறக் கேட்டேன்.

‘இப்படியெல்லாம் பெண்ணையும், பிள்ளையையும் கேட்காமல் கல்யாணம் பண்ணித்தான் பல குடும்பங்களில் கஷ்டம் ஏற்படுகிறது. கேதாரியின் தகப்பனார் என்னை விட்டு ஓடியதற்கு ஊரெல்லாம் அவரைத் திட்டித் தீர்த்தனர். எனக்கு அப்பொழுது கோபமும், ஆத்திரமும் வந்தது. நாற்பது நாள் படுத்த படுக்கையாகக் கிடந்தேன். பின்னர் ஆற அமர யோசித்துப் பார்த்ததில் அவர் மீது குற்றம் இல்லையென்று தோன்றியது. என்னைக் கல்யாணம் செய்து கொள்வதில் அவருக்கு இஷ்டமே இல்லையாம். இதைப் பெரியவர்களிடம் கூறவும் செய்தாராம். ஆனால் பெரியவர்கள் பலவந்தப்படுத்திக் கல்யாணம் செய்து வைத்துவிட்டனர். ஏதோ ஐந்தாறு வருடம் பல்லைக் கடித்துக்கொண்டு குடும்பம் நடத்தினோம். அப்புறம் கூத்தாடி வந்து சேர்ந்தாள். போய் விட்டார்’ என்றாள்.

இதனிடையே நானும் அம்மாமியிடம் பல கேள்விகளைக் கேட்டுச் சில விவரங்களை அறிந்தேன். கேதாரியின் தகப்பனார் சுந்தரராமையர் பார்ப்பதற்கு ஆள் வாட்டசாட்டமாக நன்றாய் இருப்பாராம். நன்றாகப் பாடுவாராம். திருமங்கலத்தில் தபால் ஆபீஸில் எழுத்தர் வேலை பார்த்துக் கொண்டிருந்தாராம். கேதாரியின் தகப்பனாருக்கு நாடகம் என்றால் பித்து. ஒரு நாள் ராஜபார்ட் வேடம் போடுகிறவன் வராத காரணத்தால் இவர் வேடம் போட்டு நடித்துக் காண்பிக்க, நாடகக்காரி ரங்கமணியும் நடிக்கச் சம்மதித்தாளாம். இப்படி வளர்ந்த அவர்களுடைய நெருக்கத்தைப் பற்றி ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டபோது, அம்மாமி அதை நம்பவில்லையாம். கடைசியில் நாடகக் கம்பெனி ஊரை விட்டுப் போயிற்று. அதற்கு மறுநாள் சுந்தரராமையரையும் காணவில்லை. நாடகக் கம்பெனியுடன் இவரும் இலங்கைக்குப் போனது மட்டும் பின்னாளில் தெரிய வந்ததாம். அதன்பிறகு அவரைப் பற்றி ஒரு விவரமும் சரியாகத் தெரியவில்லையாம். பாகீரதி அம்மாமியும் அதற்கு மேல் அவரைப் பற்றி எண்ணுவதை விட்டு விட்டு, கேதாரி மீது அன்பைச் செலுத்த ஆரம்பித்தாள். சுந்தரராமையர் ஓடிப்போன செய்தியை அறிந்து அம்மாமியின் தாய், தந்தையர் அவளைக் கிராமத்திற்கு அழைத்துச் சென்றனர். அம்மாமியைத் தவிர அவர்களுக்கு வேறு பிள்ளை குட்டி கிடையாது. கேதாரி வளர்ந்ததும் அவனைப் படிக்க வைக்கும் பொருட்டுத் திருச்சிக்குக் குடிவந்தார்கள்.

அப்பொழுதுதான் எங்கள் எதிர்வீட்டிற்குக் குடிவந்த கேதாரியை நான் முதன் முதலில் பார்த்தேன். அந்தப் பையன் கையில் தங்கக் காப்புடன், தலையைப்பின்னிக் குல்லா வைத்துக்கொண்டு இருந்தான். அதை நான் வியப்புடன் பார்த்துக்கொண்டு நின்றது என் நினைவிற்கு வருகிறது. அவனுடன் நான் முதல் தடவை பேசின உடனேயே எனக்குப் பிடித்துப் போயிற்று. ஓயாமல் ‘அது என்ன? இது என்ன?’ என்று கேட்டுக் கொண்டே இருப்பான். நானும் சலிக்காமல் பதில் சொல்லிக்கொண்டே இருப்பேன். நான் படித்த அதே பள்ளியில் அவனையும் சேர்க்க, நாங்கள் இணை பிரியாத நண்பர்கள் ஆனோம்.

அவர்கள் திருச்சிக்கு வந்த மூன்று வருடத்திற்குள் தாத்தா இறக்க, அவர்கள் கையிலிருந்த பணமெல்லாம் செலவழிந்தது. சாப்பாட்டுக்கு விளைந்து வரும் நெல் போதுமானதாக இருந்தது. கேதாரி நன்றாகப் படித்ததால் உதவித்தொகை கிடைத்தது. ஆனால் வாடகைக்கு மட்டும் பணம் தேவைப்பட்டது. அம்மாமியும், பாட்டியும் அப்பளம் இட்டு விற்க ஆரம்பித்தனர். அம்மாமியை ‘வாழாவெட்டி’ என்று அக்கம்பக்கத்தவர்கள் அழைத்தாலும், என் தாயாரைக் காட்டிலும் அவர்கள் மீது எனக்குப் பிரியம் அதிகமாயிருந்தது. நானே அம்மாமியின் அப்பளங்களை ஏராளமாக விற்றுக் கொடுத்தேன். கொஞ்ச நாளில் பாட்டியும் இறந்து விட்டாள். கேதாரி தன் தாயார் பட்ட கஷ்டங்களுக்கு ஈடாக பி.ஏ. பரிட்சையில் சென்னையில் முதல்மாணவனாகத் தேறினான். கேதாரி காலேஜ் வகுப்புக்குப் போனபோதே பெண்ணைப் பெற்றவர்கள் கல்யாணப்பேச்சு எடுக்க அவன் பி.ஏ. முடிக்கும் வரை எதுவும் பேசக்கூடாது என்று அம்மாமி கூறிவிட்டாள். இப்பொழுது கேதாரி பி.ஏ. தேறியவுடன் அவன் கல்லூரியின் பழைய மாணவர் மணிப்புரம் பண்ணையார் கேதாரியின் தகுதிகளைக் கேள்விப்பட்ட நிலையில் தன் பெண்ணைக் கொடுக்க முன் வந்தார். பெரிய சம்பந்தம் கிடைத்துவிட்டது என்று அம்மாமி பணம், பவுன் வேண்டுமென்று கேட்காமல், பையனைச் சீமைக்கு அனுப்பி ஐ.சி.எஸ் படிக்கவைக்க ஒப்புக் கொள்ள வேண்டும் என்றாள்.

அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் சிலர் அதிசயப்பட்டனர். சிலர் அம்மாமியை வைதார்கள். ‘என்ன நெஞ்சழுத்தம் இவளுக்கு. ஒரு பிள்ளை, அதைச் சீமைக்கு அனுப்புகிறேன் என்கிறாளே’ என்றார்கள் (வைதார்கள் – திட்டினார்கள்; சீமை – வெளிநாடு). பண்ணையார் நரசிம்மய்யர் வைதிகப் பற்றுள்ளவர். முதலில் தயங்கி, பின்னர் சாஸ்திரி, தீட்சிதர்களோடு கலந்தாலோசித்து, சம்மதித்தார். இதன்பின்தான் கேதாரியை, பெண் பார்த்து விட்டு வரும்படி அம்மாமி அனுப்பியது. கேதாரி தன் தாயிடம் வைத்திருந்த நம்பிக்கை எவ்வளவு நியாயமானது என்று தோன்றிற்று. கிளி என்றால் கிளி. பெண் அவ்வளவு அழகாயிருந்தாள். பதின்மூன்று, பதினான்கு வயதிருக்கலாம். கல்யாணம் சிறப்பாக நடந்தது. அதன்பின் கேதாரி ஒரு வருடம் கழித்து இங்கிலாந்துக்குப் பயணமானான். பாகீரதி அம்மாமியைச் சம்பந்தி வீட்டினர் அவர்களுடனேயே தங்கச் சொல்லி எவ்வளவு வற்புறுத்தியும் மறுத்துவிட்டாள். அதன்பிறகு அவர்களின் கௌரவம் பாதிக்கப்படக்கூடாதென்று அப்பளம் இட்டு விற்பதை மட்டும் நிறுத்திக் கொண்டாள்.

கேதாரி சீமைக்குச் சென்று ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு நரசிம்மய்யர் என்னைக் கூப்பிட்டனுப்ப, நான் சென்றேன். சுந்தரராமய்யரிடமிருந்து வந்த கடிதத்தைக் காட்டி, பணம் அனுப்பச் சொல்லி எழுதியிருக்கிறார். இது உண்மையா? என்று கேட்க, நான் அம்மாமியிடம் கேட்டு வருவதாகக் கூறிக் கடிதத்தை எடுத்துச் சென்றேன். அம்மாமி கையெழுத்தைப் பார்த்து விட்டு, சற்றும் அதிர்ச்சியடையாமல் இது அவர் கையெழுத்து தான் என்றாள். பிறகு மௌனமாய் யோசனையில் ஆழ்ந்தாள். அம்மாமி, ‘நரசிம்மய்யர் பணம் அனுப்புவதாகச் சொல்கிறார்’ என்று கூற, உடனே மாமி, நான் அப்பளம் இட்டுச் சேர்த்த பணத்தில் மீதி இது. இந்த வீட்டு விலாசம் கொடுத்து இங்கேயே வந்து சேரும்படி எழுது என்றாள். அப்பொழுது அவள் குரல் கம்மியிருந்தது, அவ்வளவு தான். மற்றபடி எனக்குத் தான் கண்ணில் ஜலம் வந்தது. பத்து நாளைக்கெல்லாம் மணியார்டர் திரும்பி வந்து விட்டது. சுந்தரராமையர் காலமாகிவிட்டதாகவும், அநாதைப் பிரேதமாக அடக்கம் செய்யப்பட்டதாகவும் எழுதப்பட்டிருந்தது.

பதினெட்டு வருஷமாய்க் கண்ணால் காணாத புருஷனுக்காக, பாகீரதி அம்மாமி துக்கம் காத்தாள். பத்தாவது நாள் பிராமணச் சமூகத்திற்குரிய அலங்கோலங்கள் அம்மாமிக்கும் செய்யப்பட்டன. கேதாரிக்கு இதுபற்றி ஒன்றும் தெரிவிக்கக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். காலம் எப்படியோ சென்றது. எதிர்பார்த்தது போலவே கேதாரி சிறப்புடன் ஐ.சி.எஸ். தேறினான். நான் நடந்தவற்றையெல்லாம் அவன் அதிர்ச்சியடையா வண்ணம் எழுதி, பம்பாய் வரும்போது அவனுக்குக் கிடைக்கும்படி ஒரு தபால் அனுப்பியிருந்தேன். ஆனால் அவனுக்கிருந்த அவசரத்தில் அவன் கப்பலிலிருந்து நேரே ரயிலுக்கு வந்துவிட்ட காரணத்தால் மேற்படி கடிதம் அவனுக்குச் சேரவில்லை. அவன் வரும் விவரத்தைத் தந்தியில் தெரிவித்திருந்த படியால், அந்த நாளன்று நான் வீட்டுவாசலில் தயாராய்க் காத்துக் கொண்டிருந்தேன்.

கேதாரி வந்தான். என் கழுத்தைக் கட்டிக்கொண்டு உள்ளே இழுத்துக் கொண்டு அவசரமாய்ச் சென்றான். தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த அம்மாமியின் மீது அவன் பார்வை படவில்லையோ அல்லது அடையாளம் தெரியவில்லையோ நான் அறியேன். ‘அம்மா! அம்மா!’ என்று கூப்பிட்டுக் கொண்டே உள்ளே சென்றான். அம்மாமியின் கண்களில் கண்ணீர் வந்ததை நான் அப்பொழுது தான் முதன் முதலாகப் பார்த்தேன். ‘அடே கேதாரி, என்னடா இது……. அம்மா இதோ இருக்கிறாள்…. எங்கேயோ தேடிக் கொண்டு போகிறாயே’ என்றேன். கேதாரி திரும்பி வந்தான். வெள்ளைப்புடவை அணிந்து மொட்டைத்தலையை முக்காடால் மூடிக்கொண்டிருந்த பாகீரதி அம்மாமியை உற்றுப்பார்த்தான். ‘ஐயோ, அம்மா!’ என்று பயங்கரமாக ஒரு கூச்சல் போட்டுவிட்டு, தொப்பென்று கீழே உட்கார்ந்தான். தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டான்.

கேதாரிக்கு அதுமுதல் கடுமையான சுரம். அவனுக்குச் சிகிச்சை செய்யாத டாக்டர் இல்லை. ஆனால் பயன்தான் ஒன்றுமில்லை. அவன் உடம்பைப் போலவே உள்ளமும் கொதித்துக் கொண்டிருந்தது. அவனுக்கு ஒரே நினைவு, ஒரே ஞாபகந்தான். ‘சங்கரா! என்ன சாஸ்திரமடா அது? அநாதையாக விட்டுப் போய், பதினெட்டு வருடம் திரும்பி வராத புருஷன் செத்ததற்காக மொட்டையடிக்கச் சொல்லும் சாஸ்திரம். அதைக் கொண்டு வாடா தீயில் போட்டுக் கொளுத்துவோம். இதோ பார் சங்கர். என் தாயார் ரொம்பப் புத்திசாலி. இந்த முட்டாள்தனத்திற்கு ஒரு நாளும் உடன்பட்டிருக்க மாட்டாள். நான் பெரிய இடத்தில் கல்யாணம் செய்து கொண்டேன் அல்லவா? அவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் பயந்துதான் அம்மா சம்மதித்திருக்க வேண்டும்’ என்பான். ‘சங்கரா! என் தாயாரின் முகத்தில் விழித்தால் சகல பீடைகளும் நீங்கும் என்பார்களே. இப்பொழுது

அவளும் அபசகுனந்தானே?' என்று புலம்பினான்.

எவ்வளவு சொல்லித் தேற்றினாலும் அவன் அந்தப் பேச்சை விடுவதாய் இல்லை. 'இதைக்கேள் சங்கர். உத்தியோகமும் ஆயிற்று; பணமும் ஆயிற்று. நான் மட்டும் பிழைத்து எழுந்தால் பிராமணப் பெண்கள் புருஷனை இழந்தால் மொட்டையடிக்க வேண்டும் என்ற வழக்கத்தை ஒழிக்க ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தப் போகிறேன். இந்தத் தனிக் கௌரவம் நம் சாதிக்கு மட்டும் வேண்டாம்' என்றான். இந்நிலையில் கேதாரி குணமடையாமலே சீமையிலிருந்து வந்த 21 ஆம் நாள் காலமானான்.

இந்தப் பரிதாப வரலாற்றில் சொல்ல வேண்டியது ஒன்றே ஒன்றுதான் பாக்கியிருக்கிறது. கேதாரியின் மாமனார் அவனுடைய புகைப்படம் ஒன்றைக் கேட்டிருந்தபடியால் அதை நான் எடுத்துக்கொண்டு அவர் வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது கேதாரியின் மனைவியைத் தற்செயலாகப் பார்க்க நேரிட்டது. அவளைப் பார்த்ததும் என் உடம்பு நடுங்கிற்று; மயிர் சிலிர்த்தது. 'கிளி' என்று சொன்னேன் அல்லவா? அந்தக் கிளிக்கு இப்பொழுது தலையை மொட்டையடித்து முக்காடும் போட்டிருந்தார்கள்". இத்துடன் கதை நிறைவடைகிறது.

- கருப்பொருள்

இக்கதையில் கருப்பொருள் ஆணித்தரமாய் அமைந்துள்ளது. கணவனை இழந்த பிராமணப் பெண்களுக்கு மொட்டையடிக்கும் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். இந்தச் சாதிக்கு மட்டுமான தனி வழக்கமாக இது இருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது. இந்தச் சாதிப்பழக்க வழக்கத்தால் ஓர் உயிர் இழப்பும், சமூகத்தினரின் மனக்குமுறலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**3.2.2** 'கேதாரியின் தாயார்' சிறுகதையின் வாழ்க்கைப் பயன்

இச்சிறுகதையின் கதைமாந்தர்கள் பிறருக்குப் பயன்படக் கூடிய வாழ்க்கை வாழ்பவர்களாகக் காட்டப்படுகின்றனர். பாகீரதி அம்மாமி, கேதாரி, சங்கர், நரசிம்மய்யர் ஆகிய கதைமாந்தர்கள் வாழ்க்கைப் பாடம் கற்றுக்கொள்ள உதவுபவர்களாக உள்ளனர். சுந்தரராமையர் என்ற கதைமாந்தர் மூலம் பயனற்ற வாழ்க்கை அறியப்படுகிறது. குடும்ப, சமூக வாழ்வில் இத்தகைய மனிதர்களால் எவ்விதப் பயனும் விளைவதில்லை என்பது உணர்த்தப்படுகிறது. பின்வரும் அளவில் கதைமாந்தர்கள் மூலம் பெறப்படும் வாழ்க்கைப் பயனைக் காணலாம்.

- பாகீரதி அம்மாமி

இக்கதைப்பாத்திரம் மூலம் வாழ்க்கைப்பாடம் கற்பிக்கப்படுகிறது. வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்கொண்டு அதில் வெற்றிபெறும் பெண்ணாக இப்பாத்திரப் படைப்பு விளங்குகிறது. கணவன் தன்னை விட்டு ஓடிப்போன நிலையில் தன் வாழ்க்கை முடிந்துவிட்டதாகக் கருதாமல் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்குவது என்பது, பெண்களுக்குத் தன்னம்பிக்கை தேவை என்பதைக் காட்டுவதாக உள்ளது. மகனை நன்கு படிக்கவைக்க வேண்டும் என்ற அவளின் நோக்கம் எல்லோரும் பின்பற்ற வேண்டிய கருத்தாகிறது. தாய்க்குத் தாயாக, தந்தைக்குத் தந்தையாக இருந்து குடும்பத்தைக் காப்பாற்றும் பாகீரதி பிறருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகிறார். மகனுக்கு வரதட்சணை வாங்கிக் கொண்டு, திருமணம் செய்வித்து, அதில் இன்ப வாழ்வு வாழலாம் என்று கருதாமல் மேலும் மேலும் மகனை முன்னேற்ற வேண்டும் என்ற நிலையில் செயல்படும் பாகீரதி 'தாய்' என்னும் நிலைக்குப் பெருமை சேர்ப்பவராகிறார். பையனின் சம்மதத்தின் பேரிலேயே மணம் செய்விக்க முற்படுவது முற்போக்குச் சிந்தனையைக் காட்டுவதாக உள்ளது.

பதினெட்டு வருடங்கள் விட்டுப் பிரிந்த கணவனுக்காக, அவன் இறப்பிற்குப் பிறகு மனைவி என்ற முறையில், அதற்குரிய சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் போற்றுவது இப்பாத்திரத்தின் உயர்வை எடுத்துக்காட்டுகிறது. தன் கணவன் சம்பந்தியிடம் பணம் கேட்டு எழுதியிருந்ததை அறிந்த அவள், தன்னை விட்டு ஓடிப்போன கணவனுக்கு ஏன் உதவ வேண்டும் என்று கருதாமல் உடனடியாகத் தானே பணம் அனுப்பி, தன் வீட்டிற்கே வரச்சொல்வது அவளது சுயமரியாதைக்குரிய வாழ்க்கையைக் காட்டுகிறது. சுயதொழில் செய்து மகனை ஐ.சி.எஸ் படிக்கும் நிலைக்கு ஆளாக்கும் பாகீரதியின் முயற்சி பிறர் பின்பற்ற வேண்டிய பாடமாகிறது. இங்ஙனம் பயன்பட வாழ்ந்த கதைமாந்தரின் மூலம் நாமும் பயனுடைய பாடம் கற்றுக்கொள்ள முடிகிறது.

- கேதாரி

அம்மாவை மட்டுமே பிறந்தது முதல் அறிந்தவன் என்ற அளவில் அவன் அம்மா மீது கொண்டிருக்கும் நம்பிக்கை, பாசம் அளவற்று இருப்பது தெரிகிறது. அம்மாவின் துயரத்திற்கு ஈடாக அவன் நன்கு படித்து, நல்லவனாக உருவாவது என்பது எல்லோரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகிறது. அவன் படித்ததனால் ஏற்பட்ட சிந்தனையின் விளைவாக அர்த்தமற்ற சாத்திரங்களை முட்டாள்தனமாகக் கருதி வெறுக்கிறான். இப்படிப்பட்ட மூடப்பழக்கத்தை ஒழிக்க 'நான் கிளர்ச்சி செய்யப் போகிறேன்' என்று கூறுவதும், வாழ்க்கை மற்றும் சமூகப் பிரச்சனைக்குத் தீர்வுகாண விரும்புவதும் அவனுடைய உயர்ந்த மனப்போக்கினைக் காட்டுவதாயுள்ளன. அம்மாவுக்கு நிகழ்ந்த அலங்கோலத்தை எண்ணி எண்ணி மனநோய்க்கு ஆளாகி உயிரை விடுவதும், அடுத்து அவன் மனைவிக்கும் இத்தகைய அலங்கோலம் நிகழ்வதும் ஆகியவை சமூக அவலங்களாகக் காட்டப்பட்டு, சமூகச்சிக்கல் வெளிப்படுத்தப்படுகிறது.

- சங்கர்

இந்தக் கதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை எல்லோருக்கும் உதவக்கூடிய நல்ல மனம் கொண்ட கதைப்பாத்திரமாக இவர் விளங்குகிறார். இக்கதைப்பாத்திரம் மூலமே படைப்பாளர் தம் கருத்தைக் கதையாகக் கூறியுள்ளார். இளம் வயதில் தான் நன்றாகப் படிக்காவிட்டாலும், கேதாரி நன்றாகப் படிப்பதைப் பார்த்துப் பெருமை கொள்வது, அம்மாமிக்கு அப்பளம் விற்றுத்தர உதவுவது, ஊரே அம்மாமியை 'வாழாவெட்டி' என்று தூற்றியபோதிலும் அவன் தன் தாயை விட கேதாரியின் தாயை உயர்வாகக் கருதுவது, அம்மாமியின் துயர வாழ்க்கையை எண்ணி வேதனைப்படுவது, அம்மாமியின் உழைப்பையும், மனவுறுதியையும் பார்த்து மலைத்துப் போவது, கேதாரி ஐ.சி.எஸ். படிப்பதைப் பார்த்து ஆனந்தப்படுவது, அவன் உடல்நலம் சரியில்லாமல் இருக்கும்போது அவனுக்கு ஆறுதல், தேறுதல் சொல்வது, அம்மாமிக்கும் அவர் சம்பந்தி வீட்டாருக்கும் ஒரு பாலமாய் இருந்து உறவை வளர்ப்பது, இப்படி ஒரு சிறந்த மனிதனாக, நண்பனாக, மனித நேயம் கொண்டவனாகச் சங்கர் விளங்குவது கதைப்பாத்திரச் சிறப்பினைக் காட்டுவதாக உள்ளன. இக்கதையினை நம்மோடு பகிர்ந்து கொள்வதாலும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் அளவிலும் கதைமாந்தனாகிய சங்கர் நம் மனத்தைக் கவர்கிறான்.

- நரசிம்மய்யர்

இவர் ஜமீன் பரம்பரையைச் சார்ந்தவராக இருந்தாலும், சாதாரண நிலையிலிருக்கும் கேதாரி குடும்பத்தோடு நல்லுறவை வளர்த்துக் கொள்வது கதைமாந்தரின் சிறப்பினைக் காட்டுவதாய் உள்ளது. அம்மாமியே தைரியமாக மகனை வெளிநாடு அனுப்பிவைக்க விரும்பும்போது, அந்தக் காலகட்டத்தில் அதற்கிருந்த தடைகளைப் பொருட்படுத்தாதவராய்த் தானும் உடன்படுவது இவரது நல்ல மனப்பான்மையைக் காட்டுகிறது. கேதாரி சீமைக்குச் சென்ற பிறகு அம்மாமியைத் தங்களுடன் வைத்துக்கொள்ள அவர் விருப்பம் தெரிவிப்பதிலிருந்து அவரின் நல்ல மனம் வெளிப்படுகிறது. சம்பந்தி பணம் கேட்டு எழுதிய கடிதத்தைப் பார்த்து விட்டு அவருக்குப் பணம் அனுப்ப விரும்புவது அவரின் மனித நேயத்தைக் காட்டுவதாயுள்ளது. இங்ஙனம் இக்கதைப்பாத்திரம் தனக்கும், பிறருக்கும் நன்மை விளைவிக்கும் அளவில் வாழும் அவருடைய வாழ்க்கை பயனுடையதாய் வெளிப்படுகிறது.

### 3.2.3 ‘கேதாரியின் தாயார்’ சிறுகதையின் சமூகப் பயன்

இக்கதையின் படைப்பாளர் கல்கி அவர்கள் கதையின் தொடக்கத்திலேயே இது சமூக நோக்கம் கொண்ட கதை என்பதைத் தெளிவுபடுத்தி விடுகிறார். இச்சிறுகதையின் ஒவ்வொரு நிகழ்வும் சமூகப் பயனுக்கு இடமளிப்பதாகவே உள்ளது. இக்கதை கற்பிக்கும் சமூகப்பாடம் அனைத்து மக்களும் அறிய வேண்டிய ஒன்றாகவே உள்ளது. இக்கதையின் சமூகப் பயன்களைப் பின்வரும் அளவில் காணலாம்.

- அர்த்தமற்ற சாஸ்திர, சம்பிரதாயங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்பது கூறப்படுகிறது.
- கேதாரியின் தாயார் புத்திசாலியாக இருந்தும் கூட, பிராமணச் சாதியின் வழக்கங்களுக்கு உட்படுவது சமூகத்தின் போக்கிற்கு ஏற்ப நடக்க வேண்டிய கட்டாயத்தைக் காட்டுகிறது. இதைப் பற்றிச் சமூகம் சிந்திக்க வேண்டும் என்பது எடுத்துரைக்கப் படுகிறது.
- சில வேளைகளில் சமூகப் பழக்க வழக்கங்கள் மனிதர்களின் தனித்தன்மையைப் பாதிப்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

எ.கா:

தன்னம்பிக்கை கொண்ட, முற்போக்குச் சிந்தனையுடைய அம்மாமி சாஸ்திர, சம்பிரதாயங்களுக்கு உட்படுவது.

ஐ.சி.எஸ் படித்த கேதாரி அம்மாவின் அலங்கோலத்தைப் பார்த்து மனம் பலவீனப்பட்டுப் போனது.

- 18 வருடம் பிரிந்த கணவனுக்காக, அவன் இறந்த பிறகு அம்மாமிக்குச் சடங்குகள் செய்யப்படுவது, தேவையற்றதாகக் கருத இடமளிக்கிறது. எனினும் அது அந்தக் காலத்திலிருந்த ஒரு சமூக வியாதியாகப் படைப்பாளரால் சுட்டப்பட்டு, அது தவிர்க்கப்பட வேண்டும் என்பது உரைக்கப்படுகிறது.
- கேதாரி தன் தாய்க்குச் செய்யப்பட்ட அலங்கோலத்தைச் சமூக அவலமாகக் கருதுவதால், சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுபவனாகக் காட்டப்படுகிறான்.
- அம்மாமி போன்றவர்களை ‘வாழாவெட்டி’ என்று இகழும் குறைபாடுடைய சமூகத்தின் போக்கு மாறவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.
- கேதாரியின் இளம் வயது மனைவிக்கும் இதே அவல நிலை ஏற்படுவதைக் காட்டிச் சமூகம் இத்தகைய சமூகச் சிக்கல்களிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பாடுபட வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது.
- ‘மொட்டைப் பாப்பாத்தி முகத்தில் விழித்தால் பாவம்’ என்னும் சமூகத்தின் போக்கு மாற வேண்டும் என்பது காட்டப்படுகிறது.
- ஒரு சமூகத்தின் சாஸ்திரங்கள் அச்சமூகத்தினரின் மனநலத்தைப் பேண வேண்டுமே ஒழிய, மனநலம் பாதிப்பதற்குக் காரணமாகக் கூடாது என்பது இக்கதையின் சமூகப் பயனாக எடுத்துக் கூறப்படுகிறது.

## 3.3 அகிலனின் சிறுகதைகளில் கருப்பொருள்

இப்பகுதியில் படைப்பாளர் அகிலன் குறித்த செய்திகளையும் அவருடைய கதைகளின் கருப்பொருள் தன்மையையும், 'புயல்' சிறுகதையில் கருப்பொருள் குறித்த விரிவான விளக்கத்தையும் காண்போம்.

- படைப்பாளர் வரலாறு

படைப்பாளர் அகிலன் அவர்கள் 1922ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தம்முடைய மாணவப் பருவத்திலிருந்தே எழுதத் தொடங்கியவர். 1938இல் இருந்து 1988 வரை தொடர்ந்து ஐம்பது ஆண்டுகளாக எழுதி வந்தவர். தமிழுக்கு முதன் முதலில் பாரதீய ஞானபீடப் பரிசை இவரது சித்திரப் பாவை என்ற சமூக நாவல் பெற்றுத்தந்தது. கலைமகள் இதழ் நாவல் போட்டியைத் தொடங்கிய முதல் ஆண்டிலேயே (1946இல்) இவருடைய 'பெண்' என்ற நாவல் பரிசு பெற்றது. இந்நாவல் தமிழில் பல பதிப்புகளைக் கொண்டதோடு, இந்தி, வங்காளம், கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளது.

இவரது சிறந்த படைப்புகள் சில, பரிசுகள் பல பெற்றுள்ளன. நெஞ்சின் அலைகள், வேங்கையின் மைந்தன், கண்ணான கண்ணன், கயல்விழி, எங்கே போகிறோம், பாவைவிளக்கு ஆகியவை குறிப்பிடத்தக்கன. பாவை விளக்கு போன்ற இவரது படைப்புகள் பல திரைப்படங்களாகவும், மேடை நாடகங்களாகவும், சின்னத்திரை மற்றும் வானொலி நாடகங்களாகவும் வெளிவந்து புகழ்பெற்றுள்ளன.

- இவரது பங்களிப்பு

1974ஆம் ஆண்டில் மதுரைப் பல்கலைக் கழகம் இவரது நூல்களையும், படைப்புகளையும் ஆராய நான்கு நாள் கருத்தரங்கு நடத்தியது. இவரது படைப்புகளில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டன. இவர் தமிழ் இலக்கிய மாநாடுகளிலும், எழுத்தாளர் சங்கங்களிலும் பங்கேற்றுள்ளார். 1966லிருந்து இந்திய வானொலியில் சொற்பொழிவுத்துறை அமைப்பாளராகவும், பின் தென்னிந்திய முதன்மை அமைப்பாளராகவும் பணியாற்றினார்.

- இவரது கருத்து

வாசகர்களுக்கு எது பிடிக்குமோ அதை எழுதுவது எழுத்துப் பணியாகாது; எது பிடிக்க வேண்டும் என்று ஆசிரியர் நினைக்கின்றாரோ, எதை வெளியிட வேண்டுமென்று அவரது உள்ளம் துடிக்கிறதோ, அதை வாசகர்களுக்குப் பிடிக்கும் முறையில் எழுத வேண்டும் என்பது இவரது கருத்தாகிச் சிறப்புப் பெறுகிறது.

- இவரது இலக்கியக் கொள்கை

தமக்கு எது உண்மையென்று தோன்றுகிறதோ, எது நன்மை என்று படுகிறதோ, அதை யாருக்கும் அஞ்சாமல் கலைத்தன்மையோடு வெளியிட வேண்டுமென்பது இவருடைய இலக்கியக் கொள்கையாகிறது. இவர் 1988 ஜனவரி 31ஆம் தேதியில் அமரர் ஆனார். இனி இவரது படைப்புகளுக்கான பிறப்பிடம், கருப்பொருள்கள் ஆகியவற்றைக் காண்போம்.

- இவரது படைப்புகளுக்கான பிறப்பிடம்

வாழ்க்கை அனுபவங்களும், கற்பனை அனுபவங்களும், எழுத்தாற்றலும் சேர்ந்ததே படைப்பிலக்கியமாகிறது. இலக்கியவாதியான படைப்பாளனுக்குக் கற்பனை ஆற்றல் என்பது அனுபவங்களிலிருந்தே பிறக்கிறது. படைப்பாளனின் சொந்த வாழ்க்கை அனுபவம் அவன் எழுத்திற்கான மூல வித்தாக அமைகிறது. படைப்பாளனின் குடும்ப வாழ்க்கை, பிறப்பு, வளர்ப்பு, உற்றம், சுற்றம், சமூகம், அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகியவை அனைத்தும் அவனுடைய அக, புற வாழ்விற்கான அனுபவங்களாகின்றன. வாழ்க்கையும் இலக்கியமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. வாழ்க்கை, இலக்கியப் படைப்பாளனைப் பாதிக்கிறது. அதேபோல் வாழ்க்கையை இலக்கியப் படைப்பாளனும் பாதிக்கிறான். வாழ்க்கையே படைப்பாளனுக்கு மூலப்பொருளாய் அமைகிறது. அதைக்கொண்டு புதியது ஒன்றைப் படைத்து அதை அவன் அந்த வாழ்க்கைக்கே திருப்பித் தருகிறான்.

- எடுத்துக்காட்டு: வறுமை வாழ்க்கையால் பாதிக்கப்படும் படைப்பாளனின் வெளிப்பாடு இவ்விதம் அமைகிறது:




இதிலிருந்து தனிமனித வாழ்க்கை அனுபவங்களும், சமூக வாழ்க்கை அனுபவங்களுமே இவரது கதைகளின் பிறப்பிடமாய் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

- கருப்பொருள்

அகிலனின் தொடக்க காலக் கதைகள் முதல் இறுதிக் காலக் கதைகள் வரை குடும்பம் சார்ந்த நிகழ்வுகளும், சமூகச் சிக்கல்களுமே முக்கிய இடத்தைப் பெற்று வருகின்றன. இவையே அவருடைய கதைகளில் கருப்பொருளாகவும் அமைகின்றன. இதனடிப்படையில் அகிலனின் சிறுகதைகளை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். 1) குடும்பம் சார்ந்த கதைகள் 2) சமூகம் சார்ந்த கதைகள். வாழ்க்கைப் பிரச்சனைகள், அவற்றுக்கான தீர்வுகள் இவையே அவருடைய கதைகளில் மையத் தன்மை பெற்றுக் கருப்பொருளாகின்றன. பிரச்சனைகளும், போராட்டங்களுமே மனிதனை உருவாக்கும் என்பது இதன் வழி அறியப்படும் கருத்தாகிறது.

- குடும்பக் கதைகள்

அகிலனின் குடும்பம் சார்ந்த கதைகளில் அதன் சிக்கல்களும், நிகழ்வுகளுமே கருப்பொருள்களாகின்றன. குடும்பச் சூழல்களாக இலட்சிய வாழ்க்கை, அன்பு வாழ்க்கை, உறவுநிலைச் சிக்கல், காதல், வறுமை, பொருளாதாரக் கவலைகள், போராட்டங்கள், பூசைகள், மந்திரங்கள், தந்திரங்கள் ஆகியவை காட்டப்படுகின்றன. இவையே கதைப் பொருளாகவும், கருப்பொருளாகவும் வெளிப்பட்டு வாழ்க்கைப் பாடங்களாகின்றன. அடிமைத்தனம் வெறுக்கப்பட்டு, மனிதநேயம் பேணும் உத்தமர் வாழ்க்கையும் கருப்பொருளாகிறது. பயன் விளைவிக்கும் கருப்பொருள்கள் இவரது குடும்ப வாழ்க்கைக் கதைகளுக்கு உரியனவாகின்றன.

- சமூகக் கதைகள்

இவரது சமூகம் சார்ந்த கதைகள் சமூகப் பிரச்சனைகளை அலசி ஆராயுமளவிலான கருப்பொருள்களைக் கொண்டுள்ளன. சமூக அவலங்களாலும், பொருளாதார இடர்ப்பாடுகளினாலும் சமூகம் பாதிக்கப்படுவதைக் கண்டு படைப்பாளர் பொங்கியெழுவதைக் காணமுடிகிறது. இவரது படைப்புகளில் சாதி வேற்றுமை, சமூக உயர்வு தாழ்வு, அரசியல் புரட்சிகள் ஆகியவை கருப்பொருள்களாக உருப்பெற்றுள்ளன. நாட்டுப்பற்று, விடுதலைப் போராட்டம் இவையனைத்துமே இவரது கதைகளில் சமயப்பற்றாக வெளிப்பட்டுள்ளன. இவரது சமூகக் கதைகள் அனைத்தும் சமூகப்பயன் விளைவிக்கும் வகையில் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

அகிலனின் சிறுகதைகளுள் ஒன்றான 'புயல்' சிறுகதை இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இக்கதையின் கதைப்பொருள், இப்பாடத்தில் விளக்கம் பெறுகிறது.

### 3.3.1 'புயல்' சிறுகதையின் கதைப்பொருள்

மனித நேயமிக்க ஒரு சிறுவனின் மனநிலையானது இச்சிறுகதையில் வெளிப்பட்டுள்ளது. கடலோரமாக இருந்த அந்தக் கிராமம் புயலால் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகிக் கொண்டிருந்தது. அங்கிருந்த குடிசைகள் எல்லாவற்றையும் கடல் விழுங்கிக் கொண்டிருந்தது. ஊருக்கு மத்தியிலிருந்த மாடிவீட்டிலிருந்து பெரிய மனிதர் அவர் மனைவி, அவர் பையன் மூவரும் அக்காட்சியை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தனர். பையன் திறந்த கண்களை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். நூற்றுக்கு மேற்பட்ட குடிசைகள் இருந்த இடம் தெரியாமல் போனதைப் பார்த்து, கண்களில் தேங்கும் கண்ணீரை யாரும் அறியாமல் துடைத்துக் கொண்டான். அப்பொழுது பெரிய மனிதர் மனைவி பக்கம் திரும்பி, 'மனிதப் பட்டாளமே ஊருக்குள் ஓடி வருகிறது' என்றார். 'ஊருக்குள் ஓடி வராம கடலுக்குள்ளேயா போய் விழுவாங்க' என்றான் பையன். 'அத்தனை பேருக்கும் இடம் எங்கே போவது' என்றார் பெரியவர். 'மனம் இருந்தால் மார்க்கம் இருக்கும்' என்றான் பையன்.

தகப்பனுக்கும், மகனுக்கும் பேச்சு ஆரம்பமாவதைப் பார்த்து அது பிடிக்காமல் தாயார் குறுக்கிட்டுச் சமாதானப்படுத்தினார். புயலால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கூட்டத்தின் ஒரு பகுதியினர் அவர்களின் வீட்டின் முன் நின்றனர். 'அவர்களுக்கு ஹாலில் இடம் தர வேண்டும்' என்று பையன் கேட்கிறான். அதற்கு அவன் அப்பா மறுக்க, அம்மா சமாதானப்படுத்தும் நோக்கில், 'அவர்கள் அத்தனை பேரும் திருட்டுக் கழுதைகள், அவர்களை வீட்டில் விட்டால் காவல் காக்க முடியாது' என்கிறாள். அவர்கள் இருவரும் மறுப்புத் தெரிவிப்பதைப் பார்த்துப் பையன் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு இருந்துவிடுகிறான். பெரியவர், புயலினால் தங்களின் சொத்து ஏதும் பாதிக்கப்படவில்லை என்று தாயிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு மேலும் வெறுப்படைகிறான்.

அன்றிரவு அவனுக்குத் தூக்கம் வராமல் துக்கத்துடன் கண்ணை மூடிப் படுத்துக் கொண்டிருந்தான். தாயார் அவனை அழைத்தபோதும் பதில் பேசாமல் படுத்திருந்தான். பிறகு பெற்றோர் தம் பையன் தூங்கிவிட்டதாக எண்ணி அவர்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்துகின்றனர். பெரியவர், 'பையன் போற போக்கைப் பார்த்தியா? நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும்' என்று தொடர, பையனுக்குச் சுரீர் என்றது. 'நமக்குன்னு ஒரு குழந்தை பிறந்திருந்தா இப்படியெல்லாம் இருக்குமா?' என்றார். 'ராத்திரி அவன் சாப்பிடறப்பச் சொன்னதைக் கேட்டியா' என்று பெரியவர் கூற, பையன் அப்பொழுது அதைப்பற்றி எண்ணிப் பார்க்கிறான். இழப்பினாலும், பசியினாலும் அழுது கொண்டிருக்கும் அவர்களுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றச் சொல்ல, அவர்கள் இருவரும் மறுத்து விட, அவன் சாப்பிடாமல் இருந்து விட்டான். தத்து எடுத்துக்கொண்ட பெற்றோர்களிடமிருந்து அவனுக்கு எல்லாம் கிடைத்தது, இரத்தத்தில் ஊறிய அன்பைத் தவிர. அவன், 'நம் தகப்பனாராக இருந்தால் இப்படி மனம் இரங்காமல் இருப்பாரா?' 'நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்து விட்டால் எல்லா நாய்களின் மீதும் இவருக்குப் பிரியம் என்று அர்த்தமா?' என்று இப்படிப் பலவாறு எண்ணுகிறான்.

பையன் ராஜு, தான் கதையெழுதிச் சம்பாதித்த பணம் பதினைந்து ரூபாய் வைத்திருந்தான். பொழுது விடிந்ததும் ஊருக்குள் இருக்கும் கிராமத்தினரின் நிலையை அறியச் சென்றான். நல்ல உள்ளம் படைத்த சில பேர் அவர்களுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றிக் கொண்டிருந்தனர். தான் வைத்திருக்கும் பதினைந்து ரூபாய் அவர்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற நோக்கோடு குளிருக்கு உதவும் வகையில் மூன்று போர்வைகளை வாங்குகிறான். கணவரை இழந்த மூன்று பெண்களுக்கு அதைக் கொடுக்கிறான் அவர்கள், 'எங்கள் பிள்ளை குட்டிகளை எப்படி ஐயா காப்பாற்றுவோம்' என்று அழுவதைப் பார்த்து அவனும் அழுத வண்ணம் அந்த இடத்தை விட்டு நகர்கிறான்.

மூன்று நாள் கழித்து அவன் ஊருக்குப் புறப்படும்போது அவன் தாயார் அவன் எடுத்துச்செல்லும் பொருட்டு ஒரு போர்வையைக் கொடுக்கிறாள். அதைப் பார்த்தவுடன் அவனுக்குப் பொறிதட்ட, தாயாரிடம், 'இது எப்போ வாங்கியது?' என்றான். அதற்கு அவள், 'முந்தா நாள் வாங்கினேன். கொள்ளை மலிவு, பேரம் பேசி மூன்று போர்வை ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன்' என்கிறாள். அதைக் கேட்டவுடன் ஈரம் நிறைந்த அந்த இளநெஞ்சில் அப்பொழுதுதான் பயங்கரமான கோரப்புயல் ஆரம்பமாகிறது. 'அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்கு முன்பு வீசிய புயல் அற்பச் சூறாவளி போன்றது' என்பதோடு கதை நிறைவு செய்யப்பட்டுள்ளது.

அன்புள்ளம் கொண்ட சிறுவனின் மனிதநேயம் எவ்வாறெல்லாம் மற்றவர்களால் பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது என்பது 'புயல்' சிறுகதையின் கருப்பொருளாக அமைகின்றது.

- கருப்பொருள்

1. ஏழை எளியவர்களின் அவல வாழ்க்கை.
2. நாட்டில் இருக்கும் உயர்வு, தாழ்வுகள் சமூக அவலங்களாக வெளிப்படுதல்.
3. மனிதர்கள் மனித நேயமிக்கவர்களாக விளங்க வேண்டும்.

இவை சிறுகதை சுட்டும் கருப்பொருள்களாகின்றன.

### 3.3.2 'புயல்' சிறுகதையின் வாழ்க்கைப் பயன்

இலக்கியம் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை தோன்றியுள்ள படைப்புகள் பலவும் அறத்தையும், நீதிக் கருத்துகளையும் வலியுறுத்தத் தவறவில்லை. சிறுகதைகளும் மனித வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில் கருத்துகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உரைக்கத் தவறவில்லை. 'புயல்' சிறுகதை சிறந்த வாழ்க்கைப் பயனுக்கு உரியதாகவே கருத இடமளிக்கிறது.

'புயல்' சிறுகதையில் பயனுடைய வாழ்க்கை வாழும் கதை மாந்தர்களும், பயனில்லா வாழ்க்கை வாழும் கதைமாந்தர்களும் காட்டப்படுகின்றனர். ராஜு வாழ்க்கைக்குப் பயனுடைய கதைப்பாத்திரம். அவனுடைய தகப்பனார், தாயார் பயனற்ற வாழ்க்கைக்கு உரிய கதைமாந்தர்கள் ஆகின்றனர்.

- ராஜு

வாழ்க்கைப் பயன் என்பது பிறருக்குப் பயன்பட வாழ்தல். இத்தகைய வாழ்க்கைக்குப் பொருத்தமானவனாக ராஜு விளங்குகிறான். புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் மற்றும் அவனது கருணை உள்ளம் அறத்தை அடிப்படையாகக் கொண்டது. தாய், தந்தையரை எவ்வளவு வற்புறுத்தியும், அவர்கள் துன்பப்பட்டவர்களுக்கு உதவாத நிலையில் கோபம் கொள்ளாமல், தன்னால் எதுவும் செய்ய

முடியவில்லையே என்று வேதனைப்படுவது, அவன் நல்ல பண்பினைக் காட்டுகிறது. அந்த இளம் வயதிலேயே தன் உழைப்பின் மூலம் பெற்ற பதினைந்து ரூபாய்க்குக் கூட அவன் சொந்தக்காரனாய் இருக்க விரும்பாமல் அதைப் பிறருக்குச் செலவிடுவதன் மூலம் அவன் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகிறது. மற்றவர் துன்பத்தைத் தன் துன்பம்போல் கருதும் ராஜு பாத்திரம் பிறருக்கு வழிகாட்டும் அளவில் பயனுள்ளதாகிறது. இதேபோல் தனியொருவனுக்கு உணவில்லாத நிலையில் ராஜு படும்பாடு அவனது பயனுள்ள வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாகிறது.

- தாய், தந்தையர்

'பிறருக்குக் கொடுத்து உதவுதலே பேரின்பம்' என்பதை உணராதவர்களாய் இவர்கள் காட்டப்படுகின்றனர். பிறருக்கு உதவச் சொல்லிக் கேட்கும் போது மகனை வெறுக்கும் தந்தையையும், அவருக்குத் துணைபோகும் தாயையும் காணமுடிகிறது. அளவற்ற செல்வம் இருந்தும் மனிதநேயம் பேணப்படாத காரணத்தால் பயனற்ற வாழ்க்கைக்கு உரியவர்களாகின்றனர். தானும் நன்றாக அனுபவிக்காமல், பிறருக்கும் கொடுக்காமல் வீணே வாழும் அர்த்தமற்ற வாழ்க்கைக்கு உரியவர்களாகின்றனர். சுயநலம் மேலோங்கியிருக்கும் நிலையில் இவர்கள் பயனற்ற வாழ்க்கைக்கு உதாரணமாகின்றனர். அளவற்ற செல்வத்தை அனுபவிக்கக் குழந்தையில்லாத காரணத்தால் தத்தெடுத்துக் குழந்தையை வளர்க்கும் நிலையிலும்கூட, வாழ்க்கையின் தத்துவத்தை உணராதவர்களாய்ச் செயல்படுவது இவர்களது குறுகிய மனப்போக்கைக் காட்டுவதாயுள்ளது. தத்தெடுத்த மகனைக் கேவலமாய்ப் பேசுவது இவர்களது மனித நேயமற்ற செயலைக் காட்டுகிறது. இங்ஙனம் இப்பாத்திரங்கள் போற்றுதலுக்கு இடமின்றி, பயனற்ற வாழ்க்கைக்கு உரியவர்களாக அறியப்படுகின்றனர்.

இனி, அடுத்து வரும் பகுதியில் இச்சிறுகதை காட்டும் சமூகப் பயன்களைக் காண்போம்.

### 3.3.3 'புயல்' சிறுகதையின் சமூகப் பயன்

ஒவ்வொரு தனிமனிதனும் மனிதப் பண்புகளைப் பெற்றுப் பயனுடைய வாழ்க்கை வாழ்வதன் மூலமே அவர்கள் வாழும் சமூகம் பயனடைய முடியும். தனி மனிதர்கள் ஆற்றும் சமூகக் கடமைகளே சமூகத்தை முன்னேற்ற உதவும். இச்சிறுகதையில் சமூகக் கடமையாற்றும் கதைப்பாத்திரமாக ராஜு விளங்குகிறான். அவன் மூலம் பெறப்படும் சமூகப் பயன்களாகப் பின்வருபவை அமைகின்றன.

- புயலால் பாதிக்கப்பட்டு அந்தக் கிராம மக்களின் வாழ்க்கை சீரழிந்து விட்டதை எண்ணிக் கண்ணீர் விடும் நிலையில் ராஜுவின் சமூக அக்கறை வெளிப்படுகிறது.
- துன்பப்பட்டவர்களுக்கு இடமளித்து உதவ வேண்டும் என்ற நிலையில் தந்தையிடம், 'மனமிருந்தால் மார்க்கம் உண்டு' என்று கூறுவதன் மூலம் அவனது சமூக சேவை மனப்பாங்கு வெளிப்படுகிறது.
- நாம் உபயோகப்படுத்தாத கூடத்தை அவர்களுக்கு ஒதுக்கித் தந்தால் என்ன? என்று கேட்பதன் மூலம் அவன் சமூக நோக்கம் தெரிகிறது.
- 'கண்டவனுங்க எல்லாரையும் வீட்டுக்குள்ளே விடச் சொல்லறயா?' என்று கேட்கும் தந்தைக்கு, 'கோயிலுக்குள்ளே எல்லோரும் செல்வதில்லையா?' என்று பதிலளிப்பதன் மூலம் 'கடவுள் வாழும் கோயிலை விட மனிதன் வாழும் மாளிகை உயர்ந்ததா?' இல்லை என்பது உணர்த்தப்பட்டு, அவனது சமூகச் சமதர்மச் சிந்தனை அறியப்படுகிறது.
- தாயும், தந்தையும் கிராமத்தினருக்குச் சிறு உதவி கூடச் செய்ய மறுத்த நிலையிலும், அவர்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவிசெய்ய முடியுமா? என்று மீண்டும் மீண்டும் செயல்படும் அளவில் அவனது சமூகக்கடமை வெளிப்படுகிறது.
- குளிராலும், பசியாலும் நடுங்கிக் கொண்டிருக்கும் கிராம மக்களுக்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றும்படி கேட்பது சமூக மனப்பான்மையைக் காட்டுகிறது.
- தன்னால் இயன்ற அளவு உதவியாவது கிராம மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களுக்குப் போர்வை வாங்கித் தருவது ராஜுவின் சமூக ஈடுபாட்டினைச் சுட்டுகிறது.
- மூன்று விதவைப் பெண்களின் நிலையைப் பார்த்து அவன் வருந்துவதும், அழுவதும் சமூக நேயத்தைக் காட்டுகின்றன.
- விதவைப் பெண்களுக்குக் கொடுத்த போர்வையைத் தாய் வாங்கிக் கொண்டு வந்ததை அறிந்த மாத்திரத்தில் அவன் உள்ளத்தில் புயல் வீசுவது சமூகக் குறைபாடுகளைக் களைய முனையும் முயற்சியாக விளங்குகிறது. இங்ஙனம், ராஜு பாத்திரப்படைப்பின் மூலம் சமூகப் பயன்கள் உரைக்கப்படுவதோடு, பிறர் துன்பத்தில் பங்கெடுக்கும் நல்ல மனிதநேயப் பண்புகளை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதும் அறியப்படுகிறது.

மனிதநேய மாற்றங்கள் எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும் தடையின்றி நிகழ வேண்டும். அப்பொழுது தான் சமூக முன்னேற்றத்திற்கு வழியேற்பட்டு நாடு நலம் பெற முடியும்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 3.4 ஜெயமோகனின் சிறுகதைகளில் கருப்பொருள்

இப்பகுதியில் படைப்பாளர் ஜெயமோகன் குறித்த செய்திகளையும் அவரது கதைகளின் கருப்பொருள் தன்மையையும் ‘கடைசிவரை’ என்ற சிறுகதைக் கருப்பொருளின் விளக்கத்தினையும் காணலாம்.

- படைப்பாளர் வரலாறு

படைப்பாளர் ஜெயமோகன் 1962 ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதி குமரி மாவட்டத்தில் பிறந்தார். பெற்றோர் எஸ். பாகுலேயன் பிள்ளை, பி.விசாலாட்சி அம்மா. வணிகவியல் இளங்கலைப் படிப்பில் சேர்ந்த அவர் படிப்பை முடிக்கவில்லை. 1981 டிசம்பரில் வீட்டை விட்டுத் துறவியாகச் சென்று மூன்று வருடங்கள் அலைந்தார். 1984 நவம்பரில் கேரளத்தில் காசர்கோடு நகரில் தொலைபேசித் துறையில் தொலைபேசி உதவியாளராகத் தற்காலிக வேலையில் சேர்ந்தார். 1988இல் பணி மாறுதல் பெற்று, தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம் பாலக்கோட்டில் பணியாற்றத் தொடங்கினார். இவருடைய மனைவி அருண்மொழி நங்கை. குழந்தைகள் அஜிதன், சைதன்யா. 1997 முதல் இவர் நாகர்கோவிலில் வசித்து வருகிறார்.

- இவரது படைப்புகள்

ஜெயமோகனின் முதல் சிறுகதைத் தொகுப்பு ‘திசைகளின் நடுவே’. இது 1991இல் வெளிவந்தது.

- சிறுகதைத் தொகுப்புகள்

1) மண் (1993)
2) ஆயிரங்கால் மண்டபம் (1998)
3) கூந்தல் (2003)
4) ஜெயமோகன் சிறுகதைகள் முழுத்தொகுப்பு (2004)

- நாவல்கள்

1) விஷ்ணுபுரம் (1997)
2) பின் தொடரும் நிழலின் குரல் (1999)
3) கன்னியாகுமரி (2000)
4) காடு (2003)
5) ஏழாம் உலகம்
6) ரப்பர்

- திறனாய்வு நூல்கள்

இவர் பத்துத் திறனாய்வு நூல்களை எழுதியிருக்கிறார். இலக்கிய முன்னோடிகள் வரிசையில் ஏழு நூல்கள் 2003இல் வெளிவந்தன. இவரது பிற படைப்புகள்:

1) நாவல் (1991)
2) நவீனத் தமிழிலக்கிய அறிமுகம் (1998)
3) நவீனத்துவத்துக்குப் பின் தமிழ்க் கவிதை தேவதேவனை முன்வைத்து (2001)
4) பனி மனிதன் (2002)
5) சங்கச் சித்திரங்கள் (2003)
6) இந்து ஞான மரபில் ஆறு தரிசனங்கள் (2003)
7) வாழ்விலே ஒரு முறை (2004)
8) உள்ளுணர்வின் தடத்தில் (2004)
9) எதிர் முகம் (2004)

இவர் மலையாளத்திலும் எழுதி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

- இவரது கருத்துகள்

கவிதையாக மாற முடியாத, கதையில் உறுப்பாக இடம்பெறமுடியாத சில வரிகள் படைப்பாளரின் கருத்தாக வெளிப்படுகின்றன. இவற்றுள் சில வரிகள் பொருள்படும் அளவிலும், சில வரிகள் பொருள்படா அளவிலும், மனம் செயல்படுவதன் அடையாளமாக வெளிப்பட்டுள்ளன. போடப்படாத அல்லது அழிந்துவிட்ட கோலங்களின் புள்ளிகளாக இவை கருதப்படுகின்றன. அவற்றுள் சில கருத்துகள் இங்கே தரப்பெறுகின்றன.

எ.கா.

அம்மாவை அசடாக எண்ணிக் கொள்வதற்கு

அவள் பாசம் தான் காரணமா?

வரலாற்றை மண்ணிலிருந்து தோண்டி எடுத்து

மொழியில் புதைத்து விடுகிறோம்.

விரியத் திறந்த வீட்டுக்குள்ளும் சுரங்கம் போட்டு

நுழைபவன் இலக்கிய விமரிசகன்.

இவருடைய இக்கருத்துகள் சிந்தனையைத் தூண்டுகின்றன.

- இவரது படைப்புகளில் கருப்பொருள்

இவர் நவீன இலக்கியத்தில் தமக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்த சிறந்த படைப்பாளராக விளங்குகிறார். இவருடைய கதைகள் இடம், சூழல் ஆகியவற்றை விவரிக்கும் அளவில் களம் சார்ந்த கதைகளாக விளங்குகின்றன. இவருடைய கதையின் கருப்பொருள்கள் ஆழமான தன்மை கொண்டவை. ஆதியோடு அந்தமாகக் கதைசொல்லும் பாங்கினை உடையவை; வாசகர்களை வசப்படுத்தும் தன்மை கொண்டவை.

சிறுகதைக்குரிய கூர்மை அதன் கருப்பொருளையே அடிப்படையாய்க் கொண்டது. கதையின் கருவைப் பற்றிப் படைப்பாளர் கூறும்பொழுது, 'கதைக்கரு என்பது கற்பனை ஓட்டத்தில் மிதக்கும் படகு. ஓட்டைகளின் வழியாக உள்ளே வருவதே இலக்கியமாகிறது' என்கிறார்.

இவருடைய சிறுகதைகள் அனுபவக் கதைகளாக விளங்குகின்றன. சில சிறுகதைகள் கற்பனை கலந்த அனுபவக் குறிப்புகளாகவும் உள்ளன. சில கட்டுரை வடிவிலும் அமைந்திருக்கின்றன. இவருடைய சிறுகதைகளின் கருப்பொருள்கள் வாழ்க்கை அனுபவங்களைச் சுட்டுகின்றன. ஒவ்வொரு நிமிடமும் மனிதன் பெறும் அனுபவங்களும், அதனால் அறியப்படும் கருத்துகளுமே கருப்பொருள்களாகின்றன. ஜெயமோகன் சிறுகதைகளில் கருப்பொருள் அமைந்துள்ள அடிப்படையில் அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. குடும்ப அனுபவக் கதைகள்
2. சமூக அனுபவக் கதைகள்

- குடும்ப அனுபவக் கதைகள்

இக்கதைகளில் உறவுநிலை கருப்பொருளாகிறது. உறவுநிலை கொடுக்கும் மகிழ்ச்சியான நிகழ்வுகள் உரைக்கப்படுகின்றன. இதன் மூலம் அனுபவப் பாடமானது பெறப்படுகிறது. இத்தகைய கதைகள் குடும்பத்தையும், அதன் சூழலையும் களமாகக் கொண்டு வெளிப்படும்பொழுது மேலும் சிறப்பான அனுபவங்களாகின்றன. படைப்பாளரும் 'அனுபவங்களை வாசகர்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்கள் என்னுடைய உணர்வுகளைப் பெறமுடியும்' என்கிறார்.

- சமூக அனுபவக் கதைகள்

இக்கதைகளில் சமூகக்கருத்துகள் கருப்பொருளாகின்றன. குடும்ப உறுப்பினர்களன்றி, சமூக உறுப்பினர்களுடன் பெறும் அனுபவங்கள் இத்தகு கதைகளில் இடம்பெறுகின்றன. இவருடைய கதைகளில் பல்வேறு சமூகத்தினர்கள் கருப்பொருள்களாவது, இவரது சமூக அக்கறையைக் காட்டுவதாக உள்ளது. களம் சார்ந்த கதைகளான இவை, இலக்கியத் தரத்திற்கும் உரியவாகின்றன.

இப்பகுதியில் இவரது 'வாழ்விலே ஒரு முறை' அனுபவக்கதைத் தொகுப்பிலிருந்து 'கடைசி வரை' என்னும் சிறுகதை, தேர்ந்தெடுக்கப்பட்டு, பாடப்பகுதியில் விளக்கப்படுகின்றது.

### 3.4.1 'கடைசிவரை' சிறுகதையின் கதைப்பொருள்

படைப்பாளரே தம் அனுபவத்தைக் கூறுவதுபோல் இக்கதை அமைந்துள்ளது. "தீவட்டிப்பட்டிக் கிராமத்தைச் சேர்ந்த மாணிக்கம் சேலம் இரயில் நிலையத்தில் மூட்டைகளுடன் ஏறி என்னருகில் அமர்ந்தார். மணி என்ன? என்று கேட்க, நான் 'கடிகாரம் என்னிடம் இல்லை' என்றேன். வியப்புடன் என்னைப் பார்த்தார். நான் காசர்கோட்டில் வேலை பார்க்கிறேன் என்று மாணிக்கத்திற்குத் தெரிந்தபோது நெகிழ்ந்து போனார். 'அருமையான ஊரு சார்.... மத்தி மீனு ரொம்ப சல்லிசு. ஐந்து ரூபாய்க்கு 50 மீன் வாங்கியிருக்கிறேன்' என்றார். மேலும் மாணிக்கம் 'அங்கிருக்கும் கட்டடங்களையும், மேஸ்திரிகள், எஞ்சினியர்கள் பெயர்களையும் கூறி, தெரியுமா?' என்று கேட்டார். நான், 'தெரியாது' என்று கூறினேன். அப்படியே சுற்றி வந்த பேச்சிலிருந்து, மாணிக்கத்தைப் பொறுத்தவரை கேரளத்தில் வாழும் பிராமணர்கள் நல்லவர்களாகவும், அறிவாளிகளாகவும் இருக்க முடியும் என்பதை அறிந்து கொண்டேன்.

மாணிக்கம் வன்னியக் கவுண்டர் சாதியைச் சார்ந்தவர். ஊரில் தனக்கு இருக்கும் வசதியையும், உடன்பிறந்தவர்கள் பற்றியும் கூறினார். அம்மாவும், தங்கையும் தன் குடும்ப உறுப்பினர்கள் என்றும் கூறினார். 'இப்பொழுது அவர்கள் எங்கே?' என நான் கேட்டபொழுது முகம் கறுத்து, 'தெரியவில்லை; அவர்களைத்தான் நான் தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன்' என்றார்.

மழை பொய்த்துவிட்டால் விவசாயமோ, வேறு தொழிலோ ஏதும் செய்ய முடியாத நிலையில் தான் கேரளாவிற்குக் கட்டட வேலைசெய்யும் பொருட்டு வந்ததாகக் கூறினார். கேரளா மாணிக்கத்திற்கு மிகவும் பிடித்துவிட்டதாகவும் கூறினார். அவருடைய பேச்சிலிருந்து மாணிக்கத்திற்கு சினிமா தான் உயிர்மூச்சு என்பது விளங்கியது. சினிமா பற்றிய தகவல்களைக் கூறும்போது அவர் கலைக்களஞ்சியத்திற்கான அறிவைப் பெற்றிருப்பதை அறிய முடிந்தது. மாணிக்கம் எந்த இடத்தைக் குறிப்பிட்டாலும் அதைச் சினிமா காட்சிகளாலேயே அடையாளப்படுத்தினார். அனைத்து நிகழ்வுகளையும் சினிமா நிகழ்வுகளோடு ஒப்பிட்டார். மனிதர்களுடன் நடிகர், நடிகைகளை ஒப்பிட்டார்.

அங்கு வேலைசெய்பவர்கள் கூலி வாங்கிக்கொண்டு நேரடியாகக் கள்ளுக்கடைக்குத்தான் செல்வார்கள் என்று குறிப்பிட, நான் ஒரு உறுத்தலுடன், 'பெண்களும் குடிப்பார்களா?' என்றேன். 'பெண்கள் குடிக்காவிட்டால் எப்படி சாலையோரத்தில் குடித்தனம் நடத்த முடியும்' என்றார். 'முதலில் இந்த வாழ்க்கை கஷ்டமாகத்தான் இருக்கும். பிறகு பழகிவிடும்' என்றார். பிறகு கேரளக் கள்ளின் சுவையை ரசித்து மகிழ்ந்து கூறினார். 'ஆனால் விலை அதிகம். வீட்டில் பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லாததால் பிரச்சனை இல்லை' என்றார். 'குறைவான கூலியில் பெண்கள் எப்படிக் குடும்பத்தைச் சமாளிப்பார்கள்?' என்று கேட்க, மாணிக்கம் தலையை உருட்டிச் சிரிக்கிறார். 'கள் குடித்து, தலை சுற்றிக் கீழே கிடக்கும் நிலையில் அந்தப் பெண்களைப் போலீசும், கேடிகளும் விட்டுவிடுவார்களா என்ன? போகப் போக நிறையப்பணம் கிடைக்கும்' என்றார்.

இதைக் கேட்டதும் என் உடல் நடுங்கியது. நான் உணர்வு பூர்வமாக என்றும் தமிழன்; இவையனைத்தும் என் உடலில் அக்கணம் அழுகி நாறுவதாகப்பட்டது. மாணிக்கம் என் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத நிலையில் அவராக ஏதேதோ பேசிக்கொண்டு வந்தார். நான் மாணிக்கம் கூறியதை எண்ணியபொழுது பல விஷயங்கள் என் நினைவிற்கு வந்து போயின. பிழைப்பதற்காக வீட்டை விட்டு வெளியில் செல்லும்போது நம் பாரம்பரியம், நிலம், நெறி, நினைவுகளை விட்டு விடுவோம் போலும் என்று எண்ணினேன். மாணிக்கம் நாடோடியல்ல. நாடோடிகளுக்கு அவர்களுக்கே உரிய கலாச்சாரம் உண்டு. நாடோடி மக்கள் இவர்களைத் தங்கள் பக்கத்தில் கூட வர அனுமதிக்கமாட்டார்கள். விவசாயிகள் நாடோடிகள் ஆவதில்லை; சிதறி, மட்கி அழிகின்றனர். இந்தியாவில் எந்தப் பெரும் நகரங்களிலும் மாபெரும் தமிழ்ச்சேரிகள் இருக்கும். இந்தியத் தெருக்களில் வாழ்பவர்கள் பெரும்பாலானவர்கள் தமிழர்கள். கேரளத் தெருக்களில் பதினேழு லட்சம் தமிழர்கள் வாழ்கின்றனர். இவையனைத்தும் நம் இலட்சியக் கனவுகளையும், வெற்றிகளையும் தகர்ப்பவையாக அமைகின்றன.

மாணிக்கம் கண்ணனூருக்குப் போவதாகக் கூறினார். அங்குப் போனால் தன் குடும்பத்தைக் கண்டுபிடித்து விடலாம் என்றார். இதுவரை தான் சிறையில் இருந்ததாகவும், இப்பொழுது பரோலில் வந்திருப்பதாகவும் கூறினார். 'ஒருவன் கழுத்தை வெட்டப் போக அவன் தடுக்கக் கையை வெட்டிவிட்டேன்' என்றார். குடிபோதையில் வெட்டினீர்களா? என்று கேட்க, 'இல்லை வேண்டுமென்று தான் வெட்டினேன்' என்றார். அப்பொழுது மாணிக்கத்தின் அந்தப் புதிய முகம் என்னைப் பயம் கொள்ளச் செய்தது.

வெட்டப்பட்டவன் மாணிக்கத்தின் சகோதரியின் காதலன். அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டபோது மாணிக்கம் அவனைத் தட்டிக்கேட்டார். எதிர்க்கவே கையை வெட்டிவிட்டதாகக் கூறினார். மாணிக்கத்திடம் நான் 'அவர்கள் திருமணம் செய்து கொண்டால்

என்ன? உனக்கேன் இத்தனை கொலைவெறி' என்றேன். 'அவர்களுக்கு நான் யார் என்பது புரிய வேண்டும். அவர்கள் சேர்ந்து வாழ்ந்தால் அவன் தலையை எடுத்துவிட்டுத்தான் மறுவேலை. குழந்தை இருந்தால் அதன் தலையையும் எடுப்பேன்' என்றார்.

நான், இது பைத்தியக்காரத்தனமான செயல் என்றேன். உடனே மாணிக்கம் உணர்ச்சி வேகத்தில் நடுங்கினார். 'ஆமாம் நான் பைத்தியம் தான். தெருப் பொறுக்கியானாலும், குடிகாரனானாலும் நான் அப்புனுக் கவுண்டனின் மகன். மாதய்யக் கவுண்டனின் பேரன். நான் உயிரோடு இருக்கையில் ஒரு கவுண்டிச்சி கீழ்ச்சாதிக்காரனுடன் வாழ்வதை நான் அனுமதிக்க மாட்டேன். அதில் மாற்றம் இல்லை'. மாணிக்கத்தின் கோபம், ஆவேசம் அவர் கழுத்துத் தசைகளும், நரம்புகளும், தாடையும் இறுகுவதிலிருந்தே தெரிந்தது. அதன் பிறகு அவர் பேசவே இல்லை. இத்துடன் கதை நிறைவடைகிறது.

- கருப்பொருள்

சாதி வெறி கொண்ட தனிமனிதன் மூலம் சமூகச்சிக்கல் வெளிப்படுத்தப்படுகிறது. படைப்பாளியின் சிந்தனை, அனுபவம் நம்மையும் பற்றிக்கொள்வதைக் காணமுடிகிறது. இக்கதை கருப்பொருளை ஒட்டிய களம் சார்ந்த கதையாகி, சிறந்த அனுபவமாகிறது.

**3.4.2** கடைசிவரை – சிறுகதையின் வாழ்க்கைப் பயன்

நாம் வாழும் வாழ்க்கை நமக்கும், பிறருக்கும் பயனுள்ள வகையில் அமையும்பொழுதே அது பயனுடையதாகிறது. இச்சிறுகதையில் கடைசி வரையிலும் வாழ்க்கைப்பயனுக்கு இடமின்றி வாழும் மனிதனைக் காணமுடிகிறது. இச்சிறுகதையின் கதைமாந்தர்களாகப் படைப்பாளரும், மாணிக்கமும் விளங்குகின்றனர். இவர்களின் எண்ணங்களும், செயல்களும் வாழ்க்கைப்பயனையும், பயனற்ற தன்மையையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன.

- படைப்பாளர்

சேலம் இரயில் நிலையத்தில் இருந்து மாணிக்கத்துடன் சேர்ந்து பயணம் செய்கிறார் படைப்பாளர். மாணிக்கத்தின் இடைவிடாத பேச்சைக் கூர்ந்து கவனித்து, அதிலிருக்கும் கருத்துகளை அசைபோடுவதன் மூலம் பிறரோடு இயைந்துவாழும் வாழ்க்கைக்கு உரியவராகக் காட்டப்படுகிறார். மாணிக்கம் போன்றோர் ஊரை விட்டு ஊர் வந்து பிழைப்பு நடத்துவதற்கான காரணத்தை ஆராயும் அளவில் அவர் பிறர் மீது கொண்டிருக்கும் அக்கறை வெளிப்படுகிறது. கேரளத்தில் வாழும் நம் ஊர்ப் பெண்கள் கள் குடிப்பதையும், வீதியில் குடும்பம் நடத்துவதையும் கேள்விப்பட்டுப் படைப்பாளர் வேதனை கொள்வது அவருடைய கலாச்சாரப்பற்றைக் காட்டுவதாயுள்ளது. நாடோடிகளுக்கு இருக்கும் உணர்வு கூட இவர்களுக்கு இல்லை என்று வேதனை கொள்வது சிந்தனைக்குரியதாகிறது. இந்தியத் தெருக்களிலும், தமிழகத் தெருக்களிலும் அதிகமாய் வாழ்பவர்கள் தமிழர்களே என்றறிந்து வேதனைப்படுவது நாட்டு நலம் பேணும் பண்பாகக் கருத இடமளிக்கிறது. நம்முடைய இலட்சியக் கனவுகளும், கலையிலக்கிய வெற்றிகளும் தோல்வியடைந்து விட்டதாக எண்ணி வேதனைப்படுவது இவரது உயரிய வாழ்க்கைச் சிந்தனையாகிறது. மக்களின் குறிக்கோள் இல்லாத வாழ்வை எண்ணி வேதனைப்படுகிறார். மாணிக்கம் வேண்டுமென்றே சகோதரியின் காதலன் கையை வெட்டிவிட்டு ஜெயிலுக்குச் சென்றதைக் கேட்டு அதிர்கின்றார். மீண்டும் அவனைக் கொல்லும் பொருட்டே பரோலில் வந்திருப்பதை எண்ணிப் பதறுகிறார். இது பைத்தியக்காரத்தனம்; அவர்கள் வாழ்வில் நீங்கள் ஏன் குறுக்கிட வேண்டும் என்று கேட்கிறார். அதன்பின் மாணிக்கம் உணர்ச்சி வேகத்தில் பேசுவதைப் பார்த்து உறைந்து போகிறார். மாணிக்கத்தின் இச்செயல்களை எல்லாம், அவர் வெறுப்பவராகக் காணப்படுகிறார். இதன் மூலம் படைப்பாளர் கலாச்சாரம், இலட்சிய நோக்கு, பிறருக்குத் துன்பம் செய்யாத மனம் ஆகியவற்றை வாழ்க்கைப் பயன்களாக அடைய வழிகாட்டுபவர் ஆகிறார்.

- மாணிக்கம்

இக்கதைமாந்தர் வாழ்க்கைப் பயனின்றி வாழும் மனிதர்களை அடையாளம் காட்டுகிறார். மாணிக்கம் பிராமணர்களைப் பற்றிய தம் கருத்தைக் கூறுவதிலிருந்து அவர் மனத்தில் சாதி வேற்றுமை பதிந்திருப்பதை அறிய முடிகிறது. அவர் வன்னியக் கவுண்டராக இருந்த போதிலும், வெள்ளாளக் கவுண்டருக்குச் சற்றும் குறைந்தவரில்லை என்பதன் மூலம் சாதிப்பற்று வெளிப்படுகிறது. நிலபுலன்கள் இருந்தும் விவசாயம் செய்யமுடியாமல் வெளி ஊருக்குச் செல்வதன் மூலம் அவர் பிறந்த மண்ணுக்குப் பயனின்றி வாழும் வாழ்க்கை காட்டப்படுகிறது. அவர் பேச்சில் எப்பொழுதும் சினிமாவும், போதைதரும் கள்ளும், மீனும் இடம்பெறுவது அவரின் சிற்றின்ப வாழ்க்கையைக் காட்டுவதாகின்றன. கேரளாவில் பிழைக்க வந்தவர்களின் தெருவோர வாழ்க்கையையும், அதில் உள்ள குறைபாடுகளையும், பெண்களின் நடைமுறைகளையும் மிகச் சாதாரண நிகழ்வாக அவர் கூறுவதிலிருந்து அவர் நெறிகளைக் கடந்தவராக அறியப்படுகிறார்.

இங்ஙனம் ஊர் விட்டு ஊர் வந்து அனைத்து அடையாளங்களையும் இழந்துவிட்ட நிலையில் சாதியை மட்டும் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு வாழ்வது அவரது அர்த்தமற்ற வாழ்க்கையைக் காட்டுகிறது.

மாணிக்கம் கொண்டிருக்கும் சாதிவெறியினால் அவர் தமக்கும் பிறருக்கும் பயனில்லா வாழ்க்கையை வாழ்பவராகக் காட்டப்படுகிறார். தாய் மண்ணின் கலாச்சாரத்தையும், அடையாளங்களையும் கைவிடும் அவர், சாதி வெறியைக் கைவிடாது, கொலை வெறியோடு அலைவது அவரது குணம் மற்றும் அறிவுக்குறைபாட்டைக் காட்டுவதாயுள்ளது. இங்ஙனம் வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவற்றைக் கைவிடுவதும், வாழ்க்கைக்குப் பயனில்லாதவற்றைக் கைக்கொள்வதும் ஆகிய அவர் வாழ்க்கை பொருளற்றதாய்க் காட்டப்படுகிறது. அவர் கோபமும், வைராக்கியமும் தேவையற்றனவாகவே கருத இடமளிக்கிறது.

**3.4.3** கடைசி வரை – சிறுகதையின் சமூகப் பயன்

சிறுகதைகள் தாம் கொண்டுள்ள கருப்பொருள்களின் தன்மைக்கு ஏற்பச் சமூகப்பயன்களை விளைவிப்பனவாயுள்ளன. சமூகப் பயன்களை விளைவிக்கும் சிறுகதைகளே இலக்கியத்தன்மை பெறுகின்றன. சமூகத்தினருக்கு அறிவுறுத்தும் அளவிலான கருத்துகளைப் பெற்றிருக்கும் இச்சிறுகதையும் சமூகப் பயனுடையதாகிறது. அதைக் கீழ்வருமாறு காணலாம்.

- வெளியூர் சென்று வாழ்பவர்கள் நம் கலாச்சாரத்தையும், அடையாளங்களையும் விட்டுவிடாமல் வாழ வேண்டும். அன்றி, இன்பமோ துன்பமோ நம் மண்ணிலேயே வாழும் வாழ்க்கை உடையவர்களாக விளங்க வேண்டும் என்ற சமூகப்பாடம் படிப்பினையாகிறது.
- சினிமாப் பார்த்தே வாழ்க்கையைக் கழிப்பதும், சிற்றின்பத்தை நாடுவதும் பயனற்ற வாழ்க்கையாக உரைக்கப்படுகிறது.
- குறிக்கோளுடைய சமூக வாழ்க்கை வற்புறுத்தப்படுகிறது.
- சாதியின் காரணமாய் ஏற்படும் குரோத உணர்வு சமூகத்தின் நலனைப் பாதிக்கும் என்பது அறிவுறுத்தப்படுகிறது.
- நாடோடிகள் தங்களது பாரம்பரியத்தை, தங்களுடைய தோள் மூட்டைகளில் சுமந்து செல்வதுபோல் தெருவோரங்களில் வாழும் சமூகத்தினரும் அவரவருடைய கலாச்சாரத்தைப் பேண வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.
- சாதி வேற்றுமை சமூக வளர்ச்சிக்கும் தடையாகி அழிவுக்கு இடமளிப்பது காட்டப்படுகிறது. நெறியற்ற தெருவோர வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளும் மாணிக்கம், நெறியுடைய காதலை மறுப்பது மனிதர்களின் சிந்தனைக் குறைபாட்டைச் சுட்டுகிறது.
- விவசாயிகளும், இந்திய மக்களும் அகதிகளாக வெளியேறுவதற்கு, அரசின் பயனற்ற திட்டங்களும், இயற்கைப் பாதிப்புகளும் காரணங்களாகக் காட்டப்பட்டு, மக்கள் தங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அரசும் தகுந்த நடவடிக்கை எடுத்து

உதவ வேண்டும் என்பது சுட்டப்படுகிறது.

- கீழ்மட்டச் சமூகத்தினர் கல்வியறிவு பெறுவதன் மூலம் சிந்தித்துச் செயல்பட வழியேற்படும் என்பது அறிவதற்குரியதாகிறது.
- மனிதனின் கொள்கைப்பிடிப்பு ஆக்கத்திற்குக் காரணமாக வேண்டுமே ஒழிய, அழிவிற்குக் காரணமாகக் கூடாது என்பது வற்புறுத்தப்படுகிறது.

மேற்கண்ட சிறுகதையின் மூலம் மனிதர்களின் சமூக உறவுகள் சாதியின் அடிப்படையில் அமையாமல், மனித நேய அடிப்படையில் அமைந்து உறவுகள் வலுப்பட வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. மூர்க்கத்தனத்தையும், தேவையற்ற கொள்கைப் பிடிப்பையும் தவிர்த்து முன்னேற வேண்டும் என்பதும் அறியப்படுகிறது.

## 3.5 காலத்திற்கேற்பச் சிறுகதைகளில் கருப்பொருள்

இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மூன்று சிறுகதைகளும் வெவ்வேறு கால இடைவெளிகளில் படைக்கப்பட்ட கதைகளாகும். ஆகவே இவைகளின் கருப்பொருள்கள் ஒரே மாதிரியான அணுகுமுறையில் அமையாமல் காலத்திற்கேற்ப மாற்றங்களைப் பெற்றுள்ளன. படைப்பாளர்களின் சமூக அணுகுமுறை மாற்றங்களும் இதில் பங்கு வகிக்கின்றன. இம்மூன்று சிறுகதைகளையும் ஒப்பீடு செய்து அதன் மூலம் கருப்பொருள்களின் அமைப்பு மாற்றங்களை இப்பகுதியில் காணலாம்.

- கல்கியின் சிறுகதையில் தனிமனிதன் மற்றும் குறிப்பிட்ட சமூகம் சார்ந்த பிரச்சனை பேசப்படுகிறது. அகிலனின் சிறுகதையில் சமூகப் பிரச்சனையே வெளிப்பட்டுள்ளது. ஜெயமோகன் சிறுகதையில் தனிமனிதனைச் சார்ந்த சமூகச்சிக்கல் வெளிப்படுகிறது.

- கல்கியின் சிறுகதையில் சமூகப்பிரச்சனையை எதிர்க்க இயலாமல் தனிமனிதர்கள் வருந்துவதும், உயிரை விடுவதும் காட்டப்படுகிறது. அகிலனின் சிறுகதையில் சமூகப் பிரச்சனையைத் தட்டிக்கேட்கும் சிறுவனைக் காணமுடிகிறது. ஜெயமோகன் சிறுகதையில் தனிமனிதர் சமூகத்திற்குக் கட்டுப்படாமல் வாழும் வாழ்க்கையில் சமூகம் பாதிப்பிற்கு உள்ளாவது காட்டப்படுகிறது.
- கல்கியின் சிறுகதையில் சரியோ தவறோ வாழ்க்கை நெறிகளை மீறாமல் வாழவேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. அகிலனின் சிறுகதையில் வாழ்க்கை நெறிகளைத் தங்களுக்கும் சாதகமாக்கிக் கொண்டு வாழும் வாழ்க்கை காட்டப்படுகிறது. ஜெயமோகன் சிறுகதையில் நெறியற்ற வாழ்க்கை காட்டப்படுகிறது.
- கல்கியின் சிறுகதையில் பெண்களுக்கு இழைக்கப்படும் சமூகக் கொடுமையைக் காலம் மாற்றவேண்டும் என்பது உரைக்கப்படுகிறது. அகிலனின் சிறுகதையில் சமூகக்கொடுமையை உடனே தட்டிக் கேட்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஜெயமோகன் சிறுகதையில் சமூகக்கொடுமையை விளைவிக்கும் தனிமனிதன் பிரச்சனைக்கு உரியவன் ஆவது காட்டப்படுகிறது.
- இம்மூன்று சிறுகதைகளும் சமூகச்சிக்கல்களுக்கு இடமளிக்கக் கூடியவைகளாய் உள்ளன. கல்கியின் சிறுகதையில் சமூகநெறிகளைப் பேணுபவர்களும், சில தேவையற்ற சமூகநெறிகளைப் பேணுவதன் மூலம் பாதிப்பினை அடைபவர்களும் காட்டப்படுகின்றனர்.

எ.கா: கேதாரி தன் அம்மாவுக்குச் செய்யப்பட்ட அலங்கோலங்களைக் காணச் சகிக்காதவனாய் மனம் பாதிப்படைந்து இறக்க நேரிடுவது.

அகிலனின் சிறுகதையில் ராஜுவின் தாய் தந்தையர் சமூக நெறிகளைப் பேணாத காரணத்தால் கிராமத்தினர் துன்பம் அடைவதும், ராஜு மனவருத்தம் அடைவதும் காட்டப்படுகின்றன.

ஜெயமோகனின் சிறுகதையில் சமூகநெறியினைப் பேணாத மாணிக்கம் சமூகச் சிக்கலுக்கு உரியவனாகக் காட்டப்படுகிறான்.

மேற்கண்ட சிறுகதைகளின் மூலம் நெறியுடைய வாழ்க்கை வாழும் கேதாரி, ராஜு போன்ற தனிமனிதர்களால், அவர்கள் பாதிக்கப்பட்டாலும், அவர்கள் வாழும் சமூகம் காக்கப்படுவது காட்டப்படுகிறது. நெறியில்லாத மாணிக்கம் போன்றவர்களால் அவர்களுக்கும் பயனின்றி, சமூகமும் பாதிக்கப்படுவது காட்டப்பட்டு, காலமாற்றத்தை உணர்த்துகிறது.

### 3.5.1 சிறுகதைகளின் மொழிப்பயன்

ஒரு படைப்பின் சிறப்பிற்கு அதன் மொழி ஒரு முக்கியக் காரணமாகிறது. மொழியின் வன்மையே மக்கள் அதன் கருத்தைப் பெறுவதற்கு உதவுகிறது. இவ்வகையில் இம்மூன்று சிறுகதைகளிலும் மொழி எங்ஙனம் சிறப்பிடம் பெறுகிறது என்பதைக் காண்போம்.

- ‘கேதாரியின் தாயார்’ சிறுகதையில் பிராமண சமூகத்திற்குரிய மொழி பயன்படுத்தப்பட்டு, அச்சமூகத்தினரின் பழக்க வழக்கங்கள் அடையாளம் காட்டப்படுகின்றன. இக்கதையில் இடம்பெற்றுள்ள கதைமாந்தர்களின் குணநலன்களையும் அறிந்துகொள்ள முடிகிறது. அச்சமூகத்திற்குரிய சிக்கல் அதன் மொழியின்மூலம் வெளிப்படும்போது அச்சமூகக் குறைபாடுகளையும் உணர முடிகிறது. ‘புருஷனை இழந்தால் தலையை மொட்டையடிக்கும் வழக்கத்தை ஒழிக்க ஒரு பெரிய கிளர்ச்சியை நடத்தப் போகிறேன். இந்தத் தனி கௌரவம் நம் சாதிக்கு மட்டும் வேண்டாம்’ என்று கேதாரி கூறும் சொற்களால் கதையின் கருப்பொருள் சிறப்பாக வெளிப்படுவதோடு, கேதாரியின் பாதிப்பினைப் படிப்பவர்களும் அடைய, மொழி துணை நிற்கிறது.
- ‘புயல்’ சிறுகதை காட்டும் உயர்மட்டம் மற்றும் கீழ்மட்டச் சமூக நிலைகள் மொழியின் மூலம் அறியப்படுகின்றன. உயர் மட்டச் சமூகத்தினரின் எண்ணங்கள், செயல்பாடுகள் கீழ்த்தரமானவையாக இருப்பதை மொழி அடையாளம் காட்டுகிறது. கீழ்மட்டத்தினரின் அவல வாழ்க்கையை அவர்களின் சொற்கள் வெளிப்படுத்துவனவாயுள்ளன. ‘ரொம்ப நேரம் பேரம் பேசி இந்த மூன்று போர்வையை ஐந்து ரூபாய்க்கு வாங்கினேன்’ என்பதைக் கேட்டவுடன், ஈரம் நிறைந்த இளம் நெஞ்சில் அப்பொழுதுதான் பயங்கரமான கோரப்புயல் ஆரம்பமாகிறது. ‘அந்தப் புயலுக்கு முன்னே சில தினங்களுக்குமுன் வீசிய புயல் அற்பமானது’ என்பதிலிருந்து ராஜுவின் எதிர்கால நடவடிக்கையை மொழி, குறிப்பால் உணர்த்துவதைக் காணமுடிகிறது.
- ‘கடைசிவரை’ சிறுகதையின் மூலம் ஊர்விட்டு ஊர் சென்று வாழும் மக்களின் கலாச்சார வாழ்க்கை மாற்றங்கள் மொழியின் மூலம் வெளிப்படுகின்றன. வெளியூரிலிருக்கும் கலாச்சார வாழ்க்கை முறைகளையும் அறிய மொழி துணை புரிகிறது. இதன் மூலம் மொழியின் வட்டார வழக்குகளை அறிய முடிகிறது. மாணிக்கத்தின் உரையாடல் மூலம் பல்வேறு இடங்களைப் பற்றிய செய்திகளை அறிய மொழி உதவுகிறது. மாணிக்கம் ஊர் ஊராகச் சுற்றிப் பலவகைப்பட்ட அனுபவங்களையும், வாழ்க்கை மாற்றங்களையும் அறிந்திருந்த போதிலும் கடைசிவரையிலும் அவனுடைய விடாப்பிடியான எண்ணமாகச் சாதி வெளிப்படுகிறது. இது அதிர்ச்சியூட்டும் செய்தியாக, சமூகச் சிக்கலாக மொழியின் மூலமே வெளிப்படுகிறது.

படைப்பாளர்கள் தங்கள் கருத்துகளை, செய்திகளைத் தெரிவிப்பதற்கு மொழியின் உதவியையே நாடுகின்றனர். அவர்கள் மொழியைச் சரியாகப் பயன்படுத்துவதன் வாயிலாகவே விரும்பிய பலனைச் சமூகம் அடைகிறது. மேற்கண்ட சிறுகதைகள் படிப்பவர்களின் மனத்தில் பாதிப்பினை ஏற்படுத்துவதன் மூலம் மொழியின் ஆளுமைக்கு இடமளிப்பனவாயுள்ளன.

### 3.5.2 சிறுகதைகளின் இலக்கியப் பயன்

பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் மனித குலத்தின் மேம்பாடு, எதிர்காலம் போன்றவற்றைப் பற்றிய ஒரு நம்பிக்கையை வளர்க்கும் அளவில் அமைந்து இலக்கியப் பயன்மிக்கனவாகின்றன. இச்சிறுகதைகள் சமூக உணர்வுகளுக்கு இடமளித்து, தம் இலக்கியத்தரத்தைக் கனமாக்கிக் கொண்டுள்ளன. இச்சிறுகதைகள் சமூகத்தின் ஊக்கத்திற்கும், ஆக்கத்திற்கும் இடமளித்துள்ளன. இவை சிந்தனையைத் தூண்டி, சமூகக் குறைபாடுகளைக் களைவதற்கு வழியேற்படுத்தித் தருவதால் இலக்கிய உயர்வினை எட்டியுள்ளன. சமூகத்தின் நன்மை, தீமைகளை எடுத்துக் கூறும் அளவில் இச்சிறுகதைகள் இலக்கியப் பயன் நிரம்பியனவாயுள்ளன. இலக்கியத்தின் ஆதாரமாய் விளங்கும் வாழ்க்கை அனுபவங்களை இச்சிறுகதைகள் எடுத்தியம்பி இலக்கியப் பயனைத் தம்முடையதாக்கிக் கொண்டுள்ளன.

- இலக்கிய நயம்

பாடப்பகுதிக்குரிய சிறுகதைகள் எதார்த்தம், தெளிவான நோக்கு, எதிர்காலச் சிந்தனை, சிறுமைகளைக் கண்டு சீறி எழும் சினம், உன்னத நோக்கு, உயர்வான கதைமாந்தர்கள், கதையில் ஊடுருவி நிற்கும் நன்மை, தீமைகள், ஆவேசம், புதிய உத்திகள், மொழிநடை, இலக்கியநயம் இவையனைத்தையும் ஒருங்கே பெற்று, இலக்கியத்தன்மை கொண்டுள்ளன.

## 3.6 தொகுப்புரை

நண்பர்களே! மேற்கண்ட பாடத்தின் மூலம் மூன்று சிறுகதைகளின் கருப்பொருள், கதைப்பொருள், வாழ்க்கைப் பயன், சமூகப்பயன் ஆகியவற்றை அறிந்திருப்பீர்கள். இந்தப் பாடத்தில் நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

கல்கியின் 'கேதாரியின் தாயார்', அகிலனின் 'புயல்', ஜெயமோகனின் 'கடைசிவரை' ஆகிய சிறுகதைகளின் கதை, கருப்பொருள் மற்றும் அதன் வாழ்க்கை, சமூகப் பயன்களையும் படிப்பினையாக அறிந்துகொள்ள முடிந்தது. இறுதியாக இம்மூன்று கதைகளின் மொழிப்பயனும், இலக்கியப்பயனும் இலக்கியத் தரத்திற்குரியதாக இச்சிறுகதைகளை உயர்த்தியுள்ளதையும் காணமுடிகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

பாடம் - 4

# P20334 சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிறுகதைப்படைப்பு, வாழ்க்கையில் உள்ள சிக்கல்களையும் எடுத்துக் கூறுகிறது. தனி மனித வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள், சமூகத்தில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றை இந்தப் பாடம் வெளிப்படுத்துகிறது. கூடவே அந்தச் சிக்கல்கள் தீர்வதற்குரிய வழிமுறைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ சிறுகதைகள் தெரிவிக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டுகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சிறுகதைகளின் அமைப்பையும் நோக்கத்தையும் அறிந்து கொள்ளலாம்.
- தனி மனிதச் சிக்கல்களையும் சமூகச் சிக்கல்களையும் சிறுகதைகள் வெளிப்படுத்துகின்றன என்பதை அறியலாம்.
- சிறுகதைகள் சிக்கல்களை முன்னிறுத்துவதோடு, அவற்றுக்கான தீர்வுகளையும் தருகின்றன என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.
- இவ்வாறு தனிமனித முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தம் ஆகியவற்றுக்கு சிறுகதைகள் பங்களிக்கின்றன என்பதைத் தெளியலாம்.

## பாட அமைப்பு

4.0 பாட முன்னுரை

4.1 சிறுகதைகள் காட்டும் சமூகச் சிக்கல்கள்

4.2 சிறுகதைகளில் தனி மனிதச் சிக்கல்கள்

4.3 சிறுகதைகளில் பெண்களின் சிக்கல்கள்

4.4 சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்

தன் மதிப்பீடு : வினாக்கள் - I

4.5 சிறுகதைகளில் சமூகச் சீர்த்திருத்தங்கள்

4.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் - II

## 4.0 பாட முன்னுரை

சிறுகதைகள் மனிதனின் சமகால வாழ்வைப் பிரதிபலிக்கின்றன. சமூக நோக்கங்களை உள்ளடக்கியுள்ளன. சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றன. சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்துகின்றன. சமூகத்தை நெறிப்படுத்த உதவுகின்றன. சிறுகதைகளின் இத்தகைய வெளிப்பாடுகளே அவை சமூகத்தின் மீது கொண்டிருக்கும் அக்கறையைக் காட்டுவதாய் உள்ளன. அவ்வளவில் சிறுகதைகள் சமூகத்தை வெளிப்படுத்தும் பாங்கு இப்பாடப் பகுதியில் முக்கியத்துவம் பெறுகிறது.

சிறுகதைகள் சமூகத்தை வெளிப்படுத்துவதன் மூலம் சமூகங்களின் சிக்கல்கள் அறியப்படுகின்றன. சமூகச் சிக்கல்கள் தனிமனிதனை, குடும்பத்தை, சமூகத்தை, நாட்டை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை உணரலாம். இதன் மூலம் குறிப்பிட்ட சமூகங்களில் மேலோங்கியிருக்கும் சமூகச் சிக்கல்கள் மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றன. இவை சமூகக் குறைபாடுகளைக் களைவதற்கும் ஏதுவாகின்றன. சுருங்கக் கூறின் சிறுகதைகள் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தி, சமூக மறுமலர்ச்சிக்கு உதவுவனவாய் உள்ளன.

இனி, சிறுகதைகள் காட்டும் சமூகச் சிக்கல்களைக் காண்போம்.

## 4.1 சிறுகதைகள் காட்டும் சமூகச் சிக்கல்கள்

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தி, பல சிறுகதைப் படைப்பாளர்கள் கதைகளைப் புனைந்துள்ளனர். இத்தகைய கதைகள் மக்கள் பொது அறிவு பெற்று, பிணக்குகள் நீங்கி வாழத் துணைபுரிவதாய் உள்ளன. படைப்பாளன் சமூகத்தையும், நாட்டையும் ஊடுருவியே சிறுகதைகளைப் படைப்பதால், அவை மக்களுக்காக, மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வகையில் உருப்பெற்றுள்ளதை அறியமுடிகிறது. மேலும் சமூகச் சிறுகதைகள் உண்மையை அலசும் துணிவையும், மாற்றம் காண வேண்டிய விழைவையும், படிப்போரிடையே ஏற்படுத்துகின்றன.

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதைகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் சமூகத்தில் நிறைய மாறுதல்களைக் கொண்டுவந்துள்ளதைக் காணமுடிகின்றது. இவ்வகையில் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் படைப்பாளர்களின் சில படைப்புகளைப் பற்றி இங்குக் காண்போம்.

- எடுத்துக்காட்டுகள்

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதைகளாகக் கீழ்க்காணும் சிறுகதைகள் குறிப்பிடத்தக்கனவாகின்றன.

அகிலனின் ‘பூச்சாண்டி’
சூடாமணியின் ‘சுமைகள்’ - தனிமனிதச் சிக்கல்கள்

வ.வே.சு.ஐயரின் ‘குளத்தங்கரை அரசமரம்’
புதுமைப்பித்தனின் ‘ஆண்மை’ - குழந்தை மணம் – சிக்கல்கள்

சத்திய மூர்த்தியின் ‘பலிபீடம்’
ராமையாவின் ‘மலரும் மணமும்’ - விதவைக் கொடுமை – சிக்கல்கள்

ஜெயகாந்தனின் ‘பேதைப்பருவம்’
சங்குசுப்பிரமணியத்தின்
‘வேதாளம் சொன்ன கதை’ - பொருந்தா மணம் – சிக்கல்கள்

அழகிரிசாமியின் ‘அக்னிபிரவேசம்’
அண்ணாதுரையின் ‘பலாபலன்’ - மூடநம்பிக்கை – சிக்கல்கள்

ஜெகசிற்பியனின் ‘பிறவிக்கடல்தாண்டி’
சோமுவின் ‘ஆறுமாத விடுதலை’ - வறுமைக்கொடுமை – சிக்கல்கள்

செல்லப்பாவின் ‘மஞ்சள்காணி’ - வரதட்சணை – சிக்கல்

சிற்பியின் ‘கோயில்’ - சாதிக்கொடுமை – சிக்கல்

ராஜாஜியின் ‘முகுந்தன்’ - தீண்டாமை – சிக்கல்

- சமூகச் சிறுகதைகளின் பயன்

சமூகச் சிறுகதைகள் படைப்பாளர்களின் சமூக அக்கறையையும், உணர்வையும் காட்டுவதாயுள்ளன. இதன் மூலம் படைப்பாளர்களின் அணுகுமுறையில் உள்ள நேர்மையும், மனிதநேயமும் கற்பவர்களுக்குப் பாடமாகிறது. படைப்பாளர்கள் சமூகத்தைக் குலைத்துக் கொண்டிருக்கும் பிரச்சனைகளை வெளிப்படுத்தி, அவற்றிற்குத் தீர்வு காணவும் உதவுகின்றனர். பட்டிதொட்டிகளில் வாழும் படித்தவர்களும் சமூக, நாட்டு நடப்புகளை அறிய உதவுகின்றனர். இங்ஙனம் சமூகச் சிறுகதைகள் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தி, அவற்றை மக்கள் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்ளச் செய்கின்றன; அறிவுபூர்வமாகச் சிந்திக்கவும், செயல்படவும் இடமளித்துப் பயன்கள் விளைவிக்கின்றன.

இனிவரும் பகுதியில் சிறுகதை காட்டும் தனிமனிதச் சிக்கல்களைக் காண்போம்.

## 4.2 சிறுகதைகளில் தனிமனிதச் சிக்கல்கள்

சிறுகதைகள் காட்டும் சமூகச் சிக்கல்களுள் தனிமனிதச் சிக்கல்களே முதலிடம் பெறுகின்றன. தனிமனிதன் அனுபவிக்கும் சிக்கல்கள் குடும்பம், சமூகம், நாடு தழுவிய அளவில் பரவிச்செல்வதால் தனிமனிதச் சிக்கல்களுக்குத் தீர்வு காணுதல் என்பது அவசியமாகிறது. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் சிக்கலுக்கிடமில்லாமல் செம்மையடையும் பொழுதுதான் சமூக வாழ்வு நலம்பெற இயலும்.

சிறுகதைகள் தனிமனிதச் சிக்கல்களை வெளிப்படுத்தும் அளவில் மனித மனங்களை உளவியல் நோக்கில் ஆராய இடமளிக்கின்றன. தனிமனிதப் போராட்டங்களை அறிவதன் மூலம் தனிமனித உணர்வுகளைப் புரிந்து செயல்பட முடிகிறது. சமூகக் கட்டுப்பாடுகளாலும், சூழ்நிலைகளாலும் மனிதனுள் மறைந்து கிடக்கும் உணர்ச்சிகளை வெளிக்கொணர இச்சிறுகதைகள் துணை நிற்கின்றன. இக்கதைமாந்தர்கள் நம்மிடையே, நம் குடும்பத்தில், சமூகத்தில் என்றும் பரவியிருக்கின்றனர். இத்தகையவர்களை இனம்கண்டு அவர்களது பிரச்சனையைத் தீர்க்கும் பணியில் இச்சிறுகதைகள் பெரும் பங்காற்றுகின்றன.

இவ்வகையில் தனிமனிதச் சிக்கல்களுக்குரிய கதைகளாக மூன்று கதைகள் இடம்பெற்றுள்ளன. இக்கதைகள் அனைத்தும் அதனதன் கதைச் சுருக்கம், சிக்கல்கள், தீர்வுகள் என்ற நிலைகளில் விளக்கப் பெறுகின்றன.

### 4.2.1 கந்தர்வனின் 'மைதானத்து மரங்கள்'

தனிமனிதச் சிக்கல்களை வெளிப்படுத்தும் முதலாவது சிறுகதையாக இது இடம்பெற்றுள்ளது. இதன் கதைச்சுருக்கத்தைக் காணலாம்.

- கதைச்சுருக்கம்

இக்கதையில் 'முத்து' என்ற கதைமாந்தனின் மன உணர்வுகள் காட்டப்படுகின்றன. முதலில் முத்துவிற்கும், அந்த மைதானத்திற்கும் இடையேயுள்ள நெருக்கம் காட்டப்படுகிறது. மைதானத்திற்கு அருகில் அவன் வீடு இருப்பதில் அவனுக்குப் பெருமை அதிகம். இளம் வயதிலிருந்து அந்த மைதானம் அவனுக்கு ஆதரவு அளிக்கிறது. அந்த மைதானத்தின் மகிமைக்குக் காரணம் கிளைகளை விரித்துப் பரந்துநிற்கும் அந்த மரங்கள்தாம். மைதானத்தின் ஓரங்களைப் போர்த்து நிற்கும் அந்தப் புளிய மரங்கள் 'விருட்சங்கள்' என்று கூறுமளவிற்குப் பெரியதாய் இருந்தன. ஊர் நடுவேயிருந்த அந்த மைதானம் உயர்நிலைப் பள்ளிக்குச் சொந்தமானது. மாலையில் விளையாட்டுப் பீரிடில் பையன்கள் அந்த மைதானத்தில் விளையாடிவிட்டு வீட்டுக்கு ஓடுவார்கள். ஆனால் முத்து மட்டும் ஆற அமர ஒவ்வொரு மரமாய்த் தொட்டுப் பார்த்துவிட்டு, மைதானத்தை ஒரு முறை மேற்பார்வை பார்த்துவிட்டுத்தான் வீட்டிற்குப் போவான்.

முத்து சிறுபிள்ளையாயிருந்தபோது மைதானத்து மரத்தடியில் அதிகமாய் அமர்ந்ததில்லை. மைதான வெளிதான் அவனை மிகவும் கவர்ந்தது. இவனால் அந்த வயதில் ஓரிடத்தில் உட்கார முடியாது. ஆடி ஓடி அயர்ச்சி ஏற்பட்ட பிறகுதான் மைதானத்தை விட்டே வெளியேறுவான். அவன் எட்டாம் வகுப்புப் படிக்கும்போது பீஸ் கட்டாத நிலையில் வகுப்பை விட்டு வெளியேற்றப்பட்டான். அப்பொழுதுதான் அவன் முதன் முதலாகத் தன் வறுமையை நொந்தபடி மைதானத்து மரத்தடியில் அமர்ந்து மைதானத்தை வெறித்து நோக்கினான். பீஸ் கட்டாததால் வெளியேற்றப்பட்ட அவமானம் அவன் உடலை நடுங்கச் செய்தது. அதனால் அப்படியே அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான். நெடுநேரம் அப்படியே அமர்ந்திருந்தவனை மரத்தின் சிலுசிலுப்பும், குளுமையும் ஆக்கிரமித்து, அவன் மனபாரத்தை லேசாய்க் கரைத்தது. அதன்பின் அவன் மைதான வெளியில் குறைவாகவே விளையாடினான். மரத்தினடியில் அதிக நேரம் அமர ஆரம்பித்தான்.

வாழ்க்கையில் அவனுக்குத் துன்பம் ஏற்பட்ட பொழுதெல்லாம் அந்த மரங்கள் அவனுக்கு மருந்தாயின. எந்தத் தேவைக்காகவும், எதற்காகவும் அவன் ஊருக்குள் சென்றதேயில்லை. மைதானத்து மரங்களிடம் மட்டுமே அவன் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டான். 'அனுபவ பாத்தியதைன்னு வந்தா பள்ளிக்கூடப் புள்ளங்களைவிட முத்து தான் இதை ரொம்ப அனுபவித்து விட்டான்' என்று ஊரார் சொல்லுமளவிற்கு மரப்பந்தலின் கீழ் இவன் தன் துக்கங்களையும், துயரங்களையும் மறைத்துக் கொண்டான்.

'ஆம்பிள்ளைனா நாலு பேருகிட்ட பேசிப்பழகணும், அதைவிட்டுச் சண்டைன்னா சாமியார் மாதிரி மரத்தடிக்கு ஓடறது, இருட்டினதும் சம்சாரின்னு ஞாபகத்துக்கு வந்து வீட்டுக்கு வர்றது. இப்படி இருப்பதற்குப் பதிலா அந்த மரத்துங்கள்ள தூக்குப்போட்டுத் தொங்கலாம்' என்ற மனைவியின் உக்கிரமான சண்டைக்குப் பிறகு, அவளை நாலுசாத்துச் சாத்திவிட்டு மீண்டும் அவன் மரத்தடியையே அடைக்கலமாக நாடி ஓடுவான். இங்ஙனம் அவன் மனத்திற்கு இதமூட்டிய மைதானத்து மரங்களை ஒரு நாள் வெட்டப்பட்ட நிலையில் பார்த்து அதிர்ச்சி அடைகிறான் அவன். சினிமாக் கொட்டகை கட்டும் பொருட்டு மைதானத்து மரங்கள் வெட்டப்பட்டதை அறிந்து கலங்குகிறான். மரங்கள் வெட்டப்பட்டதை அவன் பகிரங்கக் கொலையாகக் கருதிக் கலங்குகிறான். இனித் தன் கவலைகளை வாங்கிக்கொள்ள யார் இருக்கிறார்கள் என்று எண்ணும்போதே அவன் கண்ணிலிருந்து கண்ணீர் மழை பெருக்கெடுத்தது. எவ்வளவு துக்கங்களை அடைந்தபோதும்கூட அவன் மரத்தடியில் வந்து அமர்ந்திருப்பானே ஒழிய, அழுததேயில்லை. முதன் முறையாக அவன் மரக்கொலைகளைப் பார்த்துப் பொருமிப் பொருமி அழுதான். அவனைப் பார்த்து உடன் வந்த அவன் குழந்தையும் அழுதது. இருட்டிய பிறகும் வெகுநேரம் அங்கேயே இருந்தான். பின் வீட்டிற்குச் சென்றான். மனைவி, 'இனி மேலாச்சும் ஊருக்குள்ளே போய் நம்மளைப்போல் ஒவ்வொருவரும் எப்படி கஷ்டப்படறாங்கன்னு பாருங்க' என்றாள்.

மறுநாள் இவன் பொழுது சாய்ந்ததும், தன்னை ஒத்த ஜனங்களைத்தேடி ஊருக்குள் சென்றான். அவன் மைதானத்தைத் தாண்டும் போது மரங்கள் உயிரற்றுக் கிடப்பதைப் பார்த்துக்கொண்டே அவன் உயிரோடு ஊருக்குள் நடந்து சென்றான் என்பதோடு கதை நிறைவு பெறுகிறது.

- கதை காட்டும் சிக்கல்கள்

இச்சிறுகதையின் மூலம் முத்துவின் உளவியல் சிக்கலை அறிய முடிகிறது. அவன் இளமையிலிருந்தே மைதானத்தையும், மரங்களையும் நேசிக்கத் தொடங்கியதன் விளைவாக அவற்றின் நினைவு பசுமரத்தாணியாக அவன் மனத்தில் பதிந்துவிடுகின்றது. அதன் காரணமாகவே அவன் தன் இன்பத்தையும், துன்பத்தையும் அந்த மைதானத்து மரங்களுடனேயே இணைத்துக் கொள்கிறான். மனிதர்களிடம் மற்றும் மனைவியிடம் அவமானப்பட நேர்ந்த பொழுதெல்லாம், அமைதி தரும் மரங்களை நேசித்தான். மரங்கள் அவனுடைய மனத்திற்கு இதமூட்டுவதாக எண்ணுகிறான். துன்பத்தைப் பிற மனிதர்களிடம் பகிர்ந்து கொள்ளாத அவனுக்கு, அவனைப்போலவே ஊமையாய் இருக்கும் மரங்கள் ஆறுதல் தருவன ஆயின.

மரங்கள் உயிருடன் இருப்பதாகக் கருதுவதாலேயே அவை தன் உணர்வுகளுக்கு ஆறுதல் அளிப்பதாக எண்ணுகிறான். அவை வெட்டப்பட்ட போதும் அழுகிறான். இங்ஙனம் மரங்களை மட்டுமே தன் மனத்திற்கு இதமளிக்கவல்ல துணையாக அவன் கருதும் நிலையிலேயே அவன் குடும்பத்தையும் பாதிக்கும் அளவில் அது சமூகச் சிக்கலுக்கும் இடமளிப்பதைப் படைப்பாளர் சுட்டிக்காட்டுகிறார்.

- தீர்வுகள்

இக்கதை காட்டும் சிக்கலுக்குப் படைப்பாளரால் தீர்வு வழங்கப்பட்டுள்ளது. குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளும் முத்து, குடும்ப உறவுகளுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதில்லை. இதுவே குடும்ப அமைப்பில் குழப்பம் ஏற்படுவதற்குக் காரணமாகக் காட்டப்படுகிறது. அதே சமயம் அவன் சமூக உறவிற்கும் இடம் கொடாத நிலையில் அவன் மேலும் மனச்சிக்கலுக்கு உரியவனாகிறான். தம் மன உணர்வுகளைப் பகிர்ந்து

கொள்ளாத நிலையிலேயே முத்து போன்றவர்கள் தனிமை விரும்பிகளாக மாறுகின்றனர். குடும்ப உறவு, சமூக உறவு ஆகியவற்றை நன்முறையில் பேணுவதாலும், சிக்கல்களை எதிர்கொண்டு வாழக் கற்றுக் கொள்ளுவதாலும் இச்சிக்கல்களைத் தீர்க்கமுடியும் என்பது படைப்பாளரின் தீர்வாக அமைகிறது. இதன் காரணமாகவே படைப்பாளர் கதையின் இறுதியில் மரங்களை உயிரற்றதாக்கி, உயிருடன் இருக்கும் மனிதர்களிடம் உணர்வுகளைப் பரிமாறிக்கொள்ள, முத்து ஊருக்குள் முதன்முறையாகச் செல்வதாகக் காட்டுகிறார். இதுவே கதையில் இடம்பெற்றுள்ள தனிமனிதச் சிக்கலுக்கான தீர்வாகவும் அமைகிறது.

**4.2.2** புதுமைப்பித்தனின் 'பால்வண்ணம் பிள்ளை'

தனிமனிதச் சிக்கல்களை வெளிப்படுத்தும் இரண்டாவது சிறுகதையாக இது இடம்பெற்றுள்ளது. இதன் கதைச்சுருக்கத்தைக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தா. 'முயலுக்கு மூன்றே கால்' என்று சொல்லும் சித்த உறுதி. விடாக் குணம் அவருக்கு. இம்மாதிரியான குணங்கள் படைவீரனிடமும், சத்தியாகிரகிகளிடமும் இருந்தால் அது பெருங்குணமாகக் கருதப்படும். அந்தக்குணம் இவரிடம் தஞ்சம் புகுந்ததால் அது அசட்டுத்தனமான பிடிவாதம் ஆகியது. பால்வண்ணம் பிள்ளை ஆபீஸில் பசு, வீட்டிலோ ஹிட்லர். அன்று வீட்டிற்கு வரும்போது ஒரே கோபம் அவருக்கு. மெக்ஸிகோ தென் அமெரிக்காவில் தான் இருக்கவேண்டும் என்ற வேகம் வேறு. அவருக்கு நான்கு குழந்தைகள். அவர் மனைவியோ உழைப்பிலும், பிரசவத்திலும் சோர்ந்தவள். அவளின் கைக்குழந்தைக்கு முந்திய குழந்தை சவலையாக இருந்தது. இந்த இரண்டு குழந்தைகளையும் போஷிக்க, பால் வாங்கிக் கட்டுபடியாகாத காரணத்தால் ஒரு மாடு வாங்கவேண்டும் என்று விரும்பினாள். தெய்வத்தின் அருள் கிடைத்த பக்தன் அதை உடனடியாகச் சோதிக்க விரும்புவதைப்போல, கணவனைப் பார்த்தவுடன் இதைச்சொல்ல அவள் உதடுகள் துடித்தன.

ஆனால் அவரோ வீட்டிற்குள் நுழைந்தவுடன் மெக்ஸிகோ எங்கேயிருக்கிறது என்பதை அறியும் பொருட்டுப் பூலோகப் படத்தைத் தேடினார். ஒரு வழியாக அவள் இதைக்கூறியபொழுது, 'மாடு கீடு வாங்க முடியாது, எம் புள்ளைய நீத்தண்ணியைக் குடித்து வளரும்' என்றார். பின் மெக்ஸிகோ வட அமெரிக்காவில் இருந்தால் கோபம் வராதா? அவருக்கு?

பால் பிரச்சனை அத்தோடு நின்றுவிடவில்லை. மனைவியின் கையிலிருந்த கெட்டிக்காப்பு, பசுவும் கன்றுமாக மாறியது. இரண்டு நாள் கழித்தே பால்வண்ணம் பிள்ளை அதைப் பார்த்தார். மனைவியை அழைத்தார். அவள் உள்ளுக்குள் பயத்துடனும், வெளியில் சிரிப்புடனும் பேசினாள். மாடு எப்பொழுது, யார் வாங்கியது என்று விசாரித்தார். அவளும் பதில் கூறினாள். அன்று புதுப்பாலில் தயாரித்த காபியை அவர் பருகவில்லை. அதிலிருந்து அவர் காபியும் மோரும் பருகவில்லை. அவர் மனைவிக்கு அதில் மிகுந்த வருத்தம். எனினும் வம்ச விருத்தி எனும் இயற்கை விதி அவளை வென்றதால் அவரை அவள் கண்டு கொள்ளவில்லை.

இப்படியே பதினைந்து நாட்கள் சென்றன. அன்றிரவு பிள்ளையும், சுப்புக்கோனாரும் வீட்டினுள் நுழைந்தனர். பிள்ளை மாட்டையும், கன்றையும் 25 ரூபாய்க்குப் பிடித்துப்போகச் சொன்னார். கோனார், சாமி '60 ரூபாய் பெறுமே' என்றார். மனைவியோ, மாடு '70 ரூபாய் ஆயிற்றே' என்றாள். அதோடு குழந்தைகளுக்குப் பாலும் ஆயிற்று. மேல் வரும்படியும் வருகிறது என்றாள். பிள்ளை, உனக்காக வேண்டுமானால் 'முப்பது ரூபாய்' இப்பொழுது மாட்டைப் பிடித்துச் செல் என்று கயிற்றை அவிழ்த்தார். அவன் காலையில் பிடித்துச் செல்கிறேன் என்பதைக் காதில் வாங்காதவராய் மாட்டை அவிழ்த்துக் கொடுத்தார். மனைவியைப் பார்த்து, 'எம் புள்ளங்க நீத்தண்ணி குடித்து வளரும்' என்றார். மூத்த பையன், 'அம்மா என் கன்னுக்குட்டி' என்றழுதபொழுது 'சும்மா கெட சவமே' என்றார் பால்வண்ணம் பிள்ளை. இத்துடன் கதை முடிகிறது.

- கதை காட்டும் சிக்கல்கள்

பால்வண்ணம் பிள்ளையின் பிடிவாதமே தனிமனிதச் சிக்கலுக்கும், குடும்பச் சிக்கலுக்கும் காரணமாகின்றது. தான் சொன்னதுதான் நடக்க வேண்டும், தான் விரும்பியபடிதான் மற்றவர்கள் இருக்க வேண்டும் என்று அவர் எண்ணும் அளவில் ஆணாதிக்கப் போக்கு வெளிப்பட்டு, சிக்கல் உருவாகிறது. மனைவி, மற்றும் குழந்தைகளின் தேவைகளைப் புறக்கணிக்கும் அளவிற்குத் தனிமனிதனின் பிடிவாதம் தேவையற்றதாக உணரப்படுகிறது. குறைந்த விலைக்கு அவசர அவசரமாக மாட்டை விற்பது என்பதன் மூலம் தனிமனிதனின் குறுகிய மனப்போக்கே சிக்கலுக்குக் காரணம் என்பதை அறியலாம். நாம் மற்றவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் செயல்படுவதும் சிக்கலுக்குக் காரணமாய்க் காட்டப்படுகிறது. படைப்பாளர் இக்கதையினை நகைச்சுவைக்கு இடமளிக்கும் வகையில் படைத்திருப்பதால் மேலோட்டமாகப் பார்க்கும்பொழுது இது தனிமனிதச் சிக்கலுக்கு இடம் கொடாததாயும், உள்ளாழ்ந்து பார்க்கும்பொழுது உளச்சிக்கலைத் தெளிவுபடுத்துவதாயும் உள்ளது.

- தீர்வுகள்

இக்கதைக்குப் படைப்பாளரால் நேரடியான தீர்வு ஏதும் வழங்கப்படவில்லை. இருப்பினும் நகைச்சுவைபடக் கூறுவதன் வாயிலாகச் சிக்கலையும் வெளிப்படுத்தி, தீர்வுகளையும் உரைக்கிறார். 'இத்தகைய பிடிவாதம், படைவீரனுக்கும், சத்தியாக்கிரகிகளுக்குமே பொருந்தும்' என்பதன் மூலம் இக்குணம் ஒரு குடும்பத்தலைவருக்குத் தேவையில்லை என்பது மறைமுகத் தீர்வாகிறது. மேலும் அவர் ஆபீஸில் பசு, வீட்டில் ஹிட்லர் என்பதன் மூலம் பிள்ளையின் உளச்சிக்கல் வெளிப்படுத்தப்படுகிறது. படைப்பாளரால், குடும்பச்சிக்கல்களுக்கு இடமளிக்கும் பிள்ளையின் அசட்டுப் பிடிவாதம் தவிர்க்கப்பட வேண்டும் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இதுவே தீர்வாகவும் அமைகிறது. இச்சிறுகதை சிரிக்கவும், சிந்திக்கவும் இடமளிக்கிறது.

**4.2.3** ஹரணியின் 'இருளில் இரு பறவைகள்'

இது தனிமனிதச் சிக்கல்களை வெளிப்படுத்தும் மூன்றாவது சிறுகதையாக அமைந்துள்ளது. இதன் கதைச்சுருக்கத்தைக் காண்போம்.

- கதைச்சுருக்கம்

ஒரு தந்தை மகனிடம் தோழமை உணர்வோடு சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதை இச்சிறுகதை விவரிக்கிறது. தந்தை தான்பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றையும் மகனிடம் பகிர்ந்து கொள்கிறார். அவர் வாழ்க்கையில் பலபேர் இழுக்கக்கூடிய தேரை, தாம் ஒருவரே கஷ்டப்பட்டு இழுத்துக் கரை சேர்த்ததாகக் கூறுகிறார். 'மூன்று பெண்களை நீ வைத்திருக்கிறாய். நீ என் காலில் தான் வந்து விழ வேண்டும்' என்று அவர் தமக்கை பேசியதைச் சுட்டிக்காட்டுகிறார். அதற்கு அவர் பிச்சைக்காரன் காலில் விழுந்தாலும் உன் காலில் விழமாட்டேன் என்று சபதமிட்டதைக் கூறுகிறார். அதன்படி இரண்டு பெண்களைக் கரைசேர்த்து விட்டதாகவும், மூன்றாவது அக்காவுக்கும் அடுத்த மாதம் திருமணம் நடத்தப் போவதாகவும் சொல்கிறார் 'அப்புறம் பிரச்சனையில்லை! எனினும் நீயும், உன் தம்பியும் ஆண்பிள்ளைகளாக இருந்தாலும் உங்களுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் தான் கவலையாக இருக்கிறது' என்கிறார்.

அவரது இரண்டாவது மகனின் கெட்ட சகவாசத்தையும், கெட்ட பழக்க வழக்கங்களையும் மூத்தமகன் ரமேஷிடம் கூறி வருந்துகிறார். அவனிடம் 'எவ்வளவோ பேசிவிட்டேன். காலம் வரும். அவன் திருந்துவான் என்று நம்புகிறேன்' என்கிறார். 'நீயும், சமீப காலமாக உன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டுள்ளதை நான் அறிவேன்', என்கிறார். 'நீ சிகரெட் பிடித்ததையும், தண்ணீர் அடித்ததையும் நான் அறிவேன்' என்கிறார். ரமேஷிடம், 'நான் உனக்கு அறிவுரை சொல்வதாகக் கருத வேண்டாம். உன் காதலைப் பற்றியும் கேள்விப்பட்டேன்' என்கிறார். அந்தப்பெண் லட்சுமியிடமும் நான் பேசினேன். எனக்குத் திருப்திதான். அம்மா கிராமத்து வாசனையிலும், மரபிலும் வளர்ந்தவள். அவளை எப்படி

அணுகணும்னு எனக்குத் தெரியும். உன் மூணாவது அக்கா கல்யாணம் முடியட்டும். நீ விரும்புகிற பெண்ணையே மணம்முடித்து வைக்கிறேன்' என்கிறார்.

'அதற்குமுன் முதலில் நீ கால் ஊன்றி நிற்கணும். அதற்கு உன் பரீட்சை முக்கியம். அதில் கவனம் செலுத்த வேண்டும். கல்வியில் முழுமை பெற்றால் தான் நீ காலூன்றி வேலை தேட முடியும். வேலை அமைந்தால்தான் வாழ்க்கையில் ஒரு பிடிப்பு வரும். இப்போ நீ அவசரப்பட்டுத் திருமணம் செய்து கொண்டால், அக்கா திருமணம் நின்றுவிடும். நம்மளவிற்கு நம் சமுதாயம் இன்னும் முன்னேறல. அப்படிக் கல்யாணம் ஏதும் நின்னுபோனா நம் குடும்பத்து நிலை என்னாகும் என்று யோசித்துப் 'பாரு' என்கிறார். நான் உன்னோட நண்பன். அப்பாவை நண்பன் மாதிரி நேசிக்கக் கத்துக்கோ. அப்புறம் எல்லா அர்த்தமும் புரியும்' என்று கூறி அவர், கண்கலங்கிய நிலையில் அறையை விட்டு வெளியேறுகிறார்.

முதலில் கல்வி. அதன்பின் காலூன்ற ஒரு வேலை. அப்புறம் தான் எல்லாமும் என்பதை உணருகிறான் ரமேஷ். அதுவரை காத்திருப்பதில் தவறில்லை என்பதை அறிந்த நிலையில் அதைப்பற்றி லட்சுமிக்கு எழுத வேண்டும் என்ற எண்ணத்துடன் உறுதியாகப் படிக்க ஆரம்பித்தான்.

- கதை காட்டும் சிக்கல்கள்

இச்சிறுகதை தந்தையின் மன உணர்வுகளை வெளிப்படுத்தி உளவியல் அணுகுமுறைக்கு இடமளிக்கிறது. மூன்று பெண்களைப் பெற்ற தந்தையின் மனநிலையை இதன் மூலம் காட்டுகிறது. உழைப்பினால் அவரும், பிறரும் உருவான விதம், தனிமனித எண்ணங்களை வெளிப்படுத்துவதன் மூலம் சிக்கலைப் புலப்படுத்துகிறது. இரண்டு மகன்களின் கூடாத நடத்தைகளினால் மகளின் திருமணம் நின்றுவிடக் கூடாதே என்று அவர் கருதுவது அவருக்கு ஏற்பட்டுள்ள சிக்கலைக் காட்டுவதாக உள்ளது. அவரது மன உளைச்சலை மகனிடம் வெளிப்படுத்தி மகனுக்கு நண்பனாக இருந்து அறிவுரை கூறுவது சிக்கலைக் களைவதற்கான சிறந்த அணுகுமுறையாகிறது.

- தீர்வுகள்

இச்சிறுகதையில் படைப்பாளர் தந்தைப் பாத்திரத்தின்மூலம் சிக்கலையும், தீர்வுகளையும் ஒருசேர வெளிப்படுத்துகிறார். மகனுக்கு அறிவுரை கூறுவதன் மூலமும், அவன் அதை ஏற்றுக்கொண்டு செயல்படுவதன் மூலமும் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. அறிவுரைகளும், வழிகாட்டுதலும், தெளிவுபடுத்தலும் சிக்கல்களைத் தீர்க்க உதவும் சிறந்த உளவியல் அணுகுமுறைகளாகப் படைப்பாளரால் வெளிப்படுத்தப்படுகின்றன. ஒருவரையொருவர் புரிந்துகொண்டு, விட்டுக்கொடுத்தல் மூலமாகவும் சிக்கலைத் தீர்க்க முடியும் என்பதும் இக்கதையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

## 4.3 சிறுகதைகளில் பெண்களின் சிக்கல்கள்

சிறுகதைகளில் பெண்களுக்கான சிக்கல்களை அறிவதன் மூலம் சமூகத்தில் பெண்களின் நிலையை உணரலாம். பெண்களுக்கான சிக்கல்கள் சமூகச் சிக்கல்களாக உணரப்படுவதால் அவற்றிற்குத் தீர்வு காணவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. சாதி, இனம், அதிகாரம், வறுமை, ஒழுக்கம், வரதட்சணை, பொருந்தா மணம், காதல், கற்பு ஆகியவற்றின் அடிப்படையில் பெண்களுக்குச் சிக்கல்கள் ஏற்படுவதைச் சிறுகதைகள் காட்டுகின்றன. பெண்களுக்கான சிக்கல்களுக்குக் குடும்பம் மற்றும் சமூகமே களனாகின்றது. பெண்கள் சுயக்கட்டுப்பாடு மற்றும் சமூகப் பாதுகாப்பின் மூலம் சிக்கல்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு வாழவேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

இப்பகுதியில் பெண்களின் சிக்கல்களைப் பேசும் சிறுகதைகளாக மூன்று கதைகள் இடம்பெற்றுள்ளன.

### 4.3.1 ஜெயந்தனின் 'மொட்டை' சிறுகதை

மொட்டை என்ற பெண் புருஷன் தன்னைக் கைவிட்டுப்போன நிலையில், தன் மகன்களை இழந்த நிலையில், ஆதரிக்க யாருமில்லாதவளாய், தன் உழைப்பை மட்டும் நம்பி வாழுகின்றாள். அவளின் தன்மான உணர்வினைக் காட்டும் கதையாக இது விளங்குகிறது. கதைச் சுருக்கத்தைக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

மொட்டை மாநிறம். வயது முப்பது அல்லது முப்பத்திரண்டு இருக்கும். நெருங்கிப் பார்க்கும் பொழுது முகத்தில் அழகு, அம்சம் என்று சிறப்பாக எதுவுமில்லை. அதே சமயம் அவலட்சணமும் இல்லை. அவளைப் பெண்ணாக யாராவது ஏற்றுக் கொள்வார்களா. என்றால் சந்தேகமே, வீடுகளுக்குத் தண்ணீர் தூக்குவது, பத்துப் பாத்திரங்களைத் தேய்ப்பது, பிள்ளைகளின் துணிகளைக் கசக்கிப் போடுவது அவள் வேலை. அதன் மூலம் வரும் வருமானம் நாற்பதோ, ஐம்பதோ என்றாலும் நாள் முழுக்க வேலை செய்வாள். எப்பொழுது உண்பாளோ, உறங்குவாளோ தெரியாது. இந்தக் கஷ்டத்தையெல்லாம் அவள் சின்ன முணுமுணுப்புக்கூட இல்லாமல் செய்து வந்தாள். அவளுடைய உண்மையான பெயர் யாருக்கும் தெரியாது. ஆனால் அவளை மொட்டை என்று அழைப்பதால் அவள் முகம் சுளிப்பதோ, வருத்தப்பட்டதோ கிடையாது. அவள் குறைந்த பணத்துக்குத் தண்ணீர் சுமந்ததாலும், கெடுதலே அறியாதவளாக இருந்ததாலும் அவள் மீது அனைவருக்கும் பிரியம்.

ஒரு முறை அவள் தங்கை வீட்டிற்குப் போனவள் அங்கேயே தங்கிவிட்டாள். இந்த ஊரைச் சேர்ந்த அய்யாக்கண்ணு என்பவன் அங்கே கடை வைத்திருந்தான். அதில் அவள் வேலைக்கும் சேர்ந்தாள். அவள் இல்லாமல் அவள் வாடிக்கையாளர்கள் திண்டாடிப்போயினர். இரண்டு மாதங்கள் கழித்துப் பாத்திரங்களை எடுப்பதற்காக, மொட்டை திரும்ப ஊருக்கு வந்தாள். அவள் யாரும் எதிர்பாராத அளவிற்கு நன்றாகவே இருந்தாள். தலை மட்டும் மொட்டையாகவே இருந்தது. மீண்டும் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாள். அப்புறம் ஒரு மாதம் கழித்துத் திரும்பி வந்து பழைய வேலையையே செய்ய ஆரம்பித்துவிட்டாள். வசதியான வாழ்க்கையை விட்டுவிட்டு ஏன் வந்துவிட்டாய் என்று மற்றவர்கள் கேட்டபோது, 'அவன் எனக்குப் பொண்டாட்டியா இருன்னு சொன்னான். அது தான் வந்திட்டேன்' என்கிறாள். ஊராரின் ஒட்டு மொத்தக் கருத்தும் இவள் இருக்கிற இருப்புக்குப் பொண்டாட்டியா இருந்தால் என்ன கெட்டுவிடப்போகிறது என்பதுதான்.

அய்யாக்கண்ணு ஊருக்கு வந்த நேரத்தில் தமாஷாக அவனை விசாரித்த பொழுது, 'அவள் கெடக்கிறா லூசு' என்று நழுவிக்கொண்டான். இப்பொழுது மொட்டை ஊருக்கு அதே பழையமொட்டை ஆகிவிட்டாள். உடம்பு இளைத்துவிட்டது. திண்டுக்கல் தந்த புதிய நிறம் போய்விட்டது. இருப்பினும் அவள் அதைச் சற்றும் எண்ணாதவளாய் எப்பொழுதும்போல் வேலை செய்தாள். யாராவது அவளைச் சீண்டிப் பார்க்கும்போது மட்டும் ரோஷத்தோடு கோபப்பட்டுக் கையைநீட்டி 'அட அவன் எனக்குப்.' அதையே சொல்கிறாள். நீங்கள் விரும்பினால் இப்போதும் அவளை அந்தக் கிராமத்தில் பார்க்கலாம் என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை காட்டும் சிக்கல்கள்

பெண்களுக்கான சமூகச் சிக்கல்களை இச்சிறுகதை படம்பிடித்துள்ளது. ஆண்களால் விரும்பப்படும் அழகில்லாத மொட்டை போன்ற பெண்களுக்குக்கூடச் சமூகத்தில் ஒழுக்கமாக வாழ விரும்புவதில் இடையூறு ஏற்படுவது காட்டப்படுகிறது. மொட்டை போன்ற அப்பிராணியாக இருக்கும் பெண்கள் சமுதாயத்தினரின் கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளாவது காட்டப்படுகிறது. சுயமரியாதையோடு வாழ விரும்பும் பெண்களைச் சீண்டிப் பார்க்கும் சமூகம் சிக்கலை ஏற்படுத்துவதாய் உள்ளது. அய்யாக்கண்ணு தன் தவற்றினை மறைக்கும் பொருட்டு மொட்டையை 'லூசு' என்பது பெண்களை இழிவுபடுத்தும் ஆணாதிக்கப் போக்கைக் காட்டுவதாயுள்ளது. 'மொட்டை அனுசரித்துப் போனால்தான் என்ன? இவள் இருப்புக்கு என்ன கெட்டுப்போச்சு' என்று அவளின் தோற்றத்தை வைத்து அவளின் மன உணர்வுகளைக் காயப்படுத்துவது பெண்களுக்கான சிக்கலைக் காட்டுவதாகிறது. எதற்கும் கோபப்படாத மொட்டை, அவள் சுயமரியாதையை ஊரார் சீண்டிப் பார்க்கும்போது மட்டும் கோபப்படுவது, ரோஷப்படுவது அவளுக்கு ஏற்படும் சிக்கலைக் காட்டுவதாகிறது.

- தீர்வுகள்

மொட்டை தனக்கு ஏற்படும் சிக்கல்களைத் தானே தவிர்த்துக் கொள்வதன் மூலம் தீர்வு அமைத்துக் கொடுக்கிறார் படைப்பாளர். மொட்டையின் ஒழுக்கத்திற்கும், தன்மான உணர்விற்கும் பாதிப்பு ஏற்படும் பொழுது அவள் வசதியான வாழ்க்கையை உதறித்தள்ளிவிட்டு உழைப்பினை மேற்கொள்வது சிக்கல்களுக்கான தீர்வாகின்றது. மொட்டையைச் சீண்டிப்பார்க்கும் பொழுதெல்லாம் அவள் கோபப்படுவது சிக்கலைத் தீர்க்கும் உத்தியாகப் படைப்பாளரால் கையாளப்பட்டுள்ளது. சாமியாராக வரும் கணவனை மொட்டை வெறுப்பதும், தன் வாழ்க்கைக்குத் துணையாகாத கணவனை அவள் புறக்கணிப்பதும் சரியான தீர்வுகளாக அமைந்துள்ளன.

### 4.3.2 சூடாமணியின் 'எனக்குத் தெரியாது'

பெண்களுக்கான சிக்கல்களை உரைக்கும் இரண்டாவது சிறுகதையாக இக்கதை இடம்பெற்றுள்ளது. இதன் கதைச் சுருக்கத்தைக் காணலாம்.

- கதைச் சுருக்கம்

பஞ்சாயத்தில் வேலப்பன் குற்றவாளி இல்லை என்பது தீர்ப்பாகிவிட்டது. அபிராமி உரத்த குரலில் பலமுறை இவன்தான் குற்றவாளி என்று கூறியும் பயனில்லை. அவள் மட்டும் தான் அவனை அடையாளம் காட்ட வேண்டும் என்பதில்லை. அவளுடன் வேலைசெய்த அவளைப் போலவே கீழ்ச்சாதிக்காரர்கள் அனைவரும் அடையாளம் சொல்லமுடியும். ஆனால் யாரும் சொல்லவில்லை.

சம்பவத்தன்று முதலாளி வீட்டிலிருந்து ஆட்கள் தடி மற்றும் கம்புகளுடன் வயலுக்கு வந்து அபிராமியை அணுகினர். 'முதலாளி வீட்டுப் பேரக்குழந்தை கழுத்தில் போட்டிருந்த சங்கிலியைக் காணவில்லை. உம்மேல சந்தேகமாம். மொதலாளியம்மா உன்னை விசாரிக்க வீட்டுக்கு கூட்டிவரச் சொன்னாங்க' என்றார்கள். 'அவர்களுக்கு என்னைப் பற்றி நன்றாகத் தெரியும். நீங்கள் உங்க வேலையைப் பார்த்துக்கிட்டு போங்க'

என்றாள். இரண்டு ஆட்களுக்குப் பின்னால் வந்த மொதலாளி வேலப்பன் அவள் தலைமுடியைப் பற்றி நிமிர்த்தினான். ‘திருட்டுச் சிறுக்கி, மரியாதையா கூப்பிட்டா வரமாட்டே. இழுத்துக்கிட்டுப் போனாத்தான் வருவியா?’ அவன் அதிகாரத்தைப் பார்த்த வயலில் இருந்த மற்ற பதினைந்து ஆண், பெண்கள் பயந்து பழகிவிட்ட நிலையில் மலைத்து நின்றுவிட்டனர்.

மறுநாள் அபிராமியின் முறையீடு கிராமம் முழுக்க எதிரொலித்தது. தனக்கு நேர்ந்ததை, பஞ்சாயத்தைக் கூட்டி, தன்னைச் சிதைத்தவன் இவன் தான் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறினாள். இதனையடுத்து வேலப்பனின் தந்தை பஞ்சாயத்துத் தலைவருடன் தாமிருவரும் ஒரே பரம்பரையில் வந்தவர்கள் எனப் பேச்சுவார்த்தை சுமுகமாக நடத்திவிட்டுச் சென்றார். வேலப்பனின் உறவுக்காரருள் ஒருவர் வயலில் வேலைசெய்த அந்தப் பதினைந்து பேரையும் அழைத்து வேலப்பனுக்கு எதிராக யாராவது சாட்சி சொன்னால் அபிராமிக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும் என்று எச்சரித்தும் சென்றார். இந்நிலையில்தான் பஞ்சாயத்துக் கூடி அபிராமியின் குற்றச்சாட்டிற்கு ஆதாரமில்லை என்றும், மேல்சாதிக்கார வேலப்பன் கீழ்சாதிப் பெண்ணைக் கற்பழித்திருக்கச் சாத்தியமே இல்லை என்ற நிலையில் வேலப்பன் நிரபராதி என்றும் தீர்ப்பளித்தனர்.

ஒரு மாதத்திற்குப் பின் கட்சிப் பணிக்காகச் சென்னை சென்றுவிட்டுத் தேர்தலில் நிற்கும் கனவோடு கிராமத்திற்கு வந்தான் வேலப்பன். மறுநாள் காலையில் ஊர்க்கோடிப் புளிய மரத்தின்கீழ் அவனுடைய ரத்தம் தோய்ந்த பிணம் கிடந்தது. உடலில் பதினைந்து அரிவாள் வெட்டுகள் இருந்தன.

வேலப்பனின் தந்தை உக்கிரமானார். ‘கிராமத்தையே திட்டமிட்டுக் கொளுத்துவேன் பார்’ என்று அரற்றினார். போலீஸ் வந்து விசாரித்தது. யாரைக் கேட்டாலும் ஒரே பதில் எனக்குத் தெரியாது என்பது தான். யாருக்குமே தெரியாம இது எப்படி நடத்திருக்க முடியும்? என்று கேட்ட போது, அந்தப் பதினைந்து பேரில் ஒரு பெண் அப்பாவியாக ‘எனக்கு ஒரு ஊகங்க’ என்றாள். ‘இந்தப் புளியமரத்தில் இருக்கின்ற அரிவாள் பேய்தான் சின்ன முதலாளியை அடிச்சிருக்கணும்; அது அடிச்சா ஒடம்புல இப்படித்தான் அரிவா அடையாளம் இருக்கும்’. அனைவரின் பதிலும் அதுவாக இருக்க, இன்ஸ்பெக்டரின் அடிவயிற்றில் சில்லென்று ஒரு பயம் வெட்டியது. பின்வாங்கினார். அதன்பின் அவர் மேலதிகாரிக்கு ஓர் அறிக்கை அனுப்பினார். ‘ஆளுங்கட்சியினரின் செல்வாக்கைப் பொறுக்காமல் காழ்ப்புணர்ச்சியில் மாற்றுக்கட்சியினர் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம்’ என்று தன்னுடைய ஊகத்தைக் குறிப்பிட்டிருந்தார் என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை காட்டும் சிக்கல்கள்

இச்சிறுகதையில் சாதிக் கொடுமையும், அதிகாரப் போக்கும் பெண்களுக்கான சிக்கல்களாகக் காட்டப்பட்டுள்ளன. கீழ்ச் சாதிப்பெண்களை மேல்சாதியினர் கேவலப்படுத்துவதும், இழிவுபடுத்துவதும் சிக்கல்களுக்கான காரணங்களாகின்றன. அழகான பெண்களைத் தன் இச்சைக்குப் பயன்படுத்தும் ஆண்களின் அதிகாரப்போக்கு, சிக்கலுக்குரியதாகிறது. அதிகார வர்க்கத்துக்குப் பயந்து உண்மையை மறைக்கும் கீழ்ச்சாதிப்பெண்கள் பரிதாபத்திற்கு உரியவர்களாகின்றனர். பெண்களுக்குச் சமுதாய அமைப்பே சிக்கலை ஏற்படுத்துவதாக உள்ளதை இக்கதையின் வழி அறியமுடிகிறது.

- தீர்வுகள்

இச்சிறுகதையில் பெண்களின் சிக்கல்களுக்கான தீர்வுகள் படைப்பாளரால் வழங்கப்பட்டுள்ளன. தன்னைச் சிதைத்தவனை அபிராமியும் மற்றவர்களும் சேர்ந்து அழிப்பதன் மூலமாக அநீதிக்குத் தீர்வு கொடுக்கப்பட்டுள்ளது. அபிராமிக்கு நேர்ந்த அநியாயத்தை ‘எனக்குத் தெரியாது’ என்று கூறி மறுத்ததுபோலவே வேலப்பனின் மரணத்தையும் ‘எனக்குத் தெரியாது’ என்று கூறி மறுப்பது சிக்கலுக்கு மற்றொரு சிக்கலே தீர்வாகி விடுவதைக் காட்டுகிறது. பெண்களுக்கு இழைக்கும் துன்பங்களை அதே பாணியில் வெற்றி கொள்வது சரியான தீர்வாகியுள்ளதை அறிய முடிகிறது. சாதிக்கொடுமை, அதிகாரப்போக்கு ஆகியவற்றின் மூலம் பெண்களை அடிமைப்படுத்தும் முயற்சியினைக் கைவிடுவதும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான முயற்சியாக அமையும்.

**4.3.3** பிரபஞ்சனின் ‘மூன்று நாள்’ சிறுகதை

பெண்களின் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதையாக இது விளங்குகிறது. இதன் கதைச்சுருக்கத்தைக் காணலாம்.

- கதைச்சுருக்கம்

இது பெண்களின் வாழ்க்கையில் பிரச்சனையாக இருக்கும் அந்த மூன்று நாட்களை வைத்துப் பின்னப்பட்ட கதையாகும். சுமதி கல்யாணமாகிப் புகுந்த வீடு செல்கிறாள். அடுத்த மாதமே அவளுடைய மாமியார் தன் ஆசாரத்திற்குத் தீட்டு நேரக்கூடாது என்ற எண்ணத்தோடு அந்த மூன்று நாட்கள் அம்மா வீட்டிற்குச் சென்று தலைக்குக் குளித்துவிட்டு அப்புறம் வந்து சேர் என்று அனுப்புகிறாள். இது ஒவ்வொரு மாதமும் தொடர்கிறது. இந்த விரட்டல் அவளின் அம்மா, அப்பாவிற்கு வேதனையைத் தருகிறது. தன்னுடைய அந்தரங்கம் ஊருக்கே வெளிச்சமாகி, சுமதிக்கும் பெரும் தலைகுனிவாகிறது. இந்த அவலத்திற்கு விடிவு காண வேண்டிய கணவனோ அம்மாவின் கைமுறுக்கின் ருசிக்கு அடிமைப்பட்டுக் கிடந்தான். அவன் அப்பாவியாகவும், தூங்குமூஞ்சியாகவும் இருப்பதே சுமதி மாதாமாதம் தாய்வீடு செல்லக் காரணமாகிறது.

கடைசியாக அவள் தன் மனக்குறையைக் கணவனிடம் கூறுகிறாள். ஒவ்வொரு மாதமும் இந்த நிலையில் அம்மா வீட்டிற்குச் செல்ல எனக்கு வெட்கமாயிருக்கு. தன்னுடைய அவலநிலையை இவ்விதம் கூறும்போது ஆரம்பத்தில் ‘உம்’ கொட்டிக் கேட்கும் அவன், அவள் சொல்லி முடிக்கும் முன்னரே வழக்கம்போலக் குறட்டை விட்டுத் தூங்க ஆரம்பிக்கிறான்.

சுமதிக்கு ஏற்பட்ட அவலத்திலிருந்து அவளை மீட்க இயலாத, உடல் தெம்பும், உள்ளத் தெம்பும் இல்லாத இளைஞனாக அவள் கணவன் கேசவன் விளங்குகிறான். இக்கதையைப் படித்து முடிக்கும்போது சுமதிமேல் நமக்குப் பிறக்கும் அனுதாபத்தைவிட அவள் கணவன் மீதே அதிக அனுதாபம் பிறக்கிறது. படைப்பாளரும் கதைமாந்தரிடம் உள்ள குறைபாடுகளைக் கண்டு சீற்றம் அடையாமல் அவர்களுடைய அறியாமையை எண்ணி அனுதாபப் படவே செய்கிறார்.

- கதை காட்டும் சிக்கல்கள்

இச்சிறுகதை காட்டும் சிக்கல் அனைத்துப் பெண்களுக்கும் பொதுவாகிறது. சுமதியின் மாமியார் தன் சுயநலத்தின் பொருட்டு மருமகளுக்குச் சிக்கல் விளைவிக்கக் கூடியவராய் விளங்குகிறார். சுமதியின் மாமியார் ஒரு பெண்ணாக இருந்தும் பெண்களின் சிக்கலை உணராதவராய் இருப்பதிலிருந்து பெண்களே பெண்களுக்கு எதிரிகளாய் விளங்குவதை அறியமுடிகிறது. சுமதிக்கு ஒவ்வொரு மாதமும் ஏற்படும் இது போன்ற தலைக்குனிவே அவளுக்கும் சிக்கலாக அமைந்துவிடுவதைக் காணமுடிகிறது. இதைப்பற்றி ஒன்றும் கண்டுகொள்ளாமல் அவள் கணவன் அப்பாவியாகவும், சுகபோகியாகவும் இருப்பது அவள் சிக்கலை மேலும் அதிகப்படுத்துவதாயுள்ளது. அவள் மனத்துயரைக்கூட அறிய, கேட்க இயலாத நிலையில் இருக்கும் அவள் கணவனே, கதை எடுத்துக்காட்டும் சிக்கலுக்குக் காரணமாகின்றான்.

- தீர்வுகள்

இக்கதைக்கான தீர்வுகள் படைப்பாளரால் நேரடியாக வழங்கப்படவில்லை. ஆயினும் கேசவன் போன்ற சிக்கலுக்குத் தீர்வு காணாத ஆடவர்களின் அறியாமையை எண்ணித் தாம் அனுதாபப்படுவதாகக் கூறுவதன் மூலம் மறைமுகத் தீர்வு உரைக்கப்படுகிறது. இத்தகைய சிக்கல்களைக்

கணவன் மட்டுமே தீர்க்க இயலும். இதை மற்றையோர் தீர்க்க இயலாது என்ற நிலையில் கணவனின் கடமையே தீர்வாக உரைக்கப்படுகிறது. வெளி மனிதர்களால் தீர்க்கப்படாத உணர்வு சார்ந்த விஷயங்கள் கணவனுக்கு மட்டுமே உரியது; அதை அவனே தீர்க்க முற்படுதல் வேண்டும். அவ்வாறு அவர்கள் தீர்க்க இயலாத நிலையில் அவர்கள் அனுதாபத்திற்குரியவர்களாகவே கருத இடமளிக்கின்றனர் என்பது ஆசிரியரின் மறைமுகத் தீர்வாகிறது. ஆகவே கணவனுக்காக மனைவியும், மனைவிக்காகக் கணவனும் என்று ஒருவரையொருவர் சார்ந்து வாழும் வாழ்க்கையும், புரிந்துகொண்டு வாழும் வாழ்க்கையுமே இதுபோன்ற சிக்கல்கள் எழாமல் தடுக்க இயலும் என்பது இக்கதை கூறும் கருத்தாகிறது.

## 4.4 சிறுகதைகளில் சமூகச் சிக்கல்கள்

சிறுகதைகள் சமூகத்தை அடிப்படையாய்க் கொண்டு எழுந்தவையாகும். சமூகத்தில் காணும் குறைபாடுகளையும், சிக்கல்களையும் சிறுகதைகள் வெளிப்படுத்தத் தவறுவதில்லை. சமூகச் சிக்கல்களைக் கதைக்கருவாகக் கொண்டு சிறுகதைகள் உருவாகியுள்ளன. அவற்றிற்குத் தீர்வுகளையும் கண்டுள்ளன. சில சிறுகதைகள் புரட்சிக் கருத்துகளாகி நம்மைச் சிந்திக்கவும் வைக்கின்றன.

சிறுகதைகள், சமூகத்தை வெளிப்படுத்தும் அளவில் அவை சமூகக் கடமையாற்றுவதை அறிய முடிகிறது. அவை மக்களுக்குச் சமூகம் சார்ந்த அறிவினைக் கொடுத்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகின்றன. சமூகச் சிந்தனைகளுக்கும் இடம்தருகின்றன. இப்பகுதியில் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதைகளாக மூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றைக் காணலாம்.

### 4.4.1 மு. வரதராசனாரின் 'குறட்டை ஒலி'

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதைகளில் முதலாவது சிறுகதையாக இது இடம்பெற்றுள்ளது. இதன் கதைச்சுருக்கத்தைப் பார்க்கலாம்.

- கதைச் சுருக்கம்

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை வெளிப்படுத்தும் சிறுகதையாக இது விளங்குகிறது. ஓரிடத்தில் குடியிருக்கும் வடபகுதி மற்றும் தென்பகுதியில் வாழும் குடும்பங்களைப் பற்றி மேல்மாடியில் குடியிருப்பவர்கள் பார்த்த காட்சிகளாகக் கதை விவரிக்கப்படுகிறது. கணவன், மனைவி, ஆறு குழந்தைகள், பாட்டி, ஒரு நாய் என்று தன்பகுதியில் இருப்பவர்களின் குடும்பம் பெரிது. அவர்களின் வறுமையும் பெரிது. வடபகுதியில் வாழ்பவர்கள் செல்வத்தால் செழித்தவர்கள். குழந்தை இல்லாத நிலையில் கணவன், மனைவி என்று இருவர் மட்டுமே இருந்தனர். அதனால் அவர்கள் வீட்டில் வைத்த பொருட்கள் வைத்த இடத்தில் இருந்தன. அப்பகுதி தூய்மையானதாகத் தும்மல், இருமல், ஏப்பம், கொட்டாவி தவிர எந்த ஒலியும் இல்லாமலிருந்தது. தென்பகுதிக் குடும்பமோ ஆரவாரம் மிக்கது. அங்கு குழந்தைகளின் அமர்க்களமும், குழந்தைகளைத் தண்டிக்கும் வகையில் போலீஸ் நிலையம், நீதிமன்றம், சிறைக்கூடம் எல்லாமும் இருந்தன. பாட்டி மருமகளைத் திட்டிய நேரம் போக, எஞ்சிய நேரத்தில் இடைவிடாத இருமல் ஓசையையும், பாக்கை உலக்கையால் தட்டும் ஒலியையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தாள். இடையிடையே நாய் குரைக்கும் ஒலி எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருக்கும். வடபகுதியில் இருந்தவர்களுக்கு இது சற்றும் பிடிக்காததால், மனம் ஒன்றாத நிலையிலேயே இரு பகுதியினரும் வாழ்ந்து வந்தனர்.

நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த ஏழையின் மனைவி ஒரு நாள் ஏழாவது குழந்தையைப் பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தை அடிக்கடி அழுது கொண்டிருந்தது வடபகுதியினருக்கு எரிச்சலாக இருந்தது. சில நாட்களில் ஏழையின் வீட்டு நாயும் குட்டிகளை ஈன்றது. மூன்றாவது நாள் வெளியில் சென்ற தாய் நாய் திரும்பிவரவில்லை. பாலின்றிக் குட்டிகள் ஓயாமல் கத்திக் கொண்டிருந்தன. பாட்டி, மருமகளிடம் குட்டிக்குக் கஞ்சியாவது வார்க்கக் கூடாதா? என்றாள். அதற்குக் கஞ்சி வார்த்தால் குட்டிகள் செத்துப்போகும் என்றாள் மருமகள். பிள்ளைகளை அனுப்பித் தாய்நாயைப் பிடித்துக்கொண்டு வரச்சொன்னாள் மருமகள். கணவன் வந்ததும் அவனையும் தேடிவர அனுப்பினாள். நாயை முனிசிபாலிட்டியில் பிடித்துச் சென்றிருந்ததால் நாளைதான் மீட்கமுடியும் என்றான் அவன். குட்டிகள் இரவெல்லாம் கத்திக் கொண்டிருக்குமே என்று வருந்தினாள். அதற்குள் செல்வரின் மனைவி 'நாய்க்குட்டிகளின் சத்தம் தாங்க முடியவில்லை. அதை எங்கேயாவது கொண்டு போய் விட்டுவிட்டு வரச்சொல்லுங்கள்' என்றாள். மேல்மாடியில் இருப்பவர்களும் அதைக் கேட்டுவிட்டு, ஏழையின் மனைவியிடம் கூற, 'நாளை பணம்கட்டி நாயை மீட்டு வந்துவிடுவோம். அதுவரை பொறுத்துக்கச் சொல்லுங்கள்' என்றாள். அதை வட பகுதியினரிடம் அவர்கள் தெரிவிக்க, அவர்கள் கதவு, சன்னல்களை அடைத்துக்கொண்டு தூங்க முடிவு செய்தனர். வட பகுதியினர் குங்குமப்பூப் போட்டுச் சுண்டக்காய்ச்சிய பாலை அருந்தி விட்டு, ஏப்பம் விட்டுவிட்டு உறங்கச் சென்றனர்.

ஏழையின் மனைவி, கணவன் உட்பட அனைவரும் உறங்கியபிறகு, குட்டிகளை வருடிக் கொடுத்துக்கொண்டு தன் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கக்கூட மறந்தாள். இரவு வெகுநேரம் வரை குட்டிகள் கத்திக் கொண்டேயிருந்தன. சிறிதுநேரத்தில் அவற்றின் ஒலியும் குறையத் தொடங்கியது. அதற்கு என்ன காரணம் என்று அறியும் பொருட்டு மேல் மாடியினர் எட்டிப்பார்த்தனர். அந்த ஏழையின் மனைவி தாய்ப்பாலைக் கொட்டாங்கச்சியில் எடுத்து அதைப் பஞ்சில் நனைத்துக் குட்டிகளின் வாயில் வைத்தாள். குட்டிகள் அதைச் சுவைத்துச் சுவைத்து அமைதியாயின. சிறிது நேரத்தில் பசியடங்கிக் குட்டிகள் உறங்கத் தொடங்கின. அதைப்பார்த்துத் திருப்தியடைந்தவளாய் ஏழையின் மனைவி மகிழ்ந்தாள். இதைப் பார்த்து மேல்மாடியினரும் மனத்தில் பாரம் குறைந்த நிலையில் படுக்கச் சென்றனர். ஏப்ப ஒலி வந்த திசையில் குறட்டை ஒலி வந்துகொண்டிருந்தது என்பதோடு கதை நிறைவடைகின்றது.

- கதை காட்டும் சிக்கல்கள்

இக்கதையின் மூலம் பொருளாதார அடிப்படையில் மாறுபடும் சமூகச் சிக்கல்கள் காட்டப்படுகின்றன. வசதியிருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உதவாத நிலையிலேயே பொருளாதாரச் சிக்கல் அதிகமாவது காட்டப்படுகிறது. பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்களிடம் பிற உயிர்களின் உணர்வுகளைப் போற்றும் பண்பு இருப்பது காட்டப்படுகிறது. செல்வம் மிக்கவர்கள் சுயநலவாதிகளாக இருப்பதையும் அறியமுடிகிறது. இதுவே சமூகச் சிக்கல்களுக்கும், குறைபாடுகளுக்கும் இடம் தருவதாக உள்ளது. தென்பகுதியினரின் ஆரவாரமும், அழுகுரலும் பொருளாதாரச் சிக்கலைத் தெளிவுபடுத்துவதாயுள்ளன. வடபகுதியினரின் ஏப்ப ஒலியின் மூலம் ஏற்றத் தாழ்வுமிக்க சமூகங்களை அறியமுடிகின்றது. இதன் மூலம் மனிதநேயம் இல்லாத வசதி படைத்தவர்கள் சமூகச் சிக்கல்களைத் தூண்டி விடுபவர்களாகவே காட்டப்படுகின்றனர். பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாகவே சமூகச் சிக்கல்கள் ஊக்குவிக்கப்படுவதை அறிய முடிகின்றது.

- தீர்வுகள்

இக்கதை குறைபாடுடைய மனிதர்களையும், மனிதநேயம் இல்லாத மனிதர்களையும் சுட்டி, அவர்களைப் போன்றவர்கள் பிறருக்கு உதவுவதன் மூலமே சிக்கல்களைத் தீர்க்க முடியும் என்பதைக் கூறுகிறது. வடபகுதியினர் தாங்கள் அருந்தும் பாலில் ஒரு சிறிது அந்த நாய்க்குட்டிகளுக்குக் கொடுத்திருந்தால்கூட அவற்றின் சிக்கல்களைப் போக்கியிருக்கலாம். குழந்தையில்லாத அவர்கள் ஏழைக்குடும்பத்தினரின் பொருளாதார இடர்ப்பாடுகளை ஓரளவிற்குக் குறைத்திருக்கலாம். இவற்றிற்கெல்லாம் மனமில்லாத அவர்கள் ஏழ்மையைக் கேலிசெய்து பேசுவது (பால் வாங்கக் காசு இல்லாதவங்க ஏன் நாயை வளர்க்க வேண்டும்) என்பது குறைபாடுடைய மனிதர்களைக் காட்டுவதாயுள்ளது. இந்நிலையில் மனிதநேயம் மிக்க மனிதர்கள் சமூகத்தில் உருவாக வேண்டும். வசதிபடைத்தவர்கள் மற்றவர்களைப் புண்படுத்தாமல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறர் துன்பத்தில் பங்குகொள்ளாத மனிதர்களைச் சமூகம் ஒதுக்க வேண்டும் என்பது தீர்வு ஆகின்றது.

இதுபோன்ற செயல்பாடுகள் மூலமே சமதர்மச் சமுதாயத்தை உருவாக்க முடியும். மேலும் சிறுகுடும்ப நெறியினை உணர்ந்து, அதைப்பின்பற்றி வாழ்வதன் மூலமும் ஏழ்மையைக் களையலாம். ஒவ்வொருவரும் ஏற்றத்தாழ்வு மிக்க சமூகத்தைச் சமன்படுத்தி வாழ முயற்சிசெய்யும் அளவிலேயே இத்தகைய சமூகப் பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வுகள் காண இயலும் என்பது தெளிவாகிறது.

### 4.4.2 இந்துமதியின் 'ஆமைச் சமூகமும், ஊமை முயல்களும்'

இச்சிறுகதை சமூகச் சிக்கல்களை வெளிக்கொண்டு வரும் இரண்டாவது கதையாக இப்பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதன் கதைச்சுருக்கம் பின்வருமாறு அமைகிறது.

- கதைச் சுருக்கம்

அஞ்சலையின் குழந்தைக்கு உடம்பு சரியில்லாததால் அவள் நான்கு நாட்களாய் வேலைக்கும் செல்லவில்லை. அவள் குழந்தைக்குக் காய்ச்சல், இருமலோடு வயிற்றுப்போக்கும் ஆரம்பிக்கவே தனியார் ஆஸ்பத்திரிக்குப் போக அவளுக்குப் பணம் தேவைப்பட்டது. வேலைசெய்யும் இடத்தில் பணம் வாங்குவதற்காகப் பயந்துகொண்டே செல்கிறாள். வீட்டுக்கார அம்மாள் எது சொன்னாலும் கோபப்படக்கூடாது என்ற எண்ணத்தோடு செல்கிறாள். மாறாக அந்த அம்மாள் குழந்தை நன்றாக ஆனால்தானே அஞ்சலை வேலைக்கு வருவாள் என்ற எண்ணத்தில் கோபப்படவில்லை. கீழ்ப்பாக்கத்தில் இருக்கும் டாக்டரின் பெயரைக்கூறி அவரிடம் சென்று வைத்தியம் பார்த்துவரப் பணம் கொடுத்து அனுப்புகிறாள். 'காலையில் சீக்கிரம் சென்று டாக்டரைப் பார்த்துவிடு, இல்லாவிட்டால் கூட்டம் வந்துவிடும்' என்கிறாள். 'அப்புறம் எப்ப வேலைக்கு வரே' என்று கேட்டவளுக்கு அஞ்சலை, 'குழந்தை கொஞ்சம் நல்லானாக் கூட நாளைக்கே வந்து விடுவேன்' என்று கூறிச் செல்கிறாள்.

மறுநாள் ஆறுமணிக்குக் குழந்தையைத் தூக்கிக்கொண்டு தனியாகக் கிளம்புகிறாள். குழந்தைக்கு ஒரு மாற்றுத்துணி எடுத்துக்கொண்டாள். வீட்டில் சோறு இல்லாத காரணத்தால் டீக் குடித்துக் கொள்ளலாம் என்று எண்ணிக் கிளம்பினாள். டீக்கடை மூடியிருந்ததால் டீயும் குடிக்காமல் கிளம்பினாள். பஸ் வந்தது. கூட்டம் இல்லாததால் ஏறி அமர்ந்தாள். பஸ்ஸில் அமர்ந்திருந்த காய்கறி விற்பவர்கள் 'கொட்டும் பனியில் காய்ச்சல் இருக்கிற குழந்தையை இப்படியா தூக்கி வருவே? கொஞ்சம் நேரம் கழித்துக் கிளம்பக் கூடாதா?' என்று திட்டுகின்றனர். 'சீக்கிரம் போனால்தான் டாக்டரைப் பார்க்க முடியுமாம்' என்று கூறிக்கொண்டே இறங்க வேண்டிய இடம் வந்ததும் இறங்கினாள்.

டாக்டர் வீட்டை அடைந்தபோது நான்கு கார்கள் வெளியில் நின்று கொண்டிருந்தன. ஆறு பேர்கள் உள்ளே அமர்ந்திருந்தனர். எல்லோரும் விழாவுக்கு வந்தவர்கள்போல் மேக்கப் போட்டிருந்தனர். குழந்தைகளும் அந்த மாதிரியே தெரிய, தான் மட்டும் வித்தியாசப்பட்டிருப்பதை உணர்ந்தாள். அவர்கள் யாரும் அவளுக்கு இடம்கொடுக்கவில்லை. யாருக்குப்பின் தான் செல்லவேண்டும் என்பதையும் அவளால் நிச்சயிக்க முடியவில்லை. இவர்கள் அனைவரும் போன பின்புதான் போகவேண்டும் என்ற நிலையில் வெளியில் கான்கிரீட் தரையில் அமர்ந்தாள். அவள் உட்காரக் காத்திருந்ததுபோல் குழந்தை வெளிக்குப் போயிற்று. வேறு துணியில்லாத காரணத்தால் அதே துணியை அப்படியே மடித்துப் போட, உள்ளே அமர்ந்திருந்தவர் முகம் சுளித்தார். அதைப் பார்த்ததும் 'இவர்களுக்கு என் நிலை வந்தால் தெரியும்' என்று எண்ணிக் கொண்டாள். அப்பொழுது இரண்டு கார்கள் வந்தன. அவர்கள் முன்னவர்களை விட அதிகமாக மேக்கப் செய்து கொண்டிருந்தனர். அழகாய் ஆங்கிலம் பேசினர். அவர்களைப் பார்த்தவுடன் உள்ளே இருந்தவர்கள் எழுந்து இடம் கொடுத்தனர். 'அடப் பாவிகளா, குழந்தையைப் பனியில் வைத்துக்கொண்டு அமர்ந்திருக்கும் எனக்கு இடம்கொடுக்கத் தோணலை' என்று முணுமுணுத்தாள்.

அதன்பின் குழந்தை மீண்டும் வாந்தி எடுத்தது. மாற்றுத் துணியில்லாமல் புடவைத் தலைப்பில் போர்த்தினாள். அதன் பின்னரும் ஸ்கூட்டர் மற்றும் கார் வந்தது. காரில் வந்தவர் டாக்டரைப் பார்க்க நேரே உள்ளே சென்றார். டாக்டரும் அவரை வரவேற்றார். இங்ஙனம் அடுத்தடுத்து வந்தவர்கள் டாக்டரைப் பார்க்கச் சென்றனர். அஞ்சலையால் நான்தான் அடுத்துப் போகவேண்டும் என்று சொல்ல வாய்வரவில்லை. அதற்குள் குழந்தையும் பாலின்றி அழுது ஓய்ந்து தூங்கிவிட்டது. எல்லோருக்கும் கடைசியாக அவள் டாக்டரைப் பார்க்கச் சென்றபொழுது 'பதினொரு மணிக்குமேல் நான் பார்க்கிறது இல்லைன்னு தெரியாதா? உன் வேலையை முடித்துக்கொண்டு நிதானமாய் வந்தால் எப்படி' என்று கேட்க. அவள் ஒன்றும் பேசவில்லை. 'குழந்தைக்கு என்னென்று சொல்லு' என்றபோது பயத்தில் வார்த்தைகள் வராதவளாய் உதட்டைக் கடித்துக்கொண்டு பேச ஆரம்பித்தாள் என்பதோடு கதை நிறைவடைகின்றது.

- கதை காட்டும் சிக்கல்கள்

ஆமைச் சமூகமும், ஊமை முயல்களும் என்ற தலைப்பே சிக்கலைக் கூறுவதாய் உள்ளது. அஞ்சலையைப் போன்ற ஊமை முயல்கள் இருக்கும் வரை ஆமைச் சமூகமாக இருந்தாலும் அது முயலைத் தோற்கடித்து, சிக்கலையே உண்டாக்கும் என்பது உணர்த்தப்படுகிறது. நாகரிகம் இல்லாதவர்களையும், வசதி குறைந்தவர்களையும் சமூகம் ஏற்றுக்கொள்ளாத நிலை சிக்கலுக்கு உரியதாகக் காட்டப்படுகிறது. பகட்டு வாழ்க்கைக்கு உரியவர்களையே சமூகம் ஏற்றுக்கொள்வது சமூகக் குறைபாட்டினைக் காட்டுவதாயுள்ளது. அஞ்சலை குழந்தையை வைத்துக்கொண்டு கஷ்டப்படும் நிலையில், அவளுக்கு எந்த உதவியும் செய்ய முன்வராத சமூக அமைப்பு சிக்கலை அதிகப்படுத்துவதாய் உள்ளது. அஞ்சலை, தனக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாம் டாக்டரைப் பார்த்துவிட்டுச் செல்வதைப் பார்த்தும், அவர்களிடம் 'அவள் சென்ற பிறகு தான் மற்றவர்கள் செல்ல வேண்டும்' என்று கூறாதநிலையில் அவளுக்கு மேலும் மேலும் சிக்கல்கள் ஏற்படுவதைக் காண முடிகிறது. தனிமனிதர்கள் தங்களின் உரிமையை, தங்கள் நிலையினை நிலைநாட்டிக் கொள்ளாவிட்டால் இதுபோன்ற சிக்கல்களே ஏற்படும் என்பது காட்டப்படுகிறது. இறுதியில் டாக்டர், 'முன்னாடியே வந்திருக்க வேண்டியதுதானே' என்று கேட்கும்பொழுது, அவரிடமும் வாய்திறந்து தன் நிலையைச் சொல்லாமலிருப்பது சிக்கல்களை ஊக்குவிப்பதாக அமைகிறது. இச்சிறுகதையில் உயர்மட்டச் சமூகம், கீழ்மட்டச் சமூகம் என்று சமூக அமைப்புகள் மாறுபடும்பொழுதுதான் சிக்கல்கள் எழுவதாகக் காட்டப்படுகிறது.

- தீர்வுகள்

தனிமனிதர்கள் தங்கள் உரிமையைப் பெறுவதிலும், சமத்துவத்தை நிலைநாட்டுவதிலும் அக்கறை கொள்வது சிக்கலைத் தவிர்க்க உதவும். அஞ்சலை படிக்காதவள். கீழ்மட்டத்தைச் சார்ந்தவள். தன்னைச் சுற்றி நடப்பது அநியாயம் என்று தெரிந்தாலும் அவளால் அதை எதிர்த்துக் கேட்க முடிவதில்லை. இதற்குக் காரணம் தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து அவள் தாழ்வு மனப்பான்மை கொள்வதுதான். இந்நிலை மாற வேண்டுமெனில் தாழ்வு மனப்பான்மையைப் போக்கும் கல்வியறிவினைக் கீழ்மட்டத்தினரும் பெறவேண்டும். அங்ஙனம் பெறுவதன் மூலமாக அவர்கள் மேல்மட்டத்தினரை எதிர்கொள்ள முடியும். ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருப்பார்கள் என்பதை உணர்ந்து செயல்பட முடியும். மேலும் மனிதநேயத்தோடு ஒவ்வொருவரும் செயல்படுவதன் மூலம் இத்தகைய குறைபாடுகளுக்கான தீர்வுகளைக் காண இயலும்.

**4.4.3** அறிஞர் அண்ணாவின் 'செவ்வாழை'

சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தும் சிறுகதைகளுள் இது மூன்றாவது சிறுகதையாக இடம்பெற்றுள்ளது. இதன் கதைச்சுருக்கத்தைப் பின்வருமாறு காணலாம்.

- கதைச் சுருக்கம்

செங்கோடன் அந்தச் செவ்வாழைக் கன்றைச் செல்லப்பிள்ளைபோல வளர்த்து வந்தான். தன் நான்கு குழந்தைகளிடம் காட்டும் அதேயளவு பாசத்தை அந்தச் செவ்வாழையின் மீதும் வைத்திருந்தான். அவன் செவ்வாழை மீது காட்டிய அக்கறை அவன் மனைவி குப்பிக்குச் சில வேளைகளில் பொறாமையைக்கூட ஏற்படுத்தியது. 'குப்பி! மரத்தை பத்திரமாய் பார்த்துக்கோ. மாடுகீடு வந்து மிதிச்சிவிடப் போவுது. செவ்வாழைன்னா சாதாரணமில்லே. ரொம்ப ருசி. பழத்தைக் கண்ணால் பார்த்தால்கூடப் பசியாறிப்போகும்' என்று அவன் மனைவியிடம் பெருமையாகப் பேசுவான். இதே பெருமையை அவளின் குழந்தைகளும் பக்கத்து வீட்டுப் பிள்ளைகளிடமும் பரிமாறிக் கொள்வர். அவர்கள் பெருமை பேசுவதற்கு மோட்டார், ரேடியோ, வைரமாலை இல்லாத காரணத்தால் செவ்வாழை அவர்களின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பிடித்தது.

மூத்த பையன் கரியன், 'செவ்வாழை குலை தள்ளியதும் ஒரு சீப்பு எனக்குத்தான்' என்பான். அதற்கு எதிர்க் குடிசை எல்லப்பன், 'நான் உனக்கு மாம்பழம், வேர்க்கடலை தந்திருக்கிறேன். நினைவு இருக்கட்டும். எனக்கும் பங்கு வேண்டும்' என்பான். அவன் தங்கை காமாட்சியோ, 'உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? அம்மாவைக் கேட்டு ஒன்று அப்பாவைக் கேட்டு ஒன்று' என்றாள். மூன்றாவது பையன் முத்து, 'சீப்புக்கணக்குப் போட்டு ஏமாந்திராதிங்க; பழமாவதற்குள் யார் யார் என்ன செய்வார்களோ, யார் கண்டாங்க' என்றான். திருடியாவது மற்றவர்களை விட அதிகமாகத் தின்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடன் வேலைசெய்யும் பண்ணையில் உழைப்பு அதிகம். மானேஜரின் ஆர்ப்பாட்டமும் அதிகம். இவ்வளவையும் சகித்துக் கொள்வான். செவ்வாழையைப் பார்த்ததும் சகலமும் மறந்துபோகும். இந்தச் 'செவ்வாழை' ஒன்றுதான் அவன் சொந்தமாக, மொத்தமாகப் பலன் பெறுவதற்கு உதவக்கூடிய உழைப்பு. இதன் முழுப்பயனும் தன் குடும்பத்துக்கு. இதில் பண்ணையார் குறுக்கிட முடியாது என்ற சந்தோஷம் அவனுக்கு. செவ்வாழையைப் பார்த்தவுடன் அவன் பூரிப்படைவதற்கு இதுவே காரணம். செவ்வாழை, குலை தள்ளிற்று. செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டது. பண்ணையாரின் மருமகப்பெண் அணிந்திருந்த வைரமாலையை விடச் செவ்வாழை மதிப்புள்ளதாகத் தோன்றியது. பண்ணையாரின் நிலத்திற்காகச் செலவிட்ட உழைப்பில் இது நூறில் ஒரு பாகம்கூட இராது. இருந்தாலும் உழைத்ததன் பலன் முழுதும் நமக்குக் கிடைக்கிறது. ஆனால் பண்ணையாருக்கு வயல் சொந்தமானதாக இருப்பதால் பெரும் பகுதிப் பலனை அவர் அனுபவிக்கிறார். உழைப்பவனுக்கு நிலம் சொந்தம், பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா? இங்ஙனம் பலவாறு அவன் எண்ணினான். பண்ணையாரின் மருமகப்பெண் முத்துவிஜயாவின் பிறந்தநாளைக் கொண்டாட வாழைப்பழம் தேவைப்பட்டது. சமயம் பார்த்துக் கணக்குப்பிள்ளை சுந்தரம், 'கடையில் நல்ல பழங்கள் இல்லை. நம் செங்கோடனின் கொல்லையில் தரமாக ஒரு செவ்வாழைக்குலை இருக்கு. அதைக் கொண்டு வரலாம்' என்று கூற, பண்ணையாரும் சரி என்றார்.

செங்கோடனின் உழைப்பு, இன்பக்கனவு, மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை இவற்றிற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம். தெருவிலே சென்ற செங்கோடனிடம் இதைப்பற்றிக் கூற, அவனுக்குத் தலைசுற்றியது; நாக்குக் குழறியது. இதைத் தரமாட்டேன் என்று சொன்னால் ஊர் ஏசும். 'அப்பா! ஆசைகாட்டி மோசம் செய்துவிடாதே. நாங்கள் என்ன காசு போட்டுத் திராட்சை, கமலாவா? வாங்கித்தரச் சொல்கிறோம். நம் கொல்லையில் வளர்த்தது அல்லவா?' குழந்தைகள் அழுகுரலுடன் கேட்பது மனக்கண்ணில் தெரிந்தது. கோபத்துடன் எதிர்க்கும் மனைவியும் அவன் கண்ணில் தென்பட்டாள். ஆனால் எதிரே நிற்பவனோ பண்ணைக் கணக்குப்பிள்ளை. என்ன செய்வது?

அரிவாளை எடுத்துக் குலையை வெட்ட, குழந்தைகள் ஆசையுடன் சூழ்ந்து கொண்டனர். குலையைத் தொட்டுப்பார்க்க ஆசைப்பட்டனர். செங்கோடன் கண்களில் நீர்துளிர்த்தது. 'கண்ணு! இந்தக் குலை ஆண்டைக்கு வேணுமாம்; கொண்டு போறேன். அழாதீங்க. அடுத்த மாதத்தில் இன்னொரு குலை தள்ளும். அது உங்களுக்குத் தான்' என்று கூறி எடுத்துச்சென்றான். செங்கோடனின் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போல் ஆயிற்று. அழுது அழுது குழந்தைகள் களைத்துத் தூங்கி விட்டன. செவ்வாழையைச் செல்லப்பிள்ளைபோல் வளர்த்து என்ன பலன்? பண்ணை ஆயிரம் குலைகளை நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும். ஆனால் செங்கோடன் ஒரு குலைக்காக எவ்வளவு பாடுபட்டான்! எல்லாம் ஒரு நொடியில் அழிந்ததை எண்ணி வருந்தினான்.

நான்கு நாட்களுக்குப் பிறகு கோவிலுக்குச் செல்லும் முத்து விஜயாவின் வெள்ளித்தட்டில் ஒரு சீப்புச் செவ்வாழை. கணக்குப்பிள்ளை நாலு சீப்புச் செவ்வாழையைக் கடைக்காரனுக்கு விற்றிருந்தான். அது கடையில் தொங்கிக் கொண்டிருந்தது. நாலு நாட்களாகச் சமாதானம் கூறியும் அடங்காத கரியனுக்குக் குப்பி காலணாக் கொடுத்துக் கடையில் பழம் வாங்கிக் கொள்ளச் சொன்னாள். ஆனால் கடைக்காரனோ காலணாவுக்குத் தரமுடியாது என்று விரட்டினான். அவனுக்குத் தெரியுமா அவன் வீட்டில் விளைந்த பழம் எட்டாத உயரத்தில் இருக்கிறது என்று. வறுத்த கடலை வாங்கிக் கொண்டு வந்து சேர்ந்தான். அப்பொழுது செங்கோடன் வாழை மரத் துண்டுகளுடன் கொல்லையிலிருந்து வந்தான். கரியன் 'இதுவும் பண்ணை வீட்டுக்கா?' என்றான். 'இல்லப்பா, நம்ம பார்வதிப் பாட்டி இறந்திட்டாங்க. அவங்க பாடையில் கட்ட' என்றான். இதைக் கேட்டவுடன் கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டி, 'எங்க வீட்டுச் செவ்வாழைடா' என்றான். 'செங்கோடனின் செவ்வாழை தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணம்' என்பதோடு கதை முடிவடைகிறது.

- கதை காட்டும் சிக்கல்கள்

இக்கதையில் ஆண்டான் – அடிமைச் சமுதாயச் சிக்கல்கள் வெளிப்பட்டுள்ளன. அதிகார பலத்தைப் பயன்படுத்தி ஏழைகளுக்குச் சிக்கலை ஏற்படுத்தும் சமூக அமைப்புக் காட்டப்படுகிறது. உழைப்பின் பெரும்பகுதி ஆண்டைக்குச் செல்வதால் உழைப்பவர்கள் பலனின்றி, பொருளாதாரச் சிக்கல்களுக்கு ஆளாவது காட்டப்படுகிறது. செங்கோடன் கஷ்டப்பட்டு வளர்த்த செவ்வாழையின் பயனைப் பிறர் அடையும் நிலையில் அவனும், அவன் குழந்தைகளும் அதைக் கொஞ்சமும் அனுபவிக்காமல் அவலத்திற்கு ஆளாகும் சிக்கல், சமுதாயச் சிக்கலாகிறது. 'செங்கோடனின் செவ்வாழை தொழிலாளர் உலகிலே சர்வ சாதாரணம்' என்பதன் மூலம் தொழிலாளர்களின் சிக்கல்கள் வெளிப்படுகின்றன. பிறரின் துன்பத்தில் இன்பம் காணும் சுந்தரம் போன்றவர்கள், சமூகச் சிக்கல்களுக்குக் காரணமானவர்களாகக் காட்டப்படுகின்றனர். 'உழைப்பவனுக்கு நிலம் சொந்தம்; உழைக்காதவனுக்கு நிலம் இல்லை' என்ற நிலையை எதிர்நோக்கியிருக்கும் சமூகம், சிக்கலுக்கு உரியதாகக் காட்டப்படுகிறது.

- தீர்வுகள்

இச்சிறுகதை காட்டும் சிக்கல்களுக்கான தீர்வுகள் படைப்பாளரால் கதை முழுவதிலும் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. அதிகாரவர்க்கமாக இருந்தாலும் சரி, தொழிலாளர் வர்க்கமாக இருந்தாலும் சரி 'உழைப்பவர்களுக்கே பலன் சேர வேண்டும்' என்ற நிலை ஏற்படின் தீர்வுகள் ஏற்படும். 'உழைப்பவர்களுக்கே நிலம் சொந்தமாக வேண்டும்' என்ற நிலை ஏற்படின் தொழிலாளர்களின் பொருளாதார இடர்ப்பாடுகளைப் போக்க முடியும் என்பது உரைக்கப்படுகிறது. அதிகாரத்தைப் பயன்படுத்தி, மற்றவர்களை அல்லல்படுத்தும் நிலை மாற வேண்டும். மனிதன் மனிதனாக மதிக்கப்பட வேண்டும் என்பதும் தீர்வுகளாகின்றன. உழைப்புக்கு ஏற்ற பலன் ஒவ்வொருவருக்கும் கிட்டும்போது சமூகச்சிக்கல்களுக்குத் தீர்வுகள் கிட்டிவிடும் என்பது இக்கதையின் மூலம் உணரமுடிகிறது. படைப்பாளர் மூலம் சமதர்மச் சமூகம், ஏற்றத்தாழ்வுகள் அற்ற சமூகம், உழைப்புக்கு உயர்வு அளிக்கும் சமூகம் ஆகியவைகள் உருவாவதன் மூலமே ஆண்டான் – அடிமை மற்றும் முதலாளி – தொழிலாளி சிக்கல்களுக்கு விடைகிட்டும் என்பது உரைக்கப்படுகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 4.5 சிறுகதைகளில் சமூகச் சீர்திருத்தங்கள்

சமூகச் சிக்கல்களுக்குரிய சிறுகதைகள் தீர்வுகளைத் தம்மிடத்தே கொண்டுள்ளன. இத்தீர்வுகள் ஒரு சமூகத்தின் சீர்திருத்தங்களுக்கும் அடிப்படையாகின்றன. சமூகச் சீர்திருத்தங்கள் ஒரு சமூகத்தின் நன்மை கருதிய விளைவுகளாக அறியப்படுகின்றன. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள ஒன்பது சிறுகதைகளும் சமூகச் சீர்திருத்தங்களுக்கு இடமளிப்பவையாகவே உள்ளன. கீழ்க்காணும் வகையில் அதைப் பற்றிக் காணலாம்.

- தனி மனிதச் சிக்கலுக்குரிய கதைகளில் சீர்திருத்தக் கருத்துகள்

1. ஒவ்வொரு தனி மனிதனும் குடும்பம், சமூகம் என்ற அளவில் இணக்கமான உறவினை ஏற்படுத்திக் கொண்டு வாழ வேண்டும். தனிமைப்படுத்திக் கொண்டு வாழ்வது என்பது சிக்கல்களைத் தீர்க்க உதவாது. அது உளச்சிக்கலுக்கே இடமளிக்கும். ஆகவே தனிமனிதர்கள் மன உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டும் செம்மைப்படுத்திக் கொண்டும் வாழ்வதன் மூலமே சமூகம் பயனடையும் என்பது அறியப்படுகிறது.

2.தனிமனிதன் சுயநலமின்றி விட்டுத் தருதல், பிறர் உணர்வுகளை மதித்தல், பிறர் நலம் பேணுதல் ஆகியவற்றின் மூலமே சமூகக் குறைபாடுகளைக் களைந்து செம்மைப்படுத்த முடியும் என்பது அறிவுறுத்தப்படுகிறது.

3.தனிமனிதன் தன்னைச் சீர்திருத்திக் கொள்வதன் மூலமும், தன்னுடைய தவறுகளை அறிந்து செயல்படுவதன் மூலமுமே சமுதாயம் பயனடைய முடியும் என்பது தெளிவுபடுத்தப் படுகிறது.

- பெண்களுக்கான சிக்கல்களுக்குரிய சிறுகதைகளில் சீர்திருத்தக் கருத்துகள்

1. பெண்களுக்கான ஒழுக்கம் வலியுறுத்தப்படுகிறது. அந்த ஒழுக்க உயர்வே நம் பாரம்பரியப் பண்புகளை மேம்படச் செய்யும் என்பது கூறப்படுகிறது. உழைப்பின் உயர்வு பெருமைக்கு உரியதாக உரைக்கப்படுகிறது. சுயமுயற்சி வலியுறுத்தப்படுகிறது. சிறுகதை வெளிப்படுத்தும் இக்கருத்துகள் அனைத்தும் சமூகச் சீர்திருத்தத்திற்கு உதவுவதாய் உள்ளன.

2. ‘முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்’ என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது. ‘பிறர்க்கு இன்னா முற்பகல் செயின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும்’ என்ற குறள் கருத்து இக்கதையின் போதனையாகிறது. உண்மை, நேர்மை, அறம்பேணல் ஆகியவற்றின் மூலமே ஒரு சமூகம் சீர்பட முடியும் என்பது உரைக்கப்படுகிறது.

3. பெண்களுக்குப் பெண்களே எதிரியாகும் சமூகச்சூழல் மாற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஆண்கள், பெண்களின் சிக்கல்களைத் தீர்க்க முன்வராத நிலையில் சிக்கல் மேலும் அதிகமாகும் என்பதை அறியமுடிகிறது. இவற்றைப் பின்பற்றிச் செயல்படுவதன் வாயிலாகவே பெண்கள் சமூகம் நலம்பெற இயலும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

- சமூகச் சிக்கல்களுக்குரிய சிறுகதைகளில் சீர்திருத்தக் கருத்துகள்

ஏற்றத் தாழ்வற்ற சமூக, பொருளாதார அமைப்புகள் உருவாதல் வேண்டும். பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும், செயல்படும் சக அமைப்புகள் தோன்ற வேண்டும். சிறு குடும்ப நெறி பேணப்பட வேண்டும் என்பன போன்றவை சமூகச் சீர்திருத்தக் கருத்துகளாகின்றன.

மேல்மட்டச் சமூகம், கீழ்மட்டச் சமூகம் இவற்றிற்கிடையேயான வேறுபாடுகள் ஒழிக்கப்பட வேண்டும். கீழ்மட்டச் சமூகத்தினர் கல்வியறிவு பெறவேண்டும். சமூகத்தில் தங்கள் உரிமையினை நிலைநாட்டிக் கொள்ளத் தயங்கக்கூடாது. முயல்கள் ஆமையாக மட்டும் அல்ல ஊமையாகவும் இருக்கக்கூடாது என்பது வற்புறுத்தப்படுகிறது.

உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும்; பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது என்பது சீர்திருத்தக் கருத்து ஆகிறது. உழைப்பின் பெரும் பகுதி பண்ணைக்கும், மிகக் குறைந்த ஊதியம் உழைப்பவனுக்கும் கிடைக்கும் நிலை மாற வேண்டும்; சமூக மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்பன சிறுகதை வற்புறுத்தும் கருத்துகளாகின்றன.

மேற்கண்ட அளவில் சமூகச் சீர்த்திருத்தக் கருத்துகள் வெளிப்பட்டுச் சிறுகதைகள் சமூகப்பயன் நிறைந்தனவாகத் திகழ்கின்றன.

### 4.5.1 மனித நேயப் போக்கு

சமூகச் சீர்த்திருத்தச் சிறுகதைகள் அனைத்தும் மனித நேயப் போக்கையே அடிப்படைக் கருத்துகளாய்ப் பெற்றுள்ளன. மனித நேயத்தைக் கொண்ட சமூகமே மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பது பாடப்பகுதியில் உள்ள சிறுகதைகளின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

மேலே கண்ட சிறுகதைகள் மனித நேயப் பண்பினை வலியுறுத்தும் அளவில் சிறப்புப் பெறுகின்றன.

- மனிதநேயம், அன்பு இல்லாத காரணத்தினாலேயே ‘எனக்குத் தெரியாது’ என்ற கதையின் தலைவி அபிராமி பாதிக்கப்படுவதைக் காணமுடிகிறது.
- மனிதநேயம் இல்லாத காரணத்தினாலேயே ‘மூன்று நாள்’ சிறுகதையில் கணவனாலும், மாமியாராலும் சுமதி பாதிக்கப்படுவதைக் காணமுடிகிறது.
- ‘குறட்டை ஒலி’ சிறுகதையில் மனிதநேயம் இல்லாத செல்வந்தர், குடும்பச் சிக்கலை ஊக்குவிப்பவர்களாகக் காட்டப்படுகின்றனர்.
- ‘ஆமைச் சமூகமும், ஊமை முயல்களும்’ சிறுகதையில் பகட்டு வாழ்க்கை வாழ்பவர்களிடம் மனிதநேயம் இல்லாதது காட்டப்படுகிறது. அதுவே சிக்கல்களுக்குக் காரணமாகவும் காட்டப்படுகிறது.
- ‘செவ்வாழை’ சிறுகதையில் மனிதநேயமில்லாத கணக்குப்பிள்ளையின் சூழ்ச்சியால் அவர்கள் உயிராக வளர்த்த செவ்வாழை பறிபோவதைக் காணமுடிகிறது.

மேற்கண்ட கதைகளின் மூலம் மனிதத் தன்மையற்ற, மனித நேயமற்ற செயல்களே சமூகச் சிக்கல்களுக்குக் காரணமாவது காட்டப்படுகிறது. மனித நேயத்தை வளர்த்துக் கொள்வது மட்டுமே இதுபோன்ற சிக்கலுக்குத் தீர்வாக அமையும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

### 4.5.2 புதுமை, புரட்சிக்கு வித்திடல்

சமூகச் சிக்கல்களுக்குரிய சிறுகதைகள் சமூகச் சீர்திருத்தத்திற்கு வழிகாட்டும் அளவில் புதுமை, புரட்சிக்கு உரியனவாகவும் உருவெடுக்கின்றன. இத்தகைய புதுமை, புரட்சிக் கருத்துகள் காலமாற்றத்திற்கு உரியவையாகின்றன. சமூக வழிகாட்டலுக்கும் இன்றியமையாதன ஆகின்றன. புதுமை, புரட்சிச் சீர்திருத்தக் கருத்துகளை இச்சிறுகதைகளில் காண முடிகிறது.

- ‘இருளில் இரு பறவைகள்’ சிறுகதையில் தந்தையும், மகனும் நண்பர்களாகக் குடும்பச் சிக்கல்களைப் பரிமாறிக் கொள்ளும்பொழுது சிக்கல்களுக்கான தீர்வுகள் சுமுகமாகப் பெறப்படுகின்றன. தந்தை தன் நிலையினை மகனிடம் பகிர்ந்து கொள்வதும், அவனது காதலை அவர்

ஏற்றுக்கொள்வதும், அவன் செய்த தவற்றினை அவனே உணரும்படி செய்து, அதனால் அவன் திருந்துவதும் புதுமைக்கும், புரட்சிக்கும் உரிய சீர்திருத்தங்களாயின.

- ‘எனக்குத் தெரியாது’ சிறுகதையில் கண்ணெதிரே நடந்த கொடுமையை, அதைக் கூறவிடாமல் மிரட்டித் தடுத்துவிடும் கொடுமையாளனை அந்தப் பதினைந்து பேரும் தண்டித்து விடுகின்றனர். போலீஸ் விசாரிக்கும் பொழுது முன்னர்க் கூறியதுபோலவே எனக்குத் தெரியாது என்று கூறிவிடுகின்றனர். ‘பழிக்குப் பழி’ போன்று இது தோன்றினாலும், சமூகச் சீர்த்திருத்தங்களுக்கு இடமளிக்கும் புதுமை மற்றும் புரட்சிக்கு உரிய தேவையான செயலாகவே கருத இடமளிக்கிறது.
- ‘மூன்று நாள்’ சிறுகதை பெண்களின் பிரச்சனையை, அந்தரங்கத்தை வெளிப்படுத்தும் அளவில் புதுமை, புரட்சிக்கு உரியதாகிறது. இத்தகைய சிக்கல்களைப் பெண்களுக்கு ஏற்படுத்துதல் கூடாது என்பதை வெளிப்படுத்தும் அளவில் புதுமை, புரட்சிக்கு வித்திடுவதாக இச்சிறுகதை அமைந்துள்ளது.

இதிலிருந்து புதுமை, புரட்சிக்குரிய சீர்திருத்தக் கருத்துகளை இச்சிறுகதைகள் வெளிப்படுத்தத் தவறவில்லை என்பதை அறியமுடிகிறது.

## 4.6 தொகுப்புரை

நண்பர்களே! மேற்கண்ட கதைகளின் மூலம் சிறுகதைகள் வெளிப்படுத்தும் சமூகச் சிக்கல்களை அறிந்திருப்பீர்கள். இந்தப் பாடத்தில் நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

தனிமனிதச் சிக்கல்களை விளக்கும் மூன்று சிறுகதைகள் மூலம் தனிமனித உணர்வுகளையும் அவர்களின் உளச்சிக்கல்களையும் அறிந்துகொள்ள முடிந்தது.

பெண்களுக்கான சிக்கல்களைக் காட்டும் மூன்று சிறுகதைகளின் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்குத் தடையாயுள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

சமூகத்தில் காணப்படும் சமூகச் சிக்கல்களை மூன்று சிறுகதைகளும் எடுத்துக்காட்டுகின்றன. சமூகச் சிக்கல்களுக்கு அடிப்படையாக மனித நேயமற்ற செயலே காரணமாவதால் மனிதநேயம், சமூகச் சீர்திருத்தம், புதுமை, புரட்சி ஆகியவற்றின் மூலம் சமூகச் சிக்கல்களுக்கு விடை காண வேண்டும் என்பது அறியப்படுகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

பாடம் - 5

## P20335 சிறுகதைகளில் தத்துவ நெறிகள்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தத்துவ நெறிகளை, இறையன்பு அவர்கள் எழுதிய சிறுகதைகளின் மூலம் இப்பாடம் விளக்குகிறது. அக்கதைகள் பறவை, விலங்கு, தாவரம் ஆகிய அஃறிணைப் பொருள்களின் வழியும், துறவியர் போன்ற உயர்திணையினரின் வழியும் தத்துவங்களைப் புலப்படுத்துவதை எடுத்துக்காட்டுகிறது. செய்யும் தொழிலில் சிறப்பும் நேர்த்தியும் தத்துவ விளக்கத்தின் பயனே எனச் சிறுகதைகள் உணர்த்துவதை எடுத்துரைக்கிறது. முழுமையான அறிவைப் பெறுவதற்குத் தத்துவநெறி தேவைப்படுகிறது என்பதைச் சொல்கிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- சிறுகதைகளில் தத்துவ நெறி எவ்வாறு இடம்பெறுகிறது என்பதை அறியலாம்.
- மனித வாழ்க்கை செம்மையுறவும், பயனுடையதாக அமையவும் தத்துவநெறி மூலம் சிறுகதைகள் வழிகாட்டுவதைக் காணலாம்.
- வாழ்க்கை நெறியை உலகின் எந்தப் பொருளிலிருந்தும் பெறமுடியும் என்பதைச் சிறுகதைகள் காட்டுவதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

# பாட அமைப்பு

5.0 பாட முன்னுரை

5.1 சிறுகதைகளில் தத்துவக் கருத்துகள்

5.2 இறையன்புவின் சிறுகதைகளில் உலக நெறிகள்

5.3 இறையன்புவின் சிறுகதைகளில் சான்றோர் நெறிகள்

5.4 இறையன்புவின் சிறுகதைகளில் வாழ்க்கை நெறிகள்

தன்மதிப்பீடு : வினாக்கள் – I

5.5 உலக வாழ்வில் தத்துவ நெறிகள் பெறும் இடம்

5.6 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# 5.0 பாட முன்னுரை

தத்துவம் (Philosophy) என்ற சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் பித்தகோரஸ் ஆவார். இவர் 'தத்துவம் என்பது அறிவின் மீது கொண்டிருக்கும் பற்றினைக் காட்டுகிறது' என்கிறார். பிளேட்டோ என்பவரின் கூற்றுப்படி, தத்துவம் என்பது 'உண்மையை உணர முயலும் ஒன்று' எனலாம். தத்துவம் என்பது பிரபஞ்சத்தின் முழுமைப்பொருளை அறிய உதவும் ஒரு முறையாகும். மேலும் இது வாழ்க்கைக்கு வழிகாட்டும் அளவில் முக்கியத்துவம் பெறுகிறது (பற்று – விருப்பம், ஆர்வம்; பிரபஞ்சம் – உலகம்).

தத்துவம் – பொருள் விளக்கம்
காண்ட் என்பவர் தத்துவம் என்பது உணர்தல் என்ற ஒரு விஞ்ஞானமாகவும், அதன் ஆய்வாகவும் விளங்குகிறது என்கிறார். டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்கள், உண்மையை உள்ளபடியே உணர உதவும் தருக்க அடிப்படையையே தத்துவம் என்கிறார் (தருக்கம் – நியாயவாதம்).

தத்துவம் என்பது முழுமையான அறிவியல் சிந்தனையின் தொகுப்பேயாம். தத்துவம் மனிதனை உயர்நிலைக்கு அழைத்துச் சென்று உண்மைகள், மெய்ம்மைகள் பற்றிய அறிவினைக் கொடுக்கின்றது. தத்துவம் உயிரை இயக்கும் சக்தியாகக் கருதப்படுகின்றது.

மேற்கண்டவற்றின் மூலம் தத்துவம் என்பதன் உட்பொருளை முழுமையாக அறிந்துகொள்ள முடிகிறது. இத்தகைய தத்துவக் கருத்துகளை, நெறிகளை உள்ளடக்கிய சிறுகதைகளின் மூலம் தத்துவம் சார்ந்த அறிவினைப் பெறுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

## 5.1 சிறுகதைகளில் தத்துவக் கருத்துகள்

மனிதனிடம் இயல்பாக எழுகின்ற ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக்களுக்கு அவன் விடை காண முயலும்போது அவனுடைய அறிவானது கூர்மை பெறுகிறது. அறிவின் துணையைக்கொண்டு அவன் சிந்திக்கும்பொழுது பகுத்தறிவினைப் பெறுகிறான். இங்ஙனம் அவன் பகுத்தறிவினைப் பெறும் நிலையிலேயே அவன் முழுமைபெற்ற அறிவினை உடையவனாகிறான். முழுமைபெற்ற அறிவினைப் பெற உதவுவதே தத்துவ நெறிகளாக அறியப்படுகின்றன. கற்பித்தலுக்கு இடமளிக்கும் தத்துவ நெறிகளை உள்ளடக்கிய சிறுகதைகளை அறிந்துகொள்வது என்பது அவசியமாகிறது (பகுத்தறிவு – பகுத்து அறியும் அறிவு/ பிரித்து அறிய உதவும் அறிவு).

சிறுகதைகள் சிந்தனைக்கு இடமளிக்கும் சிறுகதைகள், வாழ்வின் அர்த்தங்களை உணர்த்தும் சிறுகதைகள், வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறுகதைகள், உலகப் பொது நியதிகளை உரைக்கும் சிறுகதைகள், கடமையை உணர்த்தும் சிறுகதைகள் எனப் பல பிரிவுகளைக் கொண்டு தத்துவ நெறிகளுக்கு இடமளிப்பனவாயுள்ளன. இத்தகைய சிறுகதைகள் கல்விப் பயனுடையனவாகி, அறிவு வளர்ச்சிக்கு வழிகாட்டுகின்றன. வாழ்க்கையின் முழுமையை உணரத் துணைநிற்கின்றன. சிறுகதையில் உள்ள தத்துவ நெறிகள் எங்ஙனம் மனிதனை மனிதனாக்கி வாழ்க்கையை வளப்படுத்துகின்றன என்பதை, படைப்பாளர் இறையன்புவின் தத்துவச் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு காணலாம்.

## 5.2 இறையன்புவின் சிறுகதைகளில் உலக நெறிகள்

படைப்பாளர் இறையன்பு அவர்கள் தம்முடைய சின்னச் சின்ன வெளிச்சங்கள் என்னும் சிறுகதைத் தொகுப்பின் மூலம் தத்துவ நெறிகளை வெளிப்படுத்தியுள்ளார். ஐ.ஏ.எஸ். அதிகாரியான இவர் தமிழ் இலக்கியப் படைப்பாளியாக மட்டும் அல்லாமல், இளைஞர்கள் நலனிலும் அக்கறை கொண்டவராக விளங்குகிறார். தன்னம்பிக்கை, முயற்சி, பயிற்சி ஆகியவை ஒருவனை எங்ஙனம் சிறப்பாக உருவாக்க உதவும் என்பதை இவருடைய சிறுகதைகள் தெளிவுபடுத்துகின்றன. எளிய அனுபவங்களின் சாரங்களையே சிறுகதைகளாக்கி, நமக்கு வழிகாட்டுகிறார்.

- படைப்பாளரின் தனித்தன்மை

இவர் தம்முடைய படைப்பில் உலக நெறியினைச் சுட்டும்பொழுது அதில் அனுபவத்தெளிவு வெளிப்படுகிறது. இவருடைய சிறுகதைகள் சிந்தனைத் தெளிவினை ஏற்படுத்தி, அறிவினைக் கூர்மையாக்குகின்றன. மரபு சார்ந்த நெறிகளை இவருடைய சிறுகதைகளில் காணமுடிகிறது. 'வெற்றியா? தோல்வியா? என்பதைக் காட்டிலும் 'கடினமான தோல்வி; எவ்வளவு இழப்புகளுடன் வெற்றி' என்ற கேள்வியை உருவாக்கித் தத்துவ நெறிக்கு இடமளிக்கிறார். இவருடைய அனுபவத்தில் பெறப்பட்டுள்ள சிறுகதைகள் அனைத்தும் தத்துவக் கருத்துகளை உணர்த்துகின்றன.

இவருடைய சின்னச் சின்ன வெளிச்சங்கள் தொகுப்பில் 52 சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் உலக நெறிகளை உள்ளடக்கியவைகளுள் தலைப்புக்கு மூன்றாக மொத்தம் 9 சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்று தலைப்புகளில் விளக்கப் பெறுகின்றன. இயற்கையின் படைப்பில் உலகில் தோன்றிய உயிர்கள் உயர்திணைக்கும், அஃறிணைக்கும் உரியவையாகின்றன. உயர்திணைக்கு உரியவர்களாக மனிதர்கள் சிறப்புப் பெறுகின்றனர். அஃறிணைக்கு உரியனவாக விலங்குகளும், தாவரங்களும் அமைகின்றன. அவை பகுத்தறிவினைப் பெறாவிட்டாலும்கூட உலக நெறிகளை உணர்த்தும் உணர்வுகளைப் பெற்றனவாகப் படைப்பாளர் காட்டுகிறார். உலகில் தோன்றிய அஃறிணை உயிர்களையும் தத்துவ நெறிக்கு உட்படுத்தும் அளவில் படைப்பாளர் சிறந்த உலக நேயத்திற்கு வழிகாட்டுபவராக விளங்குகிறார். படைப்பாளர் காட்டும் உலக நெறிக்குரிய சிறுகதைகளைப் பின்வருமாறு காணலாம்.

### 5.2.1 விலங்குகள் வழி அறியப்படும் தத்துவங்கள்

இச்சிறுகதைத் தொகுப்பில் விலங்குகள் கூறும் தத்துவங்களை உரைக்கும் சிறுகதைகளாகப் பல சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் இருப்பது மட்டுமா வாழ்வு, பாதுகாப்பு, ஆதாரம் ஆகிய சிறுகதைகள் விலங்குகளுக்கு மட்டுமல்லாமல் மனிதர்களுக்கும் பாடம் கற்றுத் தரும் அளவில் சிறப்பிடம் பெறுகின்றன. இக்கதைகளும், கதைகள் உணர்த்தும் தத்துவக் கருத்துகளும் பின்வருமாறு விளக்கப்படுகின்றன.

- இருப்பது மட்டுமா வாழ்வு – சிறுகதை

ஆமைகள் இரண்டு சந்தித்துக் கொண்டன. 'வர வர உலகம் மோசமாகி விட்டது. ஏன்தான் இப்படி அவசரகதியாய் ஆகிவிட்டார்களோ? இப்படித் தலைதெறிக்க ஓடுகிறார்களே, எல்லாரும் முட்டி மோதி விழப் போகிறார்கள்' என்றது ஒன்று. 'ஆமாம், இப்படி அவசரப்பட்டு என்ன சாதிக்கப் போகிறார்கள். அல்பாயுசில் போய் விடுவார்கள். நம்மைப் போல் முன்னூறு, நானூறு ஆண்டுகள் வாழ முடிகிறதா இவர்களால்? நிதானமாய் இருந்தால் தானே நீடிக்கும் ஆயுள்!' என்றது மற்றொன்று

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இன்றைய அவசர உலகம் விலங்குகளின் வாயிலாக விமர்சிக்கப்படுகிறது. மனிதன் பரபரப்பான வாழ்க்கை மேற்கொண்டுள்ளது சுட்டிக்காட்டப்படுகிறது. நிதானமின்றி அவசரப்படும் மனிதன், வாழ்க்கையில் சாதனைக்கு இடமின்றி விரைவில் தன் வாழ்வை இழந்து விடுவதை இக்கதை புரியவைக்கிறது. வாகனத்தில் வேகம், வாழ்க்கையில் வேகம் இவையனைத்தும் மனிதனின் உடல் மற்றும் உள்ளத்தைப் பாதிப்பதாகக் கூறப்படுகிறது.

ஆமை போல் நிதானமாய் இருந்தால் பயன் இல்லை என்ற பழைய கருத்து இன்றைய சூழலில் புதுவடிவம் பெற்றுச் சிந்திக்க இடமளிக்கிறது. அவசரப்பட்டு, சாதிக்காமல் அல்பாயுசில் போய்விடுவதைக் காட்டிலும் நிதானமாய்ச் செயல்பட்டு ஆமையைப்போல் நீண்ட நாள் வாழ்வதே சாதனைக்குரியது என்பது அறியப்படுகிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என்பது உணர்த்தப்படுகிறது. பதற்றமில்லாமல் செயல்படுவது அவசியம் என்பது அறிவுறுத்தப்படுகிறது. ஆகவே நிதானமான வாழ்க்கை, ஆரோக்கியமான எண்ணங்கள் ஆகிய இவைகளே மனிதனை நீண்ட நாளைக்கு வாழவைக்கும் என்னும் தத்துவத்தை உணர்த்துகிறது இச்சிறுகதை.

- பாதுகாப்பு – சிறுகதை

நத்தைக்கு வெகுநாளாய் ஒரு வருத்தம், தன்னால் வேகமாக நடக்க முடியவில்லையே என்று. முயல் ஒன்று, துள்ளிக்குதித்து வேகமாய் ஓடுவதைப் பார்த்து நத்தை, 'எப்படி நீங்களெல்லாம் வேகமாய் இருக்கிறீர்கள்?' என்று கேட்டது. 'இதிலென்ன வியப்பு, வெறுமனே இருப்பதால் வேகமாய் இருக்கிறோம். ஆமையைப் பார்த்தாயா? அதுவும் மிதம். அதன் முதுகில் ஓடு. உன் முதுகில் கூடு. அதனால்தான் பாரம் தூக்கிக் கொண்டு மெதுவாக நடக்கிறீர்கள். பாதுகாப்பு அதிகமாக அதிகமாக வேகம் குறைகிறது. நீயும் கூட்டை உதிர்த்து விடு. வேகமாய் இருக்கலாம்' என்றது முயல்.

அப்பொழுது அருகிலிருந்த மரத்தடியில் ஏதோ சலசலக்க முயல் துள்ளி ஓடி மறைந்தது. நத்தை கூட்டுக்குள் புகுந்து அங்கேயே கிடந்தது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ வேண்டும் என்ற தத்துவம் இதன் வழி வெளிப்படுகிறது. ஒருவரைப் பார்த்து மற்றவர் வருந்துவதும், தாழ்வு மனப்பான்மை கொள்வதும் தேவையில்லை என்பது உரைக்கப்படுகிறது. இறைவன் படைப்பில் ஒவ்வொரு உயிரும் ஒரு சிறப்புத் தன்மை கொண்டே உருவாகியுள்ளது. அந்தந்த உயிரும் அதனதன் சிறப்பினை உணராத வரையிலும் பிற உயிர்களைக் கண்டு வருந்தவே செய்யும். அதை உணரும் நிலையில் பிரச்சனைக்கு இடமில்லாமல் போய்விடும். நத்தைக்குத் துள்ளிக் குதிக்கும் முயலைப் பார்த்து, தன்னால் வேகமாக ஓடமுடியவில்லையே என்ற வருத்தம். அதே சமயம் ஆபத்து வரும்போது முயல் துள்ளிக்குதித்து ஓடித் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆனால் நத்தைக்கு அத்தகைய அவசியமின்றி இருந்த இடத்திலேயே தன்னைக் கூட்டுக்குள் நுழைத்துக் கொண்டு காப்பாற்றிக் கொள்வதைக் காணமுடிகிறது. ஆகவே வேகம் முயலுக்கும், நிதானம் நத்தைக்கும் சிறப்பினைத் தருவதைக் காண முடிகிறது.

மனிதர்களும் இங்ஙனமே அவரவர் சிறப்பினை உணர்ந்து அதற்கேற்பச் செயல்படுவதன் மூலம் சிறப்படையலாம் என்பது உணர்த்தப்படுகிறது. நத்தைக்குச் சுமை இருப்பதால் ஓடமுடியவில்லை. அதே போல, முயலுக்குச் சுமை இல்லாததால் நன்கு ஓட முடிகிறது. மனித வாழ்க்கையும் இதனை ஒத்ததாகவே உள்ளது. தவறுகளுக்கு இடமில்லாத, மடியில் கனமில்லாத வாழ்க்கை வாழ்பவர்கள் பாதுகாப்பாக வாழமுடிகிறது. தவறுகளுக்கு இடம் கொடுப்பவர்களின் வாழ்க்கையே பாரமாகி, மன உளைச்சலுக்கு ஆளாகித் துன்பப்படுவதைக் காண முடிகிறது.

- ஆதாரம் – சிறுகதை

மண்புழுவும், பூரானும் சந்திக்க நேர்ந்தது. பூரான் மண்புழுவைப் பார்த்து, 'எனக்கு எத்தனைக் கால்கள் பார். உனக்கு ஒன்று கூட இல்லையே' என்று கேலி செய்தது. அவ்வழியாக வந்த மனிதன் இவற்றின் பேச்சைக் கேட்டுவிட்டு, பூரானைப் பார்த்துச் சொன்னான், 'உனக்கு இத்தனை கால்கள் இருந்தென்ன பிரயோஜனம்? கடிப்பதைத் தவிர வேறென்ன செய்திருக்கிறாய்? கால்கள் இல்லாவிட்டாலும் இந்த மண்புழு மண்ணைப் பண்படுத்தி, மகசூலைக் கூட்டுகிறதே' என்கிறான்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

பிறருக்குப் பயனில்லா வாழ்வு பாராட்டிற்கு இடமளிக்காது என்ற கருத்து இக்கதை மூலம் உணர்த்தப்படுகிறது. பிறருக்குப் பயன்படாத உள்ளம், செல்வம் இருந்தும் பயனற்றவை என்பது அறிவுறுத்தப்படுகிறது. பிறருக்கு நன்மை செய்து வாழும் வாழ்வினை வாழாவிட்டாலும், பிறருக்குத் துன்பம் கொடுத்து வாழும் வாழ்வு கூடாது என்பது பூரானின் மூலம் உணர்த்தப்படும் தத்துவக் கருத்தாகிறது. தன்னிடம் இருப்பதைப் பிறருக்குக் கொடுத்து மகிழ்ந்து வாழும் வாழ்க்கையை உடையவன் மண்புழுவை ஒத்தவனாவான். இதன் மூலம் மனிதனின் சொல்லும், செயலும் பிறரின் நல்வாழ்வை நோக்கியதாக அமைந்து, மனிதநேயத்தை வளர்க்க உதவ வேண்டும் என்பது கதை வலியுறுத்தும் கருத்தாகிறது.

### 5.2.2 பறவைகளின் வழி அறியப்படும் தத்துவங்கள்

படைப்பாளர் நல்ல ஏற்புடைய கருத்துகள் எவர் வழிப் பிறப்பினும் அவற்றை ஏற்றுக்கொள்வதே சிறப்பு என்ற அடிப்படையில் பறவைகளின் வழி அறியப்படும் தத்துவக் கருத்துகளைச் சிறுகதையாக்கியுள்ளார். பறவைகள் கூறும் கருத்துகள் அவற்றின் இனத்திற்கும் மனிதனுக்கும் பயனளிப்பனவாகவே உள்ளன. இப்பகுதியில் மூன்று சிறுகதைகள் இடம்பெறுகின்றன. துணிவு, வரம், நிறபேதம் ஆகிய சிறுகதைகள் உணர்த்தும் தத்துவக் கருத்துகளை இனிக் காண்போம்.

- துணிவு – சிறுகதை

வெளியே அசுர மழை நிற்காமல் தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது. கூட்டிலிருந்து ஒரு குருவி வெளியே பறக்கத் தயாரானது. தாய்க்குருவி தடுத்தது. 'இம்மழையில் பறக்கிறாயே, அடிக்கிற காற்றில் சிறகுகள் பிய்ந்து இறந்துவிடுவாய். உனக்கென்ன பைத்தியமா?' என்றது. 'இம்மழை தொடர்ந்தால் வயல்கள் எல்லாம் மூழ்கி உண்ண ஒரு மணியும் கிடைக்காது. நீங்கள் உயிர்த்திருந்தாலும் பசியில் மரிப்பீர்கள். பசியில் மரிப்பதிலும், விபத்தில் மரிப்பது தேவலை. முடிந்தால் தப்பித்துத் தொலைதூரம் செல்வேன்' எனக் கூறிவிட்டுப் பறந்தது.

'எட்டிப் பறக்கிறவர்கள்தானே வெற்றியைத் தட்டிப் பறிக்க முடியும்!' என்பதோடு கதை முடிவடைகிறது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

சிக்கல்களை எதிர்கொண்டு வாழ மனிதன் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இச்சிறுகதை வலியுறுத்துகிறது. சிக்கல்களை எதிர்கொள்ள விரும்பாமல் உயிரை விடுவதைக் காட்டிலும், அவற்றை எதிர்கொண்டு உயிர்வாழ்வது சிறந்தது என்பது உரைக்கப்படுகிறது. வாழ்க்கையில் சிரத்தை எடுத்துக்கொண்டு வாழாவிட்டால் வாழ்க்கையே கிடையாது (சிரத்தை – அக்கறை).

வெற்றி என்பது நாம் உட்கார்ந்த இடத்திலேயே வந்து கிட்டுவது அல்ல. அதை எட்டிப்பிடிக்க உழைப்பு வேண்டும்; முயற்சி வேண்டும் என்பது உரைக்கப்படுகிறது. இக்கதையில் இடம்பெறும் குருவி, தாய்க்குருவி தடுத்தும் கேளாமல், மழையில் இறந்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் உயிர் வாழும் பொருட்டு வேறு இடம் நோக்கிச் செல்லும் முயற்சி அதன் வெற்றிக்கு வழிகாட்டுவதாயுள்ளது. 'வயல்கள் எல்லாம் நீரில் மூழ்கிய நிலையில் உணவின்றி, நீங்கள் இப்போது உயிர்த்திருந்தாலும், இறக்க வேண்டித்தான் வரும்' என்பதன் மூலம் கஷ்டப்படாமல் வெற்றி கிட்டாது என்பது அறிவுறுத்தப்படுகிறது. இக்கருத்து குருவிகளுக்கு மட்டுமல்லாமல் உயிர் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் பொருந்தும் தத்துவ நெறியாகிறது.

- வரம் – சிறுகதை

வண்ணத்துப் பூச்சியைப் பார்க்கும் பொழுதெல்லாம் தட்டான் பூச்சிக்குப் பொறாமை. 'நானும் பூச்சியினம்தான். ஆனால் உனக்கு மட்டும் எப்படி, இப்படிப் பளபளப்பான இறக்கைகள்? தேன் உண்ணும் காரணத்தினாலா?' என்று கேட்கிறது. அதற்கு வண்ணத்துப் பூச்சி சொன்னது: 'நான் என்னைக் கூட்டுப்புழுவாகக் குறுக்கி வெளியே வராமல் எனக்குள்ளே சுயகட்டுப்பாடுடன் பல நாட்கள் உணவின்றித் தியானம் செய்கிறேன். அதனால்தான் எனக்கு வண்ணச் சிறகுகள் முளைக்கின்றன. தவம் இல்லாமல் வரம் கிடைக்குமா?' என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இக்கதை கூறும் கருத்துகள் தட்டான்பூச்சிக்கு மட்டுமன்றி மனித இனத்திற்கும் பொருந்துவதாகின்றன. பிறரது வளர்ச்சியைப் பார்த்துத் தட்டான் பூச்சியைப்போல் பொறாமைப்படுவதைக் காட்டிலும், வளர்ச்சிக்கு என்ன காரணம் என்று அறிந்து செயல்படுதலே நலம் பயப்பதாகும். வண்ணச் சிறகுகள் வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபடும் வண்ணத்துப்பூச்சி சுயகட்டுப்பாடுடன் உணவின்றி, தியானம் செய்து அதில் வெற்றியும் பெறுகிறது. அதேபோல்தான் மனிதனும் தான் விரும்பும் ஒன்றினைப் பெற, தன்னை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதிலேயே தன் கவனத்தைப் பதித்து, சுயகட்டுப்பாட்டிற்கு இடமளித்து நிலைக்க வேண்டும். எந்த ஒரு செயலையும் தவம்போல எண்ணி, சிந்தை கலையாமல் செயல்படும்போது மட்டுமே அதன் முழுப்பயனாக வரம் கிட்டும் என்பது கதை உணர்த்தும் தத்துவ நெறியாகிறது.

- நிறபேதம் – சிறுகதை

ஒரு நாள் காகமும் வெண்புறாவும் ஓர் இலுப்பை மரக்கிளையில் சந்தித்துக் கொண்டன. காகம் கேட்டது 'ஒற்றுமையை உலகுக்கு உணர்த்துவது எங்கள் இனம். கூடி வாழ்வதே எங்கள் கொள்கை. அப்படியிருக்கையில் அமைதிக்குச் சின்னமாய் உங்களை எப்படி உருவகப்படுத்தினர்?' புறா சொன்னது: 'உங்கள் தோற்றத்தில் கொஞ்சம் வன்மம் உண்டு. எங்கள் உருவத்தில் சாந்தம் தெரிவதால் தேர்ந்தெடுத்திருக்கலாம் என்றே தோன்றுகிறது' என்றது. 'உங்களிலும் சாம்பல் நிறப் புறாக்கள் உள்ளன. ஆனால் வெண்ணிறத்துக்கு அல்லவா முன்னுரிமை. இதுவும் நிறம் சம்பந்தப்பட்டதா?' என்று காகம் கேட்டது. 'எப்படியாயினும் வெள்ளை என்பது நிறமல்ல. நிறங்களின் தொகுப்பு. அனைத்து நிறங்களின் சங்கமத்தில்தான் சமாதானம் அல்லவா' என்கிறது புறா.

யாரோ தூக்கியெறிந்த முறுக்குத் துண்டு ஒன்று கண்ணில்பட, காகம் கரைய, கூட்டம் கூடியது, என்பதோடு கதை முடிவடைகிறது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

மனிதர்களுக்கு மட்டுமல்ல நிற பேதம், அது பறவைகளுக்கும் உண்டு என்ற சிந்தனையின் அடிப்படையில் எழுந்த சிறுகதையாக உள்ளது. ஒற்றுமைக்கு உதாரணமாகக் காக்கைக் கூட்டம் விளங்கிய போதிலும், அதன் தோற்றத்தில் வன்மம் இருப்பதால் அது அமைதியின் சின்னமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று புறா கூறுகிறது. இதன் மூலம் அமைதிக்கான சின்னத்தைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள காரண காரியம் விளக்கம் பெறுகிறது. இதைக் கேட்ட காக்கை, அமைதியின் சின்னம் புறா என்றால் உங்களுள் இருக்கும் சாம்பல் நிறப் புறாவை அமைதியின் சின்னமாக

அறிவித்திருக்கலாமே? இதுவும் நிறம் சம்பந்தப்பட்டதா? என்கிறது. இதிலிருந்து கருப்பு நிறம் காரணமாகவே காக்கையும், சாம்பல் நிறப் புறாவும் புறக்கணிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அதற்குப் புறா, வெள்ளை என்பது ஒரு தனிப்பட்ட நிறமல்ல. அது அனைத்து நிறங்களின் சங்கமம் என்று கூறுவதிலிருந்து, வெள்ளை நிறத்துள் சிவப்பு, ஊதா, பச்சை, நீலம், மஞ்சள் முதலிய ஏழு நிறங்களும் அடங்கியிருப்பது தெரிய வருகிறது. ஆகவே நிறபேதத்திற்கு இடமளிக்காத வெண்மை நிறத் தொகுப்பே சமாதானத்திற்கு இடமளிக்க முடியும் என்பது அறியப்படுகிறது (சங்கமம் – ஒன்று சேருதல், கூடுதல்).

ஆகவே நிறபேதம் என்பது பிரித்தறியும் நிலையிலேயே அது போட்டிக்கும், பொறாமைக்கும் இடமளிக்கும். ஒன்று சேர்த்துப் பார்க்கும் போது அது நிறபேதமின்றி வெண்மையாகிச் சமாதானத்திற்கே இடமளிக்கும்.

**5.2.3** தாவரங்களின் வழி அறியப்படும் தத்துவங்கள்

உலக உயிர்களைத் தம்முடைய சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறச் செய்யும் படைப்பாளர் இவ்வகையில் தாவரங்களையும் இடம்பெறச் செய்துள்ளார். மனிதன் தாவரங்கள் மற்றும் விலங்குகளைச் சார்ந்தவனாகவே தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறான். இதன் மூலம் தாவரங்கள் உரைக்கும் தத்துவங்களையும் அவன் அறிபவன் ஆகிறான். இப்பகுதியில் தாவரங்கள் உரைக்கும் தத்துவங்கள் ஆழமும் அகலமும், வழிபாடு, தவிப்பு ஆகிய மூன்று சிறுகதைகளின் வழி அறியப்படுகிறது.

- தவிப்பு – சிறுகதை

பூக்கடையில் விற்பனைக்காக வைத்திருந்த மல்லிகை, தாமரையைப் பார்த்துப் பகர்ந்தது. ‘உன் அளவிற்கு நான் பெரிதாக இல்லையே. அளவில் சிறியதாய், நுட்பமாய்ப் போய்விட்டேனே என்னும் ஏக்கம்தான் என்னை இந்தக் கொடியிலும் வாட்டுகிறது.’ ‘எனக்கில்லாத மணம் உனக்கிருக்கிறதே என ஏன் நீ மகிழக் கூடாது? நம்மில் மகரந்தச்சேர்க்கை நடப்பதற்காகத் தானே நிறமும், மணமும். மணம் கொண்டு நீ தேனீக்களை ஆகர்ஷித்து விடுகிறாய். மணமற்ற நான் அவற்றை அளவைக் கொண்டே ஈர்க்க முடியும். ஒன்றைக் கொடுத்துவிட்டுத்தான் ஒன்றைப் பறித்துக்கொள்கிறது இறைமை. கிடைத்ததற்காக நாம் என்றேனும் நன்றி சொல்லியிருக்கிறோமா? என்று எண்ணிப் பார்க்க வேண்டும்’ என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இருப்பதை வைத்து நிறைவு அடைந்து வாழும் வாழ்க்கை நெறியினை இக்கதை உணர்த்துகிறது. தாவரங்களில், மலர்கள் அவற்றின் இனப்பெருக்க உறுப்பாக விளங்குகின்றன. பூக்களின் மணம், மற்றும் நிறத்தின் அடிப்படையில் தேனீக்கள் கவரப்பட்டு மகரந்தச்சேர்க்கை நடைபெறுகிறது. தாமரைக்கு நிறம் உண்டு; மணம் இல்லை. மல்லிகைக்கு மணம் உண்டு; கவர்ச்சியான நிறம் இல்லை. ஒன்றிடம் இருப்பது மற்றொன்றிடம் இல்லையே ஒழிய, ஒவ்வொன்றிற்கும் என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. ஆகவே அதை ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும். அதை உணராமல் நம்மிடம் இல்லாத ஒன்றை எண்ணி ஏங்குவது தேவையற்றது என்பது உணர்த்தப்படுகிறது. இறைவன் பாரபட்சமின்றி ஒவ்வொருவருக்கும் ஒரு சிறப்பினைக் கொடுத்துள்ள அளவில் அச்சிறப்பினை உணர்ந்து செயல்படுதலே தேவை என்பது உணர்த்தப்படுகிறது. அதற்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டுமே ஒழிய, இல்லாததை எண்ணி வருந்தக் கூடாது என்னும் தத்துவ நெறியை இதன் மூலம் உணரலாம்.

- ஆழமும் அகலமும் – சிறுகதை

ஒரு தோட்டத்தில் ஓர் ஆலமரத்தையும், வாழையையும் தோட்டக்காரன் அருகருகில் நட்டான். ஆலமரம் வேர் பிடிப்பதற்குள் வாழை துளிர் விட்டு வளர ஆரம்பித்தது.

ஒவ்வொரு இலை விரியும் பொழுதும் வாழை ஆலங்கன்றைப் பார்த்துப் பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டேயிருந்தது. ‘நான் எவ்வளவு வேகமாய் வளர்கிறேன் பார்’ என்பதுபோல் வளர்ந்தது. விரைவில் குலை தள்ளி, தண்டெடுக்கப்பட்டு, தரையில் விழுந்தது வாழை. ஆலமரம் சொன்னது: வேகமாய் நீ வளர்ந்தது மடிவதற்காக, நான் மெதுவாக வளர்கிறேன். உன்னைப்போல் மேலோட்டமானதல்ல என்னுடைய வளர்ச்சி. மேலே வளரும் அளவிற்கு பூமிக்குள் வேர் செலுத்திக் கீழேயும் என்னை ஸ்திரப்படுத்திக் கொள்கிறேன். பன்னெடுங்காலமாய்ப் பூமியில் விழுதுக் கைகளை ஊன்றியும் நான் வாழ்ந்திருப்பேன்’ என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

பிறரின் பெருமையை அறியாமல் அவர்களை ஏளனப்படுத்துவது நல்ல வளர்ச்சிக்கான அடையாளம் ஆகாது என்பது உரைக்கப்படுகிறது. ஆலமரமும், வாழை மரமும் வெவ்வேறு வகையான வளர்ச்சிப் பருவங்களைக் கொண்டவை. ஆலமரம் முழுவளர்ச்சியடைய நாளாகிறது. வாழை மரம் விரைவில் வளர்வதுடன், தன் வாழ்க்கையையும் விரைவில் முடித்துக் கொள்கிறது. இதற்குள் ஆலமரத்தை ஏளனம் செய்வதாலோ, தன் வாழ்க்கையை எண்ணிப் பெருமிதம் கொள்வதாலோ ஏதாவது பயன் விளைகிறதா? என்றால் ஒன்றும் இல்லை. மாறாக அவ்விகழ்ச்சியை ஆலமரம் தாங்கிக்கொண்டு, தன் வளர்ச்சியைப் பூமிக்குக் கீழே செலுத்தியும் நிலைப்படுத்திக் கொண்டும் வாழ்கிறது.

இதைப்போலவே மனிதர்கள் தம்மைப் பிறர் ஏளனம் செய்வதைப் பொறுத்துக்கொண்டு நிலைபெற்ற வளர்ச்சியைப் பெறவேண்டும். குறுக்கு வழியிலான வளர்ச்சி ஒரு மனிதனுக்கு நிலைத்து நிற்க உதவாது. ஆகவே மனிதன் தன்னை நேர்மையாக, நிதானமாக உருவாக்கிக் கொள்வதன் மூலம் ஆலமரம்போல் பெருகித் தழைக்க முடியும் என்பது அறியப்படுகிறது.

- வழிபாடு – சிறுகதை

அந்தக் கோயில் முன் அமர்ந்து பூமாலை கட்டும் அந்த வயோதிகரைக் கண்டவுடன் சற்றேனும் நின்று அவர் விழிகளின் வெளிச்சத்தைப் பார்த்துவிட்டுத்தான் உள்ளே செல்லமுடியும். உள்ளே அர்ச்சகர் முகத்தில் தெரியாத தீட்சண்யம் இவரிடம் இருக்கிறதே.

அந்த வயோதிகர் சொன்னார் : ‘நான் இந்தப் பூக்களை வெறும் வருமானத்திற்காகப் பறித்து வருவதில்லை. இவை ஒவ்வொன்றையும் கட்டும்போது அவற்றின் கழுத்துகளுக்கு நோகாமல் கட்டுகிறேன். நானே இறைவனுக்குச் செலுத்துகின்ற சந்தோஷத்தோடு இதைச் செய்கிறேன். நான் இறைவனை இதுநாள்வரை உள்ளே சென்று வணங்கியதில்லை. இதுமட்டுமே நான் அவருக்குச் செய்கின்ற வழிபாடு’ என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

வழிபாட்டிற்கு உரிய மலர் எங்ஙனம் தூய்மையாக இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறதோ அதுபோலவே மனிதர்களும் தங்களின் தூய்மையான கடமையின் மூலம் இறைவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்பது கூறப்படுகிறது. தாவரங்கள் மனிதர்களின் மனநலத்தைப் பேணுவனவாயுள்ளன. அதிலும் மலர்கள் மனத்திற்கு அதிக அளவில் மகிழ்வூட்டக் கூடியனவாயுள்ளன. அந்தப் பூமாலை கட்டுபவருக்குப் பூக்கள் உயிருடன் இருக்கும் ஒரு உறவாகவே அமைந்துவிடுவதை உணரமுடிகிறது.

அதன் காரணமாகவே அவர் பூக்களின் கழுத்து நோகாமல் கட்டுகிறார். பூக்கள் பூமாலையாகி இறைவனைச் சென்றடைவதன் மூலம் தானே இறைவனை நேரில் சென்று வணங்குவதாகக் கருதுகிறார். தான் இதுவரை ஆலயத்திற்குள் சென்றதில்லை. பூக்களின் மூலம் மட்டுமே இறைவனை அவர் வழிபடுவதாகக் கூறுகிறார். பூக்கள் அவருக்கு அதிக அளவு மனமகிழ்ச்சியை அளிப்பதன் மூலமாகவே அவரது முகமும் பொலிவுடன் காணப்படுகிறது. இதன் மூலம் தாவரங்கள் மனித மனத்திற்கு இதமளித்து மனநலம் பேணுவனவாக இருப்பது தெரிய வருகிறது. ஆகவே பசுமை பேணப்பட வேண்டும் என்பதும் மரங்களை மனிதர்களாகப் போற்ற வேண்டும் என்பதும் தத்துவ நெறிகளாக அறியப்படுகின்றன.

## 5.3 இறையன்புவின் சிறுகதைகளில் சான்றோர் நெறிகள்

சான்றோர் கூறும் நெறிகள் தத்துவத்திற்கு இடமளிப்பனவாய் உள்ளன. இப்பகுதியில் இறைத் தத்துவங்கள், குரு கூறும் தத்துவங்கள், துறவி கூறும் தத்துவங்கள் ஆகிய மூன்று பிரிவுகளில் சான்றோர் கூறும் தத்துவ நெறிகள் அறியப்படுகின்றன. இறை கூறும் தத்துவங்கள் இறைநெறியினைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன. குரு கூறும் தத்துவங்கள் அறிவுரை கூறக்கூடிய வகையில் சிறப்பிடம் பெறுகின்றன. துறவி கூறும் தத்துவங்கள் வழிகாட்டலின் அடிப்படையில் அமைந்துள்ளன. இன்றைய மனித வாழ்வு செம்மைப்படுத்தப்பட இத்தகைய தத்துவ நெறிகள் தேவை என்ற அளவில் படைப்பாளரின் சிறுகதைகள் சமூகப்பயன் விளைவிக்கக் கூடியனவாகக் கொள்ளப்படுகின்றன. இனி, சான்றோர் கூறும் தத்துவ நெறிகளைக் காணலாம்.

### 5.3.1 இறைத் தத்துவங்கள்

உலக உயிர்கள் அனைத்தையும் இறைவன் படைத்ததாகத் தத்துவம் உரைக்கிறது. இவ்வுலகைப் படைத்த இறைவனின் படைப்புத் தத்துவங்களை அறிய இப்பகுதி துணை நிற்கிறது. இதில் படைப்பு, பிரதிபலிப்பு, காரணம் ஆகிய மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. இனி அக்கதைகளையும் அவற்றின் தத்துவங்களையும் காணலாம்.

- படைப்பு – சிறுகதை

அவர் ஒரு குயவர். அழகழகாய் மண் பாண்டங்கள் செய்து அடுக்கி வைத்திருந்தார். அந்த வழியே சென்ற மற்றொருவர், ‘இந்த ஆட்டை ஏன் இப்படிக் கட்டி வைத்திருக்கின்றீர்கள்’ என்று குயவரிடம் கேட்டார். ‘நான் கடவுளை மகிழ்விக்க இதைப் பலிதரப் போகிறேன்’ என்றார் குயவர். வந்தவர் ‘அப்படியா’ என்று கேட்டுவிட்டு அங்கிருந்த அழகிய பானைகளை ஒவ்வொன்றாகப் போட்டு உடைக்க ஆரம்பித்தார். பதறிப் போய் ஓடிவந்த குயவர் இரைந்து கத்தினார். அதற்கு, ‘உனக்கு சந்தோஷமாக இருக்குமே என நினைத்தேன்’ என்றார் வந்தவர். ‘நான் செய்த பானைகளை என் முன்னால் போட்டு உடைத்தால் சந்தோஷம் வருமா?’ என்றார், கோபமாக. ‘நீ மட்டும் இறைவனின் படைப்பை அவர் முன்னால் கொன்றால் அவருக்கு மகிழ்ச்சி கிடைக்குமென நினைக்கிறாயே!’ என்றார் வந்தவர்.

குயவருக்குப் புரிந்தது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இறைவன் உலகத்து உயிர்களைப் படைத்தவன். இறைத் தத்துவம் என்பது ஓர் உயிர் மற்றொரு உயிரைத் துன்புறுத்துவதோ, கொல்லுவதோ கூடாது என்பதுதான். இறைவன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு பூண்டவன். அதில் எந்த ஓர் உயிருக்குத் துன்பத்தை ஏற்படுத்தினாலும் அதை அவனால் தாங்கிக் கொள்ள முடியாது. குயவன் தான் செய்த பானைகளைத் தன் கண்ணெதிரிலே போட்டு உடைக்கும்போது எப்படிப் பதறி இரைந்து கத்துகிறானோ, அதுபோல்தான் இறைவனும் தன் கண் எதிரிலேயே ஓர் உயிர் பலியிடப்படும்போது அதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆகவே மனிதன் மனிதனை அழிப்பதற்கும், விலங்குகளை அழிப்பதற்கும், இயற்கையை அழிப்பதற்கும் இறைவன் இடம் தருவதில்லை. கண்ணெதிரில் இறைவன் தோன்றமாட்டான் என்ற எண்ணத்தில் மனிதன் இயற்கை விதிகளைப் பயமின்றி மீறுவது என்பது அவனுக்குத் துன்பத்தைக் கொடுப்பதாகவே அமையும் என்ற தத்துவம் இங்கு இறைநெறியாக உணரப்படுகிறது.

- பிரதிபலிப்பு – சிறுகதை

‘இறைமை தன்னை எல்லாவற்றிலும் பிரதிபலிப்பதாகச் சொல்கிறீர்களே எப்படி என விளக்க முடியுமா?’ இளைஞன் அந்தத் துறவியைக் கேட்டான். சிரித்துக் கொண்டே அவனை நள்ளிரவு வரை பொறுத்திருக்கும்படி துறவி கூறினார். அன்று முழுநிலவு நாள். இரவில் அவனை ஒரு குளத்திற்கு அழைத்துச் சென்றார். அதனுள் நிலவின் பிம்பத்தைக் காட்டினார். சின்னக் குவளை ஒன்றில் நீரை நிரப்பி அதனுள்ளும் நிலவின் பிம்பத்தைக் காட்டினார். பிறகு ஒரு கேணிக்கு அழைத்துச் சென்றார் அதிலும் காட்டினார். ‘இவற்றிலெல்லாம் என்ன தெரிந்தது? நிலவின் பிம்பம். எப்படி ஒரே நிலவு தன்னை எல்லா நீர்நிலைகளிலும் பிரதிபலிக்கின்றதோ அப்படித்தான் இறைமையும்’ என்றார் துறவி.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இறைவன் எங்கும் நிறைந்து இருக்கிறான். எதிலும் மறைந்து இருக்கிறான். அவனுக்கு உயர்வு, தாழ்வு இல்லை. உலக உயிர்களைக் காப்பதற்காக அவன் அண்டமெல்லாம் தன்னைப் பிரதிபலித்துக் காட்டிக் கொண்டிருக்கிறான். இத்தத்துவ நெறியே இக்கதையின் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது. ஒரு முழுநிலவு எப்படித் தன்னைப் பெரிய குளத்திலும் சின்னக் குவளையிலும், கேணியிலும் வெளிப்படுத்திக் கொள்கிறதோ அதுபோல்தான், இறைவனும் தன்னை எங்கும் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறான். இறைவன் ஒவ்வொருவரிடமும் தோன்றி, தான் இருப்பதாகக் காட்டிக்கொள்ள முடியாது. ஆகவே இறைவன் உருவமாகவோ, அருவமாகவோ வெளிப்பட்டும், மறைந்தும் உலக உயிர்களைக் காக்கிறான் என்ற தத்துவத்தை உள்ளடக்கியதாக இச்சிறுகதை விளங்குகிறது.

- காரணம் – சிறுகதை

அந்த ஞானியிடம் ஒரு சீடன் கேட்டான். ‘விரதம் இருந்தால் பலன் கிடைக்குமா’ அவர் சிரித்துக்கொண்டே சொன்னார்; ‘கருணை மயமான இறைவன் தன் பக்தர்கள் தம்மை வருத்திக்கொள்வதை விரும்பவில்லை. விரதம் இருப்பது பசியின் கொடுமையை உணர்வதற்காக. ஒவ்வொரு முறை உணவு உண்ணும்பொழுதும் மனநிறைவுடன் நன்றி செலுத்துவதற்காக. இலையுதிர்காலம் என்பது வசந்தம் எனும் வரத்தை உணர்த்துவதற்காக’.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இச்சிறுகதையின் மூலம் இறைவன், காரணமாகவும் காரணத் தெளிவினனாகவும் விளங்குவது தத்துவ நெறியாகக் காட்டப்படுகிறது. ‘விரதம் இருந்தால் பலன் கிடைக்குமா?’ ஞானியிடம் கேட்கும் சீடனுக்கு அவர் பதில் கூறுகிறார். இறைவன் கருணைமயமானவன். பிற உயிர்களை அவன் வருத்துவதில்லை. அப்படியிருக்க இறைவனுக்காக நாம் விரதம் இருப்பது ஏன்? பசியின் கொடுமையை நாம் உணர வேண்டும் என்பதற்காகவே. மனித மனம் பக்குவம் பெறும் பொருட்டே. நிழலின் அருமை வெயிலில் தெரிவதுபோல விரதத்தின் மூலம் நாம் இதை உணருகிறோம். இறைவன், உணர்த்துவதன் மூலம் உணர வைப்பவனாக விளங்குகிறான். இதன்வழி மக்களின் நன்மைகளை முன்னிட்டே இறைத் தத்துவங்கள் உருவாகியுள்ளதை அறிய முடிகிறது.

### 5.3.2 குரு கூறும் தத்துவங்கள்

‘மாதா, பிதா, குரு தெய்வம்’ என்பதன் மூலம் குருவின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. குருவின் தத்துவங்கள் கற்றலுக்கு இடமளிக்கின்றன; ஒருவனின் உயர்வுக்குக் காரணமாகின்றன. குருவின் அறிவுரைகளை ஏற்று நடக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில்

இப்பகுதியில் மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. நம்மை நல்வழிப்படுத்தும் வகையிலும், வாழ்க்கை நெறிகளை உணர்ந்து செயல்படும் வகையிலும் இக்கதைகள் சிறப்புப்பெறுகின்றன. இலக்கு, நோக்கு, பயம் ஆகிய தலைப்புகளில் அமைந்த சிறுகதைகள் குரு கூறும் தத்துவங்களுக்கு உரியனவாகின்றன.

- இலக்கு – சிறுகதை

குரு தன் சிஷ்யர்களிடம் ஒரு வைரம் பாய்ந்த தேக்கு மரத்தைக் காட்டி, 'இதனில் என்ன செய்யலாம்' என்று கேட்டார். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரியாகச் சொன்னார்கள். ஒருவன் மட்டும் மௌனமாக இருந்தான். 'உனக்கு ஒன்றுமே தோன்றவில்லையா?' என்று அவர் கேட்டார்.

அவன் சொன்னான்: 'இது இதனைப் பயன்படுத்துபவர்களைப் பொறுத்தது. இழைக்க நினைத்தால் வேண்டிய மரச்சாமான்களாய்ப் பரிமளிக்கும்; பிளக்க நினைத்தால் விறகாகும் எரிந்து சாம்பலாகும்;'.

'வாழ்க்கையும் அப்படித்தான். இழைப்பதும், பிளப்பதும் அவரவர் கையில்' என்று குரு விளக்கிக் கூறுகிறார்.
கதை கூறும் தத்துவ நெறிகள்

ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையின் இலக்குகளை அமைத்துக் கொண்டு செயல்படுதல் வேண்டும் (இலக்கு – இலட்சியம், குறிக்கோள்).

இலக்குகள் இல்லாவிட்டால் மனம்போன போக்கில் பயனற்ற வாழ்வினராகி விடுவோம் என்பதைத் தத்துவ நெறியாக இச்சிறுகதை காட்டியுள்ளது. மேலும் வாழ்க்கையை ஆக்கப்பூர்வமாக அணுக வேண்டும் என்பதும் உரைக்கப்படுகிறது. கதையில் வைரம் பாய்ந்த தேக்கு மரத்தை என்ன செய்யலாம்? என்ற வினாவிற்குப் பல விடைகளைக் கூறமுடியும். எனினும் ஆக்கப்பூர்வமான விடையைக் கொடுக்க வேண்டும் என்பதே தேவையாகிறது. இலக்குகளுக்கு ஏற்ப அம்மரத்தைப் பயன்படுத்தலாம் என்பது ஆக்கப்பூர்வமான பதிலாகிறது. இங்ஙனமே இறைவனால் ஒவ்வொருவருக்கும் ஒரு வாழ்க்கை அமைத்துத் தரப்பட்டிருக்கிறது. அதை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்துவதும், வீணடிப்பதும் அவரவர் கையிலேயே இருக்கிறது. ஆகவே வாழ்க்கையைச் சிறப்பாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே குருவின் தத்துவ நெறியாக உரைக்கப்படுகிறது.

- நோக்கு – சிறுகதை

'எதிலும் நிறைவைப் பார்க்கத் தெரிய வேண்டும் – இந்தக் குவளை பாதித் தண்ணீரோடு இருக்கும்பொழுது பாதி நிறைந்திருக்கிறது என நினைப்பவனுக்குக் கடவுள் கதவுகளைத் திறந்து விடுகிறார்'. குரு சீடருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு சீடன் அக்குவளையிலிருந்த நீர் முழுவதையும் கீழே ஊற்றிவிட்டு, 'இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்' என்றான்.

'இப்பொழுதும் இக்குவளை வெறுமையால் நிறைந்திருக்கிறது' என்றார் குரு. இத்துடன் கதை நிறைவு பெற்றுள்ளது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

இக்கதையில் இடம்பெறும் குருவின் அறிவுரைகள் வாழ்க்கையை ஆக்க முறையில் அணுகுவதற்கு வழிகாட்டுகின்றன. ஆக்கமுறை அணுகல் மட்டுமே வாழ்க்கைக்கு இன்பமூட்டுவதாய் அமையும்; கடவுளும் இத்தகையவர்களுக்கு அருளாகிய கதவைத் திறந்து விடுவார் என்பது போன்ற தத்துவ நெறிகள் இக்கதையின் மூலம் பெறப்படுகின்றன. குவளை பாதி நீரால் நிறைந்திருக்கும் பொழுது குவளை முழுவதும் நீரால் நிரம்பவில்லையே என்று எண்ணுவதைக் காட்டினாலும் பாதி நீரால் நிரம்பியிருக்கிறது என்று எண்ணுவது ஆக்கம்தரும் சிந்தனைக்கு இடம் தருகிறது. வெறும் குவளையாக இருக்கும்பொழுது அதில் ஒன்றுமில்லை என்று குரு கூறாமல் குவளை வெறுமையால் நிறைந்திருக்கிறது என்பதிலிருந்து வாழ்க்கையை நிறைவான கண்ணோட்டத்திலேயே காண வேண்டும், இல்லாவிட்டால் வாழ்க்கை வெறுமையாகவே தோன்றும் என்னும் தத்துவக் கருத்துகள் குருவின் அறிவுரைகளாக உணரப்படுகின்றன.

- பயம் – சிறுகதை

'பயத்தினால் தான் பேராசை உண்டாகிறது என்பதை என்னால் நம்ப முடியவில்லை' சீடன் குருவை இடைமறித்தான். குரு சிரித்துக்கொண்டே இருந்து விட்டார். அன்று இரவு, எல்லாச் சீடர்களும் உணவருந்தும் பொழுது சமைப்பவன் ஓடிவந்தான். 'அரிசி திடீரெனத் தீர்ந்துவிட்டது. நாளைக் காலையில் யாருக்கும் உணவு கிடையாது; மதியம்தான் தானியங்கள் வாங்கி வரமுடியும்' என்று கூறினான்.

உணவருந்தி முடிந்ததும் குரு, சீடர்களிடையே வந்து சொன்னார். 'நாளைக் காலை உணவு கிடையாது என்றவுடன் உங்களில் பலர் வழக்கமாக உண்பதைக் காட்டிலும் அதிகமாக உண்டிருக்கிறீர்கள். எப்பொழுதைக் காட்டிலும் அதிகமாய் இன்று உணவு செலவாகியிருக்கிறது' என்றார். பயத்தைப் பற்றிக் கேட்டவன் தலைகுனிந்து கொண்டான்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

தனக்கு ஏதும் கிடைக்காமல் போய்விட்டால் என்ன செய்வது என்ற சுயநலத்தினாலும், பயத்தினாலும் பேராசை உண்டாகிறது என்ற தத்துவ நெறி இக்கதையின் வழியாகப் பெறப்படுகிறது. இக்கதையில் பயத்தினால் பேராசை உண்டாகிறது என்பதை ஏற்றுக்கொள்ளாத சீடனுக்கு, குரு பின்னர்ப் பதில் கூறுவதாகச் சொல்கிறார். சீடர்கள் உணவு உண்டு முடித்தபின் 'நாளைக்கு உணவு கிடைக்காது என்ற பயத்தினால் உங்களில் பலர் வழக்கமாக உணவு உட்கொள்வதைக் காட்டிலும் அதிகமாக உட்கொண்டு உங்களின் பேராசைகளை வெளிப்படுத்திவிட்டீர்கள்' என்று கூறுகிறார். பயத்தைப் பற்றிக் கேட்டவன் தலைகுனிந்து கொள்வதிலிருந்து பேராசை பயத்தினால் உண்டாகும் என்பது அறியப்படுகிறது. ஆகவே தன்னைப் பற்றிய அச்சத்தைத் தவிர்த்துக் கொள்வதன் மூலம் பேராசையைத் தவிர்க்கலாம் என்பது தத்துவ நெறியாக அறியப்படுகிறது.

**5.3.3** துறவி கூறும் தத்துவங்கள்

வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்றும், தியானத்தின் மூலமும், இறைவழிபாட்டின் மூலமும் பல வரங்களைப் பெற்றும் உலக அனுபவத்தைக் கற்றவர்களாகத் துறவிகள் விளங்குகின்றனர். அவர்கள் மூலம் அறியப்படும் கருத்துகள் தத்துவ நெறிகளுக்கு இடமளிப்பனவாய் உள்ளன. இவை வாழ்க்கை நெறிகளுக்கு வழிகாட்டுவனவாயுள்ளன. இத்தகைய சிறப்புமிக்க துறவிகளின் தத்துவக் கருத்துகளைப் பெற்றனவாக இங்கு மூன்று சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. துறவு, அற்புதம், பேச்சு ஆகிய சிறுகதைகளின் மூலம் துறவிகளின் வழிகாட்டலைக் காண்போம்.

- துறவு – சிறுகதை

துறவி அந்த வழியே சென்று கொண்டிருந்தார். 'ஐயோ குளிர்கிறதே' என்று நடுங்கிக் கொண்டே ஒருவன், தீ மூட்டி அதன் அருகில் அமர்ந்து கொண்டிருந்தான். துறவி நகைத்துக் கொண்டே சென்றார். சில மாதங்கள் கழிந்து திரும்பி வரும்போது அவன், 'ஆ என்ன புழுக்கம்' என விசிறிக் கொண்டேயிருந்தான். அதற்கும் துறவி நகைத்தபடியே சென்று கொண்டிருந்தார்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

எதையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் மனிதர்களுக்குத் தேவை என்பது இக்கதையின் மூலம் தத்துவ நெறியாக உணர்த்தப்படுகிறது. இன்பத்தையும், துன்பத்தையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை இக்கதை வற்புறுத்துகிறது. வாழ்க்கை என்பது மேடு, பள்ளங்களை உடையது. அது ஒரே மாதிரியான சுகங்களைத் தராது. துக்கங்களையும் நாம் சுகமாக்கிக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், துறவி கண்ட ஒருவனைப்போலக் ‘குளிர்கிறதே’ என்று தீ மூட்டிக் கொண்டும், சில மாதங்கள் கழித்துப் பார்க்கும்போது, ‘புழுக்கம்’ என்று விசிறிக் கொண்டும்தான் இருக்க வேண்டும். ‘வாழ்க்கையை வாழப் பழகிக்கொள்ள வேண்டும்’ என்பதே துறவியின் நகைப்பின் மூலம் அறியப்படும் கருத்தாகிறது.

- அற்புதம் – சிறுகதை

அந்தத் துறவி வாழ்வின் இறுதிக் கட்டத்தில் இருந்தார். அவர் சிஷ்யர்கள் இப்போதாவது ஏதாவது நடக்குமா என்று ஆவலுடன் இருந்தார்கள். ‘எனக்கு மரணம் நெருங்கிவிட்டது.’ என்றார் குரு. ‘மற்றவர்களைப் போல் உங்களுக்கும் மரணம் என்றால் உங்களுக்கும் சாதாரணமானவர்களுக்கும் என்ன வேறுபாடு?’ பொறுமையிழந்த ஒருவன், அப்படிச் சொன்னாலாவது ஏதாவது செய்துகாட்டித் தன் சக்தியை நிரூபிப்பாரா என நினைத்தான்.

‘மற்றவர்கள் மரணத்தைக் கண்டு பயப்படுகிறார்கள். மரணம் ஒரு நிகழ்வு என நான் நினைக்கிறேன். தூங்குவது போல் ஒரு தேவையாய் நான் கருதுவதால், அச்சமில்லாமல் வழிபாட்டுடன் நான் ஏற்றுக்கொள்கிறேன்.’ குழந்தைபோல் அவர் சிரிக்க, அவர் உயிர் பிரிந்தது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

மரணம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. மரணத்தை ஒரு நிகழ்வாகக் கருதினால் அதனால் ஏற்படும் துக்கம் நம்மைப் பாதிக்காது. மரணத்தை ஒரு தேவையாய்க் கருதி அதை ஏற்றுக்கொள்ளும் பொழுது அது அச்சத்தைத் தராது. மரணத்தைக் கண்டு பயந்தால் அதை நாள்தோறும் நாம் சந்திக்க வேண்டி வரும். மரணத்தைக் கண்டு கலங்காத பெரு வாழ்வு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இதன்மூலம் அறியப்படும் தத்துவ நெறியாகிறது. இக்கதையில் இடம்பெறும் துறவி ஏதாவது அற்புதத்தை நிகழ்த்தி மரணத்தைத் தள்ளிப்போடாமல் அதை ஒரு தேவையாய் ஏற்றுக் கொள்வதன் மூலம் அச்சமில்லாமல், ஒரு குழந்தைபோல் அவர் சிரிக்க உயிர் பிரிகிறது. இதன் மூலம் துறவி ‘மரணபயம் கூடாது’ என்பதற்கு வழிகாட்டி ஆகிறார் வழிகாட்டலுக்கு உரியவராகின்றார்.

- பேச்சு – சிறுகதை

பக்கத்து ஊரில் ஒரு ஞானி வந்திருப்பதாகவும், அவர் நன்றாகப் பேசக் கற்றுத் தருவதாகவும் ஒருவன் கேள்விப்பட்டான். அவனுக்கு ஆசை, ‘தான் பேசுவதை யாரும் ரசிப்பதில்லையே’ என்ற குறை நீங்க வேண்டுமென்று. அவரிடம் சென்றான். இவருக்கா இத்தனைத் திறமை என நினைக்கும்படியாய் எளிமையுடன் ஞானி இருந்தார். ‘எனக்கும் சுவையாய்ப் பேச வேண்டும் என்று ஆசை’ என்றான். ‘ஒரு மாதத்திற்கு நீ யாருடனும் பேசாமல் இருக்க வேண்டும் சம்மதமா?’ என்றார் ஞானி.

‘நான் பேசக் கற்றுக் கொள்ள வந்திருக்கிறேன். மௌனத்தையல்ல’ என்றான் அவன். ‘மௌனத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டால்தான் வார்த்தைகளின் உண்மையான சக்தி புரியும். நான் எதையும் எதிர்மறையிலிருந்து தொடங்குவேன். உண்மை, எதிர்மறையையும் உள்ளடக்கியது. நன்றாகப் பேசுவது நிறையப் பேசுவது அல்ல. சரியாகப் பேசுவது; அளவுடன் பேசுவது, அடுத்தவர்களுக்குப் புரியும்படியாகப் பேசுவது’ என்றார் ஞானி. இப்போது அவனுக்குப் புரிந்தது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

ஒரு மனிதன் பேசும்பேச்சு எத்தன்மை வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை, இச்சிறுகதை தத்துவ நெறியாக விளக்கிச் செல்கிறது. உண்மை எதிர்மறையை உள்ளடக்கியிருப்பதால் ஒருவர் நன்கு, பிறர் விரும்பும்படி பேச வேண்டுமானால் முதலில் மௌனத்தை முழுமையாகக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் மிகச் சரியாக, அளவாக, பிறருக்குப் புரியும்படியாகப் பேசக் கற்றுக்கொள்ள முடியும் என்பது அறியப்படுகிறது. ஆகவே பிறரைப் புண்படுத்தாமல், தேவையற்ற வார்த்தைகளைப் பேசாமலிருக்க மௌனத்தைப் பற்றியும் அறிந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதைத் துறவியின் கருத்துகள் வலியுறுத்துகின்றன.

## 5.4 இறையன்புவின் சிறுகதைகளில் வாழ்க்கை நெறிகள்

படைப்பாளர் இறையன்பு அவர்களின் தத்துவச் சிறுகதைகள் அனைத்தும் வாழ்க்கை நெறிகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. இத்தத்துவக் கருத்துகள் அனைத்தும் மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. இவ்வுலக வாழ்வு இனிமை பெறுவதற்கு ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கை நெறிகளை உணர்ந்து செயல்படுதல் என்பது அவசியமாகிறது. இங்கு வாழ்க்கை நெறிகளைக் கூறும் தத்துவங்களாக மூன்று தத்துவங்கள் இடம்பெற்றுள்ளன. அவை தொழில் கூறும் தத்துவங்கள், மானிடத் தத்துவங்கள், வாழ்க்கைத் தத்துவங்கள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவைகளைப் பற்றிய கருத்துகளை இனிக் காணலாம்.

### 5.4.1 தொழில் கூறும் தத்துவங்கள்

மனிதன் செய்யும் தொழில் எதுவாயினும் அதில் நெறியானது பேணப்படல் வேண்டும். நெறிகள் பேணப்படும் தொழில்கள் மட்டுமே சிறப்பிற்குரியனவாகப் பேசப்படும். தொழிலில் நெறிகளைப் பேணுவதன் மூலம் தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என்று தொடர்ந்து வளர்ச்சியினைக் காண முடியும். தொழில் நெறியினைச் சிறப்பிக்கும் வகையில் இப்பகுதியில் உழைப்பு, உறுதி, அனுபவம் ஆகிய மூன்று சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின் சிறப்புகளைப் பார்க்கலாம்.

- உழைப்பு – சிறுகதை

அவன் செருப்பு உருவாக்குபவன். அணிந்திருப்பதை உணர்த்தாமல் இருப்பதே அருமையான செருப்பு. இந்தக் கலை அவனுக்குக் கைவந்ததால் அவனிடம் பல கால்கள் வந்தன. கேள்விப்பட்டு அந்த ஊர் அரசனுக்கும் ஆசை வந்தது. கால் அளவுடன் ஆள் அனுப்பினான். 'வெறும் நீளத்தை மட்டும் வைத்து என்னால் செருப்புச் செய்ய முடியாது. உங்கள் அரசன் வரமுடியாதா?' என்று கேட்டான். 'வெறும் செருப்புக்காக அவர் வரமுடியுமா? கால் நீளம்தான் இருக்கிறதே போதாதா?' என்றான் அரசனின் ஆள்.

செருப்புத் தயாராகி அரண்மனை போனது. அது சரியில்லை, இது சரியில்லை என அடிக்கடி திரும்பி வந்தது. இறுதியில் அரசனே வந்தான். 'முதலிலே நீங்கள் வந்திருந்தால் இந்தப் பிரச்சனை இருந்திருக்காதே' என்றான் செருப்புத் தைப்பவன். 'பாதத்தின் நீளம்தான் கொடுத்தனுப்பினேனே?' என்றான் அரசன். 'நீளம் மட்டுமல்ல பாதம். பருமனும்தான். அடர்த்தியும்தான். நீளத்தில் விரல்களின் விவரம் தெரிவதில்லை. கால்களின் உயரமும், மனிதனின் உயரமும் எனக்குத் தெரிய வேண்டும். பருமனாக இருப்பவர்களுக்குத் திடமான தோல்களில் செருப்புத் தயாராகும். ஒல்லியாக இருந்தால் மென்மையான செருப்பு மேம்படும். எல்லோர் மாதிரியும் என்னால் செருப்புத் தைக்க முடியாது' என்றான் செருப்புத் தைப்பவன். அரசன், 'செருப்பில் இருக்கிறதா அவ்வளவு சங்கதி?' என்றதோடு கதை நிறைவடைகிறது.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

நாம் செய்யும் தொழிலின் நுணுக்கங்களையும், உத்திகளையும் அறிந்து அதைச் செய்யும்போது அத்தொழிலினால் நாம் சிறப்படைய முடியும் என்பது கதையினால் அறியப்படும் தத்துவ நெறியாகிறது. கீழான தொழிலினைச் செய்யும் நிலையிலும் கூட அத்தொழிலின் நெறியறிந்து அதை மேற்கொள்ளும்பொழுது அதனால் சிறப்புப் பெற முடியும். ஒரு தொழிலின் நுணுக்கங்களை நன்கறிந்த நிலையில் அத்தொழிலுக்கு உரியவன் உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றப்படுவான். இக்கதையில் இடம்பெறும் செருப்புத் தைப்பவன், அத்தொழிலின் திறனை நன்கு வெளிப்படுத்தும் நிலையில் இருந்தான். அவனிடம் செருப்புத் தைக்க வேண்டும் என்ற ஆசை அரசனுக்கே ஏற்படுவதைக் காணமுடிகிறது.

அரசனின் கால் நீளத்தை மட்டும் வைத்துச் செருப்புத் தைக்கும்போது அது அரசனுக்குச் சரியில்லாமல் போய்விடுகிறது. அதன்பின் அரசன் அவனிடம் செல்கிறான். அப்பொழுது அரசன் செருப்புத் தைப்பதற்குக் கால் நீளம் மட்டும் போதாதா? என்கிறான். அப்பொழுது செருப்புத் தைப்பவன் தன் தொழில் திறம், மற்றும் தொழில் நேர்த்தியைச் சிறப்பாக எடுத்துரைக்கிறான். அதைக் கேட்ட அரசன் 'செருப்பிலே, இவ்வளவு சங்கதியிருக்கிறதா?' என்பதன் மூலம் செருப்புத் தைப்பவன் தொழில் திறன் அவனுக்கும், அவன் தொழிலுக்கும் பெருமை தேடித் தருவதைக் காணமுடிகிறது.

- உறுதி – சிறுகதை

அந்த விவசாயப் பண்ணை அந்தப் பகுதியில் மிகவும் பிரபலம். அந்தப் பண்ணையின் சொந்தக்காரரிடம் எல்லோரும் வந்து விதைகளைப் பெற்றுச் செல்வார்கள். அவர்களுக்கு அவர் வெவ்வேறு விதமான விதைகளைத் தருவதைப் பார்த்து ஒருவர் கேட்டார்: 'ஏன் நீங்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான விதைகளைத் தருவதில்லை'.

'நான் வருபவர்களின் கைகளைப் பார்க்கிறேன். விரல் நுனியில் மட்டும் காய்ப்புக் காய்த்திருந்தால் அவர்கள் மேலோட்டமாக உழைப்பவர்கள். அவர்களுக்குப் பயிர் வகைகளை மட்டும் தருவேன். கை முழுவதும் தேய்ந்து இருப்பவர்கள் சற்று நன்றாய் உழைப்பவர்கள்.

'ஒரு வருடம் வரை பலனுக்காகக் காத்திருக்க அவர்களால் முடியும். எனவே வாழை, கரும்பு என அவர்களுக்குத் தருகிறேன். சிலர் உடலெல்லாம் முறுக்கேறிய தன்மை வெளிப்படும். உழைப்பே பிரதானம் என, பலனை எதிர்பார்க்காத அவர்களால் பல ஆண்டுகள் காத்திருக்க முடியும். அவர்களுக்கு பாக்கு, தேக்கு, மா, சந்தனம் எனக் கன்றுகளைத் தருகிறேன்' என்று பதிலுரைத்தார் பண்ணையின் சொந்தக்காரர்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

ஒருவருடைய தொழில் திறன் அவருடைய உழைப்பின் தன்மைக்கு ஏற்பவே மதிப்பிடப்படுகிறது. உழைப்பின் சிறப்பே, தொழிலின் சிறப்பினையும் காட்டுவதாகிறது. ஒரு தொழிலின் நுணுக்கங்களை அறிந்தவர்கள் அத்தொழில் செய்யத் தகுதியானவர்களை அடையாளம் கண்டுகொள்ள இயலும். கதையில் இடம்பெறும் பண்ணையின் சொந்தக்காரர், தன்னிடம் விதை வாங்குபவர்களின் உழைப்பின் தன்மைக்கு ஏற்ப விதைகளைத் தரம் பிரித்துத் தருகிறார். அது அவரது தொழில் உத்திகளையும், தொழில் செய்வோரை ஊக்குவிக்கும் தன்மையையும் வெளிப்படுத்தி, தத்துவ நெறிகளாகின்றன.

- அனுபவம் – சிறுகதை

அவர் அந்த ஊரிலிருக்கும் ஞானியிடம் சென்றார். 'என் தோட்டத்திற்கு ஒரு தோட்டக்காரன் தேவை' என்றார். 'இன்னும் மூன்று மாதம் கழித்து வா. உனக்குத் தேவையான இளைஞனை அனுப்புகிறேன்' என்றார் ஞானி.

மூன்று மாதங்களுக்குப் பிறகு ஓர் இளைஞனைத் தோட்டப் பணிக்கு அனுப்பி வைத்தார். தனக்குக் கிடைத்தவன் மலர்களில் ஒன்றையும் பறிக்காமல் நேசிப்பதையும், ஒரு இலையும் விடாமல் நீரூற்றுவதையும், சருகுகள் மீது கால்படாமல் நடந்து கொண்டிருப்பதையும் கண்டு மனமகிழ்ந்து ஞானியிடம் நன்றி சொல்லிவிட்டு, 'எதற்காக இவரை அனுப்ப உங்களுக்கு மூன்று மாதங்கள் தேவைப்பட்டது என நான் தெரிந்து கொள்ளலாமா?' என்று கேட்டார்.

‘நான் உரிய நபரைத் தேர்ந்தெடுத்து மூன்று மாதங்களாகக் காகிதப் பூக்கள் செய்கிற தொழிற்சாலைக்குப் பணிக்கு அனுப்பினேன். அங்கே வாசனையற்ற பொய் மலர்களைப் பார்த்தவனுக்கு நிஜமலர்களுடன் பழகுவதில் களிப்பும், ருசியும் ஏற்படுகிறது. அவன் இந்த உண்மையான புஷ்பங்கள் செடிக்கு மட்டுமே சொந்தம் என அதைப் பறிக்காமல், வாடவிடாமல் பாதுகாப்பான். போலியிலிருந்து உண்மையைப் புரிந்து கொள்ளும் பொழுதுதான் அது வரமாக வாய்க்கிறது’ என்றார் ஞானி.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

ஒருவன் ஒரு தொழிலில் பெறும் அனுபவமே அவன் தொழில் திறனை வளர்க்க உதவும் என்பது இக்கதையின் மூலம் அறியப்படும் நெறியாகிறது. அனுபவங்கள் தொழிலின் போலித் தன்மையையும், உண்மைத் தன்மையையும் பிரித்தறியும் தொழில் நேர்த்திக்கு இடமளிக்கின்றன. தொழிலுக்கு ஏற்ற சரியான நபர்களை உருவாக்கப் பயிற்சி அவசியம் என்பது கதை உணர்த்தும் கருத்தாகிறது.

இக்கதையில் காகிதப் பூக்கள் செய்யும் தொழிற்சாலையில் பணிபுரிபவனுக்குக் கிடைக்கும் அனுபவம் அவன் நிஜமலர்கள் உள்ள தோட்டத்தின் அருமையை உணர்ந்து, அத்தொழிலை நேர்த்தியுடன் செய்யக் காரணமாகிறது. அவன் அக்கறையுடன் அத்தொழிலைச் செய்ய அவன் பெற்ற முந்தைய அனுபவமே அவனுக்கு உதவுவதைக் காணமுடிகிறது. இதிலிருந்து தொழில் அனுபவமே செய்யும் தொழிலின் தனித்தன்மைக்குக் காரணமாவதைக் காணலாம்.

### 5.4.2 மானிடத் தத்துவங்கள்

மனிதர்களால், மற்றையோரால், மனிதர்களுக்காக உரைக்கப்படும் வாழ்க்கை நெறிகள் மானிடத் தத்துவங்களாக அறியப்படுகின்றன. மனிதர்களின் எண்ணங்களும், அனுபவங்களுமே மானிடத் தத்துவங்களாக உருவெடுக்கின்றன. மனிதர்களின் நல்ல நடத்தைக்கும், செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் மானிடத் தத்துவங்கள் உதவியாயிருக்கின்றன. இப்பகுதியில் மானிடத் தத்துவங்களை உரைக்கும் வகையில் எது மௌனம், சமத்துவம், வருத்தம் ஆகிய மூன்று சிறுகதைகள் அமைந்துள்ளன. அவற்றைப் பற்றிப் பின்வரும் கதைகளில் காணலாம்.

- எது மௌனம் – சிறுகதை

அவர் வெள்ளிக்கிழமை தோறும் மௌன விரதமிருப்பார். யாருடனும் பேசமாட்டார். எது வேண்டுமானாலும் சைகைகளாலேயே புரிய வைப்பார். புரியாமல் போனால் ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டுவார். மற்றவர்கள் அவர் கேட்பதற்கெல்லாம் சத்தமாய்ப் பதில் சொல்லலாம். சில சமயங்களில் சில பொருட்களைக் காட்டிப் புரிய வைப்பார். எப்படியானாலும் அவர் விரதமிருக்கும் நாளெல்லாம் அவர் வீட்டினர் அதிகமாய்ப் பேசித் தொலைப்பார்கள். அவரும் மனத்திற்குள்ளேயே பேசித் தீர்ப்பார் என்பதோடு கதை முடிவடைந்துள்ளது.

- சிறுகதை கூறும் தத்துவ நெறிகள்

மனிதனின் நடத்தைகள் உள்ளொன்று வைத்துப் புறமொன்றாக இருக்கக்கூடாது. சில நெறிகளைக் கடைப்பிடிக்கும்போது, அதன் உண்மைத் தன்மையை இழந்துவிடாத அளவில் அதைப் போற்றுதல் என்பது அவசியம். இக்கதையில் மௌனம் இருப்பவரின் வாய்தான் பேசவில்லையே ஒழிய மற்றபடி அவரது மனம் ஓயாமல் பேசிக்கொண்டே இருக்கிறது. அதே போல் இவர் விரதம் இருப்பதால் மற்றவர்கள் அதிகமாகப் பேச வேண்டியுள்ளது. புலன்களின் அடக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் விரதம், அதன் தன்மையை இழந்து, அதனோடு மற்றவர்களும் பாதிப்பிற்கு ஆளாவதும் காட்டப்படுகிறது. ஆகவே ஒரு மனிதனின் நடத்தைகள் அவருக்கும், பிறருக்கும் நன்மையளிக்கக் கூடியவையாக இருக்க வேண்டுமே ஒழிய, பாதிப்புகளை ஏற்படுத்துவதாக இருக்கக்கூடாது என்பது கதை உரைக்கும் கருத்தாகிறது.

- சமத்துவம் – சிறுகதை

ஒரு நாள் ஒருவன் மருத்துவ மனைக்குச் செல்ல நேரிட்டது. தெரிந்தவருக்குக் குழந்தை பிறந்திருந்தது. நினைத்துக் கொண்டான், ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்பதுகூட இன்று பொய்யாகிவிட்டதோ’ என்று.

‘சில குழந்தைகள் குடிசைகளில், வரப்புகளில் பிறக்க நேரிடுகின்றன. சில எல்லா வசதிகளும், பாதுகாப்புகளும் நிறைந்த சூழலில் அல்லவா பிறக்கின்றன. வாசனைத் திரவியங்களின் நடுவே ஜில்லிட்ட அறையின் கதகதப்பில் சில மலருகின்றன. என்ன வேறுபாடு!’

பிறிதொரு நாளில் ஒரு கல்லறைக்குச் சென்றான். அட! இறப்பிலுமா வேறுபாடு காட்ட வேண்டும்? சில, பளிங்குக் கல்லறைகளாய், செத்தவர்கள் பெயர்களோடு பளபளத்தன. சில, நிலத்தோடு சமமாய் அடங்கிக் கிடந்தன. ‘இறப்பையும் கூட மனிதனால் எப்பொழுதும் சமமாய் ஏற்றுக்கொள்ள முடிவதில்லையோ!’ என எண்ணினான்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

பிறப்பையும், இறப்பையும் மனிதன் சமமாகக் கருதும் அளவிலேயே மனிதர்களிடையே சமத்துவம் மலர முடியும் என்பது கதைகாட்டும் நெறியாகிறது. அங்ஙனம் இன்றி, ஏற்றத்தாழ்வுகளுக்கு மனிதன் இடமளிக்கும் வரையில் மனித வாழ்வில் சமத்துவம் ஏற்படாது. இறைவனுடைய படைப்பில் பிறப்பு, இறப்பு எல்லா மனிதர்களுக்கும் ஒரே மாதிரியானதாகத்தான் அமைந்துள்ளது. ஆனால் மனிதன் பணத்தாலும், பேராசையாலும், மதத்தாலும், இனத்தாலும் தன்னை வேறுபடுத்திக்கொள்ளும் பொழுதே சமத்துவத்திற்கு இடமில்லாமல் போகிறது.

மனிதன் ஒரு தாய் வயிற்றிலிருந்துதான் பிறக்கிறான். இதில் வேறுபாடு இல்லை. ஆனால் பிறக்கும் சூழல் உயர்வு, தாழ்வுக்கு உரியதாகிறது. அதே போல் இறப்பிற்குப் பிறகு ஒவ்வொருவரும் மண்ணிற்கே இரையாகின்றனர். எனினும் ‘கல்லறைகள்’ இறப்பிலும் மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுகின்றன. வாழ்க்கை நெறிகளை அறிந்தவர்கள் உயர்வு, தாழ்வுக்கு இடம்கொடுக்க மாட்டார்கள். ஏனெனில் உயர்ந்த நிலையில் பிறப்பவர்களும் இறந்தபின் மண்ணிற்கே உரியவர்களாவதை அவர்கள் அறிந்தவர்களாகின்றனர். ஆகவே இறப்பும், பிறப்பும் அனைவருக்கும் சமம் என்பதை மனிதர்கள் உணர்ந்து செயல்படுவதன் மூலம் மட்டுமே மானிடத் தத்துவங்கள் சிறப்புப் பெறும்.

- வருத்தம் – சிறுகதை

நள்ளிரவு நேரம். அந்தக் குடிசை பற்றி எரிந்து கொண்டிருந்தது. அதில் இருந்தவர்கள் எல்லோரும் அதை அணைக்கப் போராடிக் கொண்டிருந்தார்கள். அடுத்த நாள், பக்கத்து வீட்டுக்காரர் குடிசைக்காரரை அழைத்து, ‘உங்கள் வீடு எரிந்தது குறித்து எனக்குத் துக்கம் தாளவில்லை. இரவு முழுவதும் அழுது தீர்த்தேன். அதைப்பற்றி ஒரு கவிதை எழுதினேன். படித்துக் காட்டட்டுமா?’ என்றார்.

‘நீங்கள் கவிதை எழுதியதற்கு, பேசாமல் ஒரு வாளித் தண்ணீரை ஊற்றியிருந்தால் நெருப்பைச் சீக்கிரம் அணைத்திருப்போமே’ என்றார், குடிசையை இழந்தவர்.

- கதை கூறும் தத்துவ நெறிகள்

மனிதர்கள் தங்களின் பெருமைகளை வெளிப்படுத்திக் கொண்டு சுயநலக்காரர்களாய் வாழ்வதைக் காட்டிலும் மனிதநேயத்தோடு பிறருக்கு

உதவி, சமுதாயப் பயன்மிக்கவர்களாக வாழவேண்டும் என்பது கதை காட்டும் தத்துவக் கருத்தாகிறது. மனிதநேயம் உள்ளவர்களாகக் கூறிக்கொள்வதைக் காட்டிலும், உதவுதலையே மேற்கொள்ள வேண்டும் என்பதைச் சிறுகதை வற்புறுத்துகிறது. இக்கதையில் குடிசை எரிந்த வருத்தத்தை வெளிப்படுத்தும் கவிதையினால் யாதொரு பயனும் இல்லை. கவிதையின் மூலம் தன் வருத்தத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் மனிதராலும் பயனில்லை. அதற்குப் பதில் அந்தச் சமயத்தில் ஒரு வாளித் தண்ணீரைக் கொண்டு நெருப்பை அணைக்க உதவியிருந்தால் அது பிறரின் துன்பத்தைத் தீர்க்க உதவியாயிருந்திருக்கும். மனிதநேயம் என்பது பேச்சளவில் இல்லாமல், செயலளவில் பிறர் துயர் துடைக்க உதவுவதாயிருக்க வேண்டும் என்பது கதையின் கருத்தாகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 5.5 உலக வாழ்வில் தத்துவ நெறிகள் பெறும் இடம்

இந்த உலக வாழ்வு தத்துவ நெறிகளுக்கு உட்பட்டதாகவே விளங்குகிறது. தத்துவ நெறிகளை உணராத, கடைப்பிடித்து வாழாத மனிதன் கூடத் தன்னுடைய வாழ்வில் ஏதாவது ஒரு காலகட்டத்தில் தத்துவ நெறியினை உணர்ந்து செயல்பட ஆரம்பித்து விடுகிறான். ஏனெனில் வாழ்வின் அனுபவங்களும் அவன் அடையும் நன்மை, தீமைகளும் அவனுக்குத் தத்துவ நெறிகளைப் போதிப்பதாயுள்ளன. ஒருவன், தன்னுடைய வாழ்வில் துன்பப்படுவதற்கும், தண்டனையை அடைவதற்கும், தத்துவ நெறியினைப் பற்றிய அறியாமையே காரணமாகிறது. ஆகவே மனிதனின் நல்வாழ்விற்கு வழிகாட்ட, தத்துவ நெறிகள் தேவையானவையாகின்றன. மனிதன் தன்னை முன்னேற்றிக் கொண்டு மனிதத் தன்மை பெற்று விளங்குவதற்கும், துயரமில்லா வாழ்வு வாழ்வதற்கும் தத்துவ நெறிகள் தேவை என்பது உணரப்படுகிறது. இவ்வளவில் உலக வாழ்வில் தத்துவ நெறிகள் பெறுமிடம் சிறப்பிற்கு உரியதாகிறது.

- தத்துவ நெறிகளினால் விளையும் பயன்கள்

- தத்துவ நெறிகள் வாழ்வின் நன்மை, தீமைகளை எடுத்தியம்புகின்றன.
- சமத்துவத்தை, ஒற்றுமையுணர்வை மக்களிடையே வளர்க்கின்றன.
- மனிதனிடம் நல்ல பண்புகளை வளர்க்கின்றன.
- உலக மக்கள் துன்பத்திற்கு இடமின்றி வாழ உதவுகின்றன.
- மனித நேயத்தை ஊட்டுகின்றன.
- வாழ்வின் பேருண்மைகளை உணர்த்திச் செல்கின்றன.
- வாழ்விற்கு வழிகாட்டுகின்றன.
- இவையனைத்தும் தத்துவ நெறிகளின் விழுமிய பயன்களாக அறிய முடிகிறது.

### 5.5.1 பேருண்மைகளை உணர்தல்

தத்துவ நெறி வாழ்க்கையை உணர்ந்து வாழ வழிகாட்டுகிறது. தத்துவ நெறி வாழ்வின் பேருண்மைகளை உணர்த்தி, எத்தகைய வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்பதைக் கற்றுத் தருவதாயுள்ளது. பேருண்மைகள் அறிவின் பயனாக இருப்பதால், சிக்கல்களைத் தவிர்த்து வாழ வழிகாட்டுகிறது. யாருக்கும் தீங்கு செய்யாமல் வாழக் கற்றுத் தருகின்றன. எந்தெந்த நெறிகளை மீறும்போது என்னென்ன பாதிப்புகள் ஏற்படும் என்பதை அறிந்து செயல்பட உதவுகின்றன. தவறுகள் உணர்த்தப்பட்டு, மனிதர்கள் திருந்தி வாழப் பேருண்மைகள் துணைநிற்கின்றன. ஒவ்வொரு மனிதனும் தன்னலம் கருதாது, பொதுநலம் பேணி வாழ வழிவகுக்கின்றன. தத்துவ நெறிகள் உணர்த்தும் பேருண்மைகளை அறிந்து வாழ்வதன் மூலமாகவே இவ்வுலகம் உய்வுபெற இயலும் என்பது சிறுகதைகள் மூலம் அறியப்படும் கருத்தாகிறது.

### 5.5.2 வாழ்விற்கு வழிகாட்டல்

தத்துவ நெறிகள் வாழ்விற்கு எங்ஙனம் வழிகாட்டுகின்றன என்பதைக் காணலாம்.

- மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று வழிகாட்டுகின்றன.
- மனிதனின் உள்மனப் போராட்டங்களுக்குத் தீர்வினைக் கொடுக்கின்றன.
- அறிவு சார்ந்த தத்துவக் கருத்துகள் நம்மைத் தெளிவுபடுத்துவனவாய் உள்ளன.
- நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வுகள் வழங்குகின்றன.
- மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுகின்றன.
- இம்மை, மறுமைப் பயன்களை உணர வைக்கின்றன.
- அஃறிணை உயிர்களின் மூலமும் தத்துவ நெறிகள் உணர்த்தப்பட்டு வழிகாட்டப்படுகிறது.
- சான்றோர்கள் கூறும் தத்துவ நெறிகளும் வாழ்க்கையின் தேவையாகி வழிகாட்டுகின்றன.
- தத்துவ நெறிகள் உள்ளத்திற்குத் தேவையான சக்தியினைக் கொடுத்து ஊக்குவிக்கின்றன.
- வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் வழிகாட்டி உதவுகின்றன.

ஆகவே தத்துவக் கருத்துகளைக் கைக்கொண்டு வாழ்க்கையில் வெற்றியை எட்ட வேண்டும் என்ற சிறந்த வழிகாட்டுதலைச் சிறுகதைகள் மூலம் நாம் பெற முடிகிறது.

## 5.6 தொகுப்புரை

நண்பர்களே! மேற்கண்ட பகுதிகளின் மூலம் சிறுகதைகள் வெளிப்படுத்தும் தத்துவ நெறிகளை அறிந்திருப்பீர்கள். இப்பாடத்தில் நீங்கள் அறிந்து கொண்ட செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

படைப்பாளர் இறையன்பு அவர்களின் சிறுகதைகளில் உலக நெறிகள் வெளிப்படும் விதத்தை மூன்று சிறுகதைகளின் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

சிறுகதைகள் கூறும் சான்றோர் நெறிகளின் மூலம் பேருண்மைகளையும் வாழ்க்கைக்கு வழிகாட்டலையும் அறிந்து கொள்ள முடிந்தது.

சிறுகதைகள் கூறும் வாழ்க்கை நெறிகளின் மூலம் மானிடத் தத்துவங்கள், வாழ்க்கைத் தத்துவங்கள் உணர்த்தப்பட்டு மனித நேயத்துடன் வாழும் வாழ்க்கை வற்புறுத்தப்படுகிறது. இறுதியாக இக்கதைகளின் மூலம் உலக வாழ்வில் தத்துவம் பெறுமிடத்தையும், அதன் முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

பாடம் - 6

## P20336 சிறுகதைகளும் பெண் படைப்பாளர்களும்

இந்தப் பாடம் என்ன சொல்கிறது?

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் பெண் படைப்பாளர்கள் சிலரைப் பற்றிச் சொல்கிறது. அவர்கள் படைப்புகளில் மூன்றனைக் குறிப்பிட்டு, அவற்றின் கதைச்சுருக்கத்தைக் கூறுகிறது. அக்கதையின் மூலம் படைப்பாளர் எதிர்பார்க்கும் சமூக மாற்றங்களையும் வெளிப்படுத்துகிறது.

இந்தப் பாடத்தைப் படிப்பதால் என்ன பயன் பெறலாம்?

- தமிழில் எழுதிவரும் பெண் படைப்பாளர் சிலரைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.
- அவர்கள் தம் சிறுதைகள் மூலம் வெளிப்படுத்திய கருத்துகளை அறியலாம்.
- அக்கதைகளின் நோக்கத்தையும் படைப்பாளரின் எதிர்பார்ப்புகளையும் தெரிந்து கொள்ளலாம்.
- அக்கதைகள் வெளிப்படுத்தும் கருத்துகளை ஒட்டிச் சமூகத்தில் ஏற்படக் கூடிய சீர்திருத்தங்களை எண்ணிப் பார்க்கலாம்.

# பாட அமைப்பு

6.0 பாட முன்னுரை

6.1 ராஜம்கிருஷ்ணனின் படைப்புகள்

6.2 சிவசங்கரியின் படைப்புகள்

6.3 இந்துமதியின் படைப்புகள்

தன் மதிப்பீடு : வினாக்கள்- I

6.4 பெண் படைப்பாளர்களின் நோக்கும், போக்கும்

6.5 தொகுப்புரை

தன் மதிப்பீடு : வினாக்கள்- II

## 6.0 பாட முன்னுரை

சங்க காலம் தொடங்கி இன்று வரையிலும் சமுதாயத்தில் பெண்களுக்கென ஒரு தனி இடம் கொடுக்கப்பட்டு வருகிறது. சங்க காலப் பெண்கள் குடும்பத்திலும், சமுதாயத்திலும் முக்கியத்துவம் பெற்றவர்களாக விளங்கினர்.

- சங்க காலப் பெண்கள்

சங்க காலத்தைச் சார்ந்த ஔவையார், நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், நக்கண்ணையார், காவற்பெண்டு, பாரி மகளிர், இளவெயினி, பெருங்கோப்பெண்டு, பூங்கணுத்திரையார், காக்கைபாடினியார், மாசாத்தியார், பொன்முடியார் ஆகியோர்கள் குறிப்பிடத் தகுந்த பெண்பாற் புலவர்களாக விளங்கினர். இவர்கள் வேறுபாடின்றிச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தனர்.

- இடைக்காலப் பெண்கள்

இந்நிலையானது இடைக்காலத்தில் தடைப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இடைக்காலப் பெண்கள் தாங்கள் வாழ்ந்த அடக்குமுறைச் சமூகத்தில், தங்கள் உரிமைகளை இழந்து, பல கொடுமைகளுக்கு ஆளாயினர். பால்ய விவாகம், வரதட்சணைக் கொடுமை, விதவைக் கொடுமை ஆகியவற்றால் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். தங்கள் வாழ்வும், நலனும் பாதிக்கப்பட்ட நிலையில் இடைக்காலப் பெண்கள் பலவீனப்பட்டுப் போயிருந்தனர்.

- இக்காலப் பெண்கள்

இக்காலப் பெண்கள் பெண்ணடிமைத்தனத்திற்கு இடமின்றி உயர்ந்துள்ளதைக் காண முடிகிறது. பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் இயற்றுவதுமான பணிகளில் பெண்கள் ஈடுபட்டு ஆண்களுக்கு நிகராக, சுதந்திரம் பெற்றவர்களாக விளங்குகின்றனர். பெண்ணடிமை என்பது படிப்பறிவில்லாத கீழ்த்தட்டு மக்களிடம் மட்டுமே அதிக அளவில் காணப்படுகிறது. இவ்வகையில் இக்காலகட்டத்திற்கு உரியவர்களாகி, தங்களின் படைப்புப் பணியைத் தொடர்ந்து வரும் பெண் படைப்பாளர்கள் சிலரின் சிறுகதைகள் இங்குப் பாடமாக அமைந்துள்ளன.

சூடாமணி, ராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, இந்துமதி, வாஸந்தி, ஜோதிர்லதா கிரிஜா, அம்பை, திலகவதி ஆகியோர் குறிப்பிடத்தக்க சிறந்த சிறுகதைப் படைப்பாளர்கள்.

இப்பாடப் பகுதியில் ராஜம் கிருஷ்ணன் அவர்களின் வேலி என்ற சிறுகதையும், சிவசங்கரி அவர்களின் விழிப்பு என்ற சிறுகதையும், இந்துமதி அவர்களின் துணி என்ற சிறுகதையும் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன.

## 6.1 ராஜம் கிருஷ்ணனின் படைப்புகள்

1952இல் நடந்த அகில உலகச் சிறுகதைப்போட்டியில் இராஜம் கிருஷ்ணனின் ஊசியும் உணர்வும் என்ற சிறுகதை தமிழ்ச் சிறுகதைகளுக்குரிய பரிசைப் பெற்றது. இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகையில் அதன் ஆங்கில வடிவம் இடம்பெற்றது. 1994இல் அவரது அவள் சிறுகதைத் தொகுப்பு சரஸ்வதி பரிசைப் பெற்றது.

இவர் படைத்த பெண்குரல், மலர்கள், வேருக்கு நீர் வளைக்கரம், கரிப்பு மணிகள், சேற்றில் மனிதர்கள், சுழலில் மிதக்கும் தீபங்கள் ஆகிய நாவல்கள் பரிசு பெற்றிருக்கின்றன.

ராஜம் கிருஷ்ணனுக்கு 1991இல் தமிழக அரசின் திரு.வி.க. விருது வழங்கப்பட்டது. 1995இல் தென்னிந்தியப் புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க விருதைப் பெற்றார். 1996இல் அக்னியின் அட்சர விருதைப் பெற்றார். ஒரு நாவல் மற்றும் கதை எழுதும்பொழுது இவர் கதைக்குரிய பொருளை முன்னரே திட்டமிட்டு, தொடர்புடைய இடங்களுக்குப் பயணம் செய்கிறார். மக்களின் வாழ்க்கையைக் கண்டறிய அங்கேயே தங்கி முழுவதுமாக உணர்ந்த பின்னரே கதை எழுதுகிறார். இதுவே இவரின் தனிச்சிறப்பாகவும் கருத இடமளிக்கிறது.

### 6.1.1 சிறுகதை – வேலி

இவரது வேலி என்ற சிறுகதை அடுத்த வீட்டில் வாழும் ஒரு பெண்ணின் மனக்குமுறலை, உணர்வுகளை அழுத்தமாக வெளிப்படுத்துகிறது. இக்கதையின் மூலம் குடும்பச் சிக்கல்களையும், அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும், படைப்பாளரின் சிந்தனையையும் அறிய முடிகிறது. இனி, வேலி கதையின் சுருக்கத்தினைக் காண்போம்.

- கதைச் சுருக்கம்

"இன்றைக்கேனும் கட்டாயம் கேட்பார்கள்" என்ற சபலத்துடன் வீட்டுப் படியேறினாள் மாலதி. கண் சோர, நடை துவள வந்த நிலையில் மச்சுப்படி ஏறுகையில் விழுந்துவிடாமலிருக்கும் பொருட்டு, சுவரைப் பற்றிக் கொண்டு நின்றாள். அப்பொழுது மங்களத்தம்மாளும், அவள் கணவனைப் பெற்றவளும் கூடத்தில் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. மாலதிக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. பக்கத்துவீட்டு மங்களத்தம்மாள் நெருப்புக்குச்சியைக் கிழித்துத் தீப்பற்ற வைத்தாள். அந்தத் தீயும் பற்றிக் கொண்டு எரிந்ததை அவர்கள் பேச்சின் மூலம் மாலதியால் அறிய முடிந்தது. மாலதி, கோமதி அம்மாளின் மகனைக் காதல் திருமணம் செய்து கொண்டவள். திருமணத்திற்குப் பின் அவள் கணவன் ஒரு பயிற்சியின் பொருட்டு வெளிநாடு சென்றிருந்தான். மாலதி மட்டும் மாமியார் வீட்டில் ஒதுக்கப்பட்ட ஒரு தனித்த அறையில் இருந்தாள். அவள் கருவுற்றிருந்தாள்.

"சீமைகடந்து அவன் போறான்னு தெரிந்திருந்தால் இவளை நான் வீட்டுக்குக் கொண்டான்னு சொல்லியிருக்க மாட்டேன், அதுவும் அவள் குலம் தெரிந்த பிறகு என் மனது குறுகுறுத்து உறுத்துது. ஏதோ உத்தியோகம் சாக்கிலே அவள் வெளியே போகட்டும் வரட்டும்னு ஏன் வச்சிருக்கேன். வீட்டுக்குள்ளே அவளை வச்சுக்கிட்டு உள்ளே தொட்டு ஒத்தாசை செய்யச் சொல்ல முடியுமா" என்று கோமதி பேசிக்கொண்டே போனாள். அதற்கு மங்களத்தம்மாளும் "குலமில்ல, சாதியில்லேன்னு சொன்னாலும் அவங்க தொட்டு நீங்க எடுத்துக்க முடியுமான்னு?" தீக்குச்சியை உரசிப் போட்டாள். "இவன்தான் ஏடாகூடமாகக் கொண்டு வந்திட்டான்னா, இருக்கிறவங்களுக்கு நல்லவிதமாக் கல்யாணம் ஆக வேண்டாமா? இவ வீட்டுக்கு வந்த பிறகு இந்திரா வீட்டிலிருந்து யாரும் வருவதில்லை. நான் என்ன பண்ணுவேன்? வேலிதாண்ட முடியல. முள்ளிலே சிக்கிக்கிட்டாற் போலிருக்கு" என்று கோமதி புலம்பினாள்.

அதற்கு மங்களத்தம்மாள், "அது எப்படித் தாண்ட முடியும்? ஏதோ நல்லா உடுத்தி, சிரித்துப் பேசி, வேலைக்குப் போனாலும் கூட மண்ணு மண்ணுதானே? மண்ணிலிருந்து பூவையும், கிழங்கையும் எடுத்துக் கொண்டாலும் மண்ணைப் பூசிக்கவா முடியும்?" என்றாள். அதோடு "மகன் வர ஒரு வருஷம் ஆகும். பேறுகாலம்ன்னா என்ன செய்வீங்க" என்று விசாரித்தாள். அதற்கு "கோமதி ஆசுபத்திரி இருக்கிறது, பெத்த பின்னே அவங்க அம்மா அல்லது அக்காவுக்குச் சொல்லி அனுப்பினா வந்து பாத்திட்டுப் போறாங்க. இவளுக்காக அவர்களுடன் நான் என்ன சம்பந்தி உறவா கொண்டாட முடியும்" என்று பெருமூச்சு விட்டாள்.

கடைக்குட்டி செண்பகம், அண்ணி நிற்பதைப் பார்த்து அம்மாவிடம் அறிவிக்க அவர்கள் பேச்சை அத்தோடு முடித்துக் கொண்டனர். அந்தப் பத்து வயதுச் செண்பகத்துக்குக் கூடத் தெரியும் என்னதான் அண்ணி அழகாகவும், மற்ற வீட்டுப்பெண்கள் போல இருந்தாலும், அவள் தங்களுக்குச் சமமானவள் அல்ல என்பது.

மாலதி எண்ணிப் பார்க்கிறாள். "காதலின் பாதை கரடு முரடாவதை, கல்யாணம் ஆகும்வரைதான் நாவலிலும், சினிமாவிலும் அந்தப் பாதையை நீட்டிக் காண்பிப்பார்கள். உண்மையிலேயே அந்தப்பாதை கல்யாணத்தில் தொடங்கித்தான் நீள்கிறது என்பது பலபேருக்குத் தெரிவதில்லை" என்று எண்ணுகிறாள். அவள் எடுத்ததற்கெல்லாம் அழும் பிறவி அல்ல. இருந்தாலும் இதையெல்லாம் கேட்டுவிட்டு அவளுக்கு அழவேண்டும் என்று தோன்றினாலும் அதற்குச் சக்தியில்லாமல் படுக்கையில் விழுந்தாள்.

"கீழே வந்து காபி குடித்துவிட்டுப் போ" என்ற மாமியின் குரல் அவளுக்குக் கேட்டும் தலைசுற்றியதால் எழ முடியாமல் பழைய காதல் நினைவுகளை, பிரச்சினையின் ஆரம்பத்தை எண்ணிப் பார்த்தாள். "ஏன் படுத்திட்டே மாலதி? உடம்புக்கு என்ன? மயக்கமா என்ன?" என்றாள் மாமி. செண்பகத்தை அழைத்து "அண்ணியைத் தொட்டுப்பார்" என்றாள். "களைப்பாயிருக்கு ஒன்றுமில்லை" என்று மாலதி பதில் கூறினாள். "லீவு வேணும்னா எடுத்துக்கோ" என்று மாமி சொல்லிவிட்டுப் பிறகு, "பிள்ளைகள் ஸ்கூலுக்கும், காலேஜுக்கும் சென்றுவிடுவார்கள். உனக்குப் பொழுது போகாது. மேலும் பேறுகாலத்திற்குப் பிறகுதான் லீவு தேவைப்படும். இப்பப் போட வேண்டாம்" என்ற பாணியில் மாமி கீழே சென்றுவிட்டாள். மாலதி கீழே இறங்கி வருவதற்குள் வெளியறை மேசை மீது காபி, பலகாரம் கொண்டுவந்து வைத்துவிட்டாள். "குடும்பத்தில் ஒருத்தியாக உலகுக்கு முன்னே ஏற்றாலும், உள்ளத்துக்கு ஏற்கவில்லையே. வீட்டிற்குள் தாராளமாக வளைய வரச் சுதந்திரம் இல்லையே" என்று எண்ணிக் கலங்குகிறாள். வாய் திறக்காமல், மாமி செயலில் காட்டும் சாதுர்யம் அவளுக்கு வியப்பினைத் தந்தது.

"மாலு. . .?" என்ற குரல் அக்காவும், மாமாவும் வந்திருந்ததை அறிவித்தன. சுட்டிப்பையனை மாலு கொஞ்சினாள். அவர்களின் வருகையை, செண்பகம் கோமதியிடம் தெரிவிக்க, சற்றைக்கெல்லாம் மூச்சிறைக்கப் படியேறி வந்தாள். அவள் அக்காளின் கருப்பு நிறமும், அவளுடைய உடையும், மில்லில் வேலைசெய்யும் அவள் மாமனின் தோற்றமும் அவர்களைச் சமமாக மதிக்க, கோமதிக்கு மனம் வரவில்லை. வெறுப்பை விழுங்கிவிட்டு உபசரித்தாள். அவள் அக்கா ருக்குவும் "அம்மாவுக்கு உடம்பு சரியில்லாததால் அவர்கள் வரவில்லை. பூ முடிப்பு, வளைகாப்புன்னு நீங்க செய்யறது உண்டான்னு அம்மா கேட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றாள். "நாங்கள் பணம் தந்து விடுகிறோம். நீங்கள் ஒரு நாளைக் குறித்துச் செய்யுங்கள்" என்றாள். மாலு "இந்த சம்பிரதாயமெல்லாம் எதுக்கு அக்கா?" என்றாள். இதைக் கேட்ட கோமதி, "வழக்கத்தை ஏன் குறைக்கணும், பிறக்கும் குழந்தை நன்றாக இருக்க வேண்டாமா?" என்று கண்டிக்கும் தோரணையில் ருக்மணி கொடுத்த பணத்தை வாங்கி இடுப்பில் செருகிக் கொண்டாள்.

ருக்மணி அவர்கள் கொடுத்த காபியைக் குடித்துவிட்டு டம்ளரைக் கழுவி வைக்க எழுந்தாள். "இருக்கட்டும் அக்கா, நீ கழுவ வேண்டாம்" என்று பிடுங்கிக் கீழே வைத்தாள். அத்துடன் அவர்கள் பெரிய கும்பிடு போட்டுவிட்டு விடைபெற்றுச் சென்றனர். மாலதிக்குத் தலையைச் சுற்றி வயிற்றைப் புரட்ட மீண்டும் படுக்கையில் விழுந்தாள். மீண்டும் கோமதி அவளை நலம் விசாரித்துவிட்டு, "சீரக ரசமும், சோறும் கலக்கிக் கொடுத்து

அனுப்புகிறேன், குடிச்சிட்டுப் படுத்துக்கோ" என்று கூறிவிட்டு, "அஞ்சு தேதியாச்சே, ஆபீசில் இன்னும் சம்பளம் போடலையா?" என்றாள். "போட்டுட்டாங்க, சம்பளம் பெட்டியில் இருக்கு" என்றாள் மாலதி.

கோமதி அதற்கு, "உன்னைக் கேட்க வேண்டாம்ன்னுதான் நெனச்சேன். நாளைக்கு சனிக்கிழமை. ஒரு பொழுது மோருக்குக் கூடப் பால் இல்லை. எங்கே வச்சிருக்க சொல்லு?" என்றாள். மாலதி பெட்டியைத் திறந்து சேலைக்கடியில் இருந்த பர்ஸை எடுத்துக்கொடுத்தாள். "எந்திரிக்க வேண்டாம். ரசம் சோறு குடிச்சிடு, வாந்தி வந்தாலும் குத்தமில்லை" என்றபடி சென்றாள். மகளை அழைத்து "அவர்கள் காபி தம்ளரை கழுவாம வச்சிட்டுப் போயிட்டாங்க; எடுத்துப்போய்க் கழுவு" என்றாள். மாலதி முழுசாய் ஒரு சம்பளம் கூட அவள் அம்மாவிடம் கொடுத்ததில்லை. படிப்புக்கும் வேலைக்கும் தகுந்த வேஷமிடவே அது அவளுக்குச் சரியாக இருந்தது. வேஷத்துக்கும் தகுந்த பலன் கிடைத்துவிட்டது. ஒரு சம்பளம் கூட இந்த வீட்டில் அவளுக்குத் தங்கவில்லை.

துயரத்திற்குப் பதிலாக மாலதிக்குச் சிரிப்பு வந்தது. "வேலியும் இல்லை, முள்ளும் இல்லை, பணத்துக்கு ஒன்றுமே இல்லை" என்பதோடு கதை முடிவடைகிறது.

**6.1.2** படைப்பாளரின் சிந்தனைகள்

பெண்களைச் சார்ந்ததாகப் படைப்பாளரின் சமூகச் சிந்தனைகள் இச்சிறுகதையின் மூலம் வெளிப்படுகின்றன. பெண்களுக்குக் குடும்ப அளவிலும், சமூக அளவிலும் இருக்கும் சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறார் படைப்பாளர். சிக்கல்களுக்கான தீர்வுகள் நேரடியாகப் படைப்பாளரால் கொடுக்கப்படாவிட்டாலும் அவருடைய கருத்துகள் சிந்தனைக்கு இடமளித்து, சிக்கல்களைத் தீர்க்க உதவுவனவாய் உள்ளன. படைப்பாளரின் சிந்தனைகளையும், அவற்றின் வழிப் பெறப்படும் கருத்துகளையும் கீழ்வருமாறு பிரித்துக் காணலாம்.

- சாதி வேறுபாட்டின் காரணமாகப் பெண்களுக்குக் குடும்ப உறவில் ஏற்படும் சிக்கல்களும், அவர்கள் புறக்கணிக்கப்படுவதும் காட்டப்படுகின்றன.
- காதல் திருமணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூடச் சமூகத்தில் அவை மதிப்பினைப் பெறுவதில்லை என்பது காட்டப்படுகிறது.
- குடும்பத்திலும், சமூகத்திலும் நல்ல உறவுமுறைகள் குறைந்து வருவதை, கோமதி, மங்களத்தம்மாள் கதைமாந்தர்கள் மூலம் அறிய முடிகிறது. இவர்களின் செயல்கள் மனித நேயமற்ற செயல்களாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன.
- சிறுமியாக இருக்கும் செண்பகம் கூட அண்ணி தங்களுக்குச் சமமானவள் இல்லை என்பதை அறிந்திருப்பதன் மூலம் சாதி என்னும் நஞ்சு, பிஞ்சு மனங்களிலும் பாய்ந்து அவர்களையும் சீர்குலைத்திருப்பதைக் காணமுடிகிறது.
- கணவன் நல்லவனாக இருந்தபோதிலும், அவன் மனைவியுடன் இருந்து குடும்பக்கடன் ஆற்றாத நிலையில், மனைவி மற்றவர் நிழலில் இருக்கும்போது துன்பப்படவே நேரிடும் என்பது காட்டப்படுகிறது.
- பெண் வீட்டார்கள், மாப்பிள்ளை வீட்டார்களிடம் கேவலப்படுவதன் மூலம் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமூக மதிப்பீடு வேறுபடுவதைக் காணமுடிகிறது.
- மாலதி எனும் கதைப்பாத்திரம் மூலம் பெண்கள் சமூகத்தில் ஓரளவு மதிக்கப்பெற்று விளங்குவதற்கு அவர்கள் வேலைக்குச் சென்று பொருளீட்டுவதே காரணமாகக் காட்டப்படுகிறது. பொருளாதார பலம் பெறாத பெண்கள் குடும்பத்தில், சமூகத்தில் அல்லலுறுவதும் சுட்டிக் காட்டப்படுகிறது.
- உடம்பு சரியில்லாத மாலதியைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியாத அளவிற்குச் சாதியை ஒரு வேலியாகப் போட்டிருக்கும் சமூக அமைப்பு கோமதி மூலம் வெளிப்படுகிறது.

நிறத்தாலும், குலத்தாலும், பணத்தாலும் உயர்ந்தவர்கள் கீழ்மட்டத்தில் இருப்பவர்களைக் கேவலப்படுத்தும் சமூக அமைப்பு நெருடலுக்கு உரியதாகிறது.

காதல் மணம் செய்துகொள்ளும் பெண்கள் தாய் வீட்டிற்குச் செல்ல முடியாமலும், தாய் வீட்டினர் அங்கு வரவும் முடியாமலும், கணவன் வீட்டிலும் இவர்களுக்கு ஆதரவு கிட்டாமலும் தவிப்பதைக் காணமுடிகிறது.

பிறரின் மன உணர்வுகளுக்கு மதிப்புத் தராமல் பண உணர்வுகள் மட்டுமே மேலோங்கியிருக்கும் சமூக அமைப்பு எடுத்துரைக்கப்படுகிறது.

ஊர், உலகுக்குச் சந்தேகம் வராதபடி, உள்ளுக்குள் மட்டும் மருமகளைப் புறக்கணிக்கும் மாமியார். ஆனால் மருமகள் சம்பாதித்த பணத்தைப் புறக்கணிக்காமல் அவர் கேட்டுப்பெற்றுக் கொள்வதன் மூலம் "சாதிக்குத்தான் வேலியும், முள்ளும் போடப்படுகிறதேயன்றிப் பணத்துக்கு இல்லை" என்பது உணர்த்தப்படுகிறது.

மேற்கண்ட சிந்தனைகளின் மூலம் படைப்பாளரின் கருத்துகளை அறியமுடிகிறது. எப்பொழுது மாலதியின் சம்பளத்தையும், அவள் அம்மா செய்யும் சீர்ப் பணத்தையும் மாமி ஏற்றுக்கொள்ளத் தயாராகிவிட்டாளோ அப்பொழுதே அவள் மாலதியின் சாதியையும், உறவினர்களையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. அங்ஙனமின்றி மாமி தன்னுடைய தேவைக்கு ஏற்ப மாலதியின் பணத்தை மட்டும் ஏற்பதும், அவளையும், அவளைச் சார்ந்த உறவுகளையும் புறக்கணிப்பதும் தனிமனிதக் குறைபாட்டையே சுட்டுகின்றன. சமூகத்தின் பெயரில் மாமியே போட்டுக் கொள்ளும் வேலியை, தேவையானபோது தாண்டிச்செல்வதும், தேவையில்லாதபோது அதைப்போட்டுக் கொள்வதும் தனிமனிதர்களின் சுயநலத்தையே காட்டுகின்றன. பெண்களுக்குப் பெண்களே எதிரியாவதையும் இதன் மூலம் உணர முடிகிறது.

## 6.2 சிவசங்கரியின் படைப்புகள்

சிவசங்கரி 1942இல் தமிழ்நாட்டில் சென்னையில் பிறந்தார். இவர் தமிழில் பிரபல நாவலாசிரியராக விளங்குகிறார். இவரது படைப்புகள் உலக சமுதாயத்திலும், சொந்த வாழ்விலும் இருக்கும் பல நிகழ்வுகளை வெளிப்படுத்துவனவாய் உள்ளன. இவரது படைப்புகள் பாரம்பரியத்தை நினைவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளன. சமுதாய நிகழ்வுகளை அக்கறையோடு அணுகி, அதனால் ஏற்படும் விளைவுகளைத் தைரியமாக எதிர்கொள்ளும் திறமை படைத்தவராக இவர் விளங்குகிறார். "ஒரு மனிதனின் கதை" என்ற இவரது படைப்பு இவரைத் தமிழக மக்களிடையே பிரபலமாக்கியது. அந்தக்கதை தொலைக்காட்சித் தொடராகவும் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

- படைப்புகள்

இவர் 30 நாவல்களையும், 13 பயணக் கட்டுரைகளையும், 150 சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவற்றுள் பல ஆங்கிலத்திலும், பிற மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இலக்கியங்கள் மூலம் இந்தியாவை ஒருமைப்படச் செய்யவேண்டும் என்பதே இவருடைய விருப்பமாகும். இவருடைய 'Knit India through Literature' என்ற செயல்திட்ட ஆய்வானது அரிய முயற்சியாக அமைந்தது.

சிவசங்கரியின் படைப்புகளில் ஒரு மனிதனின் கதை, அவன், நண்டு, வேரில்லாத மரங்கள், அம்மா சொன்ன கதைகள் ஆகியவை சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.

### 6.2.1 சிறுகதை – விழிப்பு

கைலாசம் என்பவர் சொல்வது, நினைத்துப் பார்ப்பது போல் இக்கதை அமைந்துள்ளது.

அத்தைக்கு அவரைச் "சமூக சேவகி" என்று குறிப்பிட்டால் பிடிக்காது. "நம் உடம்பை, நம் வீட்டை, நம் உடைமைகளைச் சுத்தமாக அழகாக வைத்துக்கொள்ளப் பாடுபடுகிறோம். ஆனால் தான் ஸ்வாசிக்கும் காற்றை, வசிக்கும் தெருவைப் பராமரிக்க ஒருவர் முன்வரும்போது மட்டும் எதனால் அவருக்குச் சமூக சேவகி பட்டம்? ...ம்? இப்படிக் கூட்டம் கூட்டி ஒதுக்கிப் பேசுவதனாலேயே நமக்கெல்லாம் எது நம் கடமை, பொறுப்பு என்பது கூட மறந்துபோய் எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை, அடுத்தவரைக் குறை சொல்லும் குணம் வந்துவிட்டது. தெருவில் சின்னதாக ஒரு குழி இருந்து, அதில் ஒரு குழந்தை தடுக்கி விழுந்ததும் நாம் என்ன செய்கிறோம்? முதல் மந்திரியிலிருந்து கார்ப்பரேஷன் கடைநிலை ஊழியர் வரை திட்டித் தீர்க்கிறோம். அப்புறம் அத்துடன் நம் வேலை முடிந்தது என்று சும்மா இருந்து விடுகிறோம். ரைட்? இதைத் தவிர்த்து ஒரு கூடை மண்ணை எடுத்து வந்து அந்தக் குழியில் போடுவது பிரச்சனைக்கு நம்மாலான உதவியாக இருக்கும் என்று எத்தனை பேர் செயல்படுகிறோம், இல்லை நினைத்துத்தான் பார்க்கிறோம்? ம்." என்பார்.

கைலாசத்தின் நட்புறவிற்கு உரியவர்களாக நண்பர்களும், நாணாவின் அத்தையும் விளங்குகின்றனர். கைலாசம், அத்தையுடன் நட்புறவு கொள்வதற்கும், அவருடைய அறிவுரைகளை ஏற்று நடப்பதற்கும் அவர் இளைய தலைமுறையினரின் மனத்தைப் புரிந்து நடந்து கொள்வதே காரணமாக அமைகிறது. அத்தை கூறும் சமூகச்சேவை பற்றிய கருத்துகள், அறிவுரைகள் இளைய தலைமுறையினரைச் சிந்திக்க வைக்கின்றன. அத்தை சமூக அக்கறையுடன் கூறும் அறிவுரைகள் அனைத்தும் அவ்வப்போது கைலாசத்தின் நினைவில் வந்துபோகிறது. அவனைச் செயல்படத் தூண்டுகிறது.

குப்பை பொறுக்குபவன் குப்பைத்தொட்டியைக் கலைத்துப் போட்டதால் பறந்த காகிதம் மற்றும் பிளாஸ்டிக் குப்பைகள் இவன் வீட்டு வாசலையும் எட்டிப் பார்த்தது. அப்பொழுது அத்தை பேசியது நினைவுக்கு வர, அந்தப் பறக்கும் காகிதங்களைப் பொறுக்கிக் குப்பைத்தொட்டியில் போட்டு விடலாமா? என்று நினைத்தான். ஆமாம். 'நான் சுத்தம் செய்வதால் மட்டும் இந்தத் தெரு சுத்தமாகிவிடுமா?' என்று எண்ணியவனாய், பேசாமல் இருந்து கொண்டான். 'பிளாஸ்டிக் பேப்பரை எடுத்துக் குப்பைத்தொட்டியில் போட்டுவிடலாமா?' என்று மீண்டும் யோசித்தான். இங்ஙனம் கைலாசத்தின் ஒவ்வொரு செயலிலும் அத்தை நட்புடன் எட்டிப் பார்த்தாள். அத்தையின் பேச்சுகள் மீண்டும் நினைவுக்கு வந்தன.

கைலாசத்தின் வீட்டுப் படிக்கட்டுகளில் லேசாக வெடிப்புக் கண்டிருந்த தரையில் சாரியாய் எறும்பு ஊர்வலம் சென்றது.

"இந்தப் பிள்ளையார் எறும்புகளுக்கு இருக்குற சுறுசுறுப்புல, சமர்த்துல, பொறுப்புல பாதிகூட இந்தக் காலத்துப் பிள்ளைங்களுக்கு இருக்கறதில்லை" என்று இரண்டு நாட்கள் முன் அதே எறும்புக் கூட்டத்தைப் பார்த்துவிட்டுப் பேப்பரும் கையுமாய் உட்கார்ந்திருந்த அப்பா விமர்சித்தது நினைவுக்கு வர, கைலாசம் "ப்ச்" என்று கோபத்துடன் சூள் கொட்டினான்.

பிறகு, அந்தக் கோபம் மாறாமலேயே முன்னால் நகர்ந்து எறும்பு ஊர்வலத்தின் நடுவில் விரலால் ஒரு கோடு இழுத்தான். மோப்ப சக்தியின் உதவியுடன் ஒன்றின்பின் ஒன்றாகச் சென்றுகொண்டிருந்த எறும்புகளின் ஊர்வலம் தடைப்பட்டுப்போக, திடுமென உண்டான குழப்பத்துடன் எறும்புகள் தாறுமாறாக இங்கும் அங்கும் ஓடியது குட்டியாக ஒருவித மகிழ்ச்சியை உண்டாக்க, கைலாசம் பொந்துக்கு அருகில் இன்னொரு தரம் கோடு கிழித்து, இன்னும் கொஞ்சம் குழப்பத்தை மற்ற எறும்புகள் நடுவிலும் ஏற்படுத்தினான்.

கோடு போட்டதினால் உண்டான குழப்பம் மறைந்து மறுபடியும் தங்கள் ஊர்வலத்தைக் கர்ம சிரத்தையுடன் எறும்புகள் மேற்கொள்வதைப் பார்த்தவாறு கைகளைத் தலைக்குமேல் உயர்த்திச் சோம்பல் முறித்த நிமிஷத்தில், மீண்டும் அம்மா இன்னும் கொஞ்சம் கத்தலாக அழைப்பது காதில் விழுந்தது.

எறும்பு ஊர்வலத்தில் நாலு எறும்புகள் கஷ்டப்பட்டு ஒரு அரிசியைப் பொந்துக்கு அருகில் இழுத்துச் செல்வதைப் பார்த்தபோது காரணம் புரியாமல் ஒரு நமநமப்பு எழ, கைலாசம் சட்டென்று குனிந்தான். ஆள்காட்டி விரலால் அந்த அரிசியை லேசாகச் சுண்டிவிட்டான். அரிசி இரண்டடி சென்று மூலையில் விழ, எறும்புகள் உணவைப் பறிகொடுத்த கவலையோடு என்னவோ ஏதோ என்று பயந்து தறிகெட்டு ஓடிய காட்சி சின்னதாக ஆனால், குரூரமான மகிழ்ச்சியை உள்ளுக்குள் பரப்புவதை உணர முடிய, மெல்ல நடந்து வீட்டுக்குள் சென்றான்.

அவனுடைய அம்மாவும் என்னால முடியாத வேலையை நீ செய்து என் கஷ்டத்தைப் பகிர்ந்து கொள்ளக் கூடாதா? என்று கேட்டபொழுது மீண்டும் இவனது மனத்திற்குள் அத்தை சொன்ன வார்த்தைகள் சவுக்கால் அடித்தது போலிருந்தது. வாயில் போட்ட சாதம் தொண்டைக்குள் இறங்க மறுத்தது. கையை உதறிக்கொண்டு எழுந்தான். எறும்புகளின் வரிசையைக் கலைத்துக் குழப்பத்தை உண்டாக்கிய அவன் மூலையில் கிடந்த அரிசியைத் தேடி எடுத்து அதன் பொந்தினுள் "ஸாரி" என்று கூறிப் போட்டான். வாசற்படியிலும், தெருவிலும் கிடக்கும் காகிதங்களைப் பொறுக்கிப் பந்தாகச் சுருட்டிக் குப்பைத் தொட்டியில் போட்டான். அம்மாவிடம் "நீயும், நானும் சேர்ந்து சாப்பிடலாமா?" என்று இதமான குரலில் கேட்கிறான். இம்மாற்றங்கள் அனைத்தும் அத்தையின் நட்புறவு ஏற்படுத்திய மாற்றங்களாகவே அறியப்படுகின்றன.

பாபு, நாணா, சுரேஷ், கைலாசம் இவர்கள் நால்வரின் தோழமை உறவு இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. இவர்கள் நால்வரும் சேர்ந்துவிட்டால் ஊர் சுற்றல் மற்றும் ஒரே கொண்டாட்டம்தான். சுரேஷ்க்கு வேலை கிடைத்ததைக் கொண்டாடும் பொருட்டு இவர்கள் ஜாலியாக இருந்ததையெல்லாம் அத்தையிடம் கூறி மாட்டிக் கொள்கின்றனர். அத்தை புரிந்து கொள்வார்கள் என்ற தைரியத்தில் நாணா உண்மையைக் கூறினான். "உங்களைப் பொறுத்தவரை கொண்டாட்டங்கள் என்றால் குடிப்பதும், சிகரெட் குடிப்பதும்தானா?" என்று கேட்க, நால்வரும் வாயடைத்துப் போயினர். "உங்களைப் பெற்றவர்கள் சம்பாத்தியத்தில் இப்படியெல்லாம் செலவழிப்பது உங்களுக்கு உறுத்தவில்லையா?" என்றார்.

இதன் பிறகு பாபு அத்தை சொன்னது உறுத்தவே, "சிகரெட்டை இனி நான் தொடவில்லை" என்று கூறுவதும், அத்தையின் அறிவுரைகளைக் கைலாசம் ஏற்றுச் செயல்படுவதும் நட்புறவின் சிறப்பினைக் காட்டுவதாகிறது. நாணாவின் அத்தை கூறியதை அனைவரும் ஏற்று நடப்பதும், நடக்க முயற்சி செய்வதும் நண்பர்களின் தோழமையுறவினைச் சிறப்பாக வெளிப்படுத்துவதாகிறது.

இங்ஙனம் நண்பர்கள் வெளிப்படுத்தும் தோழமை உறவும், அத்தையின் மூலம் வெளிப்படும் நட்புறவும் இக்கதையில் எடுத்துரைக்கப்படுகின்றன.

**6.2.2** படைப்பாளரின் சிந்தனைகள்

படைப்பாளரின் சிந்தனைகள் சமூக அக்கறையுடன் கூடிய நட்புறவிற்கு இடமளிக்கும் வகையில் வெளிப்பட்டுள்ளன. எதார்த்தமாக, எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துகளாக இவரது சமூகச் சிந்தனைகள் வெளிப்பட்டுள்ளன. சுயநலமின்றி வாழும் வாழ்க்கையின் மூலம் மட்டுமே சமூக அக்கறையை வெளிப்படுத்த முடியும் என்பது அறியப்படுகிறது. தனி மனிதர் ஒவ்வொருவரும் சமூகத்தை நேசிப்பதன் மூலம் சமூகம் நலம் பெற இயலும் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. சமூக வாழ்க்கையில் 'கேரிங் அண்ட் ஷேரிங்' தேவை என்பது உரைக்கப்படுகிறது. இச்சிறுகதை காட்டும் படைப்பாளரின் சிந்தனைகளைக் கீழ்க் குறிப்பிட்டவாறு அறிந்து கொள்ளலாம்.

- சமுதாயப் பிரச்சனைகளை மனிதநேயத்துடன் அணுக வேண்டும் என்பது உரைக்கப்படுகிறது.
- பெரியவர்கள் இளைய தலைமுறையினரின் மனத்தைப் புரிந்து கொண்டு, பழகி, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்பது அறியப்படுகிறது.
- சமூகப் பிரச்சனைகளுக்கு அரசாங்கத்தையும், அதன் தொடர்பான மற்றவர்களையும் குறைகூறுவதைத் தவிர்த்து, பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய ஒவ்வொருவரும் முன் வர வேண்டும் என்பது உணர்த்தப்படும் கருத்தாகிறது.
- நம் உடம்பையும், வீட்டையும் சுத்தமாக வைத்துக் கொள்ளும் நாம் நம் வீட்டுக்குப்பையைத் தெருவில் கொட்டுவதை ஏன் தவிர்க்க மாட்டோம் என்கிறோம். ஏனென்றால் தெரு நம்முடையது என்ற அக்கறை இல்லை. அடுத்தவர்களைப் பற்றிய கரிசனம் நமக்குக் குறைந்து வருகிறது. அக்கறையும், பகிர்ந்து கொள்ளுதலும் மறந்துவிட்ட நிலையில் மனதானது குறுகிப் போய்விடுகிறது. சுயநலம் தலை எடுக்கிறது என்ற படைப்பாளரின் கருத்துகள் மூலம் சுயநலம் தவிர்த்து மற்றவர்கள் மீது நாம் அக்கறை கொள்ளும் பொழுதுதான் சமுதாயப் பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்பது உரைக்கப்படுகிறது.
- பியர் குடிப்பது, சிகரெட் குடிப்பது, ஊர் சுற்றுவது ஆகிய இளைய தலைமுறையினரின் கொண்டாட்டங்களை வன்மையாகக் கண்டிக்கிறார் படைப்பாளர். "உங்களைப் பெற்றவர்கள் சம்பாத்தியத்தில் இப்படியெல்லாம் செலவழிப்பது உங்களுக்கு உறுத்தவில்லையா?" என்று மென்மையாகக் கேட்பதன் மூலம் இளைய தலைமுறையினரின் செய்கைகளைச் சுட்டிக்காட்டிச் சிந்திக்க வைக்கிறார்.
- இளைஞர்களைச் சிந்திக்க வைப்பதன் மூலம் அவர்கள் திருந்துவதைக் காண முடிகிறது. சிகரெட் பிடிப்பதை விட்டுவிடுவதும், கேரிங் அண்ட் ஷேரிங் கை உணர்ந்த நிலையில் கைலாசம் அவன் அம்மாவிடம் அன்பு பாராட்டுவதும் இதற்கு எடுத்துக்காட்டுகள் ஆகின்றன.
- மென்மையான, இயல்பான அணுகுமுறைகளின் மூலம் இளைய சமுதாயத்தினரை நாம் விரும்பிய வண்ணம் மாற்றமுடியும் என்பது படைப்பாளரின் உறுதியான கருத்தாகிறது.
- சமூக அக்கறையை இளைய தலைமுறையினரிடையே ஊக்குவிப்பதன் மூலம் புதிய சமுதாயம் உருவாக்கலாம் என்பது குறிப்பிடத் தகுந்த கருத்தாகிறது.

## 6.3 இந்துமதியின் படைப்புகள்

இவரது படைப்புகள், ஆர்ப்பாட்டம் இல்லாமல், சொல்லவரும் கருத்தை மிகவும் ஆழமாக மனத்தைப் பாதிக்கும் வண்ணம் வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்குகின்றன. இவ்வகையில் இவர் திறமை மிக்க படைப்பாளராகவே கருத இடமளிக்கிறார். கதையோட்டம் இவரது சிறுகதைகளில் இயல்பாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. கதை மாந்தர்கள் ஒரு முழுமைத்தன்மை பெற்றிருப்பதை இவரது கதைகளின் மூலம் அறியலாம். இவரது சிறுகதைகள் சமுதாயப் பிரச்சனைகளையும், சமூகக் கொடுமைகளையும் சிந்திக்க இடம் தருகின்றன. இவரது கதைகள் சமூக விழிப்புணர்ச்சிக்கு வழி ஏற்படுத்தித் தருகின்றன. இப்படைப்பாளர் சமூகப் பொறுப்புடன் செயல்படுவதை இவரது கதைகள் உணர்த்தத் தவறவில்லை. ஒவ்வொரு தனிமனிதனும் மனித நேயத்தோடு செயல்பட்டால் மட்டுமே சமூகப் பிரச்சனைகள், சமூகக் கொடுமைகள் நிகழாமல் நாட்டைக் காக்க முடியும் என்பது இவர் வலியுறுத்தும் கருத்தாகிறது.

- படைப்புகள்

இவரது நாவல்கள் நவீனத்தன்மையோடும், நடைச்சிறப்போடும் அமைகின்றன. சமூக வாழ்வின் குறிப்பிட்ட பிரச்சனைகளை ஆராயும் வண்ணம் இவரது படைப்புகள் அமைந்துள்ளன. இவரது படைப்புகள் வாசகர்களிடையே வரவேற்புப்பெற இவையே காரணமாகின்றன.

### 6.3.1 சிறுகதை – துணி

காக்கும் கரங்கள் என்ற சேவை மையத்தில் பணியாற்றும் ரத்னாகருக்கு ஒரு போன் வருகிறது, ”அயோத்தியா குப்பத்திலே ஒரு குப்பைத்தொட்டிக்குப் பக்கத்திலே ரெண்டு நாளா வயதான கிழவி ஒண்ணு மூச்சுப் பேச்சில்லாமல் விழுந்து கிடக்குதுங்க” என்று. ரத்னாகருக்கு நெஞ்சு பதறியது. “இரண்டு நாட்களாகக் குப்பைத்தொட்டியின் பக்கத்திலா? பார்த்துக் கிட்டு சும்மாவா இருக்கீங்க?” என்றபோது ”நாங்க என்ன சார் பண்ண முடியும்? உங்களை மாதிரி நாங்க என்ன சமூகசேவையா செய்கிறோம்” என்றான். போன் செய்தவனைப் பற்றி ரத்னாகர் விசாரித்தபொழுது, ”என் பேரெல்லாம் உங்களுக்கு எதுக்குங்க? நான் என்ன சொன்னாத் தெரிகிறமாதிரி மனுஷனா? பத்திரிகைகளில் உங்க பேரை அடிக்கடி படிச்சிருக்கிறேன். அதனாலே போன் பண்ணிச் சொன்னேன். முடிஞ்சாப் போய் கிழவியைக் காப்பாற்றுங்க இல்லேன்னா விடுங்க என்பதோடு தொலைபேசித் தொடர்பை டக்கென்று துண்டித்துக் கொண்டான்.

ரத்னாகர், தொலைபேசியில் பேசியவனைப் போலத் தன்னால் சும்மா இருக்க முடியாது என்பதை உணர்ந்து சுறுசுறுப்பானான். பூப்போட்ட துவாலையை எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினான். அவனிருக்கும் இடத்திலிருந்து அயோத்தியா குப்பம் அருகில் இருந்ததால் பத்துநிமிட நடைதானே என்று நடந்தான். கையில் இருக்கும் நாற்பது ரூபாயில் கிழவியை ஆஸ்பத்திரியில் சேர்க்க ஆட்டோ செலவிற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினான்.

அவன் போனபோது குப்பம் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது. எல்லா இந்தியக் குடிசைகளைப் போலவே அவ்விடமும் ஏழ்மை நிறைந்து ஆரோக்கியமற்றதாகக் காட்சியளித்தது. குடிசைகளுக்கு நடுவில் கறுப்பு நிறத் தண்ணீரோடு கூவம் கூச்சமின்றி ஓடிக்கொண்டிருந்தது. குப்பத்துக் குழந்தைகளும் கூச்சம் ஏதுமின்றிக் குடிசையை ஒட்டியுள்ள இடத்தையே கழிப்பிடம் ஆக்கிக் கொண்டிருந்தனர். கூவத்தின் நாற்றம் மற்றும் அந்த இடத்தின் நாற்றம் காரணமாக, துண்டின் நுனியால் மூக்கை மூடிக்கொண்டு அசிங்கத்தில் கால் வைத்துவிடாமல் ஜாக்கிரதையாகக் குப்பத்தின் உள்ளே நுழைந்தான் ரத்னாகர். குப்பத்தின் வாசலே தேவலாம் என்னும்படி உட்பகுதி இன்னும் மோசமாக இருந்தது. சாக்கடைத் தண்ணீரில் சொத சொதத் தரையும் அதில் குப்பையும் காகிதங்களுமாய் ஊறிக் கிடந்தது. அந்த இடத்தில் கடை வைத்திருந்த பெண்மணியிடம் கிழவியைப் பற்றி அவன் விசாரித்தான். அந்தப் பெண் விற்பது வள்ளிக்கிழங்கா? அல்லது ஈக் கூட்டமா? என்று அறியமுடியாதபடி அப்பகுதி அடிப்படைச் சுகாதார வசதியின்றி இருந்தது. அதற்குள் அங்கு கூட்டம் கூடிவிட்டது. அந்தப் பெண் ஒரு பையனை அழைத்து “அந்தக் கிழவி கிடக்கற இடத்தைக் காட்டு” என்றாள். அதற்குக் கூட்டத்தில் இருந்தவர்கள் ”இவரு யாரு? யாரு வேணுமாம்?” என்று விசாரிக்க, “யாரோ கார்ப்பரேஷன் ஆளு காளியம்மாக் கிழவியை விசாரிக்கிறாங்க” என்றாள்.

அவர்கள் பேசிக் கொண்டதிலிருந்து அநேகமாக அந்தக் கிழவி இவர்களைச் சார்ந்தவளாக இருக்கலாம். ஏன் இவர்களுள் ஒருவருக்குச் சொந்தமாகக்கூட இருக்கலாம். இவர்களைக் கேட்டாலும் உண்மை வரப்போவதில்லை. எதற்குக் கேட்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். சிறுவன் வழிகாட்ட, சின்ன மலையாகக் கிடந்த குப்பைகளுக்கிடையில் குட்டை மாதிரித் தேங்கிக் கிடந்த சாக்கடை நீரின் பக்கத்தில் விழுந்து கிடந்த கிழவியைப் பார்த்தவுடன் அவன் அதிர்ந்தான். ஒரு மனித உயிர் இப்படிக் கூடவா அலட்சியப்படுத்தப்படும் என்று வருந்தினான். இதுபோன்று நினைவிழந்த நிலையில் எத்தனையோ பேரை அழைத்துச் சென்று சிகிச்சை அளித்திருக்கிறான் அவன். ஆனால் இப்படிப்பட்ட பரிதாப நிலையில் ஒருவரையும் கண்டதில்லை. சற்றும் தயங்காமல் சாக்கடைத் தண்ணீரில் கால்வைத்து, குப்பைகளை மிதித்துக் கொண்டு போய்க் கிழவியை அடைந்தான். தன் தோளில் போட்ட துண்டை எடுத்துக் கிழவியின் மேலிலிருந்து இடுப்பு வரை போர்வையாகப் போர்த்தினான். பின்னர் அவளை அப்படியே தான் மட்டும் தூக்கி வந்து ஓர் ஓரத்தில் கிடத்திவிட்டுத் தன்னோடு வந்த சிறுவனைத் தேடினான். உதவிக்கு யாராவது வருவார்களா? என்று காத்திருந்தான். பின்னர் அங்கிருந்து அகன்று ஆட்டோவை அல்லது ரிக்ஷாவைக் கொண்டுவரப் போனான்.

ஆட்டோ ரிக்ஷாக்காரன் அது போன்ற சவாரிக்கு வர மறுத்தான். ”வேண்டாம் சார். பேஜார் புடிச்ச சவாரி” என்றான். அவன் வெறுத்துப் போனான். ”ஏம்ப்பா, நீங்கெல்லாம் மனுசங்கதானே? கொஞ்சம் கூட இரக்கம் கிடையாதா? நீங்களா வந்து உதவி செய்ய வேண்டாம். ஆனால் கூப்பிட்ட குரலுக்குக் கூடவா உதவக்கூடாது?” என்றான். “உதவலாம் சார், கிழவி பட்டுன்னு போய்ட்டா அப்புறம் போலீஸ் கேஸ்ன்னு யார் அலையறது? சமூகசேவை செய்ற உங்க மாதிரி ஆளுங்க வேலையது. இதை நான் செஞ்சா என் பொழப்பு என்ன ஆகிறது? முடிஞ்சா செய்யுங்க. இல்லனா விட்டுட்டுப் போங்க. சும்மா வம்புக்கு இழுக்காதீங்க” என்று போய்விட்டான். அதன் பிறகு வயதான ரிக்ஷாக்காரர் ஒருவரைப் பிடித்தான். ”வயசான யாருக்கும் இந்த நிலை வரலாம் கொஞ்சம் உதவி செய்யப்பா” என்று கெஞ்சினான்.

வயதானதைக் காரணம் காட்டியதால் தற்காப்புப் பயத்தில் அந்த ரிக்ஷாக்காரன் சம்மதித்தான். உடனே ரிக்ஷாவில் அந்த இடத்திற்கு விரைந்து கீழே இறங்க, கிழவியின் உடலைப் பார்த்ததும் சொல்லமுடியாத அதிர்ச்சியால் ஏற்பட்ட வலியும், வேதனையும் தாங்க முடியாதவனாக நின்றான். கிழவியை விட்டுப் போன இடத்தில் குப்பை, சாக்கடைத் தண்ணீர், மொய்த்துக் கொண்டிருந்த ஈ, எறும்பு எல்லாம் அப்படியே கிடக்க, உடம்பில் போர்த்திவிட்டிருந்த துண்டு மட்டும் காணாமல் போயிருந்தது. ரிக்ஷாக்காரன் “என்ன சாமி இன்னும் நேரமாகுமா?” என்று கேட்க, சுய உணர்வு பெற்றவனாக “இதோ வந்திட்டேன்” என்று பதிலளித்தான். தன் சட்டையைக் கழற்றிக் கிழவியின் இடுப்பைச் சுற்றிப் போர்த்தினான். பின்னர்க் கிழவியைத் தூக்கிக்கொண்டு நடந்தபோது அவன் மனம் மிகவும் கனத்திருந்தது என்பதோடு கதை முடிவடைகிறது.

### 6.3.2 படைப்பாளரின் சிந்தனைகள்

இக்கதையின் மூலம் படைப்பாளரின் சமூக நோக்குச் சிறப்பாக அறியப்படுகிறது.

- மனித நேயம், பரிவு, சமூகக்கடமை ஆகியவற்றை அதற்கென்று இருக்கக்கூடிய சமூகசேவை செய்பவர்கள் மட்டுமே மேற்கொண்டால் போதும். மற்றவர்கள் சமூக அக்கறை கொள்ள வேண்டிய அவசியமில்லை என்ற அளவில் இன்றைய சமூக உறவு அமைந்துள்ளதை இக்கதை சுட்டிக்காட்டியிருக்கிறது.

- சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழும் குப்பத்து மக்கள் காட்டப்பட்டு, அந்நிலை சமுதாயக் கொடுமையாக உணர்த்தப்படுகிறது.
- குப்பத்து மக்கள் வாழும் பகுதிகள் சேறும் சகதியும், அழுக்கும் குப்பையும் நிறைந்த கூவமாகக் காட்சியளிப்பதையும், குடிசையின் அருகாமையிடத்தைக் குப்பத்துக் குழந்தைகள் சுதந்திரமாகக் கழிப்பிடமாக்கிக் கொண்டிருப்பதையும் படைப்பாளர் சுட்டிக்காட்டிச் சமூகத்தின் மோசமான நிலைக்காக வருந்துகிறார். இச்சமூகப் பொருளாதாரக் குறைபாடு படைப்பாளரால் சுட்டப்படுகிறது. இந்நிலை மாறவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.
- குட்டை மாதிரித் தேங்கிக் கிடந்த சாக்கடை நீரில் விழுந்து கிடந்த கிழவியைப் பற்றி அச்சமூகத்தினர் யாரும் கவலைப்படாமல் அவரவர் வேலையை அவரவர் செய்து கொண்டிருப்பது சுயநலம் மிக்க மனிதர்களைக் கொண்ட சமூக அமைப்பை அடையாளம் காட்டுவதாயுள்ளது.
- சமூக சேவை செய்பவர்கள் மனிதநேயத்தோடு பிறர் நலம் பேணுவது காட்டப்படுகிறது. மனிதர்கள் சேவை மனப்பான்மையோடு செயல்பட்டால் நாட்டின் பல்வேறு பிரச்சனைகளை எளிதாகத் தீர்க்க முடியும் என்பது இதன் மூலம் அறியப்படும் கருத்தாகிறது.
- விலை மதிப்பற்ற உயிர், வயதான காலத்தில் மதிப்பற்றுப் போய்விடுவதைக் காணமுடிகிறது. உதவி செய்பவர்களுக்குத் துணை நிற்கும் மனிதர்களின் எண்ணிக்கை கூட நாளுக்கு நாள் குறைந்து கொண்டு வருவதைச் சிறுகதை எடுத்துக்காட்டுகிறது. படைப்பாளரின் சமூகச்சிந்தனை வெளிப்படுகிறது.
- பொதுமக்கள் போலீஸ், கோர்ட், விசாரணை ஆகியவற்றை முன்னிட்டுப் பிறருக்கு உதவி செய்வதைத் தவிர்த்துக் கொள்வது சமூகக் குறைபாடாகக் காட்டப்படுகிறது.
- வயதான யாருக்கும் இந்த நிலை வரலாம் என்பதை ரத்னாகர் கூறியதைக் கேட்டு, ரிக்ஷாக்காரர் தற்காப்புப் பயத்தில் உதவிசெய்ய முன் வருகிறார். இதன் மூலம் சமூகத்தில் பிறருக்கு உதவும் நிலைகூட, சுயநலத்தின் அடிப்படையிலேயே அமைவதைக் காணமுடிகிறது.
- உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவிக்கு யாரும் உதவாத நிலையில் அவள் மீது போர்த்தியிருக்கும் துண்டினை எடுத்துச் சென்றுவிடுவது சிறுமையான செயலாகப் படைப்பாளரால் சுட்டப்படுகிறது.

இரக்கமற்றவர்களாக இருக்கும் மனிதர்கள் இணக்கமற்ற சமூக உறவிற்கு உரியவர்களாகவே இருக்க முடியும் என்பது படைப்பாளர் உணர்த்தும் கருத்தாகிறது.

மேற்கண்ட அளவில் படைப்பாளரின் சிந்தனைகள் புதிய கருத்துகளுக்கு வழி ஏற்படுத்தித் தருகின்றன.

தன் மதிப்பீடு : வினாக்கள் – I

## 6.4 பெண் படைப்பாளர்களின் நோக்கும் போக்கும்

எந்த ஒரு படைப்பாளனும் ஏதாவது ஒரு நோக்கத்தினை மனத்தில் கொண்டே படைப்பிலக்கியப் பணியினை மேற்கொள்ள முடியும். அவ்வகையில் அவர்களது பணி இலக்கியப்பணியாகவும் அமையலாம். அன்றிச் சமூகப்பணியாகவும் விளங்கலாம். பெண் படைப்பாளர்கள் ராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, இந்துமதி ஆகியோரின் சிறுகதைகளின் மூலம் அவர்கள் சமூக நோக்குடன் கூடிய படைப்பிலக்கியப் பணியினை மேற்கொண்டுள்ளது அறியப்படுகிறது. இப்பகுதியில் அவர்களது நோக்கினையும் சிறுகதைகளின் போக்கினையும் பின்வருமாறு அறியலாம்.

- ராஜம் கிருஷ்ணன் சிறுகதையின் நோக்கம்

இவருடைய சிறுகதையின் மூலம் இவரது சமூக நோக்கம் அறியப்படுகிறது. காதல் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் சாதியின் பெயரால் பாதிக்கப்படக் கூடாது என்பது இவரது சமூக நோக்கமாக அறியப்படுகிறது.

பெண்கள் பொருளாதார வலிமை பெற்றவர்களாக விளங்குவதன் மூலம் இத்தகைய பாதிப்புகளிலிருந்து ஓரளவு தம்மைக் காத்துக்கொண்டு வாழ முடியும் என்பது உரைக்கப்படுகிறது. கணவன் உடனில்லாத சூழ்நிலையில் மனைவி அனுபவிக்கும் துன்பங்கள் காட்டப்பட்டுக் கணவனின் பாதுகாப்புடன் ஒரு பெண் வாழும் நிலையில் கூட்டுக் குடும்பச் சிக்கல்களைக் களையலாம் என்பது உணரப்படுகிறது. பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் பெற்றோரின் போக்கு மாற வேண்டும் என்பது உரைக்கப்படுகிறது. அக்கம் பக்கம் உள்ளவர்கள் குடும்ப நிகழ்வுகளை ஊதிப் பெரிதாக்கிச் சமூகச் சிக்கலாக உருவாக்கிவிடக் கூடாது என்பது கதையின் போக்காக அமைகிறது.

- சிவசங்கரி சிறுகதையின் நோக்கும் போக்கும்

இவரது சிறுகதைகளில் சமூக அக்கறையும், சமூகச் சிந்தனையும் படைப்புகள் நோக்கமாக உருப்பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

இவரது நோக்கத்திற்கு ஏற்ற போக்கினை இவரது சிறுகதையில் காண முடிகிறது. நம் உடைமைகளைப் பேணுவதுபோல நாம் வசிக்கும் தெருவையும், காற்றையும் பேணவேண்டும் என்பது அறிவுரையாக வெளிப்பட்டு, சமூக நோக்கத்தை நிறைவேற்ற இடம்தருகிறது. அக்கறையையும், பகிர்ந்து கொள்ளுதலையும் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே சுயநலத்தைத் தவிர்க்க முடியும். சமுதாயத்தை நேசிக்க முடியும் என்பது அறிவுறுத்தப்படுகிறது. தாய், தந்தையரின் வருமானத்தில் வீணாகச் செலவழித்து வாழாமல் சுய சம்பாத்தியத்தில் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது சிறுகதையின் போக்காக வெளிப்பட்டுக் கதையின் நோக்கத்தை நிறைவேற்றுகிறது.

- இந்துமதி சிறுகதையின் நோக்கும் போக்கும்

இவரது சிறுகதை சமூக நோக்கம் ஒன்றையே மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. சமூக மக்கள் தங்களுக்குள் தேவையான உதவிகளைச் செய்து வாழ்வதையே சமூக நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதைப் படைப்பாளர் தம்முடைய நோக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

சமூக சேவை செய்பவர் மற்றவர்கள் உதவிசெய்ய மறுக்கும் நிலையில் கூட அதைப் பொருட்படுத்தாமல் கிழவியைக் காப்பாற்ற முயற்சி செய்வதன் மூலம் அவர் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாகிறார். குப்பத்தின் சுகாதாரம் அற்ற சூழலும், ஏழ்மையும், அதன் பரிதாப நிலையும், படைப்பாளரின் சிந்தனை மூலம் வெளிப்பட்டு இத்தகைய சமூகங்கள் மாற வேண்டும், முன்னேற வேண்டும் என்பது உரைக்கப்பட்டு, கதையின் நோக்கத்தை நிறைவேற்ற உதவுகிறது. குப்பத்து மக்கள் சுயநலமற்றவர்களாகி, பிறருக்கு உதவும் வாழ்க்கையை மேற்கொள்ளக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மனிதநேயம், மனித உயிர் விலை மதிப்பற்றது என்பவற்றை உணர்ந்து, தனிமனிதன் செயல்படுவதன் மூலமே சமூகம் உயர முடியும் என்பது அறியப்படுகிறது. இதுவே சமூக நோக்கத்தினை நிறைவேற்ற உதவும் போக்குகளாகப் படைப்பாளரால் உரைக்கப்பட்டுள்ளன.

### 6.4.1 பெண் படைப்பாளர்களின் எதிர்பார்ப்புகள்

இப்பாடப் பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுகதைகளின் மூலம் பெண் படைப்பாளர்களின் சமூக எதிர்பார்ப்புகளாகக் கீழ்வருவனவற்றைக் காணலாம்.

- ராஜம் கிருஷ்ணன் அவர்களின் சமூக எதிர்பார்ப்பு

- பெண் கல்வியின் தேவை வலியுறுத்தப்படுகிறது.
- தேவையான சமூக மாற்றங்களுக்கு ஏற்ப வளைந்து கொடுத்து வாழ்க்கை நடத்துபவர்களாகத் தனிமனிதர்கள் விளங்க வேண்டும்.
- குடும்பத்தினர் பிறருடைய மனதைப் பாதிக்காத வாழ்க்கை வாழக் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- பெண்கள் பெண்களுக்கு எதிரியாகாமல் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுபவர்களாக விளங்குதல் வேண்டும்.
- மனிதர்களை வேறுபடுத்திப் பார்க்கும் சாதி, மத, பேதங்களைக் களைதல் வேண்டும்.
- தம்மைப்போலப் பிறரையும் கருதும் மனப்போக்கினைப் பெறல் வேண்டும்.

- சிவசங்கரி அவர்களின் சமூக எதிர்பார்ப்புகள்

- பெற்றவர்களுக்கு உதவியாக இருக்கும் வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.
- இந்த உலகத்தை, தாம் வாழும் சமூகத்தை, சுற்றுப்புறத்தைத் தம்முடையதாகக் கருதி வாழும் மனப்போக்கினை, அக்கறையை, பகிர்ந்து கொள்ளுதலைச் சமூகத்தினர் ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகிறது.
- பொதுப் பிரச்சனைகளில் தம்மாலான உதவிகளைச் செய்ய ஒவ்வொருவரும் முன் வருதல் வேண்டும். பொதுப் பணிகளைச் செய்வதற்குப் பட்டமோ, பதவியோ தேவையில்லை என்பதை உணர்ந்து செயல்படுதல் வேண்டும்.
- இளைய தலைமுறையினரின் மன உணர்வுகளைப் புரிந்து செயல்படும் பெற்றோர்களே தம் பிள்ளைகள் சிறப்பாக வாழ வழிகாட்டமுடியும்.
- இளைஞர்களை நெறிப்படுத்த அவர்களுக்கு அறிவுரைகளையும், வழிகாட்டலையும் மேற்கொண்டால் மட்டுமே போதுமானது. அடக்குமுறையைக் கையாள்வதன் மூலம் இளைஞர்கள் நெறிப்படுத்தப்படாமல், வழிதவறிப் போவதையே காணமுடிகிறது.
- இளைஞர்களிடம் சுயமுயற்சி, சுயகற்றல், சுயசம்பாத்தியம் எதிர்பார்க்கப்படுகிறது.
- இளைஞர்களின் சிக்கல்களைத் தீர்க்க, புரிய வைத்தலும், தெளிவுபடுத்தலுமே தேவை என்பது உணர்த்தப்படுகிறது. இத்தகைய இன்றைய தேவையாக உள்ள அணுகுமுறையின் மூலமே அவர்கள், சமூகத் தேவைகளை உணர்ந்தவர்களாகச் செயல்பட வைக்க முடியும்.
- பிறர் மீது அக்கறை, பிறரிடம் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றை, சமூகத்தினர் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

- இந்துமதி அவர்களின் சமூக எதிர்பார்ப்புகள்

- மனித நேயத்தால் சமூகம் கட்டுண்டு செயல்படுதல் அவசியம்.
- மனிதன் மனிதனாக வாழவும், பிறர் நலம் பேணவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது.
- முதியவர்களைப் பேணவும், மதிப்பளிக்கவும் வல்ல சமூகம் உருவாதல் வேண்டும்.
- சுயநலமும், பொருளாதாரத் தேவைகளும் மனிதத் தன்மையை இழக்கச் செய்கின்றன. ஆகவே மனிதன் இக்குறைபாடுகளை வென்று மனிதத்தன்மை உடையவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ளுதல் சமூக எதிர்பார்ப்பாகக் கருத இடமளிக்கிறது.
- துன்பத்தில் உழல்பவர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் அதை மேலும் அதிகப்படுத்தாமலிருக்க வேண்டியது எதிர்பார்ப்பாகிறது. அதை ஒவ்வொரு மனிதனும் கற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதும் எதிர்பார்ப்பாகிறது.

சமூக சேவை ஆற்றுபவர்களுக்கு மட்டுமே பரிவு, கருணை, மனித நேயம் இருக்க வேண்டும் என்பதில்லை. இந்த உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் அந்த உணர்வுகள் இருக்க வேண்டும். தனி மனிதர்கள் சமூகத்தை அரவணைத்துச் செல்லும் அளவிலேயே சமூக இடர்ப்பாடுகள் குறைய ஏதுவாகும் என்ற வகையில் படைப்பாளரின் எதிர்பார்ப்பானது அமைகிறது.

**6.4.2** சமூக முன்னேற்றத்திற்கான வழிவகைகள்

மேற்கண்ட வகையில் மூன்று பெண் படைப்பாளர்களின் சிறுகதைகளும் சமூக முன்னேற்றத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது. இச்சிறுகதைகள் குடும்பம் என்னும் சமூகம் தன்னுடைய சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டு "குடும்பம் ஒரு நல்ல பல்கலைக் கழகமாக" உருவாக மேற்கொள்ள வேண்டிய வழிவகைகளை எடுத்துக்கூறுவனவாக உள்ளன. இளைய தலைமுறையினரின் குடும்ப மற்றும் சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கூறுமளவிலும் இச்சிறுகதைகள் சிறப்புப் பெறுகின்றன. கீழ்மட்டச் சமூகங்களின் சமூகச் சிக்கல்களை எடுத்துக்கூறி அதன் முன்னேற்றத்திற்கான
வழிவகைகளை எடுத்து உரைப்பனவாகவும் இச்சிறுகதைகள் அமைந்துள்ளன. சமூக முன்னேற்றத்திற்காக இச்சிறுகதைகள் கூறும் வழிவகைகளைக் காணலாம்.

- வழிவகைகள்

பெண்கல்வியை ஊக்குவிக்கவும், வளர்ச்சியடையச் செய்யவும் வேண்டும். பெண்கள் பொருளாதார வலிமை பெற்றுச் சமூகத்தில் தங்களின் நிலையை உயர்த்திக்கொள்ள வேலைவாய்ப்பு, சமூகச் சமநிலை ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். சாதி, மத பேதங்களுக்கு இடம்தராத சமூக அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும்.

இளைஞர்களை உளவியல் நோக்கில் அணுகுதல் அவசியம். இளைஞர்களுக்கு உளவியல் கல்வி, பாலுணர்வுக் கல்வி, மக்கட்தொகைக் கல்வி, சுற்றுப்புறச்சூழல் கல்வி, மதிப்புணர் கல்வி ஆகிய கல்வி முறைகளைப் போதிக்க வேண்டும். பெற்றோர்கள் இளைய தலைமுறையினர்களுக்கு நண்பர்களாக விளங்கி அவர்களின் குறைபாடுகளைக் களைந்து அவர்களின் வளர்ச்சிக்கு ஊக்கம் கொடுத்தல் அவசியம். சமூகக்கல்வியை அவர்களுக்கு வழங்கி, அவர்கள் சிறந்த அனுபவ அறிவைப் பெற்றிட உதவுதல் வேண்டும்.

குப்பத்து மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை உயர்த்த அரசு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குப்பத்து மக்களுக்குச் சுகாதாரக்கல்வி, விழிப்புணர்வுக்கல்வி, மனிதநேயக்கல்வி ஆகியவற்றை வழங்கி அவர்களின் தரத்தை உயர்த்தப் பாடுபடல் வேண்டும். கீழ்மட்டச் சமூகத்தினரின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதன் மூலமே அவர்கள் அழகுணர்வைப் பற்றிச் சிந்திக்க முடியும் என்பதை மனத்தில் கொண்டு அவர்களின் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடல் வேண்டும்.

## 6.5 தொகுப்புரை

நண்பர்களே! மேற்கண்ட பாடங்களின் மூலம் பெண் படைப்பாளர்களின் சிறுகதைகள் வெளிப்படுத்தும் சமூகச் சிந்தனைகளை அறிந்திருப்பீர்கள். இப்பாடத்தில் நீங்கள் அறிந்துகொண்ட செய்திகளை மீண்டும் நினைவுபடுத்திப் பாருங்கள்.

சங்க காலம் முதல் இக்காலம் வரையிலும் பெண்களின் நிலை எங்ஙனம் இருந்து வந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

படைப்பாளர்கள் ராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, இந்துமதி ஆகியோர் தம் மூன்று சிறுகதைகளின் கதைச்சுருக்கம், உறவு நிலைகள், அதனைப் பற்றிய படைப்பாளரின் சிந்தனைகள் ஆகியவற்றை அறிய முடிகிறது.

பெண் படைப்பாளர்களின் நோக்கும் போக்கும் சமுதாய உணர்விற்கு இடமளிக்கிறது என்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் படைப்பாளர்கள் சமூகத்தினரிடம் நல்ல சமூக மனப்பான்மையை எதிர்பார்ப்பதையும் அறிய முடிகிறது. இறுதியாக, சமூக முன்னேற்றத்திற்காக அரசும், சமுதாயமும் மேற்கொள்ள வேண்டிய வழிவகைகளை அறிகிறோம்.

தன் மதிப்பீடு : வினாக்கள் – II

# P20331

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. படைப்பிலக்கியத்திற்குத் தேவையான மூன்று அடிப்படைகள் யாவை?

விடை : (1) வாழ்க்கை அனுபவம்,
(2) வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கும் ஆர்வம்,
(3) கற்பனைத் திறன்.

2. சிறுகதையின் இலக்கண வரம்புகளைக் காட்டிலும் முக்கியமானவையாகக் கருதப்படுபவை யாவை?

விடை : படைப்பாளரின்,
(1) கலையாற்றல்,
(2) கற்பனைத் திறன்,
(3) சொல்லாட்சி,
(4) அவர் மறைமுகமாகக் கூறும் செய்தி.

3. சிறுகதைக்குரிய உத்திகள் மூன்றினைக் குறிப்பிடுக.

விடை : (1) குறிப்பு மொழி,
(2) நனவோடை முறை,
(3) செய்தி கூறும் முறை.

4. சிறுகதையில் மொழிநடை எவ்வாறு அமைதல் வேண்டும்?

விடை : சிறுகதையில் மொழி நடை எளிமையாய் இருத்தல் வேண்டும்.

முன்

# P20331

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. ஒரு சிறுகதையின் மையக் கருத்து எது?

விடை : கதைக்கரு.

2. வரதட்சணை வாங்குவது குறித்துக் காந்தியடிகளின் கருத்து என்ன?

விடை : திருமணத்தின் போது வரதட்சணையை ஒரு நியதியாகக் கொள்ளும் இளைஞன் அவனது கல்வியையும், நாட்டையும், பெண்மையையும் பழிப்பவனாகிறான்.

3. குடும்பச் சிக்கல்களுக்குரிய சிறுகதைகளை எழுதுவதில் குறிப்பிடத் தகுந்தவர் யார்? குறிப்பிட்ட சிறுகதையின் பெயர் என்ன?

விடை : கு.ப. ராசகோபாலன் ; சிறுகதை : விடியுமா.

4. ஒரு கதையில் கதைமாந்தர் எதன் பொருட்டு உருவாக்கப் படுகின்றனர்?

விடை : (1) படைப்பாளரின் இலக்கியத் திறனை வெளிப்படுத்த.
(2) குறிப்பிட்ட காலத்துச் சமூகத்தின் வாழ்க்கையை அறிந்து கொள்ள.

முன்

# P20332

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சிறுகதையின் போக்குகள் என்றால் என்ன?

விடை : சிறுகதைகள் தோன்றிய நாளிலிருந்து இன்று வரையிலும் அவை அடைந்துள்ள வளர்ச்சிகளும், மாற்றங்களுமே அதன் போக்குகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை இலக்கியப்பயன் மற்றும் சமூகப்பயன் என்ற அடிப்படையில் அமைகின்றன.

2. தொடக்க காலச் சிறுகதைகளின் போக்குகளுக்கு யாருடைய கதைகள் எடுத்துக்காட்டுகளாய்க் கூறப்பட்டுள்ளன?

விடை : வ.வே.சு.ஐயர் – குளத்தங்கரை அரசமரம்
புதுமைப்பித்தன் – ஒரு நாள் கழிந்தது
தி.ஜானகிராமன் – முள்முடி

3. சிறுகதை மன்னன் என்றழைக்கப்படுபவர் யார்? இவர் எந்தக் கால கட்டத்தைச் சார்ந்தவர்?

விடை : ஜெயகாந்தன். இவர் எழுபதுகளில் புகழ் பெற்றவர்.

4. எழுபதுகளில் எழுந்த சிறுகதைகளின் போக்குகளுக்கு யாருடைய சிறுகதைகள் எடுத்துக்காட்டுகளாய்க் கூறப்பட்டுள்ளன?

விடை : ஜெயகாந்தன், கி. ராஜநாராயணன், அசோகமித்திரன் ஆகியோரின் சிறுகதைகள் கூறப்பட்டுள்ளன.

முன்

# P20332

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. நுட்பமான கதை என்றால் என்ன?

விடை : தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கதை நுட்பமான கதையாகும். இதுவே இந்நாளில் நல்ல கதைக்கு இலக்கணமாகவும் கூறப்படுகிறது.

2. இயந்திர மனிதன் யாருடைய, எந்தக் கதையில் இடம்பெறுகிறான்?

விடை : சுஜாதாவின் 'அடிமை' சிறுகதையில் இடம் பெறுகிறான்.

3. எழுபதுகளில் சிறுகதையின் இலக்கியத் தன்மை பாதிக்கப்படுவதற்கு எவை காரணமாயின?

விடை : ஆபாச எழுத்துகளும், படைப்பாளர்களின் வியாபார நோக்கும் காரணமாயின.

4. இன்றைய சிறுகதைகள் சமூகத்துடன் எங்ஙனம் தொடர்பு கொண்டுள்ளன?

விடை : இன்றைய சிறுகதைகள் சமூகத்துடன் ஓர் ஊடகமாகத் தொடர்பு கொண்டுள்ளன.

முன்

# P20333

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சிறுகதையின் கருப்பொருள் எங்ஙனம் அமைய வேண்டும்?

விடை : சிறுகதையின் கருப்பொருள் எளிமையானதாய் அமைய வேண்டும். அது மக்களின் நம்பிக்கையை உயர்த்த வேண்டும். சமுதாயத் தேவைகளைச் சுட்டுதல் வேண்டும். வாழ்க்கையின் நன்மை, தீமைகளை எடுத்துக்கூற வேண்டும். அறத்தினை வலியுறுத்த வேண்டும். பொழுதுபோக்கு எல்லையைத் தாண்டி மக்களுக்குப் பயன்பட வேண்டும்.

2. ‘கேதாரியின் தாயார்’ சிறுகதையின் கருப்பொருள் யாது?

விடை : கணவனை இழந்த பிராமணப் பெண்களுக்கு மொட்டையடித்து அலங்கோலப்படுத்தும் வழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதே கருப்பொருளாகிறது.

3. அகிலனின் ஞானபீடப் பரிசைப்பெற்ற நாவல் எது?

விடை : சித்திரப்பாவை – என்ற சமூக நாவல்.

4. ‘புயல்’ சிறுகதை காட்டும் சமுதாயப் பயன் இரண்டு கூறுக.

விடை :

- மனித நேயப் பண்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- சமூகக் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

முன்

# P20333

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. ‘கடைசிவரை’ சிறுகதையின் கருப்பொருள் யாது?

விடை : சாதி வெறிகொண்ட தனிமனிதனால் சமூகம் அடையும் சிக்கல் கருப்பொருளாய்க் காட்டப்படுகிறது.

2. நாடோடிகளின் சிறப்பு யாது?

விடை : நாடோடிகள் தங்களுடைய பாரம்பரியத்தை, கலாச்சாரத்தைத் தோள் மூட்டைகளில் சுமந்துசெல்பவர்கள் என்பதே அவர்களின் சிறப்பு ஆகும்.

3. பெண்களுக்கு இழைக்கப்படும் சமூகக் கொடுமையைக் காட்டும் சிறுகதை எது?

விடை : கல்கியின் ‘கேதாரியின் தாயார்’ சிறுகதை.

4. மூன்று சிறுகதைகளிலும் இடம் பெற்றுள்ள சமூகச் சிக்கல்கள் யாவை?

விடை : I. கேதாரியின் தாயார் – சாஸ்திரங்களின் பேரில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை.
II. புயல் – சமூக ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகள்.
III. கடைசி வரை – சாதிக் கொடுமை.

முன்

# P20334

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சமூகச் சிறுகதைகளின் பயன்கள் யாவை?

விடை : சமூகச் சிறுகதைகள் சமூகச் சிக்கல்களை வெளிப்படுத்தி, அதை மக்கள் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ளச் செய்தும், அறிவுபூர்வமாகச் சிந்திக்கவும், செயல்படவும் இடமளித்தும் பயன் விளைவிக்கின்றன.

2. பால்வண்ணம் பிள்ளையின் சித்தவுறுதி யாருக்கு இருந்தால் அது பெருங்குணமாகக் கருதப்படும்?

விடை : படைவீரனிடமும், சத்தியாக்கிரகிகளிடமும் இருந்தால் அது பெருங்குணமாகக் கருதப்படும் என்கிறார் படைப்பாளர்.

3. பெண்களின் சிக்கல்களை வெளிப்படுத்தும் மூன்று சிறுகதைகள் யாவை? அவற்றின் படைப்பாளர்கள் யாவர்?

விடை : i) மொட்டை – ஜெயந்தன் (படைப்பாளர்)
ii) எனக்குத் தெரியாது – சூடாமணி (படைப்பாளர்)
iii) மூன்று நாள் – பிரபஞ்சன் (படைப்பாளர்)

4. ‘செவ்வாழை’ சிறுகதை காட்டும் சமூகச் சிக்கலுக்குப் படைப்பாளர் கூறும் தீர்வு யாது?

விடை : சமதர்மச் சமூகம், ஏற்றத் தாழ்வுகள் அற்ற சமூகம், உழைப்புக்கு உயர்வு அளிக்கும் சமூகம் ஆகியவைகள் உருவாவதன் வாயிலாகவே ஆண்டான் – அடிமை, முதலாளி – தொழிலாளி சிக்கல்களுக்கு விடை காண முடியும் என்கிறார்.

முன்

# P20334

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. ‘செவ்வாழை’ சிறுகதை உணர்த்தும் சமூகச் சீர்திருத்தக் கருத்துகள் யாவை?

விடை : உழைப்பவனுக்கு நிலம் சொந்தமாக வேண்டும்; பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக் கூடாது போன்ற கருத்துகள் சீர்திருத்தக் கருத்துகளாகின்றன.

2. புதுமை, புரட்சிக்குரிய சிறுகதைகளாக இடம் பெற்றுள்ளவை யாவை?

விடை : i) இருளில் இரு பறவைகள்
ii) எனக்குத் தெரியாது
iii) மூன்று நாள்

3. ‘ஆமைச் சமூகமும், ஊமை முயல்களும்’ சிறுகதையில் ‘ஊமை முயல்’ என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது?

விடை : அஞ்சலை என்கின்ற வேலைக்காரப் பெண்ணைக் குறிப்பிடுகிறது.

4. ‘மனித நேயத்திற்கு’ உரிய சிறுகதைகளாகக் குறிப்பிடப்படும் சிறுகதைகள் எத்தனை? அவை யாவை?

விடை : 5 சிறுகதைகளாகும்.

(அ) எனக்குத் தெரியாது
(ஆ) மூன்று நாள்
(இ) குறட்டை ஒலி
(ஈ) ஆமைச் சமூகமும், ஊமை முயல்களும்
(உ) செவ்வாழை

முன்

# P20335

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. தத்துவத்தைப் பற்றி டாக்டர். இராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்து யாது?

விடை : டாக்டர். இராதா கிருஷ்ணன் அவர்கள், உண்மையை உள்ளபடியே உணர உதவும் தருக்க அடிப்படையே தத்துவம் என்கிறார்.

2. விலங்குகளின் வழி அறியப்படும் தத்துவங்களுக்குரிய மூன்று சிறுகதைகள் யாவை?

விடை :

(1) இருப்பது மட்டுமா வாழ்வு
(2) பாதுகாப்பு
(3) ஆதாரம்

ஆகிய மூன்று சிறுகதைகள் விலங்குகளின் வழி அறியப்படும் தத்துவங்களுக்கு உரிய சிறுகதைகளாகின்றன.

3. 'பிரதிபலிப்பு' கதை கூறும் தத்துவ நெறி யாது?

விடை : இறைவன் உருவமாகவோ, அருவமாகவோ வெளிப்பட்டும், மறைந்தும் உலக உயிர்களைக் காக்கிறான் என்னும் தத்துவத்தை உள்ளடக்கியே இச்சிறுகதை விளங்குகிறது.

4. மானிடத் தத்துவங்கள் என்றால் என்ன? அதற்குத் துணை நிற்கும் சிறுகதைகளின் பெயர்களைக் கூறுக.

விடை : மனிதர்களால், மற்றையோரால் மனிதர்களுக்காக உரைக்கப்படும் வாழ்க்கை நெறிகள் மானிடத் தத்துவங்களாக அறியப்படுகின்றன. அவற்றிற்குரிய சிறுகதைகள் மூன்று :

(1) எது மௌனம்?
(2) சமத்துவம்
(3) வருத்தம்

முன்

# P20335

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. தத்துவ நெறிகளின் தேவை எங்ஙனம் உணரப்படுகிறது?

விடை : மனிதன் தன்னை முன்னேற்றிக் கொண்டு மனிதத்தன்மை பெற்று விளங்குவதற்கும், துயரமில்லா வாழ்வு வாழ்வதற்கும் தத்துவ நெறிகள் தேவை என்பது உணரப்படுகிறது.

2. தத்துவ நெறியால் விளையும் பயன்கள் இரண்டு கூறுக.

விடை : (1) வாழ்வின் நன்மை, தீமைகளை எடுத்தியம்புகிறது.
(2) சமத்துவம், ஒற்றுமையுணர்வை மக்களிடையே வளர்க்கிறது.

3. இவ்வுலகம் உய்வு பெறுவதற்கான வழி யாது?

விடை : தத்துவ நெறிகள் உணர்த்தும் பேருண்மைகளை அறிந்து வாழ்வதன் மூலமாகவே இவ்வுலகம் உய்வு பெற இயலும்.

4. வாழ்விற்கு வழிகாட்டும் தத்துவ நெறிகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

விடை :
(1) தத்துவ நெறிகள் உள்ளத்திற்குத் தேவையான சக்தியினைக் கொடுக்கின்றன.
(2) வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும், மேம்படுத்தவும் வழிகாட்டி உதவுகின்றன.

முன்

# தன் மதிப்பீடு : விடைகள் - I

1. சங்க காலத்தின் குறிப்பிடத்தக்க பெண்பாற் புலவர்கள் மூவரின் பெயரைக் கூறுக.

விடை : ஔவையார், நப்பசலையார், பாரி மகளிர் ஆகியோர் குறிப்பிடத்தகுந்த பெண்பாற் புலவர்கள் ஆவார்கள்.

2. சிவசங்கரியின் சிறந்த சிறுகதைப் படைப்புகள் மூன்றனைக் குறிப்பிடுக.

விடை : தாய்மை, சுத்தம், அம்மாவுக்காக ஒரு பொய்.

3. ராஜம் கிருஷ்ணன், சிவசங்கரி, இந்துமதி ஆகியோரின் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள உறவு நிலைகள் யாவை?

விடை : ராஜம் கிருஷ்ணன் – குடும்ப உறவு
சிவசங்கரி – நட்பு உறவு
இந்துமதி – சமுதாய உறவு

4. படைப்பாளர் இந்துமதியின் சிந்தனையில் எது சிறுமையான செயலாகக் குறிப்பிடப்படுகிறது?

விடை : உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் கிழவிக்கு யாரும் உதவாத நிலையில், அவள் மீது போர்த்தியிருக்கும் துண்டைத் திருடிச் செல்வது என்பது சிறுமையான செயலாக, படைப்பாளரால் சுட்டப்படுகிறது.

முன்

# P20336

# தன் மதிப்பீடு : விடைகள் - II

1. ராஜம் கிருஷ்ணன் எழுதிய சிறுகதையின் சமூக நோக்கம் யாது?

விடை : காதல் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் சாதியின் பெயரால் பாதிக்கப்படக்கூடாது என்பதே இவருடைய கதையில் சமூக நோக்கமாக வெளிப்பட்டுள்ளது.

2. சமூக நேயத்தை வலியுறுத்தும் சிறுகதை யாது?

விடை : இந்துமதியின் 'துணி' என்ற சிறுகதை சமூக நேயத்தை வலியுறுத்தும் சிறுகதையாக அமைந்துள்ளது.

3. சிவசங்கரி எழுதிய சிறுகதையின் மூலம் அவருடைய எதிர்பார்ப்புகளாக அறியப்படும் கருத்துகள் மூன்றினைக் கூறுக.

விடை : 1. பெற்றோர்களுக்கு உதவியாக இருக்கும் வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

2. பிறர் மீது அக்கறை, பிறரிடம் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றைச் சமூகத்தினர் ஒவ்வொருவரும் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

3. பொதுப் பிரச்சனைகளுக்குத் தம்மால் ஆன உதவிகளைச் செய்ய, சமூகத்தினர் ஒவ்வொருவரும் முன் வருதல் வேண்டும்.

4. இப்பாடத்தில் இடம்பெற்றுள்ள சமூக முன்னேற்றத்திற்கான வழிவகைகளுள் மூன்றனைக் குறிப்பிடுக.

விடை : 1. பெண் கல்வியை ஊக்குவித்து, வளர்ச்சியடையச் செய்தல்.

2. இளைஞர்களை உளவியல் நோக்கில் அணுகுதல் வேண்டும்.

3. குப்பத்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு பாடுபடல் வேண்டும்.

முன்